ஓம்.

ஹரிஓம் நமோ நாராயண நமஹ:

# துருவன் திருமணம்

மூலமும்—உரையும்.

முதல் பாகம்.

இஃது

மதுரை, அ. சுப்பய்ய நாடார் அவர்கள் குமாரர்

அய்ய நாடாரால் வெளியிடப்பெற்றது.



மதுரை,

மகா-ள-ள-ஸ்ரீ மு. சின்னசாமி நாயுடு அவர்கள்

மகா-ள-ள-ஸ்ரீ மொ. இருளாண்டித் தேவரவர்கள்,

மகா-ள-ள-ஸ்ரீ வெ. மாமுண்டிக்கோன் அவர்கள்,

மகா-ள-ள-ஸ்ரீ சு. மீனாக்ஷிசுந்தரக்கோன் அவர்கள்

இவர்கள் கேட்டுக்கொண்டதினிமித்தம்

அ. சு. அய்யநாடாரால்

மதுரை, ஸ்ரீ விஜயன் பிரஸில் பதிப்பிக்கப்பட்டது.

[... காபிரைட்] 1927. [விலை ரூ. 1-0-0.

0-,8M1T
N27
21248

ஓம்.

ஹரிஓம் நமோ நாராயணா நமஹா:

# துருவன் திருமணம்

மூலமும்—உரையும்.

முதல் பாகம்.

இஃது

மதுரை, அ. சுப்பய்ய நாடார் அவர்கள் குமாரர்

அய்ய நாடாரால் வெளியிடப்பெற்றது.

Accn. No: 121348
No. of Pages 162



மதுரை,

மகா-ா-ா-ஸ்ரீ மு. சின்னசாமிநாயுடு அவர்கள்

மகா-ா-ா-ஸ்ரீ மொ. இருளாண்டிக் தேவரவர்கள்,

மகா-ா-ா-ஸ்ரீ வெ. மாமுண்டிக்கோன் அவர்கள்,

மகா-ா-ா-ஸ்ரீ ச. மீனாக்ஷிசுந்தரக்கோன் அவர்கள்

இவர்கள் கேட்டுக்கொண்ட நிமித்தம்

அ. சு. அய்யநாடாரால்

துரை, ஸ்ரீ விஜயன் பிரஸில் பதிப்பிக்கப்பட்டது.

ரிஜிஸ்டர் காபிரைட்] 1927. [விலை ரூ. 1-0-0.

O-8N,T
N29

ஓம்.

ஸ்ரீராமஜெயம்.

# ரிஜிஸ்டர் அறிவிப்பு.

தனவான்களுக்கும் கனவான்களுக்கும் அச்சுக்கூட தலைவர்களுக்கும் மற்ற யாவர்களுக்கும் தெரியப்படுத்துவது யாதெனில்:-

இந்த துருவன் திருமணம் என்னும் புஸ்தகம் என்னுல் அச்சிட்டு காபிரைட் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருப்பதால் இப் புஸ்தகம் என் உத்திரவன்னியில் யாரும் அச்சிடலாகாது அப்படி அச்சிட்டால் சட்டப்படி குற்றத்திற்கும் யான்கோரும் நஷ்டத்திற்கும் உத்திரவாதியாக வேண்டுமென்பதைக் கவனிக்கக் கோருகிறேன்.

இப்படிக்கு,
அ. சு. அய்யநாடார்,
துவரை ஆபீஸ்,
சிம்மக்கல் தெரு, மதுரை.

121248

இந்த புஸ்தகம் வேண்டியவர்கள்:-

மேல்கண்ட விலாசதாரிடம் நேரிலும், தபால் மூலமாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

20 JUN 1927



ஓம்.

ஹரிஓம் நமோ நாராயண நமஹா:



# துருவன் திருமணம்.

காப்பு.

அன்புருவாம் பிரணவத்தில் முளைத்தசோதி ஆதியென்னும்
நன்புருவும் பிரணவமும் தானாகி நாடும் அன்பர்
துன்பமதை யகற்றுதற்கு சுடர்வடிவாய் யார்க்குமெட்டா
தின்புருவாந் தோற்றமெலாம் தானாகி இருந்தாய் போற்றி.

வேறு துதி.

பார்கடலில் பாம்பணையிலனந்தங்கோடி பக்தர்வந்து தொழுவதற்குளமுந்ததேவா, தார்க்குழையன்றிவொரு தெய்வமுண்டோ நினைக்கவேரு தலைவனீ யெவ்வுடல்கும் உயிருமானாய், ஏர்குமெங்கள் வினையகற்றி.வுனதுபதம் மெந்தநாளும் இருந்து துதிசெய்வதற்கு கருணை செய்வாய், தீர்கமுரு மின்னாளுக்குதவியுந் தன்னருளுமன்றி செப்புதற்கு வேருண்டோ தேவர் தேவா.

அருமறை தினமும்போற்றும் ஆதவா உலகம் வாழ்கத்
தருமிந்தப் புவியையாளும் தலைவரென்னாளும் வாழ்கப்
பெருமருள் புரிவாயிந்தப் பெருமைசேர் நூலும் நாட்டில்
நருமணங்கமளும் வண்ணம் நல்குவாய் கருணை நீயே.

அருமறை வாழ்க வோதும் அனந்தநர் சமயம் வாழ்க
பெருந்தவ முனிவர் வாழ்க பேசும் நின் நாமமோதி
இருந்தவர் வாழ்க மாரன் இனிமைசேர் குலமும் வாழ்க
பொருந்திய மாதர்கற்பும் புண்ணியாவளர வைப்பாய்.

## ஆக்கியோன் கருத்து.

திருமாலை மலர்மகளை தினந்துதிக்கும் பெருமையிதிலிருப்பதாலே பெருமலைபோல் முப்பதினாயிரம் பெருங்கவிதை பாகவதபுகன்றே னத்தில், ஒருபாகமான இந்த உண்மை பெருமடியவரில் சிரந்த அன்பன், துருபனுந்தான் பதமடைந்த சொர்பெரிய முறை யுரைக்கத் துணிந்தேன் நானே.

## பரீட்சித்து வரலாறு.

இந்திரன் முதலாய் தேவர் இயல்பெரும் மடியார் யார்க்கும்
வந்திடும் மலதிமாற்றி வளந்திடத் தன்மமோங்கி
அந்தகா ளரக்கர்தாமும் அளிந்திட ஆயர்வீட்டில்
செந்திருமாலும் வந்து சேர்ந்து பஞ்சவரைக் காத்து,

இருந்தனர் ருலகமாண்டு யேர்த்தவர் குதலி செய்துப்
பொருந்திய விஜயனுக்கு பூவையாந் துணைவி தன்னை
தருந்திருமால்மருகன் தனையனுக் குலகமெல்லாம்
இருந்துநீ யாள்வாயென்ன ஈர்தவருலகம் நீங்க

மன்னனும் மதிமரபு வளர்ந்திட அபிமன்பெற்ற
முன்னவனுலகமாண்டான் மூவுலகோரு மேத்த
பின்னிலே வேட்டைசென்று பெற்றதோர் சாபத்தாலே
அன்னவன் கவலையுற்று ஆரியிலமைத்து மாடம்

இருந்தவன் முன்னும் பின்னும் இபல்பெர அய்நாறுண்டான்
வருந்தவமுடையோனத்தால் வாளுநாளவனைத்தேடி
பெருந்தவ வியாதன்பெற்ற பிள்ளைவந்தடையப்போற்றி
இருந்தவன் கவலையோத இயம்பொணு தவத்தின்மிக்கோன்.

அஞ்சிடாதிருப்பாய் தோற்றம் அளிந்திடுமென்றிதில்லா
மஞ்சனே அதர்காய்நீரும் மயங்கிடாதிருப்பாயென்ன
அஞ்சிடாதிடத்தோனுகி ஆதவன் போன்றேரி
மிஞ்சியதவத்தோய்பாரில் மெய்யனுக்குறியதொண்டன்

துருவனூர் அவன்பெருமை சொல்லுவீரடியேன் செய்த
பெருவினையகலவன்றேன் பிரந்தநாள் தொடுத்துபாரில்
திருமணங்கண்டுமுத்தி சேர்ந்ததோர் விபரமென்ன
அருந்தவன் மகிழ்ந்துகேளும் அரசனே யென்னவிண்டான்

## அவையடக்கம்.

வருமுயர் சோதியென்ன வானினையளந்து நாளும்
கிரிவலம்புரியும்நல்ல கீர்த்திசேர்வளியிலுற்ற
பெரியவன் தசரதன்றன் பிள்ளையாய்யுதித்த ராமன்
தருமுபாரசுகொண்ட தனையனுக்குசலன்றனும்

தருமகன் மகனுப்வந்து தரைமுளுதாண்டவள்ளல்
பெருந்திடசேனன்பெற்ற பிள்ளையுத்தானபாதன்
வருந்தவம்புரிந்துகண்ட மதலையெம்மறையுங்கற்ற
துருபனும் பெரியான்றம்மை சுடருரை பிர்மம்மாக

கண்டனன் கொடியகானில் கடுந்தவம் புரிந்துபின்னே
அண்டருங்காணக்கிட்டா அவனருள் படைத்துமீண்டு
வண்டணிகுளலாள் சொந்த மாமனின் மகளைகானில்
கொண்டல்நேர் வண்ணன்மாலை கொடுத்திடயோர்த்துநாட்டில்

வந்தவன் மகுடம்சூட வளம்பெருமயோத்திமூதூர்
இந்திரன்முதலாய்தேவர் யேர்த்திடமன்னர்போற்ற
அந்தநாளிருந்துமேலாம் அரும்பதம் மடைந்தயாவும்
உந்தனுக்குரைப்பேன் கேட்பாய் உயர்பதமடைவாய்பின்னே.

## நாட்டுவளம்.

திருமகனுலவுமந்தச் செழுமைசேரயோத்திநாட்டின்
பெருமையை யுரைக்கவென்றால் பெண்கொடிகலைமாதாலும்
அருமையென்றுரைக்கில் நம்மால் ஆகுமோ மாடங்கூடந்
தெருவுரும் அடியார்கோஷ்டம் செய்குவார் ராமாவென்றே.

அப்பதிக்காவும் பொய்கை அளகுரும் பாரிசாதம்
ஒப்பிடாத்தருக்களங்கு வோங்கிடும் நிரைநிரையாய்
தப்பிடாக் கர்பகஞ்சூள் தருக்களுந்தேவதாரும்
எப்பதியோர்க்கும் கிட்டா இயல்பெருமணிகள்தோன்றும்.

நெறிமுறைதவறு மாந்தர் நிரைநிரைதங்கும் மாடம்
பெரியவிண்தாவிநின்ற பெருமையால் முகில்கள்தாவும்
கரிபரிசூழுமங்காய் காவலர் வந்து தங்கும்
உரியநல்கோட்டைமுன்னாள் உம்பர்கோன் நாட்டின்தச்சன்.

மன்னவன் ராமன்றானும் மணிமுடிசூடமுன்னாள்
அன்னவன் னிரைனிரையாய் அமைத்தமண்டபத்திலுற்ற
மின்னிய வளங்கள்தம்மை விளம்பயார்தரமோபாரில்
அன்னகர்ருற்றசெல்வம் அடைந்தில தெந்தநாடும்.

இந்திரனுலகும் மற்றும் இயக்கர்கோ னுரையும்நாடும்
வந்தது உலகிலென்ன வழுத்தினும் வளங்கள் போதா
தந்தநா ளிருந்தராமன் அரிச்சந்திர னிவர்களாண்ட
சுந்தரப் பதியின் வண்மை சொல்லயார் தரமோபாரில்.

சங்கினமீன்றமுத்து தளம்பிடும் வயல்கள்தோறும்
பொங்கிடுஞ் சென்னலோங்கும் பொலிதரும் மன்னர்வாழ்வு
அங்குளை மாதர்கர்பும் அமரர்க ளுலவுங்கீர்த்தி
எங்கணுங் கண்டோமில்லை இயல்நிதிப் பெருக்கும்மிக்க.

முன்னவன் தெய்வமென்றும் முறைவழி யிருந்துமாந்தர்
மன்னவன் றந்தையென்னும் மன்னவன் குடிகள்தம்மை
தன்னுயர் மக்களென்று த்தழுவிவாள் தன்மையாலே
அன்னகருள்ளோர் செல்வம் அடைந்ததாற வனிதன்னில்.

பொங்கிடும் நதியனந்தம் பொலிவுரும் வரைகள்சூழும்
தங்கிட வெளியோர்வந்து சத்திரம் பலதுந்தெய்வ
மங்களம் முளங்குங்கோவில் வழிமுறை வழியாயங்கு
எங்கணுமுள்ளோர் போற்ற இருந்தது உலகிலோங்கி.

# அரசியல்பு.

பெருமைசேர் அயோத்திவேந்தன் பேணலர் வணங்க யார்க்கும்
சிருமைகளடையா வண்ணம் செகமதையோர் குடைகுள்
அருமறை படியேயங்கே அரம்பல இருந்து செய்தும்
திருமகமுலவ ஆண்டான் தேவியாம் சுநீதியோடு. 1

வசனம்:-கண்ணியம்பொருந்திய அயோத்திமாநகரில் பகைவர் வணங்கும்படியும் தன்னுளுகைக்கு உள்பட்ட குடிகளுக்கு எவ்வித கவலையும், அணுகாமல் இந்த பரதகண்டம்சூழ்ந்த உலகம் முற்றுக்கும் ஏகச்சக்கிராதிபனுகி தருமநெரி முறைதவருது மகாலக்ஷிமிக்கு உரைவிடமான சுநீதியென்னும் உத்தமியுடன் அரசு செய்தான்,

மன்னவர் வணக்குமந்த வான்கதிர் குலத்தில் தோன்றி
அன்னகர் குடிகளேரங்க அரசினை பூண்ட வேந்தன்
தன்னையுத்தான பாதனென்ன சாற்றிபூ வேந்துவண்ணம்
மன்னவன் சகஸ்திரமான வளர்மதி யமைச்சர்சூள. 2

வ—ம்:-சூரியனுக்கும், சாயாதேவிக்கும் உதித்துலகு ஆண்ட மன்னவர்களில் தசரதச் சக்கிரவர்த்தி குமாரனுகிய ராமனுடைய மரபில் உதித்து அவனுல் ஏற்பட்ட செல்வம் பூராவும் கைக்கொண்டு அந்த ராமபிரானுக்கு பேறன்மகன் திடசேனனுக்கு புத்திரனுகி உத்தானபாதனென்னும் நாமம்பூண்டு ஆயிரம்மந்திரி மார்கள்சூழ வாழ்ந்தான்.

இருந்தனன் நிதியும்வாழ்வும் இவன்பெற்ற கீர்த்தியாவும்
அருந்தவ தசரதன்ருன் அருமைசேர் சுதனும்ராமன்
வரும்வளி வந்ததாலே வந்ததிப் பெருமையென்ன
பெருந்தவத் தோரும் பேசப்பெற்றனன் பெருமைகண்டாய். 3

வ—ம்:-அளவிடமுடியாத செல்வம் இவன் அடைந்த பெருமையைக்கண்டு உலகோர்யாரும் இவ்வரசன் பூர்வீகம் செய்த தற்மத்தால் ராமபிருன் மரபிலுதித்து இந்த பெருமையடைந்தானென்று கூரவும்.

கற்றவர் துதிக்கும் வாயான் காரிளை சுருசியென்னும்
மற்றொரு மாதைவேட்டு வாழ்ந்தனன் வாழும்நாளில்
சிற்றிடை மாதாம் பிந்தும் தெரிவையின் மொழிக்கிணங்கி
கொற்றவர் நகைக்கும் வண்ணம் கோதையாம் சுநீதிதன்னை. 4

வ—ம்:-தெளிவறக்கற்ற மேதாவிகளும் துதிக்கும் கல்விமானு கியவேந்தன் நீண்டகாலம் அரசுசெய்தும் தன் தேவிக்குப்புத்திர பேறில்லாததால் மகதர்கோன் மகளாகிய சுருசியை விவாகம் செய்து அவள் மோகத்திலுளண்டு அவள் சொர்படி கேட்டு உல கோர் நகைக்க சுநீதியென்னும் உத்தமியை

அன்னகர்புரம்பாம் காட்டில் அமைத்தொரு மாடந்தன்னில்
கன்னியைவிடுத்து தோழிகாவலோடேவும் வைத்து
பின்னவளோடு அந்த பெருமைசேர் வேந்தன்றானும்
தன்னுயர் கீர்த்திமிஞ்ச தரணியாள் காலந்தன்னில் 5

வ—ம்:-அந்த அயோத்தியாபுரிக்குச் சமீபமாயுள்ள காட்டில் ஒரு மாடம் புதுப்பித்து அதில் காவலும், தோளியர் ஏவலும் வைத்து பதிவ்விருதா சிரோண்மணியை அங்குவிட்டு பிந்திய மனைவியுடன் உரவுகொண்டு பொருமைதங்கிய அரசனுனவன் தன்னை உலகோர் துதிக்க புவியாள்காலத்தில்

கன்றியே குடிகளெங்கும் கருத்தினையறிந்து காட்டில்
சென்றுயர் வேட்டையாடி திரும்புநாள் தானையோடு
அன்றொரு காவைக்கண்டு அமைச்சனை நோக்கிஅய்யா
நின்றிதில் சிலதுவேளை நீள்நகர் புகுவோமென்ன 6

வ—ம்:-தன்நகரில் குடிகளிட்ட பயிர்களை காட்டில் வாளும் மிருகங்கள் அழிப்பதாய் குறைகூறிய குடிகளின்கவலையைமாற்றுவ தற்காக வேடர்வில்லியர் ஆயுதபாணிகளாய் தன்னைச்சூள காட் டில்சென்று மிருகவேட்டையாடி நகர்திரும்பும்போது இடையில் அலங்காரம் பொருந்திய ஒரு நந்தவனத்தைக்கண்டு வேந்தன் அமைச்சனிடம் அய்யா இந்த இடத்தில் சிலது நேரம் இருந்து சோபமாற்றி அப்பால் ஏகுவோமென்றுகூற

மன்னவன் வாய்மைகேட்டு வரையின் சார்பிருக்கயாரும்
தன்னையே வணங்கிநிற்கத் தலைவனுமவரைநோக்கி
என்னையென் கருத்தால் சூழ்ந்தீர் இயம்பென அவர்கள்போற்றி
அன்னைபோல் உலகைதாங்கும் அய்யனே நமது நாட்டின் 7

வ—ம்:-மன்னன் கூறியபடி இளைப்பாரிய வீரர்கள் யாவரும் மந்திரியைக்கூட்டி சூழ்ந்து அவரை வணங்கிநிற்க அவர்களை நோக்கி நீங்கள் இந்த இடத்தில் ஒன்றுகூடி என்னை வணங்கிய கருத்துயாது கூருவீரென்ன அவர்களுக்கு தலைவனாகிய மந்திரி எம்மைஈன்ற தாய்போல் உலகாளும் அரசே! நமது நாட்டில்

உள்ளவருரைக்க அஞ்சும் உயர்முடி மன்னரஞ்சும்
தெள்ளரு முனிவரஞ்சும் செப்புமெம் முறைதான் செப்ப
வள்ளலே பொருப்பீர் கேட்டு வருஞ்சின மெமக்காய்வேண்டி
கொள்ளுவீர் கருணையென்ன கோமக னவரைநோக்கி. 8

வ—ம்:-தற்காலமுள்ளவர்களும் நாங்கள்கூரும் வாசகம்கூற அஞ்சுவார்கள், இன்னும் அருந்தவ முனிவர்களும் துணிந்துகூற அஞ்சுவார்கள் அப்பேர்ப்பட்டவாய்மையை சமுகத்தில்விளம்பத் துணிந்தோம் எங்கள்மீது கருணைசெய்து சினமுறாதிருக்கும்படி கேட்டுக்கொள்கிறோம் என்றவரைப் பார்த்து

மந்திரி தலைமையாக வந்தெமை வணங்கி நீங்கள்
தந்திடும் விடைகள்யாது சாற்றுவீ ரமைச்சரேரே
சிந்தைநும் கருத்தின்வண்ணம் செய்குவோமென்ன அன்னார்
எந்தையே யுரைப்போம்யாவும் மென்னவே சூழ்ந்துநின்று. 9

வ—ம்:-மந்திரியைத் தலைவனாய் நிருத்தி நீங்கள் யென்னிடம் விரும்பியது யெதுவேனும் அஞ்சாதுரைப்பீராக உங்கள் கவலையைமாற்ற நாம் தயாராயிருக்கிறோமென்ன அவர்கள் மருபடியும் அரசனைச் சுற்றியிருந்து வணங்கி எங்கள் தந்தையே நாங்கள் நினைத்தவை கூருவோம் கேட்பாயாக

முடியுடை யரசரேரே மூவுலகதனைப் பின்னே
படியினி லிருந்துயாரும் பரவிட முடிதுதான் சூடி
கடியவரஞ்சிவாழக் கான்முளை யுமக்குவேண்டி
நெடிய கானகத்தில் சென்று நீள்தவம் புரிவோமய்யா. 10

வ—ம்:-சூரியன்முதல் தாங்கள் வரையுள்ள பரம்பரை சந்ததி இலங்கும் அயோத்தியை தங்களுக்குப் பின்னிருந்து தங்களைப் போல் ஆள ஒரு புத்திரன் தங்கள் வயற்றிலுதிக்கவேண்டி நாங்கள் இருண்டகானகம் யேகி எம்பிரானருள்பெற அருந்தவம் புரிய நினைத்தோம். ஆகையால் திருவுளமிரங்கி எங்களுக்குவிடை தாருமென்ன

அவ்வரம் நல்குமென்ன அங்குளோர் போற்றி நிற்ப
இவ்வுரை கேட்ட வேந்தன் பெண்ணமும் செயலும் வேறாய்
அவ்விடத்தயர்ந்து வீழ்ந்தான் அமைச்சனு மலரித்தாங்கி
ஒவ்விடா துவமைவேரே உயர்மணி ரதத்திலேற்றி. 11

வ—ம்:-அன்னவர் வணங்கிக் கேட்டுநிற்க இந்தக் கடுஞ்சோப மொழியைக்கேட்ட வேந்தன் தான் புத்திரப்பேரில்லாத கவலை சூழ்ந்து மயங்கி மூர்ச்சையானான். உடனே கீழேவிழாமல் மந்திரி தாங்கி சாரதியை பெச்சரித்து அரசனை ரதத்திலேற்றி

வந்திடுந் தானைவேடர் வணங்கியே சூழ்ந்து போற்ற
அந்தரா ளமைச்சன்றானும் அரண்மனைக் கருகுவந்தான்
சிந்தையுந் தேரி வேந்தன் திருவிழிநோக்கி நாதா
எந்தனை மகவற்றானென் றிவ்வுலகேசும் வண்ணம்

வ—ம்:-சாரதி ரதம் வேகமாய்த் தூண்டிவர படைகள்சூள அயோத்தியாபுரியின் அரண்மனைவாயல் அடையுங்காலை வேந்தன் சோபமாரி வாய்விட்டு அலரி ஏ! கருணாகரா! புத்திரனற்றானென்று இந்த உலகோர் ஏசும் வண்ணம்

படைத்தனையென்றுகூறி பாய்ந்தனன் ரதத்தைவிட்டு
நடந்தனன் அமைச்சன்தாங்க நங்கையராலமேந்த
திடத்தினை யிளந்தவேந்தன் தேவியோடரசு செல்வம்
விடத்தினை நிகர்கும் யித்தை வேண்டிலேனமைச்சரேரே. 13

வ—ம்:-இந்த பாளும் தேகத்தை படைத்தாயே என்றுகூறி ரதம்விட்டு இறங்கி மந்திரி தாங்கிவர பெண்கள் ஆலம்யேந்த தன் பிலம்இளந்த வேந்தன் சிம்மாதனத்தருகுவந்து மந்திரியை நோக்கி இந்த பெலம் பொருந்தியவாள்வு செல்வம் யாவும் காலகூட விசத்துக்குசமம் ஆகையால் நான்இனி இதை வேணடேன்

தருவனம் பலதுதாண்டி தவத்துயர் கோலம்பூண்டு
பருவரை நண்ணியந்த பரமனை யிருந்துகண்டு
ஒருவரம் அடையுமட்டும் உயர்தவம் புரிவதன்றி
வருவதுமில்லை யென்ன வமுத்திதன் கோலம் மாற்றி. 14

வ—ம்:- தருக்கள் சூழ்ந்த வனத்தில் வரைகளில் சென்று அந்த பரம் பொருளை நோக்கி அருந்தவம் புரிந்து அவனை என் கண்களிக்க கண்டு புத்திரப்பேறடையும் மட்டும் தவம்புரிவதன்றி இந்த நாட்டுக்கு வருவதில்லையென்று தன்னுருமாற்றி

மரவுரி தரித்து வேந்தன் வளம்பெரும் அமைச்சை நோக்கி
இருந்துநீர் றென்போல் யார்க்கும் இன்னலே விளையாவண்ணம்
சிரந்திர்ந்த பதியாளென்று செம்மலு முரைக்கக்கேட்டு
பரந்தனன் னமைச்சனேங்கி பணிந்தனன் னெழுந்துபோற்றி.15

வ—ம்:-மரவுரி தரித்து மந்திரியை நோக்கி நான் வரும் அளவு நமது நகரில் உற்ற யாவர்க்கும் என்போலிருந்து யாதொரு குறை யணுகாது பாதுகார்ப்பாய் என்றவுடன் மந்திரி அலரியேங்கி செயல் மறந்து அரசனடியில் வீழ்ந்து வணங்கி

அய்யனே உமைவிடுத்து அடியேனிங் கிருந்துபின்னே
செய்யவே ரேவலுண்டோ செய்தவத் துதவியாக
மெய்யனே வருவேனன்றி மேலவரெல்லாம் நும்போல்
செய்தனரில்லை கண்டீர் தெசரதன் மகவைவேண்டி. 16

வ-ம்:-வேந்தே யான் கூறப்போகும்ஞாயம் தாங்கள் தடுத்தால் தங்களை விடுத்து இங்கிருந்து யான் அரசு செய்ய துணியேன் தாங்கள் செய் தவத்துக்குதவியாக தங்களுடன்கூட வரும்படி கருணை செய்யவேண்டும் அல்லது தங்கள் மூதாதைகள் யாருந் தனியாய் புத்திரன் வேண்டி கானில்போய் தவம்புரிந்தது கிடையாது. தங்கள் பாட்டனாகிய தசரதச்சக்கிரவர்த்திக்கு மூன்று தேவிமார் இருந்தும் மகப்பேறில்லாதிருந்து அவர் புத்திரன் வேண்டி

அருந்தவ பெரியார் தம்மை அழைத்துயர் யாகம் செய்து
இருந்தனர் மகவுகண்டு இம்முறை படியாய் நீரும்
பெருந்தவம் புரிதிரென்னப் பேசலும் மன்தடுத்து
வருந்தசரதன்றன்செய்த வளம் பெரும் யாகந்தன்னில் 17

வ—ம்:-அருந்தவத்தில் சிரந்த கலைக்கோட்டு மகாமுனியை கொண்டு புத்திரகாமேஷ்டி யாகம் செய்து ராமபிரானை மகவாய் யடைந்தார் தாங்களும் அவ்வண்ணம் பெரியோருதவியால் அந்த யாகம்செய்து புத்திரப்பேறடையலாம்என்ற மந்திரியைப்பார்த்து வேந்தன் கூறும் அய்யா நீ கூறியபடி மகவடைந்த தசரதன் யாகத்தில்

வந்திடும் மைந்தனாலே மன்னவன் அழிந்ததன்றி
சிந்தைதான் களிக்க அன்னான் திருமுடி கண்டானில்லை
இந்தவார் மகவுவேண்டேன் என்னுரை தடுக்கானாகி
சந்ததியடையு மட்டும் தலைவனாய் யுலகுதாங்காய். 18

வ—ம்:-வந்த ஸ்ரீ ராமபிரானால் அந்த தசரதன் அளிந்ததன்றி வேருநன்மை கண்டதுண்டா அல்லது அவன் மகுடாபிஷேகக் கோலம் இருந்து பார்த்தானா இல்லையே ஆகையால் அப்பேர்ப் பட்ட யாகமும் அதில் வந்த புத்திரன்போல் புத்திரனும் வேண் டேன் நீ என் வார்த்தை தடுக்காது இருந்து அரசனாய் உலகந் தாங்குவாய்

கருத்தினைமாற்றி யந்தக் கண்ணனை நினைத்தபேர்க்கு
வருத்தமோ அவனைக்காணல் மதியுயர் ரமைச்சாவென்ன
பொருத்தமே பெனினுமய்யா புண்மைசேர் கொடியகானில்
வருந்தமே தங்கும் வாள்வு வண்பசிக் குணவுமாற்றி. 19

வ—ம்:-நான் செல்லுங்காரியத்தில் நீ கவலையடையாதே பிர பஞ்ச ஆசையை மாற்றி ஒருவளிப்பட்டு அருந்தவம் புரிபவர்க்கு அந்த கண்ணபிரான்சேவை கிடைப்பது வருத்தமென்று நீ நினைத் தாய் யென்ன வேந்தே அது எளிதேனும் பசிக்குணவற்று தங்க இடமற்ற கானுரைவாள்வு கஷ்டமே

என்னவே வேந்தன்சிரி யேன்மதி யிழந்தாய் அய்யா
முன்னிய கல்லுள்தேரை முட்டையுள் ளிருக்குங் குஞ்சும்
அன்னையின் வயற்றுசேய்க்கும் ஆருணவளிப்பாரந்த
முன்னவனன்றி யுண்டோ மொளிந்தவை விடுத்து நீரும். 20

வ—ம்:-என்று கூறும் மந்திரியை அரசன் நினைந்து நீ கூறியது சரியோ முட்டைக்குள்ளிருக்கும் குஞ்சுக்கும் கல்லுக்குள் இருக்கும் தேரைக்கும் தாய் வயற்றிலுள்ள சிசுவுக்கும் உணவழிக்கும் நாறணனன் என்னை காப்பாற்ருது விடான் ஆகையால் வீண் வாதம் விடுத்து நீரும்

இருப்பீரிப் பதியோர் போற்ற யான்கொண்ட கோலத்தோடு
பொருப்பினை யடைந்து போற்றிப் புண்ணியன் கருணையாலே
மருப்பிலா தேவர் மற்றும் மண்ணுளார் போற்றிசெய்யும்
சிறப்பினை யடையுஞ் சேயாய் செய்தவத்தாலே கண்டு. 21

வ—ம்:-என்போலிருந்து அரசுரிமை செய்வாய் நான் கொண்ட கோலத்தோடு வனத்திலுள்ள ஒரு மலைச்சாறலையடைந்து அந்த கருணுகரனை வேண்டியவனருளால் தேவர்களும் மானிடர்களும் துதிக்கும்படியான சிறப்பினையுடைய மகவையடையும் மட்டும் தவஞ்செய்து வரம்பெற்று

வருவேன் நீர் மயங்கிடாது மங்கையோ டுரையும்மற்ருேர்
சிறுமைகள் ளடைந்திடாது செகமெலாம் புரப்பாயென்ன
மருமொளி கூருமுன்னுய் மாளிகை விடுத்து வேந்தன்
பெரும்வனம் தன்னை நோக்கி பேர்ந்தனன் குடிகளஞ்சி. 22

வ—ம்:-நான் வரும்வரை யாருக்கும் எவ்வித கஷ்ட நஷ்டம் வராது பாதுகார்ப்பாய் வீண்கவலை கொள்ளாதே என்றுகூரி அவன் பதில் கூறுமுன்னே அரண்மனையைத் தாண்டி இருண்ட கானகத்தைநோக்கி வேந்தன் நடந்தான் இவையுணர்ந்த குடிகள் பயந்து

கலையதை பிரிந்தமான்போல் கதரிட அமைச்சனேங்கி
நிலைகுலைந் துளைந்துவாடி நின்றனன் அரிங்கர்தேற்ற 23
நலந்தரும் பரனைவேண்டி ராசனைக் கார்ப்பாயென்று
தலந்தனில் வீழ்ந்துபோற்றி தன்னைவந் தடைந்தோர்க்கெல்லாம்.

வ—ம்:- கலைபிரிந்த மான்போல் கதரியும் மனதேங்கி தன் திடம் குறைந்து வாடி இருந்தவனை மற்றும் முள்ள மந்திரிகள் தேற்ற மீண்டுமே பகவானை வேண்டி அரசனை நீ கார்ப்பாய்யென்று பூமியில் வீழ்ந்து வணங்கும் மந்திரியிடம் குடிகள் வந்து யேங்க அவர்களை தேற்றி கூருவான்

மன்னனோர் மதியினுள்ளே வருவது தவருமாகில்
அன்னவன் றம்மைக்காண அடவிகள் முற்றுந்தேடி
பின்னினும் அரியோமாகில் பேந்துடல் லாவிவிட்டு
முன்னவன் பதத்தை சார்வோம் முடிவிது அரிவீரென்ன. 24

வ—ம்:-நாம் தற்காலம் அரசனை துபர்வது கூடாது இதுமுதல் ஒருமாதம்வரை யெதிர்பார்த்திருந்து அப்பாலும் அவர் வராவிட்டால் நாம் யாவரும் இந்த உலகிலுள்ள வனங்கள் பூராவும் தேடி கண்டு கூட்டிவருவோம். அப்படியும் காணுதிருந்தால் நாம் யெல்லாம் ஒரு வனத்தில் உயிர் விட்டு பரமபதம் சேருவதே முடிவு யென்பதை திடமாய் அரியுங்கள்

என்றிதை குடிகள் யார்க்கும் மிசைத்தவ னேங்கிமிக்க
கன்றிய மனத்தனுகி கண்ணன்வாள் கோவில் புக்கி
நின்றவனேங்கி நாதா நிருபனின் துணையாய் சென்று
இன்றவன் நினைத்தவண்ணம் ஈகுவாய் மகவென்றேத்தி. 25

வ—ம்:-இவ்விதம் குடிகளுக்குரைத்த மந்திரி தன் சிந்தைமயக்கந்தெளியாது ஸ்ரீமன் நாருயணனன் யெழுந்தருளியிருக்கும் ஆலயம்சென்று அந்த பகவானை பலமுரைவேண்டி நாதா தாம் என் அரசனுக்குத் துணையாய்ச்சென்று அவர் கோரும் புத்திரப் பேர் கொடுத்து அருள் செய்வாய் என்று கூறி

மந்திரி வணங்கிச் சிந்தை மாரியே யேங்கி வீழ்ந்தான்
அந்தநா ளுள்ளோர் கண்டு அவனைப்பல் விதமாய்த்தேற்ற
சிந்தையுந் தெளியாளுகி திகைத்தவ னங்குதங்க
மந்திரியோடு வேந்தன் வனத்திடை வேடர் சூள. 26

வ—ம்:-வணங்கி நமஸ்கரித்த மந்திரியானவன் தன் சிந்தைமாரி சோபமுற்று பூமியிலிருந்து எழுந்திடாதிருந்தவனை அங்குள்ள பலஅறிவுயர் பெரியார்கள் தேற்றியும் தேராது புலனடங்கி இருந்த நாளில் அரண்மனையில் மற்றுள்ள மந்திரிமாரில் ஒருவர் நமது அரசனனவர் முதல் மந்திரியுடன் கானகத்தில் இன்னும் வேண்டும் வேடர்சூள வேட்டையை யெண்ணி

தங்கின னென்னமற்றும் சதிர்பெரு மமைச்சர்கூற
அங்குரு தோழிமாதர் அரசிபா லுரைத்தாரிவ்வார்
மங்கையு மேங்கிமன்னன் வருவளி பார்த்துநிற்ப
சங்குசக் கரத்தைசூடும் தலைவுனு மமைச்சர்க்காக 27

வ—ம்:-இன்றிரு தங்கினனென்று அங்கு வந்த பாங்கியர்வசம் கூற அந்த பணிமாது உடனே அந்தப்புரம் சென்று அரசியான சுருசியிடம்கூற அந்தமங்கை யேங்கிய முகத்துடன் அன்றிரவில் அரசன் வரும்வளி பார்த்துநிற்க இங்கே திருக்கோலம் கொண்டு எழுந்திருக்கும் சங்குசக்கர தாரியான பகவான் மந்திரி வேண்டு தலுக்காக

கருணைசெய் வாருபந்த கனமுனி நாரதனை நோக்கி
சிருவனே யடவிசென்று செம்மலை தடுத்துநீரும்
பொருந்துமிக் கனிகொடுத்து புத்திரன் வருவானென்று
அருமறை முறையாய்ஆசி அளித்திங்கு வருவாய் பின்னும். 28

வ—ம்:-கருணைபாலிக்க நினைந்து நாரதமுனிவரை நோக்கி சிருவா நீ இன்றிரவிலே செம்மலைசாரலில் அரசனைத்தடுத்து இந்த அருமைபொருந்திய மாங்கனியை அவன் கறத்தில் கொடுத்து உருமையுயர் தேவியர்அருந்தில் புத்திரன் னுதிப்பானென்றுகூறி வேண்டும் ஆசியும் வளங்குவாய் பின்னும்

உண்டுநம் நரனேயங்கு உயர்மக னரும்நின்று
அண்டரும் தொழுவார்கீர்த்தி யாவையு மரியசெய்வோம்
தொண்டரின் பெருமை யெல்லாம் சூழ்வனம் புகுதீரென்ன
மண்டலம் போற்றுமந்த மாமுனி வணங்கியேற்றி 29

வ—ம்:-ஓர் பரமரகசியமும் கூறுவோம் அவனுக்குப்புத்திரனுக நமது உண்மையன்பனுன நரனே உதிப்பான் அவனுல் பிர்மநிலை விளக்கி அடியாருய்யும்படி நினைத்தோம் தேவர்போற்றும் பெரு ஞ்மவாய்ந்த மகவினைஉதவ நீர் வனத்தில் செல்லுமென்ன உலகு தொழும் தவமுனி பகவானைப்போற்றி

செய்பவம் துலைந்ததென்ன செப்பியே வீணையோடு
யெய்தவன் ராமநாமம் யேத்தியே நடந்தான்கானில்
மெய்த்தவன் செயனும் நிர்ப்ப வேந்தனும் நாட்டைவிட்டு
செய்தவம் பலிக்குமென்னும் சிந்தையோ டனந்தம்காடு. 30

வ—ம்:-நான் முன்செய்த பாவங்கள் தொலைந்ததென்று கூறி கையில் வீணையோடு ராமநாமமோதி வேகமாய் கானகம் நோக்கி சென்றுன். அயோத்தியாபுரியையாளும் வேந்தன் மந்திரியிடம் கூறிவிட்டு நாட்டைக் கடந்து நாம் இன்று புத்திரப்பேறடை வோம் என்ற திடத்துடன் நடந்து கொடியகானகம்

கடந்தனன் னனந்த தூரம் கார்வண்ணு யென்னக்கூவி
நடந்தவன் னயர்ந்தான் பின்னே றவிகுடதிசையே சென்றுன்
படர்ந்தது யிருழுமங்கே பயந்தனன் னரசனேங்கி
இடத்தினை பசிநோய்மாற்ற செம்மலோர் வரையின் பக்கம். 31

வ—ம்:-கடந்து அனேகதூரம் கார்வண்ணு யென்றுகூறி நடந்த காலை சூரியன் மேற்குதிசைசென்று மறைந்ததால் எங்கும் இருள் சூள அரசன் பயந்து பெலம்விட பசிவாட்ட ஓர் பெரிய மலைச் சாரலின் பக்கம்

உடல்நிலை தளர்ந்துவாடி உத்தம னயர்ந்து வீழ்ந்தான்
படர்வன விலங்கினங்கள் பலதிசை யோடித்தாவ
அடர்வன வோசையோடு அன்றிவேர் துணையுங்காணுத்
திடத்துடன் புவியையாண்ட செம்மலங் கிருந்தகாலம். 32

வ—ம்:-உடல் தள்ளாடி அயர்ந்து வீழ்ந்தான். ஆனை சேனை முதலான யேவலுடன் அரசபோக திருந்தவேந்தன் காட்டில் துஷ்டமிருகத்தின் பேரொலியும் வனத்தின் கோஷ்டமும் அன்றி வேருதுணையன்றி கலங்கிய காலத்தில்

அருமறை தினமும் போற்றும் ஆரணன் நாமமோதி
பெருவனந் தன்னில்வந்த பெருமுனி நாரதன்முன்
இருகையால் வேந்தையேந்தி யிப்படி நாட்டைவிட்டு
வருவது முறையோ உங்கள் வளியுளார் தமக்குயெல்லாம். 33

வ—ம்:-வேதங்கள் தினந்தெடும் பாதனுகிய ராமநாமமோதி வனத்தின்வழிவந்த நாரதன்கண்டு ஓடிஅரசனை யெடுத்து அணைத்து அவன் சோபம்மாற்றி, வேந்தே இப்படி வனத்தில் வந்து கஷ்டப்படுவது உங்கள் வம்சபரம்பரை வழக்கமாய் இருக்கின்றதே

என்னவே யுரைக்குமந்த இருடியை வேந்தன்நோக்கி
அன்னையே வருதியென்ன அவனடி பணிந்துபோற்றி
மன்னவ னயர்ந்துயேங்க மாமுனியவனைத் தேற்றி
உன்னையிக் கோலங்கொள்ள உரைத்ததார் அரசரேரே. 34

வ—ம்:-என்றுகூறி ஆசிர்வதிக்கும் முனிவனை வேந்தன்கண்டு எழுந்து அவனடியில் நமஸ்கரித்து இந்தயிடத்தில் தாய்போல் வந்ததனிய தவத்தோய் வருக என்றுகூறி மீண்டும் கலங்கும் வேந்தனை முனிவன்நோக்கி அளவிட அரிதான செல்வத்தை முற்றும் வெறுத்து இந்த மரவுரி தரித்து தவக்கோலம் கொள்ளும்படி உனக்கு உறைத்தவர் யெவரோ

மங்கையை மயங்கவிட்டு வனத்திடை வந்ததென்கொல்
செங்கையில் லொழித்ததேனே செப்பென அவனுந்தேறி
அங்கருமேற் றுயிலும் ஆதவன் தொண்டா அய்யா
எங்கள்நா டெனக்குப் பின்னே இருந்துயர் மகுடந்தாங்கி. 35

வ—ம்:-உன் அருமை பத்தினிமார்கள் முதல் யாவரும் யேங்க விட்டு துஷ்டமிருகம்வாழும்கானில் கையில் வில்லுமன்றி நீ வந்த காறணம்உறைப்பாயென்ன வேந்தன் தவமுனியைநோக்கி அய்யா சாக்ஷாத் பாம்பனை துயிலும் பகவானை தினம்போற்றுந் தேவா எனக்குப்பின் நமது அயோத்திநாட்டிலிருந்து என்மகுடந்தாங்கி

பாரினை யாழுதற்கோர் பாலகன் னடையவென்று
மீரியிக் கானில்வந்து மெய்தவ விறதம்பூண்டு
யேரிய தவத்தில்நின்று யெவ்வுயிர் குயிருமான
சீரியோ னடியைகாணச் சிந்தையில் நினைத்து வந்தேன். 36

வ—ம்:-இந்த உலகமுற்றும் ஆளும் வல்லபம்பொருந்திய ஒரு மகனையடையவேண்டி இந்தகோலத்துடன் வனத்தில்வந்து உலக ரக்ஷகனை காணுவதற்கு அருந்தவம் புரிந்து யெவ்வுயிர்க்கும் உயிருன பகவானிடத்தில் வரம்பெருங் கருத்துடன் வந்தேன்

அவனருள் கிடைத்துபாலன் அடைவனே முனிவா அய்யா
தவமது பலிக்கும்வண்ணம் சாற்றுவீர் முறையாய்மார்க்கம்
பவமிலா யென்னபோற்றப் பண்ணவர் புகளுமேலோன்
தவமது பலித்ததிங்கே தார்முழு தாளும்வேந்தா. 37

வ—ம்:-ஆகையால் அருந்தவநாதா அடியேன் செய்யப்புகுந்த தவம்பலித்து பகவான் கருணையால் பாலன் அடையும்வண்ணம் நன்மார்க்கம் உரைசெய்வாய் யென்னக்கூறும் அரசனை மேலோர் போற்றுந் தவமுனிவன் பார்த்து கூறும் நீர்செய்யும்தவம் இன்று பலித்தது

அஞ்சிடா திருப்பாயுங்கள் அயோத்தியை ராமன்போலே
மிஞ்சிய பெருமைபூண்டு விளங்கியே செங்கோ லோச்சும்
மஞ்சனை யடைவாய்நீயும் மயங்கிடாதிருந் துயிந்தக்
கொஞ்சிய கனிகாயுண்டு குடித்துநீர் பருகுமென்ன. 38

வ—ம்:-ஆகையால் உன்கவலையையும் பயத்தையும் மாற்றுவாய் உனக்குப்பின் உங்கள் அயோத்திநாட்டை அந்த ராமபிரான் போலிருந்து பெருமையுடன் செங்கோல் நடாத்தும் புத்திரனை அடைவாய். உன் பசிக்களை மாற்றுவதற்கு என் வசம் உள்ள கனியை புசித்து கமண்டல நீர்பருகுமென்று கூறவும்

அன்னவன் பணிந்துபோற்றி அருந்திநீர் கனிகாயுண்டு
முன்னவ னடியைபெண்ண முனிவனும் நகைத்துநோக்கி
மன்னவா மயங்கிடாதே வளங்குமாங் கனிதானித்தை
உன்னகர் கொண்டுசென்று உத்தமனடியை யுன்னி. 39

வ-ம்:-மன்னவன் முனிவனைப்பணிந்து அவனால்தந்த கனிகாய் அருந்தி நீர்பருகி மீண்டும் தான்வந்த கருத்தைஎண்ணி மாதவனை நினைத்த யரும்மன்னனை நீர் மயங்காதிரும் நான் தேடுதர்க்கரிய தவம் புரிந்து பெற்ற இந்த மாங்கனியை நீரேத்து உமது நகரம் சென்று லோக நாயனடியினை போற்றி

அருத்திடாதி தனையுந்தன் அணங்கினை புசிக்குவண்ணம்
குரித்திதை யளிப்பாயாகில் கோதையுங் கருக்கொண்டன்பாய்
தரித்திடு முலகுபோற்றுந் தனையனை யடைவாளய்யா
உரித்தவள் தனக்கேயித்தை யூட்டுவென முனிவன்கூற. 40

வ-ம்:-இந்த பெருமைதங்கிய நருங்கனியை அருக்காமல் உன் பட்டத்துக்குரியவளான மனைவியெவளோ அவளை இக்கனியை அருந்தும்படி கொடுப்பாயாகில் இக்கனியுண்டவள் கருவுற்று இந்த பரதகண்டம் புகளும்படியான புதல்வனை அடைவாள் என்று முனிவன்கூற

மன்னவன் தொழுதுவாங்கி வணங்கி பல்வகையாய்போற்றி
நன்னலம் மடைந்தேன் கீர்த்தி நாரதமுனிவா உன்னால்
என்னவே யவனுந்தேற்றி யேகுநின் பதிக்கேயின்று
மன்னவா யென்னக்கூட்டி வழித்துணையவனுய் சென்றான். 41

வ-ம்:-அந்த முனிவனின் அரசன் தொழுது பெருமைதங்கிய மாங்கனியை இரண்டுகையாலும் யேர்த்து மீண்டும் அவனடியில் வீழ்ந்துபோற்றி அய்யா தவமுனிவா யான் உம்முடைய கருணையால் நிர்பெருமை யடைந்தேன். என்றுகூறும் அரசனைத்தேற்றி அவனுக்கு வழிகாட்டியாய் முன்னடந்து அவனைப் பின்நடந்து வரும்படி கூட்டிச்சென்று.

கண்டனர் கதிருதயம் கடந்தனர் வனத்தையப்போ
அண்டரும் வணங்குமந்த அருந்தவ முனிவனய்யா
மண்டலம் மாளும்வேந்தா வந்தோம்நும் பதிக்கென்றோதி
கண்டவரஞ்சுமந்தக் கானிடை மறைந்துபோனன். 42

வ—ம்.-சூரிய உதயமானதையும், நகர்அடுத்ததையும் அரிந்த தவமுனிவன் வேந்தனே உமதுபதிக்கு சமீபமாய் வந்துவிட்டோம், இனி நீ அஞ்சாது செல்குவாய் என்றுகூறி தருக்களும் விலங்கினங்களும் நெருக்கி யாரும் அஞ்சும்படியான கானகத்தில் அரசனை விட்டு மறைந்து போனர்

மறைமுனி யேகுமந்த வான்நெறி நோக்கிப் போற்றி
இரையவன் பதத்தை யெண்ணி யாவரு மரியாவண்ணம்
விரவினில் நடந்தானங்கு விளங்கும்பல் வீதிதாண்டி
பரவிய மாடமேகி பாவைவா ளிடத்தை சார்ந்தான். 43

வ—ம்:-அரசனனவன் தவமுனிசென்ற திசையை நோக்கிப் போற்றிசெய்து சூரியன் வெளிவருமுன்னும், மற்றவர்கள் அரியாதிருக்கும்படியும் அதிவேகமாய் வீதிகள் பலதுதாண்டி விரிவான அரண்மனையுள் பிந்தியமனைவிவாழும் அந்தப்புரத்தைசேர்ந்தான்

## உர்பவமுறைத்தல்.

மன்னவன் வரவுகண்டு மங்கையு மெழுந்துவோடி
என்னைநீர் பிரிந்ததேனே யிவ்விரு விடியுமட்டும்
கன்னியுந் துயின்றேனில்லை காவலா யென்ன அன்னேன்
மின்னவள் மோகத்தாலே மெய்த்தவ னுரைமறந்து. 44

வ—ம்:-வேந்தன்வரவையறிந்த சுருசியானவள் எழுந்துவோடி அரசே! நீர் இன்றிரா என்னைவிட்டு பிரிந்ததால் நான் இன்று துயிலன்றி கவலையடைந்தேன் என்னும் பெண்ணரசி மோகவாய் பட்ட வேந்தன் தவமுனிகூறிய முறைமறந்து

தந்தனன் கனியைக்கையில் தையலே யிதனைநீயும்
இந்தனை வேருமன்றித் திருமகள் நாதன்றன்பால்
உந்தனின் அறிவையோட்டி உயர்கனி யருந்துவாயேல்
வந்திடும் மகவுமென்ன மகிழ்ந்தனள் மாதுகேட்டு. 45

வசனம்:-கூறுவான். ஏ மாதரசி இன்று ஒரு நருங்கனியடைந்தேன் அக்கனியிதோதருகிறேன் நீ திரிகரணசுத்தியாய் யேர்த்து அந்த நாருயணனை சிந்தையுளுன்னி இக்கனி யருந்துவாயாகில் நமது கவலைமாற சர்புத்திரனை யடைவாயென்னும் உரைகேட்ட மாது மகிழ்ந்து

அண்ணலே நடந்தயாவும் அடியவள் தனக்காய்வேண்டி
விண்ணவர் போற்றுங்கோலம் மெய்யினில் பூண்டவாரும்
திண்ணரும் கனிதானும்பால் சேர்ந்தவை யுரைப்பீரென்ன
அண்ணலும் நகைத்துமாதே யருஞ்சுத னடையவெண்ணி, 46

வசனம்:-அரசனை உற்றுப்பார்த்து சந்தேகமுற்று வேந்தே தமக்கு இந்த தவக்கோலம் வந்தவாரேது மேன்மைதங்கிய இக்கனி எப்படி கிடைத்தது என்பதும் அடியாள்க் குரைப்பீரென்ன அரசன் நகைத்து பேதாய் நமக்கு அருமையான ஒருமகனை யடையவேண்டி

இப்பெருங் கோலத்தோடு யெய்தியான் னடவிதன்னில்
அப்பனை காணும்வண்ணம் அருந்தவ கருத்துமுற்றேன்
ஒப்பிடா மாதேயங்கே உடையவன் கருணையாலே
இப்பெரும் பதியோர்போற்று மியல்முனி நாரதன்றான் 47

வசனம்:-நான் இந்த கோலத்தோடு நேற்றுபகல் இருண்ட கானகத்தில் மீண்டுந்தனித்துச்சென்று அருந்தவம்புரிந்து எம்பிரானை காண நினைந்துசென்றேன், தேவ ஒருவர்நிகரில்லாபாவாய் அங்கே இப்புவிபோற்றும் அருந்தவமுனிவனுகிய நாரதன் அந்தமாதவன் கருணையாலே

வந்துமின் கருத்தின்வாறு மைந்தனை யடைவாயென்று
தந்தனன் கனியாமித்தை தரித்திடா தருந்தநுன்பால்
இந்தநா ளளிப்பாயென்ன இசைத்துவிண் மறைந்துபோனன்
அந்தமாங் குழலினளே ஆறண்றன்னையுன்னி. 48

வ—ம்:-வந்தார். வந்து என் களைமாற்றி இந்த அருமை பொருந்திய கனியைத்தந்து உன்பால் கொடுத்து அருக்காது அருந்தும்படி செய்தால் புத்திரனடைவாய் என்றுசிதந்து நம்நகர்புரம் வரை வந்து மறைந்துபோனர். அளகு பொருந்திய கரியகுளலையுடைய மாதே நீ அந்த நாரயணனை யெண்ணி

இக்கனி யருந்துவென்ன இசைத்தவன் கடனைமாற்றி
துக்கமும் களைந்துநன்னும் சுடர்முடி புனைந்துவேந்தன்
தக்கவ ரேத்திநிற்கும் தன்நுளே மாடம்புக்கி
இக்குவ லயத்தோர் போற்ற இருந்தனன் றவசிலேரீ. 49

வ—ம்:-இக்கனி யருந்துவாயென்ன அரசன்கூறி தன் காலக்கடனை முடித்து தவக்கோலம் மாற்றி ராஜபூஷணந்தரித்து மகுடந்தாங்கி ஆயிறம் அமைச்சர் தொழுதுநிற்கும் கொலுமண்டபம் யேகி உலகில் கண்டோர் போற்ற சிம்மாசனத்தமர்ந்தான்.

வந்திடும் மமைச்சரோடு மன்னவர் சூழ்ந்துநிற்ப
அந்தநாள் குடிகள்கேட்டு அரசவை வணங்கயார்க்கும்
தந்தைபோ லெழுந்த வேந்தன் தருவன மடைந்தவாறும்
மைந்தனை யடையுமார்க்கம் வந்தவை யுரைத்தான் முற்றும். 50

வ—ம்:-அரசன் மந்திரிமார்சூழ சிம்மாசனத்தில் இருக்கின்றார் என்பதைக்கேட்ட குடிகளில் பல பெரியார் அரசவைநாடி அவனடி வணங்கிநிற்க உலகிலுற்ற யார்க்கும் தந்தைபோலிருந்த வேந்தன் தான் தவக்கோலத்துடன் வனம் சென்றதும் முனிவனால் மகவை அடையும் வரம்பெற்றவையாவும் விபரமாய் உரைத்தான்

கேட்டனர் மகிழ்ந்தாரன்னோர் கெம்பீர தோற்றம் வேந்தன்
வாட்டடல் விழியால்நோக்கி மதியுளீர் முதன்மையான
தாட்டிக அமைச்சனின்னம் சபையுறு திருந்தவாறு
கேட்டெம்க் குரைப்பீரென்ன கிளர்த்தினு னெழுந்தான் றூதன் 51

வ—ம்:-அன்னவர்கேட்டு மகிழ்ந்தனர். பின் அரசன் தனது கெம்பீரம் பொருந்திய விழியால் சபையை நோக்கி நமது முதன் மந்திரி இன்னும்சபைவருத காரணம்யாது. அடே தூதா பார்த்து வாவென்ன கூறும் அரசனை அடுத்த மந்திரி போற்றி தூதனைத் தடுத்து

தடுத்தொரு அமைச்சன்போற்றி தந்தைநீர் பிரிந்தபின்னே
விடுத்திடா கவலையோடு விமலன்வாள் கோவில்புக்கி
படுத்தன னெழுந்தானில்லை பலிருந் தேவல்செய்ய
விடுத்துநா னடைந்தேனிங்கு விண்கதி ருதித்த பின்னே. 52

வ—ம்:-கூறுவான். எந்தையே நீர் வனஞ்சென்றபின் தாங்க முடியாத கவலையோடு அவர் நாருயணன் கோவிலில்சென்று அப் பகவானை நமஸ்கரித்தவர் எழுந்தாரில்லை. நானும் சூரியஉதயம் வரை அங்கிருந்து வேண்டிய உபசாரம்செய்து பயனற்று விடிந்த பின் அனேக ஊழியரை உதவிசெய்ய வைத்து இங்குற்றேன்.

என்னவே வேந்தனேங்கி யெழுந்தனன் றவசைவிட்டு
மன்னரோ டமைச்சர்சூழ மாதவன் னுளேதான்நாடி
அன்னவன் நடந்தகாலம் அவன்றிருத் தேவியான
கன்னியாம் சுருசிமாது கடனெலாம் முடித்துப் பின்னர். 53

வ—ம்:-என்று கூறியவுடன் அரசனேங்கி சிம்மாசனம்விட்டு எழுந்தான். மந்திரிமாருங்கூட எழுந்தார்கள். அவர்களுடன் அரசன் மாதவன் கோவில்சென்றான். இது இவ்வாறிருக்க அரண் மனையில் சுருசியென்னும் அரசி காலைகடனை முடித்துப்பின்னே

மாதவன் றன்னைப்போற்றி வளம்பெரும் கனியையேத்தி
ஓதினுள் பெருமையாக உடனுரை தோழியர்க்காய்
மாதவள் மூரைத்தயாவும் மாதரின் கூட்டத்தங்கே
பாதக முணருவந்தப் பாவையாள் சுநீதிதோளி. 54

வ—ம்:-லோகநாயகனைப் போற்றி அருமைபொருந்திய அந்த மாங்கனியைக் கரத்திலெடுத்து தர்பெருமைகொண்டு தன்னைச்சூழ இருந்த தோளியரிடம் தனக்காக வேந்தன் இக்கனி வாங்கிவந்த வரலாறும் அதன் பெருமையும் கூறினாள். இதை எவ்வித பாதக மும் அரியா பட்டமகிஷியான சுநீதியின் தோளி

வருமுய றுணவுக்காக மாண்பொருள் வேண்டிவந்து
தருகுநா ளரிந்தாளித்தை தலைவன்செய் மோசமென்றே
இருவினை விடாதுயார்க்கும் மென்னவங் குற்றகாலை
மருவுயர் மாதும்மந்த மாங்கனி சுவைந்து உண்டாள். 55

வ—ம்:-மாதாமாதம் அவளிடத்தில் உத்தரவுபெற்று வாங்கும் உணவுபொருள் வாங்கவந்திருந்தவள் இதைக்கேட்டு அரசன் செய்த வஞ்சகத்தை எண்ணி யேங்கி யார்க்கும் கருமம் விடாது என்று தேரியிருக்குங்காலை சுருசி அந்த கனியை அருந்தினாள்.

கொட்டையுந் தொலியினோடு கோதையும் பாரில்வீசி
விட்டவள் ளெழுந்து சென்றாள் மெல்லிமுன் மாதின்றோளி
இட்டியே கவர்ந்தா ளத்தை கேசவன் செயல்தானென்று
வட்டவார் குளற்காமென்ன மற்றவ ரரியாவண்ணம் 56

வ—ம்:-அப்படியுண்டவள் கொட்டையையும், தொலியையும் மதியாமல் பூமியில் வீசிவிட்டு அவ்விடம்விட்டகன்றாள். இது அரிந்த சுநீதியின்தோழி அந்தபகவான் கருணை செய்தான். சுநீதி தவம்பலித்தது என்றும் இது அவளுக்காகு மென்றும் யெண்ணி மற்றவரரியாது அதை எடுத்து

பேந்தனள் உணவுக்கான பெரும்பொருள் பலவும்வேண்டி
சேர்ந்தனள் சுநீதிவாயல் தெரிவைபோய் யவளேயேற்ற
சாந்தனை கடிகைமிக்க தடையெது முளதோகூரு
யேந்தலும் சுகமோ அம்மா யென்னவத்தோளி கேட்டு, 57

வ—ம்:- உணவுக்கு வேண்டிய சாமான்கள் வாங்கி வேகமாய் நடந்து சுநீதி கோட்டையை அடைந்து அவளை வணங்க அவள் தோழி நீ சென்று இவ்வளவு நேரமானதின் காறணம்யாது அரசி யெதுவேனும் தடைசெய்தனளா, நமது வேந்தனைப் பார்த்தாயா, அவர் சுகமாய் இருக்கின்றாரா என்ன தோழி

மன்னனை அமைச்சர்சூழ வளர்மணி யணையில் கண்டேன்
இன்னமும் முளது நம்மவ் இயல்நகர் சிறக்கும்வாழ்வு
என்னவே நடந்தயாவும் இசைத்தவள் கனியின்வித்தை
அன்னவள் கரத்திலீய்ந்தாள் ஆரணுவென்ன யேர்த்தாள். 58

வ—ம்:-கூறுவாள் அம்மணி அரசனை சிம்மாசனத்தில் மந்திரி மார்சூழக் கண்டேன். அன்றி, நமது ரா்ஜ்ஜியம் மென்மேல் ஓங் கும் பெருமையும் அரசன் அடைந்தார் என்று அந்தப்புரத்தில் நடந்தயாவும் விபரமாய்கூறி அந்த கனியின் தொலியும், வித்தை யும் நாருயணுவென்றுகூறி போற்றி அரசி கையில் கொடுத்தாள்.

யேர்த்தொரு பாங்கர்வைத்து மேகிநன் னீருமாடிச்
சேர்த்திடுங் கடன்கள்மாற்றி செம்மலை விடுத்துவேரு
பார்த்திபர் தமக்குகிட்டா பழந்தினை யருந்துவேனல்
சேர்த்திடுங் கர்ப்புக்கூனம் செய்யுமே நரகிலன்றி. 59

வ—ம்:-அரசி இருகரத்திலும்வாங்கி உயர்வான யிடத்தில் வை த்து நன்னீருடி காலைக்கடன் முடித்து அக்கனியைப்பார்த்து நமது அரசனுக்கன்றி மற்றவருக்குக் கிடையாத இந்த அருமை யான கனியை அரசனன்றி அருந்துவேனேல் கர்ப்புக்கூனமும், நரகமும் கிடைக்குமே இதற்கு என்செய்வேன்.

அருந்துவ தொழித்திட்டாலும் அணங்குபின் னெரிந்தாள்வாங்கி
தருபவர் தரினுமுன்னுள் தவமுனி யறிந்தாலித்தை
வருமுடி வேந்துக்கூனம் மங்கையென் செயலோநன்று
பொருந்துமித் தொல்லைமாற புண்ணியா கருணைசெய்வாய். 60

வ—ம்:-நான் இக்கனியை அருந்தாது விடுவேனாகில் பெருந்தவ நாரதரறிந்தால் அரசனை சபிப்பாரே, நாம் அருந்தாது நமது தங்கைக்கு அரசனைக்கொண்டு கொடுக்கும்படி செய்தாலும் உண் டதை மீண்டும்உண்ணேனென்று மறுப்பாளே. ஏ கருணாநிதியான பகவானே இந்த கஷ்டம் நீதான் மாற்றவேண்டும்.

மங்கையா னருந்தவேண்டும் மன்னனிங் குரைத்தல்வேண்டும்
சங்கு சக்கரத்தைபூண்ட தலைவனே யிவையொழிந்தால்
மங்கையில் வுடலம்விட்டு வருவேன் நின்பதத்தைவேண்டி
தங்கிட வென்னவோதி தையலு மவுனமுற்றாள். 61

வ—ம்:-ஆகையால் இக்கனி யானேயருந்தவேண்டும். அதற்கு என் சமீபம் அரசன் வரவேண்டும். ஏ! சங்குசக்கரதரனே இவ் வரம்உதவிசெய்வாய் நீ பராமுகமாயிருந்தால் இந்த உடலைவிட்டு உன்பாதம் அடைகுவேன் என்றுகூறி மௌனமுற்று யோகநிலை யெய்தாள்.

கற்பினி லுயர்ந்தா ளிவ்வார் கருதிடயூகிதன்பால்
விற்பனமாகச்சென்ற வேந்தனும் முகுந்தன்வாழும்
பொற்புயர் கோட்டந்தன்னில் புகழ்ந்தவன் நிலைகண்டோதி
தற்பரன் செயலோவென்னத் தாவிப்பின் னவனைத்தாங்கி. 62

வ—ம்:-கற்பில்மிக்க மாது இவ்விதம் இருக்க யூகியென்னும் மந்திரியைத்தேடி விஷ்ணுகோவில் சென்ற வேந்தன் அங்குற்று அமைச்சன்கிடக்கும் நிலையை மற்றவர்க்குக்காட்டி யேங்கி ஓடி அவனை வாரித்தாங்கி இது இந்த பரமபதநாதன்செயல் இவ்வித மானதோவென்று கூறி,

அறிவினில் சிறந்தநண்பா யாதுநின் கருத்துமாரி
சிறகினை யிழந்த அன்னம் தியங்குவா றயர்ந்ததேனோ
தெரிவியென் றுரைக்குமந்த செம்மலை விழியால்நோக்கி
கரிகிய பயிரும்மாரி கண்டென வெழுந்துகண்டு. 63

வ—ம்:-அவனைநோக்கி அறிவுயர் நண்பா உன்கருத்து இவ் வார் மாரி சிறகிழந்த பரவைபோல் மயங்குவதேனோ கூறுவாய் என்ற அரசனைக்கண்டு வாடியபயிர் மழைகண்டு தேறியவார்தேறி அவனடிபோற்றி

ஆவியை பிரிந்தாலாக்கை அவனியில் தரியாதவ்வார்
பாவியேன் தனித்துஉம்மை பார்வனந் தன்னில்விட்டு
ஆவியோ டிருந்துவாளல் அடுக்குமோ வென்னவேந்தன்
நீவினை யொழிந்ததய்யா சென்றுநின் கடன்கள்மாற்றி. 64

வ—ம்:-வேந்தே! உயிரைப்பிரிந்து உடல் நிலைபெருமா? அது போல் அடியேன் உம்மை கொடியவனத்தில் விட்டு உயிர்பெற்று வாளல் முறையோவென்ன யேங்குவானைத்தேற்றி அப்பனே நமது கவலைகள் ஒளிர்ந்தது. ஆகையால் நீ சென்று உன் காலக் கடனை முடித்து

அருசுவை யுடனே யன்னம் அருந்தி நீ நமதுமுன்னம்
வருவாயென் றவனைப்போக்கி வந்தனன் மன்னர்சூழ
தருமணி தவசிலுற்றான் தன்னைச்சூழ்ந்திருந்த மற்றூர்
உருகிட அமைச்சன்பூண்ட உயர்வினை யெடுத்துவோதி. 65

வ—ம்:-உன் மாளிகையில் அருசுவையுண்டு வருவாய் நமது பக்கம் என்று அவனை அனுப்பி வேந்தன் மற்றும் மந்திரிகள்சூழ சிம்மாசனம்வந்து இருந்து மற்றவர்மனமுருக மந்திரியின் உருதியை பெருமையாய் பேசியிருந்தான்

இருந்திட அவனும்வந்து இறைவனைப் பணிந்து அய்யா
மருவனம் முற்றீர்ரங்கே வாய்ந்தவக் கருணை தம்மை
சிருவனு னரியும்வண்ணம் செப்பென மகிழ்ந்து மன்னன்
பெருவனம் மடைந்துபெற்ற பெருமைக ளுரைத்தான்முற்றும் 66

வ—ம்:-அப்படி அவனிருந்தகாலம் மந்திரிவந்து அவரடி பணிந்து, வேந்தே! தாங்கள் என்னைவிட்டு தவக்கோலமுற்று வனம் போய் மீண்ட விபரம் உறைப்பீரென்ன போற்றும் அவனைத் தேற்றி வேந்தன் நடந்த விஷயங்கள்யாவும் விபரமாய்க்கூற,

மந்திரி கேட்டுசிந்தை மகிழ்ந்துபின் மயங்கியேங்கி
எந்தையே முனிவன்விண்ட இசைமருத் தென்னையீன்ற
பிந்தியஆய்க்கு யீய்ந்தீர் பெருமையும் தவமும் வாழ்வும்
முந்திய தாய்குசொந்தம் முனியிதை யரிவானென்னில். 67

வ—ம்:-மந்திரிகேட்டு மகிழ்ந்து பின்னதின் துண்பம்உணர்ந்து யேங்கி வேந்தே! அந்த அருமையான கனியை என் பிந்திய ஆய்க்கு தந்தீர் இதுதகுமோ, உலகோர் போற்றும் பெருமையும், வாள்வும், தாங்கள் செய்த தவமும், கீர்த்தியும் என் முந்திய தாய்க்குச் சொந்தமென்றுணராது போனதை அந்த தவமுனி யரிந்தால்,

கன்றியே யளிக்குஞ்சாபம் கடக்கவு மிதே நம்மால்
என்றவ னேங்கிநிற்ப இராசனுங் கலங்கித்தேரி
சென்றுநீர் சுருசிபக்கம் தெய்வமாங் கனியுளதேல்
இன்றுநீ யேர்த்துமீள்வாய் யெம்முறை யுரைத்துதோழி. 68

வ—ம்:-அளவிடமுடியாத கோபத்துடன் கொடுக்கும் சாபம் மாற்ற நம்மால் முடியுமா? என்றவனேங்க மன்னனும் கலங்கி உடனேதேரி அங்குற்ற தோழியைக்கூவி நீ விரைந்து சென்று சுருசியைக்கண்டு நாம்தந்த மாங்கனியை உடனே வாங்கிவருவா யென்றுகூறி விடுத்தான்.

என்னவே கடிதுசென்று இளங்கொடி யதனையுண்டு
மின்னிய மகிழ்ச்சியோடு விளங்கிடு பெருமை தன்னை
கன்னியு மறிந்துவோடி காவல னடியைப்போற்றி
அன்னதை யுறைத்தாள்கேட்டு அமைச்சனு மயங்கியேங்க. 69

வ—ம்:- அவ்வுரைகேட்டு வேகமாய் வோடி விபரமறிந்து திரும்பிவந்து அரசனை வணங்கி வேந்தே அந்த மாங்கனியை தேவியார் அருந்தி மனமகிழ்சியோடு இருப்பதைக் கண்டேன் என்றுரைக்கக் கேட்ட மன்னன் மனம் மயங்கி தன்னிலை தடுமாறி யேங்க

மன்னவன் றன்னைபின்னே மதியுளான் தேற்றிஅய்யா
இன்னமு முளதுமார்க்கம் ஈன்றவள் கோவில்புக்கி
அன்னவட் குரைத்துசீற்றம் அவட்குறு தகற்றிவந்தால்
முன்னுரை முனிவன்சீறுன் முறையிது அவர்காய்வேண்டி. 70

வ—ம்:- மந்திரியானவன் அரசனைத்தேற்றி இவ்வினைமாற்ற இன்னமும் மார்க்கமுண்டென்ன அவையாதென கேட்கும் அரசனை நோக்கி அய்யா சுநீதியென்னுந் தாய் வாழும் மனை சென்று நடந்ததையுரைத்து அவள் கோபம்மாற்றி வந்தால் அன்னவர் வேண்டுகோளால் தவமுனிவர் கோபமடையார்

வந்திடு மென்னவேண்டி மந்திரி வணங்கிநிற்ப
சிந்தையும் செயலும்வேறும் செம்மலும் நகைத்துஅய்யா
அந்தநல் முனிவன்சாபம் அளிக்கினு மளிவதன்றி
சுந்தரி மனையில்புக்கேன் சுருசியா ளேங்கும் வண்ணம். 71

வ—ம்:- ஆகையால் தாங்கள் வாரும் என்ன வணங்கும் மந்திரியை நோக்கி தன் சிந்தையொருபக்கமும் நடத்தையொரு பக்கமுமாய் வாழும் வேந்தன் கூருவார் அய்யா சுருசியாள் கவலையடையுமாரு சுநீதியின் அரண்மனையடையேன் அதனால் ஏற்படும் முனிவன் சாபத்தையும் யேர்த்து அளிவேர்ப்பட்டாலும் அளிவேன் எனலும்

செம்மலே முனிவன் சாபம் செய்யிலோ அளிவேனென்றீர்
இம்மையில் பிரிந்துநீரும் யேகிடில் யானும்மற்றும்
மும்மைசேர் குடிகளெல்லாம் முடிந்திடு மிதனைமற்ற
செம்மனு மரிகுவாரேல் செய்யுமே ஊனங்கள்மிக்க. 72

வ—ம்:- வேந்தே அந்த தவமுனிவனாகிய நாரதனால் யேர்படும் சாபத்தை யேர்க்கவும் அதனால் அளியவும் தயாராயிருப்பதாய் கூருகிரீர் தம்மைப் பிரிந்து நாங்களும் குடிகளும் உயிர் தரியோம் இவை மற்ற மன்னர்கள் அரிவாராகில் நம்மை யேழனம் செய்வார்கள்

மன்னவா வினைகள் தாவும் மாற்றலர் நகரைகொள்ளும்
கன்னியு மகவையீன்று கலங்குவார் துணையுமன்றி
இன்னதி லேவைதான்நன்று யென்னவே யரசன்தேரி
அன்னவள் சுநீதிவாயல் அடைவோம்நா மெனவெழுந்தான். 73

வ—ம்:- இத்தால் கொடிய பாவம் சூளும் பகைஞர் நமது அரசாட்சியை கைக்கொள்ளுவார்கள் என்தாய் மகவீன்று துணையற்று கலங்குவார்கள் குழந்தையும் கார்ப்பாறற்று யேங்கும் ஆகையால் இதில் எவை நன்று என்னும் மந்திரியுரைகேட்டு அரசன் மனந்தேரி சுநீதியின் மனை செல்ல எழுந்தான்

கர்புடை மாதின்கோவில் கண்டனன் கார்போர் போற்ற
விர்புடை மன்னனங்கே விளம்பென விரைவில்ரேழி
தர்பா னடியையுண்ணும் தையலை வணங்கிநோக்கி
பொர்புநேர் புயத்தான் வந்தான் பூவையே யமைச்சனோடு. 74

வடம்:- மந்திரி பின்வர கர்ப்பில் சிறந்த உத்தமியான சுநீதி மனையை வேந்தன் அடையவும் கண்ட காவலர் வணங்கவும் அரசன் ஒரு தோழியையழைத்து தாங்கள் வந்திருப்பதாய் அரசியிடம் கூறென்ன விடுக்க அவள் சென்று அரசன் வசவை யெதிர் பார்த்து பகவானை ஸ்தோத்தரித்து யிருக்கும் அரசியைபோற்றி அம்மணி வரையொத்த தோழுடைய நமது வேந்தன் மந்திரியோடு நமது ஆசாரவாசல் வந்திருக்கின்றார்

வந்தவ னுனதுவாயல் வளுத்தென விடுத்தானுற்றேன்
சுந்தரி யாளேயென்ன தோகையு மகிழ்ச்சிபொங்கி
வந்தனள் ஆலமேந்தி மாதர்கள் சூழ்ந்து போந்த
அந்தமன் றன்னைக்கண்டு அடியினைப்பணிந்து நின்று 75

வடம்:- என்னை தங்கள் வரவை தெரிவிக்கும்படி சொன்னர்கள் வணப்புரும் அன்னையே யெனவும் சுநீதி அளவிடமுடியாத மகிழ்ச்சியுடன் மாதர்கள் ஆலமேந்தி தன்னை சூழ்ந்துவர வாயலடைந்து வேந்தனைக்கண்டு அவன் பாதத்தில் சிரம்பட வணங்கி எளுந்து ஒதுங்கி நின்று

தங்கையும் சுகமோநீங்கள் தவத்துயர் கோலம்பூண்டு
அங்கொரு மகவுவேண்டி யடவிசென் றதுவுமெப்போ
மங்கள முனிவன்தோன்றி மாங்கனி யளித்ததென்னுள்
அங்கதின் றோலியும் வித்தை அவனியி லெறிவாருண்டோ. 76

வடம்:- அரசனை நோக்கி வேந்தே என் தங்கையான சுருசி சுகமோ தாங்கள் தவக்கோலங் கொண்டு புத்திரசந்தானமடைய வெண்ணி கானகம் சென்றது எப்போ தவமுனிவருன நாரதர் அங்கு தங்களைக் கண்டு புத்திரனை தரும் மாங்கனி தந்தது எப்போ இப்பேர்பட்ட பெருமை பொருந்திய மாங்கனியின் வித்தையுந் தொலியையும் பூமியில் வீசி யெறிவார்களுண்டா

கண்டதை யெனதுபாங்கி காவலா கவர்ந்துயிங்கே
கொண்டுவந் தளிக்கவாங்கி கொற்றவா நினைத்தேனும்மை
அண்டரும் புகழவாழ்வோய் அடியெனைப் பொருட்டாயெண்ணி
கண்டனை யென்னகூறும் காரிளை தன்னைத்தேற்றி, 77

வ—ம்:- அப்படி யெரியப்பட்டகனியை என் தோழி கண்டு எடுத்துவந்து எனக்கு தந்தாள் அக்கனியின் பொருட்டு தங்கள் வரவை யெதிர்பார்த்திருந்தேன் ஆனால் தேவர்கள் புகலும் பெருமைதங்கிய வாள்வுடைய தாங்கள் என்னை யொருபொருட்டாய் எண்ணி வந்து கண்டதின் கருத்து திருவுளம் பற்றினால் நன்றெனும் பெண்கொடியை தேற்றி

கன்னியே யுனக்காயந்த கனியினை முனிவன்றந்தான்
முன்னுரை வினையுஞ்சூழ மோகத்தால் மதியிழந்தேன்
என்னவே யணைத்துமாதை யேகியோர் தவசிற்றங்கி
அன்னமே பொருத்தியென்ன ஆயிளை யெழுந்துபோற்றி. 78

வ—ம்:- கண்மணி உனக்காகவேயிந்த அருமையான மாங்கனியை நாரதர் என்னிடம் குடுத்தார் நான் சுருசியின் மோகத்தால் அறிவிளந்து போனேன் என்று கூறி மங்கையைத்தீண்டி யணைத்துக்கொண்டு மாடத்துள் ஒரு சிம்மாசனத்தில் இருவருமிருந்தும் பின் அவளை நோக்கி மாதே இந்த தவறுதலை எனக்காக மனம் பொருப்பாய் என்னும் வேந்தனை அரசி யெழுந்து போற்றி

தங்கையின் பருவகாலம் தலைவனீ பிரியொணாது
அங்கவ ளிதனையுண்ண அளித்துநீ ரிருந்துவாழும்
திங்களோர் தினத்தில் மட்டுந் திருவடி சேவைகாட்டும்
இங்குரை யேவல்செல்வம் இல்லைவேர் குறைதான்வேந்தா. 79

வ—ம்:- வேந்தே சற்று கேளுங்கள் என் தங்கையே என்னினும் இளந்தையான வாலிபப்பருவமுற்றவள் ஆகையால் தாங்கள் அவளைவிட்டுப்பிரியக்கூடாது இந்த விதையையும் தொலியையும் அவளிடம் குடுத்து உண்ணும்படி செய்யுங்கள் அன்றி தங்கள் பாதசேவை மாதம் ஒருமுறை தாருங்கள் இந்த இடத்தில் எனக்கு யேவலும் செல்வமும் எவ்வித குறையின்றி இருப்பதால் என் மன சந்தோசமே இந்த வாழ்வில் வேந்தே

என்னவே கலங்கிமன்னன் இளங்கொடி மாதேநீயும்
பின்னுமென் னுரைமருக்கா பெருங்கனி விதையருந்தில்
உன்திரு வயற்றில் மைந்தன் உதித்திந்த உலகுதாங்கும்
கன்னியே வருவாய்நம்மள் கனமணிமிகுக்கும் கோவில். 80

வ—ம்:- என்றஉடன் மயங்கி வேந்தன் பெண்ணே நீ கர்புடைய உத்தமியானதால் நான் கூறும் வாய்மை தடுக்காதே இந்த வித்தையும் தொலியையும் அருந்துவாய் உன் வயற்றில் புத்திரனுதிப்பான் அப்புத்திரனே எனக்குப்பின் இந்த உலகை யாளுவான் ஆகையால் நமது உன்னித மாளிகை செல்வோம் வாராய்

அங்கவள் ளெழுந்துவேந்தன் அடியினைப்போற்றி செங்கண்
பொங்கரு மேற்றுயிலும் புண்ணியன் றன்னையுண்ணி
செங்கனி தொலியும்வித்தை தேன்மொழி யெடுத்துஉண்டு
மங்களம் நிரைந்தவேந்தா வரமொன்று தருவா யென்ருள். 81

வ—ம்:- என்னும் வேந்தன் அடியினை சுநீதி போற்றி பாற்கடலில் துயிலும் நாரணனை எண்ணி செழுமைதங்கிய மாங்கனியின் விதையையும் தொலியையும் எடுத்து உண்டு மருபடியும் அரசனை போற்றி இன்னிசையுடைய வேந்தே அடியேன்மீது கிருபை செய்து ஒருவரமுதவுவீர் எனவும்

தங்கையைப் பிரியாமுன்போல் தரணியாண்டிருக்க நீரும்
இங்குநா னிரும்பதோடு இரைவாநான் கேட்டவண்ணம்
திங்களோர் தினமுமிவ்வார் தெரிசனை யளிப்பீரென்ன
அங்கவள்க் கீய்ந்துவேந்தன் அரிவையை நோக்கிமாதே. 82

வ—ம்:- அவ்வரம் யாதென வேந்தே தாங்கள் முன்போல் என் தங்கையை பிரியாது அவளுரும் மனையில் வாள்வீர் நான் அவளுக்கு இடஞ்சலில்லாமல் இங்கேயிருக்கவும் நான் கேட்டவண்ணம் தாங்கள் மாதம் ஒருமுரை யிங்கு வரவும் வேண்டினேன் என்ன மன்னன் அதை யீய்ந்து பின்னுங் கூருவான் ஏ மாதே

சுக்கிர வாரந்தோரும் சுதனுனக் குதிக்குமட்டும்
தக்குவே னிறவிலென்ன தையலும் தடுக்கவஞ்சி
பக்குவமான வேந்தன் பதமலர் பணிந்துநிற்ப
துக்கமற் றிருப்பாயென்ன சுடர்முடி வேந்தன்கூறி. 83

வ—ம்:- உனக்கு புத்திரனுதிக்கும்வரை நான் வெள்ளிக்கிழமைதோரும் உன்னிடம் வருவேன் வந்து இரவில் தங்குவேன் என்று கூற மங்கை யதற்கு இசைந்து நிர்க்க வேந்தன் மருபடியுமவளை நோக்கி நீ கவலையற்று யிருப்பாய் என்று கூரி

மந்திரி தம்மை கூவி வந்தபின் நடந்தயாவும்
தந்தைசேய் குரைத்தவண்ணம் தன்மையாய் யுறைத்தான்முற்றும்
சிந்தையும் மகிழ்ந்து மன்னன் சேவடியவனும் போற்ற
அந்தநா ளனைத்துமாதை அவர்விடை குடுக்கமீண்டு. 84

வ—ம்:- மந்திரியை அழைத்து அவரிடம் தான் வந்தபின் நடந்த யாவும் விபரமாய் தகப்பன் மைந்தனுக்கு கூறும் அன்பு போல் இனிமையாய் கூரி மன்னன் மகிழ மந்திரி வணங்கி நிர்ப சுநீதியை தேற்றி மகிழ்வித்து அவளிடம் விடைபெற்று திரும்பி

மன்னவர் வணங்கும்வாயல் வந்தனன் னவையோர்கண்டு
அன்னவன் பதத்தைபோற்ற அரசனும் மகிழ்ச்சிபூண்டு
சொன்னன் னவர்க்குஆசி தொன்னகர் வருமையுள்ளோர்
தன்னையே யளைத்துவேண்டுந் தருமங்கள் பலதுசெய்தான். 85

வ—ம்:- அரசன் அனேக மன்னர் வந்து வணங்கும் தன்சபா மண்டபம்வர அங்குள்ளோர் எழுந்துவணங்க வேந்தன் மகிழ்ந்து அவர் காசி செய்து அன்னகரிலுள்ள ஏழைமக்களை வரவழைத்து அவர்களுக்கு வேண்டும் பொருள் குடுத்து மகிழ்ந்தான்

திருமகள் கேள்வன் கோட்டம் சென்றுபல சிறப்பும்செய்து
மருவலர் சூழ்ந்துபோற்ற மண்ணுளோர்க் குதவியாக
இருந்தனன் செங்கோலோச்சி இளையவள் மனம்போல்கூடி
பரும்புகர் வாறதன்று பராபரி பூஜையென்றே. 86

வ—ம்:-மகாலெக்ஷுமிபைமார் பில் வைத்த நாருயணன் கோவில் சென்று பல வகை அபிஷேக ஆராதனை செய்து மகிள்ந்தும் பகைவர் வணங்க பூமியோர் குதவியாக ராசரீகம் செய்து சுருசிமனம் போல் நடிக்கும் அவளிடம் நீ புத்திறன் காணும் வரை நான் வெள்ளிக்கிளமை தோரும் பரமேஸ்வரி பூசை செய்ய வேண்டியதிருப்பதால்

மங்கைபின் ளுைக்கோதி மற்றவரரியா வண்ணம்
தங்கினன் சுநீதியில்லம் தலைவனு மிரவுகாலம்
இங்கிது முறையாய்கொண்டு யிருந்திடும் போதுஅந்த
மங்கைய ரடைந்தார் கர்பம் மாதவன் கருணையாலே. 87

வ—ம்:- நான் அன்று உன்னிடம் வர முடியாதென்று கூரீ மற்றவர்கள் அரியாது சுநீதிமனை போய்இரவு தங்கி வருவார் இப்படி முறைவைத்து நடத்தி வருங்காலம் அரசன் தேவிமார் இருவர்களும் நாருயணன் கருணையால் கர்பமடைந்தார்கள்.

மூன்னவள் கருவையந்த முடியுடை மன்னனேடு
கன்னியாங் தோழிமாதர் கண்டனர் யாருங்காணுர்
பின்னவ ளடைந்தகர்பம் பெருமைசே ருலகோறக்கண்டு
மன்னவன் றவத்தையேற்றி மகிழ்ந்தன ரிருந்துநாட்டில். 88

வ—ம்:-முந்தியவளான சுநீதியடைந்த கெர்பத்தை மன்னனும் தோழியரும் அரிவார்கள் மற்றவர்க்குத்தெரியாதிருந்தது பிந்திய வளான சுருசியடைந்த கெர்ப்பம் உலகம்முற்றும் அரிந்து மன்னவன் தவத்தை புகழ்ந்து மகிழ்ந்தார்கள்.

இப்படி திங்கள்பத்து யேகவோர் சுபதினத்தில்
மைப்படி சுநீதியென்னும் மாதவள் சோபமுற்று
ஒப்பிட நிகர்வேரில்லா உயர்முனி குலாங்களேற்ற
செப்பிடக் கோள்கள்நல்ல செளிப்புருங் காலந்தன்னில். 89

வ—ம்:-இப்படி பத்து மாதமும் சென்று ஒரு சுபதினத்தில் மைதிட்டிய கண்ணுளான சுநீதியானவள் புத்திரபேற்றின் சோபமுற அனேக ஊழியரும் மருத்துவியும்சூழ நிகரில்லா முனிவர்கள் மகிள நவக்கிரகங்கள் நல்ல நிலையடைந்துநிற்க சுபவேளையில்

மண்ணுளோர் மகிழ்ச்சிகொள்ள வானுளோர் பூவின்மாரி
அண்ணலை நோக்கி பெய்ய அரனுமை யிடத்தில்லோத
கண்ணனின் கருணையாலே காசினியிருளைப்போக்க
வண்ணனே வந்தானென்ன மரகதக்குன்றை யொத்து. 90

வ—ம்:-உலகிலுள்ளோர்மகிள வானவர் பூமாரிபெய்ய ஈசனிடத்தில் உமையவள் கண்ணனுடைய கருணையால் அவன் அன்பன் உதிப்பதையோத நாரணன் உதவியால் அவ்வரையிலுள்ள இருளைப்போக்கி பகவானே உதித்தானென்று கூறும்படி ஒரு மரகதமலையை யொத்து

இந்துவி னுதயந்தன்னில் இசையும்பல் லியங்களார்ப
வந்துவிண் ணயனும்மாசி வளங்கநன் னிமித்தந்தோன்ற
அந்தர மின்னாரிச்சை யடையும்நர் குளவிதானும்
வந்தனன் மகிழ்ந்தாளன்னை மாதவம் பலித்ததென்றே. 91

வ—ம்:-சந்திரனுதயத்தில் பல்லியம்முழங்க, பிர்மா விண்ணிலிருந்து ஆசிகூற, நல்ல நிமித்தங்களும், நர்குரி தோன்ற தெய்வமாதருங்கண்டு மயங்கும் வனப்புடன் நற்பெருமையடையும் பாலன்பிறந்தான். ஈன்றதாய்கண்டு அரசன்தவம்பலித்ததென்று மகிழ்ந்தாள்.

கண்டனர் பணியார்யாரும் காரிகை யேவாலோடி
மண்டலம் ஆளும்வேந்தன் மலரடி பணிந்து அய்யா
அண்டர்க்கு மரிதுகிட்ட ஆயிரங் கதிர்போல்ஜோதி
கொண்டொரு மகவுஉந்தன் கோதையாம் சுநீதியீன்றாள். 92

வ—ம்:-பணிமாதரும் கண்டு மகிள அவர்களை அரசிநோக்கி மன்னரிடம் கூறும்மென்று யேவ அவர்களோடி வேந்தனைப் பணிந்து அய்யா ஆயிரம் சூரியப்பிரகாசம்போல் தேவர்க்கும் கிடைக்காத பெருமை பொருந்திய புத்திரனை பட்டத்தரசியரான சுநீதியீன்றாள்.

என்னவே மகிழ்ச்சிபொங்கி யெழுந்திடு மரசன்றம்மை
கன்னியாம் சுருசிசிரி காவலா அவளுமெவ்வார்
இன்னிசை மகவுகண்டாள் இழந்தனள் கர்ப்பையென்ன
மன்னவன் சினந்துமாதே மதியினை யிழந்தாய் நீயே. 93

வ—ம்:- என்றவளுரைக்க மகிழ்ந்துகாண எழுந்த அரசனை தடுத்து சுருசியானவள் சிரி, அரசே! அந்த சுநீதியானவள் எப்படி புத்திரனீன்றாள். ஆகையால், அவள் கர்ப்பையிழந்தவளாவாள் என்றுகூற வேந்தன் சினந்து அதட்டி மதியிழந்த மாதே!

அன்னவள் யிழந்தால்கர்ப்பை யவனியன் றழியுங்கண்டாய்
முன்னமே முனிவனீய்ந்த மூதுயர் கனியையுண்டாய்
அன்னதின் வித்தைநீயும் அரிவிலா தெரிந்தாய் பாரில்
கன்னியின் தோழிகண்டு கவர்ந்தவள் பக்கமீய்ந்தாள். 94

வ—ம்:-அந்த பதிவிரதாசிரோண்மணியானவள் கர்ப்பிழந்தால் உலகம் அன்றே அளியும். நீ முன் முனிவரால்தந்த மாங்கனியை அருந்தினவள் அதின் வித்தையும் தோலியையும் நல்லரிவில்லாது பூமியில் யெரிந்துவிட்டாய் அதையவள் தோழிகண்டு எடுத்துப் போய் அவளிடம் குடுத்தாள். அக்கனி

முனிமனப் படியேயந்த மூதுயர் கனியின்வித்தை
இனியவ ளுண்டுபாலன் ஈன்றனள் தெரிவாய்மாதே,
இனியிதை வுரைக்கிலென்னாம் இழந்தனை யரிவைநீயும்
முனிவினை யகற்றுவென்ன முடியுடை மன்னர்தேற்ற. 95

வ—ம்:-முனிவரால் அவளுக்காகத்தந்த கனியை அவளே அருந்த யேற்பட்டு அருந்தியதால் இப்போது மகவைக்கண்டாள். இதை இனி பேசிடில் பயனென்ன உன் அரிவிழந்த காரியம் இப்படி முடிந்தது. ஆகையால், நீ கோபமுறாதே என்று இனிய மொளி பலகூறி வேந்தனவளைத்தேற்ற,

மங்கையும் விதியைநொந்து மன்னனை நோக்கிநீரும்
இங்குவிட் டகலேனென்றும் இழங்கொடி மகவுக்குள்ள
மங்களம் கல்விசெல்வம் வளங்கிடும் முதவியொன்றும்
அங்கவர்க் குதவேனென்று ஆணையுற் றுரைத்திரென்றாள். 96

வ—ம்:-அந்த கொடுமையுடைய மாது அரசனைநோக்கி நீர் என்னைவிட்டு இனி அவளிடம் போவதில்லையென்றும், அவளீன்ற பாலனுக்கு எவ்வித சீரும், சிறப்பும், கல்வியும், விவாகமும் மற்று முள்ள உதவிகள் பூராவும் செய்வதில்லை என்று எனக்கு ஆணை யிட்டு உருதி கூறும்மென்றாள்.

மருப்பிரேல் மடிவேனென்ன மன்னனும் மயங்கிமாதே
இருப்பாய் நீ கலங்கிடாது ஈய்குவேன் கேட்டவண்ணம்
விருப்பமும் மதுவேயாகில் வினைவிடா தென்னவோதி
பொருப்பிணையன்னா ளென்னா புரவலன் மாதைதேற்றி. 97

வ—ம்:-அப்படி நீர் கூராவிட்டால் நான் உயிர்விடுவேன் எனவும், அரசன் கலங்கி பெண்ணே நீ கலங்காதே உன் விருப்பம் போல் ஆணையிட்டேன் என்றுகூறி வினவளி விடாதென்று ஏங்கினன். ஆனல் தன் பொருப்பும், உதித்த மகனின் பொருப்பும் அந்த நேரம் உணராதிருந்து அவளைத் தேற்றினன்.

வந்தவளானதோழி மாதரை நோக்கி பெண்காள்
இந்தநாளுரைக்க கேடடோம் யேகுவீரென்ன கூறீ
அந்தநாள் கவலைபூண்டு அரசனங்கிருந்தபின்னர்
சிந்தையும் கலங்கிமாதர் சென்றனர் அமச்சன்பக்கம் 98

வ—ம்:-பின் தோழியரை நோக்கி நீங்களுரைத்ததையரிந்து கொண்டோம் செல்வீரென்று கூறி தாங்கமுடியாத கவலையோடு அரசனிருந்தார். வந்த மாதர் கலங்கி மந்திரிபக்கம் சென்ருர்கள்.

அன்னவனடியைபோற்றி யரைந்தனர் விபரமாக
முன்னவன் செயலும் பாலன் மூவுலகுதித்தவாரும்
அன்னதையரிந்து அந்த அரிவுயரமைச்சன் தேரீ
மன்னனைக்கானவென்று மதித்தவன் கோவில்புக்கி 99

வ—ம்:-அவரடியையபோற்றி பாலகன்பிரந்ததும், தாங்கள் அரசனிடம் முறைத்ததும், அந்தப்புரத்தில் நடந்ததும் விபரமாகக் கூற மந்திரிகேட்டு திடுக்கிட்டு மனமகிழ்ந்துதேரி அவர்களையந்த இந்தயிடத்தில் நிருத்தி வேந்தனை காணுவதற்காய் அந்தப்புரம் சென்று,

கார்ப்பவர் தம்மைகூவி காவலன் பக்கம்நீங்கள்
பார்க்கவே யமைச்சன்வாயல் பற்றினு னென்ன கூறி
கார்ப்பவன் விடைகூறென்ன காவலர் கடிதுசென்று
பார்த்திபன் தன்னைபோற்றி பணித்தனர் அமைச்சன்கூற்றை.100

வ—ம்:-அங்குள்ள காவலரையழைத்து அரசனைக்காண மந்திரியாகிய நான் வந்திருக்கின்றேன் என்று கூறுங்கள், அதற்கு அவருத்தரவையும் வந்து தெரிவியுங்கள், எனவும் அதிலொருவன் விரைந்து சென்று பூமியில்வீழ்ந்து அரசரைப்போற்றி மந்திரி கூரியதை கூறினன்.

மன்னனும் மெழுந்தான்கேட்டு மங்கையை நில்லென்றோதி
அன்னவ னடைந்தான்வாயல் அவன்வற அமைச்சன்கண்டு
சென்னிய அடிமேல்சூடி செப்புவா னுலகாள்வேந்தா
இன்னிசை யுலகையாள பிளைஞ்ஞன்வந் துதித்தவண்ணம். 101

வ—ம்:-அதுகேட்ட வேந்தன் தேவியை நில்லென்று தடுத்து வேகமாய் எழுந்து வாயல்வர மந்திரி அவர் பாதத்தில் வீழ்ந்து போற்றி உலகமாள் வேந்தே தமச்குப்பின் இவ்வுலகமாள பாலகன் பிரந்ததை தாங்கள் தோழிகளால்

அரிந்துநீர் றரியார்போலே அரிவைவாய் மொழிக்குஅஞ்சி
இருந்திடில் உலகமேசும் மென்னமன் சீரிக்கூறும்
தெரிந்தனம் அதனையிங்கே செப்பிடத் துணிந்துநீயும்
வருங்கதிர் றடைந்தபின்னே வந்ததென் னுரைத்தியென்றான்.102

வ—ம்:-அரிந்தும் அரியார்போல் என் பின்தாய்க்கு அஞ்சி இருப்பதை யுலகோர்அரிந்தால் யேசுவார்கள் என்றிட வேந்தன் சிரி அது நாம் அறிவோம் நீ இந்த இரவு காலத்தில் இது ஒரு பெரியகாரியமாய் சொல்லத்துணிந்து ஏன் வந்தாய்? அதைக்கூரு என்னலும்,

மன்னவா பொருப்பாயாவும் வானுளோர் யெழுந்துஆர்த்து
மின்னிய புஷ்பமாரி வீழ்த்தநன் னிமித்தந்தோன்ற
கன்னியமான வந்தக் கண்ணனே உருக்கொண்டென்ன
சின்னவ னுதித்தானென்று செப்பினர் மகிழ்ந்தேன்கேட்டு 103

வ—ம்:-மந்திரி பயந்து அரசனை மருபடி வணங்கி வேந்தே இப்பிள்ளையை மன்னிப்பீர் அந்த பாலகன் பிரந்தவுடன் தேவர்கள் ஆரவாரம் செய்து புஷ்பமாரி பெய்தார்கள் அன்றி அந்த பரந்தாமன் உறுவைமுற்றும் அமைந்து உதித்தானென்று தோழியருரைக்க மகிழ்ந்தேன்.

மாரியை யிரைத்ததேவர் மயங்கும்நின் செயலைநோக்கில்
யேரிய உலகமேசும் யிதுவன் றியந்தப்பாலன்
மீரியே வளர்ந்துகற்றும் மெல்லியை மணந்துபின்னே
தேரிய மகுடம்பூண்டு ஜெகமெலாம் புரப்போனத்தால். 104

வ—ம்:-அப்படி பூ மாரிபெய்த தேவர்கள் தங்கள் நடத்தையை கண்டு கவலையடைகுவார்கள். அன்றி உலகம் யேசும். அந்த பால கன் வளர்ந்து கல்விகற்று ஒரு அரசியை மணர்ந்து தங்கள் மகு டத்தைத்தாங்கி இந்த உலகம் முற்றும் யேகச்சக்கிரேஸ்பரனாய் ஆளக்கூடிய வரத்தால்

அன்னவ னுதித்தநாளை யவனியோ றரிந்து போற்ற
கன்னியின் கர்ப்பையார்க்கும் கசடர உரைப்பானெண்ணி
மன்னவா வந்தேனிங்கு வழுத்து நும் முறையின்வாறு
இன்னவன் நடப்பேனென்ன இரைவனும் கலங்கியுள்ளம். 105

வ—ம்:-அப்பாலகனுதித்த நாளை உலகத்தோர றிந்து போற்ற வும் சுநீதியென்னும் என் தாய்க்கு குற்றச்சொல் வராதிருக்க உலகத்தோர்க்கு நடந்ததை தெரிவிக்கவும் நினைந்து இங்கு வந் தேன். இனி தாங்களிடும்கட்டளைப்படி நடப்பேன் என்ற மந்திரி வாய்மைகேட்ட வேந்தன் மனங்கலங்கி

மந்திரி பொருத்திஅய்யா வாய்மைநா னுரைத்தவாறு
சிந்தையி லரிவிலாது தேவியின் னவளைவேட்டேன்
வந்ததித் தொல்லைமுற்றும் வழுத்துமுன் னெண்ணம்போலே
மைந்தனின் விடயம்யாவும் வைத்துநின் பொருப்பில்சின்னாள் 106

வ—ம்:-மந்திரி நானுரைத்ததற்கு மனம் பொருப்பாய் அறி விளந்து பாவியான சுருசியை மணம்புரிந்தது இந்த தொல்லையில் வந்தது ஆகையால் என் பட்டத்துக்குரிய மைந்தன் விஷயமாய் செய்யவேண்டியவையாவும் உன் பொருப்பில் வைத்து சிலது நாள் பார்ப்பாய்.

பார்த்திரும் சுருசியென்னும் பாவியின் மொழிக்கிணங்கி
ஏர்த்திடும் வரத்தையீந்தென் னென்றதோ டுறைத்தான்யாவும்
பார்த்திப னுறைக்கக்கேட்டு பலகலை யரிந்தோன்தேரி
சேர்த்தவன் பாதம்போற்றி திரிகிவந்தவன் றன்னில்லம். 107

வ—ம்:-ஏனெனில் சுருசியெனும் பாவிக்கு நான் அவ்விதமான வாக்குருதி செய்துவிட்டேன் என்று அந்தப்புரத்தில் அரசிக் கும் தனக்கும் நடந்தயாவும் விபரமாய்க்கூறினான். அவைகேட்ட பல நூல்கள் கற்றவனான மந்திரி ஒருவாறு மனந்தேறி அரசனடி பணிந்து விடை பெற்று தோழியரை அனுப்பி தன் மனை வந்தி ருந்து

மல்லரை வீரர்தம்மை வரவிடுத் தவரைநோக்கி
சொல்லரும் நீதிவாய்ந்த சுநீதியும் மன்னனீய்ந்த
வல்லபக் கனியையுண்டு மகவினை யீன்ருளென்னச்
சொல்லுவீ ருலகமுற்றும் தூதுபோய் அவந்தியன்றி. 108

வ—ம்:-பெலந்தங்கிய மல்லரையும், ஆயுதம் பூண்ட வீரர் பலரையும் அழைத்து அவர்களை நோக்கி நீங்கள் உலகம் முற்றும் தனித்தனி பிரிந்துசென்று அரசர்பட்டத்து மகிஷியார் முனிவர் தந்த மாங்கனியின் மருத்துவத்தால் இன்று ஒரு ஆண்மகவு ஈன்ருரென்று கூறுங்கள். அப்படி கூறிவருவதில் அவந்திநாட்டரசனுக்கும், அந்த நகரிலுள்ளவர்க்கும் தெரிவியாது திரும்பி வந்து சேருங்கள். அவ்வரசனறிந்தால் இவ்வரசர் பிந்திய மனைவியை மணந்ததுக்கு வருந்தி பகைமை கொள்ளும். ஆகையால் மற்ற நாடெல்லாம் தவராது கூருவீர்

என்னவே யவரைபோக்கி இருந்தமற் ஞெருவர்தம்மை
அன்னவன் நோக்கிநீயும் அரசனுப் யுலகந்தாங்க
முன்னவன் பட்டமாது முதல்மக வீன்ருளென்றும்
கன்னியமாக உள்ளக் கருத்தெலாம் முறைத்துக்கூவி. 109

வ—ம்:-என்று அவர்களை அனுப்பி மற்றுமிருந்த ஒருவனை பார்த்து நீ இந்த உலகமெல்லாந் தாங்கவும் நமது யிறைவர் பட்டத்து தேவியார் முதல்மகனை யீன்ருரென்று அதன் கன்னியமான வரலாருகளை முறையாய்க்கூவி

பறையறை அயோத்திமூதூர் பழமைசேர் குடிகள்காண
சிறையினி லிருப்போர்தம்மை செப்புநீர் விடுத்தோமென்று
உரைத்திடுந் தானதன்மம் உதவுவோம் வறியோர்க்கெல்லாம்
இறையவன் ஆலயத்தில் இன்ஞெரு பெருநாள் கண்டாய். 110

வ—ம்:- பறையடிக்கும்படி செய் நமது பழமைபொருந்திய அயோத்தியிலுள்ளகுடிகள் அறியும்படி அன்றிஇந்த உத்தரவை ஜயிலதிகாரியிடம் குடுத்து அங்குள்ள கைதிகளுக்கு நற்புத்தி கூறி விட்டுவிடும்படி செய். ஏழையெளியவர்க்கு வேண்டுந் தர்மம் வாங்க ஆலயம்வரும்படி கூறி எம்பெருமான் ஆலயத்தில் பெருநாள் கொண்டாட சகலரையும் வரும்படியும் செய்வாய்

என்றவன் னங்குப்க்கி பேத்தினன் பலதுதீபம்
அன்றுரை வரியோர்க்கெல்லாம் அளித்தனன் பலதுதானம்
சென்றவர் கூவுமோசை செளிப்புரும் குடிகள்கேட்டு
நன்றென எழுந்துஆடி நாறணன் கோவில்சென்று. 111

வ்—ம்:- என்றவனை அனுப்பி தான்பகவான் எழுந்தருளி யிருக்கும் கோவில்சென்று அங்குள்ள யெவலரைக்கொண்டு பல திசையும் தீபமேற்றி வந்தயேழைகளுக்கு அன்னதானம், சொர்ண தானம் வேண்டுவகை நல்கினன். அதுநேரம் பறையோசை கேட்டு குடிகள் மகிழ்ந்து நித்திரைவிட்டு எழுந்து ஆனந்தமாக ஆடிப்பாடி மாதவன்கோவில் வந்தார்கள்.

கண்டுரை யமைச்சைப்போற்றி கலந்தனர் பெருநாள்தன்னில்
ஒண்டொடி மாதரெல்லாம் ஓடினர் சுநீதிவாயல்
அண்டிய பேர்கள்யார்க்கும் அமைச்சனு லுற்றமாது
கண்டவள் கறத்தாலள்ளி கனமழை மாரிபெய்தாள். 112

வ—ம்:-வந்தவர்கள் யெல்லாம் மந்திரியைக்கண்டு போற்றி அரச மைந்தன் நீடூழி வாழவேண்டுமென்று பகவானைப்போற்றினர்கள். அவ்வூர் பெண்மணிகள் எல்லாம் சுநீதியின் கோட்டை சென்றார் கள். அங்கு மந்திரியால் இடப்பட்ட உத்திரவுப்படி அனேகம் பணிமாதர் யிருந்து கற்கண்டு தாம்பூலம், சொர்ணம், வஸ்திரம் முதலான வஸ்துக்கள் வந்தவர்கெல்லாம்தந்து மகிழ்ந்தார்கள்.

இப்படி உதயமட்டும் இருந்ததவ் விறவின்காலம்
மைப்படி மின்னுள்சோபம் மாற்றினர் தோளிமாதர்
தப்பிடாக் கவலையோடு தலைவனு மிருந்தானில்லம்
செப்பிய தூதாலிந்த ஜெகமெலாம் மகிழ்ந்தார்கேட்டு. 113

வ—ம்:-இவ்விதமாக இருந்த தோளியர்கள் அன்றிரவு விடியும் மட்டும் சுநீதிக்குற்ற சோபம்மாற்றி மகிழ்ந்திருந்தார்கள். இங்கே வேந்தனனவர் சுருசி அரண்மனையில் தாங்கமுடியாத கவலை யோடு அவள் மோகத்திடுபட்டு யிருந்தார். அவ்விரவே வெளி போன தூதுவர் தேசங்களெல்லாம் சென்றுரைக்க யாவரும் கே ட்டு மகிழ்ந்தார்கள்.

கன்னியாம் சுருசியென்னும் கடியவள் கொடியவெண்ணம்
முன்னினா ளன்னாள்தொட்டு மூண்டதிப் படியேசின்னாள்
பின்னிலோர் தினத்திலந்த பேதையும் சோபமுற்றே
கன்னியர் சூழ்ந்துதாங்க காளையீர் மகவையீன்றாள். 114

வ—ம்:-இவ்விதமாக கொடியவளான சுருசியின் சூழ்ச்சியால் அரசன் மயங்கி இருந்தார். இப்படி சிலதுநாள் சென்றபின் ஓர் தினத்தில் சுருசியானவள் புத்திரசோபமுற்று இரண்டு ஆண் மகனை யேககாலத்திலீன்றாள்.

மன்னவன் மகிழ்ந்துகேட்டு மாமணித் தவசிலேகி
முன்னுயர் றமைச்சன்பக்கம் மொழிந்தவ னரம்பலது
அன்னவன் கரத்தால்செய்து அளவிலா மகிழ்ச்சிபூண்டு
இன்னவ ராலேவோங்கும் யிரவியின் குலமென்றோத. 115

வ—ம்:- அரசன் தோளியரால் இவையுணர்ந்து சிம்மாதனத் தேகியிருந்து மந்திரியை அழைத்துக்கூறி மகிழ்ச்சியோடு தன் கரத்தாலே ஏழைமக்களுக்கு வேண்டுந் தானதருமங்கள்செய்து இந்தப்பாலகரால் சூரியகுலம் விருத்தியும் மேன்மையும் அடையு மென்று யாவருங்கேட்க கூறினான்.

மந்திரி கேட்டுச்சிந்தை மகிழ்ந்துமன் தன்னைநோக்கி
முந்திய ராமன்போலாய் முன்னவ னுதித்தபின்னால்
எந்தையே குரைவேருண்டோ இக்கதிர் குலத்துக்கென்ன
சுந்தர னிருந்தான்கேட்டு சொல்லவே ரரியானாகி. 116

வ—ம்:- இவைகேட்ட மந்திரி அரசனைப்பணிந்து மகிழ்ச்சி யோடு அவரை நோக்கி வேந்தே தங்கள் பாட்டனாகி ஸ்ரீராம பிரானைப் போல் முந்திய யேகபுத்திரனை தாங்கள் அடைந்தபின் இந்த சூரியகுலத்துக்கு வேரு என்னகுரை யென்னக்கேட்ட வேந்தன் பதிலுரைக்க அரியானாகி

இப்படி அயோத்தியுள்ளோர் ரிருந்துமே மகிழ்ந்துவாள
அப்படிச் சிலதுநாளும் ஆகவோர் சுபதினத்தில்
ஒப்பிடும் சுருசிபாலர்க் குத்தமன் மகிழ்ச்சியோடு
செப்பினான் தனதுமுன்னோர் செய்வண்ணம் நாமமன்று, 117

வ-ம்:-இருந்தார் அயோத்தியிலுள்ள குடிகள்யாவரும் மகிழ்ந்து வாழ இவ்விதம் சிலதினம் செல்ல ஓர் சுபதினத்தில் உத்தானபாத னென்னும் வேந்தர் தன்னுடைய முன்னவர் செய்த வண்ணமாக ஓர் பெருநாள் கொண்டாடி சுருசிபெற்ற இருமைந்தருக்கும் பேர் நாமம் செய்தான்.

பெருஞ்ஜெய வீரனென்றும் பெருமைசேர் திடனுமென்றும்
இருவரின் நாமமிட்டு இருந்தன னவரைத்தாங்கி
மருவலர் வணங்குங்கீர்த்தி வளத்தவ னுலகையாண்டு
இருந்தவ ரெல்லாமேங்க யிளையவள் மனம்போலாக 118

வ—ம்:-முந்திய மைந்தனுக்கு ஜெயவீரனென்றும், பிந்திய மைந்தனுக்கு திடனென்றும் நாமஞ்சூட்டி அவர்களை அன்பாய்த் தாங்கி வேற்றரசர்வணங்கும் பெருமையுடன் உலகரசனாகி சுநீதி யென்னும் உத்தமியையும், புத்திரனையும் மறந்து உள்ளவர் யாவரும்மயங்க சுருசியின் மனம்போல் இணங்கி வாழ்ந்தான்.

இன்னவ னிருக்கயிவ்வா றினிமைசே ரமைச்சன்றானும்
கன்னியாம் சுநீதிகோட்டை காவல்பல் வகையுமாக்கி
அன்னுளை பாலன்பக்கம் ஆயுதம் பூண்டவீரர்
தன்னையே நிருத்திவேண்டுந் தருவன தன்னோர்கண்டு. 119

வ—ம்:-அரசர் இவ்விதமிருக்கும் நிலைமையறிந்த யூகியென்னும் மந்திரியானவர் சுநீதியின் கோட்டையைச்சுற்றி அனேக வீரர்களை காவல் நிறுத்தியும், இன்னும் ஆயுதம்பூண்ட வீரர் பலரை பட்டத்து மைந்தனை காக்கும்படி நியமித்தும், அரசியார்க்கும் பாலகர்க்கும்கொடுக்கும் எந்தவஸ்துவும்தன்பார்வையில் குடுத்தும்

உதவியதன் றிவேரு உறவுளோ ரெனினும்நம்மால்
இதம்பெறா வரவொண்ணாது இப்பதிக்கதிபனேனும்
நிதமிது முறையாய்க்காப்பீர் நீங்களென் றுரைத்துஅன்னாள்
இதமுற இரவில்காத்து இருந்தனன் னறிவில்மிக்கோன். 120

வ—ம்:-எவ்வித அவசியம்வரினும்நம்மையன்றி மற்றுள்ள உரவுடையவர் யாவரானாலும் எவ்வித காரணத்தைக்கொண்டும் வரவும் உரவுசெய்யவும் கூடாதென்றும், வேந்தரும் என்னையன்றி தனித்து வந்தால் இதமுரைத்து தடுத்துவிடுவீர்களென்று தனித்தனி காவலர்க்கு உறைத்து தினம் இம்முறையாய் நடப்பீர்களென்றும்வோதி தானுந்தவராமல் அந்த கோட்டைக்கு இராவில் சென்று துயிலாது இருந்து கார்த்தும்வந்தார் அறிவுயர் மந்திரி.

சென்றதிப் படியேபல்நாள் சிருவனுக்காண்டுரெண்டு
அன்றொரு தினத்தில்மாது அருங்கதிர் அடைந்தபின்னர்
நன்றுரும் மதியந்தோன்ற நங்கையோர் தோழியோடு
சென்றனள் மகவையேந்தி செளிப்புரும் யில்லின்மாடி. 121

வ—ம்:-இப்படி பலநாள்செல்ல மைந்தனுக்கும் ஆண்டு ரெண்டு பூர்த்தியானது. இந்தகாலம் ஓர் தினத்தில் சூரியன் அஸ்தமித்த பின் பூரணச்சந்திரனுதயமாக சுநீதியென்னும் பதிவிரதா சிரோண்மணி ஓர் தோழியுடன் மகனைஎடுத்துக்கொண்டு தனது அரண்மனை மேல்மாடி சென்று,

## நாரதருதயம்.

அங்கொரு தவசில்தங்கி யரிகினில் மகவைவிட்டு
மங்கையும் மயங்கிசிந்தை மன்னனை யெண்ணியெண்ணி
இங்குநின் றவத்தில்வந்த இளஞ்ஞனை கண்டுநாமம்
மங்கையா னரியும்வண்ணம் வைத்திட வரவொண்ணாதா. 122

வ—ம்:-அங்கு தோழியாலிட்ட சிம்மாசனத்தில் இருந்து பாலகனை அருகில்வைத்து அந்த கர்ப்பரசியார் அரசனை நினைந்து வாய்விட்டு ஹே! வேந்தே! உமது தவத்தில்வந்த மைந்தனுக்கு நாமகரணம் அடியேன் அறியும்படி சூட்டுதற்கு இங்கு வரவொண்ணாதா

என்றவள் கலங்கியேங்கி யிருக்கஅவ் விரவிற்றானே
நன்றுரும் ராமநாமம் நங்கையின் செவிக்குசேட்ப
குன்றிடா வீணையேந்தி கொடுந்தவக் கோலத்தோடு
நன்றநீ யஞ்சேலென்ன நாரத முனிவன்றானும். 123

வ—ம்:-என்றுகூறி அம்மங்கையர் திலகம் கலங்கிநிற்க அவ்விரவிலே அரசியார் செவிக்குக்கேட்க ராமநாமமோதி வேதரூபமான வீணையைகரத்திலேந்தி தவக்கோலத்தோடு அம்மா பயப்படாதேயென்று கூறியவண்ணம் நாரதமகாமுனிவர்

வந்தனன் விசும்பின் மார்கம் மங்கையும் கண்டுபோற்றி
எந்தயே வருதியுந்தன் இயல்பெருங் கருணையாலே
வந்திடும் மதலைமூன்றில் மதலையா மிவனுமுன்னேன்
பிந்திய இருவர்வேந்தன் பெருநுளை யிருந்தா ரென்றும். 124

வ—ம்:-ஆகாயமார்க்கமாக வந்தார். அவர் வரவையறிந்த மாது எழுந்து போற்றி தேவா தங்கள் கருணையால் உதித்த அரசபுத்திரர் மூவரில் என் சமீபத்திலிருக்கும் இவன் மூத்தவன் பிந்திய பாலகரிருவரும் அரசமாளிகையில் அரசருடன் இருக்கின்றூர்கள்.

இன்னவர் கூடிவாள யிய்யும்நின் கருணையென்னும்
கன்னிமைப முனிவன்நோக்கி கருத்தினில் பெரியமாதே
மன்னவன் செயலும்மற்ற மங்கையி னியல்புமுற்றும்
முன்னமே யரிவேனம்மா முகுந்தனின் கருணைபூண்டு. 125

வ—ம்:-என்றும் நீங்காது இன்னவர்கள் கூடிவாள கருணைசெய்வீர் என்று வணங்கும் உத்தமிக்கு ஆசீர்வதித்து அம்மணி அறிவில்சிறந்த அரசியே உனது வேந்தன் செயலும் சுருசியின் நடத்தையும், பாலகரியல்பும் நாம் விபரமாக முன்னமே அறிவோம். ஆனால் ஸ்ரீமந்நாராயணன் கருணையால்,

அண்டங்கள் முற்றுமாள அமைந்தநின் சேய்பெருமை
கண்டவ ருண்டோவீணாய் கலங்கிடா திருப்பாயிங்கு
மண்டலம் புகளுமிந்த மைந்தனை துருபனென்றே
வண்டணி குளலாய்நாமம் வைத்தனம் அழைத்தியென்றான். 126

வ—ம்:- இந்த உலகமுற்றுக்கும் யேகச்சக்கிராதிபனாகி ஆளப்பிறந்த உன் மைந்தன்பெருமையை அளவிட யாரால்முடியும் அம்மணி நீகலங்காதே பூமிபோற்றும் இந்தபாலனை துருவனென்று நாமகரணம் செய்தோம். நீயும் மற்ற யாவரும் அவ்விதமே அழைப்பீர்களென்னக் கேட்டு

மங்கையும் மகிழ்ந்தாள்கேட்டு மைந்தனை துருபனென்று
அங்கவ ளளைக்கவாயால் அமரர்பூ மாரிபெய்தார்
பொங்கரா மேற்றுயிலும் புண்ணியன் கருணையென்றே
தங்கிய முனிவனோதி தனையனை தழுவியேந்தி. 127

வ—ம்:- அரசியார் ஆனந்தமடைந்து துருவனென்று மூன்று தரம் அளைக்க வானவர் மகிழ்ந்து பூமாரிபெய்ய இது அறிந்த தவமுனியெழுந்து கருணாகரன் கருணையென்று கூறி பாலனை வாரி தன் புயமழுந்தத்தழுவி தன்மடிமீதிருத்தி அவ்விளஞ் ஞனை நோக்கி

மன்னவன் மதலாய்கல்வி வளமரிந் தனையோவென்ன
அன்னவ னெழுந்துபோற்றி ஆறணர்குரிய தொண்டா
என்னவே ருண்டுகல்வி யெப்பொருள் கதிபனன்றி
சொன்னரிஓம் மென்றோதும் தோற்றமும் முடிவுந்தானே. 128

வ—ம்:- வேந்தன்புதல்வா கல்வியரிவாயா யென்னலும் அந்தக் குழந்தைக்கு பரமபதநாதன் ஞானஉபதேசக் கருணைசெய்தான். அக்காலம் நாரதரைநோக்கி, முனிவா! ஸ்ரீமந்நாராயணன் திருத் தொண்டா! கல்வியென்பது எப்பொருட்கும் இரைவனன்றி யுண்டா? ஹரிஓம் என்ற முடிவுதோற்றந்தானே தாம் கேட்டவை யென்னலும்

அரிவேனென் றுறைக்கவந்த அருந்தவன் மகிழ்ச்சிபூண்டு
சரியது கடந்துநின்ற தனிப்பொரு ளொருவனுண்டு
பெரியவன் யார்க்குமெட்டா பிரப்பிரப்பற்ற ஜோதி
பரவியே யிருப்பானென்ன பாலனுமரிவே னென்றான். 129

வ—ம்:-நாரதர் மகிழ்ந்து பாலகா இவைக்குமேல் கடந்துநின்ற பரம்பொருள் பரவெளிக்கெட்டாபெரியவன். பிரப்பிரப்பற்றஜோதிச்சொரூபன். அவன் யெங்கும் நிரைந்தவன் என்னலும் பாலன் அவையின்மர்மம் அரிவேனென்றான்.

அம்முனி மகிழ்ச்சியாகி அரசியை நோக்கித்தாயே
இம்மையில் சிறந்தாய்வாழ்வு இம்மக வடைந்ததாலே
அம்மையே மருமைதன்னில் லவனடி சார்வாயென்னும்
செம்மைசேர் முனிவன்பாதம் தேன்மொழி வணங்கிபோற்றி. 130

வ—ம்:-மருபடியும் நாரதர்மகிழ்ந்து அரசியைநோக்கி அம்மா இம்மையிலும் மருமையிலும் நீ மேன்மையடைவதற்கான மைந்தனை அடைந்தாய். பின் பரமபதமே உனக்குச் சொந்தமாகும் என்னும் தவமுனியை அந்த உத்தமியார் நோக்கி

தந்தநின் கருணையாலே தரையினி லுதித்தபாலர்
எந்தையே மூவர்தம்மில் இவன்செய லுறைத்தீர்மற்ற
சுந்தர மகுடந்தாங்கும் சுதர்செய லுரைத்திரென்ன
அந்தவன் நகைத்துமாதே யானையை மசகமொத்தால். 131

வ—ம்:-சுவாமி உமதுகருணையாலுதித்த மூன்று மைந்தர்களில் மூத்தவனாகிய இவன் செயலுரைத்தீர். அரசராருகிருந்து மகுடந் தாங்கும் மற்றமக்கள் செயல் உரைத்திடுவீரென்று வணங்கும் கர்ப்பரசியின் கருத்துணர்ந்தமுனிவர் பிர்மித்துநகைத்து அம்மா மும்மதம் பொளிந்த யானையை மோட்டுபூச்சி ஒக்குமானால்

துருபனை நிகர்குமன்னர் சொல்லவே ருவமையுண்டா
சிருவரை யீன்றஆயாள் செய்பவந் துடாஅன்னோர்
பெருஞ்சிரை யடைவாரென்ன பித்துற்று ளாகிமாது
வரும்வினை யிதுவோவென்ன மயங்கியே புவியில்வீழ்ந்தாள்.132

வ—ம்:-அந்த யிருமைந்தரை துருவனுக்கு இணைசொல்லலாம் அன்றி வேருவமான உண்டா அவர்களையீன்ற தாய்தேடிய வினையால் இளவயதிலே அவர்களுக்கு அரசதெண்டமும், சிரைவாசமும் நேருமெனக்கேட்ட உத்தமி அலரி மூர்ச்சையாய் பூமியில் வீழ்ந்தாள்.

அன்னவள் கோலங்கண்டு அருகுயர் தோளிதாங்க
கன்னியுஞ் சற்றுதேரி கனமுனி வரனைப்போற்றி
மன்னவன் கானில்சென்று மாதவம் புரிந்துபெற்ற
சின்னவர் கிதுதான்மூள தேவாநா னிருந்துநாட்டில், 133

வ-ம்:-உடனே தோழியானவள் ஓடி அரசியைத்தாங்கி தேற்ற தேரி மீண்டும் முனிவரைவணங்கி சுவாமி அரசரானவர் கானில் வந்து தவம்செய்து தங்கள் கருணையால்பெற்ற இளமைந்தர்க்கு இவ்விதம் நேர்ந்தால் அப்பால் நான் உலகிலிருந்து

தரிப்பனே உடலிலாவி தந்தைநீ யதனைமாற்றில்
இருப்பேனிவ் வுலகந்தன்னில் என்றவ ளயரக்கண்டே
உரப்பினை விடுத்தாயஞ்சேல் உன்மகன் துருவனென்போன்
பிரப்பினோர் பாவமாற்றி பெருநிதி யடையச்செய்வான் 134

வ—ம்:-உடல்தாங்கி உயிர்வாழ்வேனு; எந்தையே இந்தவினை யணுகாதிருக்க கருணைசெய்தால் இவ்வுலகாசை அடைகுவேன். என்று ஏங்கும் அரசியைநோக்கி அம்மா உன் கவலையை மாற்றுவாய்யென்று தனித்து அழைத்து இந்ததுருவனென்னும் இளைஞனுல் மற்ற பாலர்குற்ற அவதிமாரி மேன்மையான செல்வம் அடைவார்கள்.

அன்னவ ரிவனைப்போலே அருகிருந் துலகுதாங்கி
மன்னருய் யிருப்பார்சின்னுள் மங்கைநா முறைத்தவாய்மை
பின்னவ ரரியாவண்ணம் பேதையே யிருப்பாயென்று
கன்னியை தேற்றிவிண்ணில் கனமுனி மறைந்துபோனன். 135

வ—ம்:-பின்னும் இவனுடனிருந்து அரசாள்குவார்கள் சிலது காலம் ஆகையால் அம்மாபின் வரும்யியல்பு இவையென சில ரகசியம்கூறி மற்றவர்கிவை வோதாதிருப்பாயென்று அரசியாரைத் தேற்றி தவமுனிவர் ஆகாயமார்க்கமாய் மறைந்துபோனர்.

அருந்தவன் அகன்றபின்னே அவள்மகிழ்ந் தணைத்துசேயை
பொருந்திய உச்சிமோந்து பூவையர் தம்மைகூவி
வருந்தவ துருவனென்று வழங்குவீர் மைந்தன்நாமம்
பொருந்துமென் றவர்கள்தாங்க புத்திரனுடனே வாழ்ந்தாள் 136

வ—ம்:-நாரதமுனிவர் சென்றபின்னே மகனைக்கண்டு மகிழ்ந்த அரசியார் அவனைத்தாங்கி யணைத்து முத்தமிட்டு மாளிகையுள் வந்து தோழியரைக்கூவி அரசபுத்திரனுகிய இவனை துருவனென்று அழைப்பீர்கள்என்ன அவர்கள்மகிழ்ந்து பொருந்திய நாமந்தான் என்று கூறி பாலனைத்தாங்கி வாழ்ந்தார்கள்.

இப்படி ஆண்டுஐய்ந்து யேகிட இறைவன்றானும்
மைப்படி கண்ணாளில்லம் வந்திலான் மகவைகாணன்
அப்படி சுருசிமோகத் தடிமையாய் யிருந்தநாளில்
செப்புறு முணருவண்ணம் செய்திரு சேயர்தம்மை. 137

வ-ம்:-துருவனென்னும் உத்தமன் பிறந்து இவ்விதமாக ஐந்து வருடம் ஆகியும் வேந்தன் சுநீதிமனை வாராததால் மகனையும் கண்டிலன். ஏன்? பிந்தியவளான சுருசியின் மோகத்தில் சிக்கி இருந்தான். பிந்திய பாலரிருவருக்கும் ஒரு நற்குருவினிடம் கல்விபழக விடுத்தான்.

## அரசர்கள் கப்பங்கட்டுதல்.

மன்னவன் தாங்கிவாள மந்திரி முதல்வன்பெற்ற
முன்னவ னறிவான்கல்வி முதல்வியின் னுதவிபூண்டு
என்னவே யவன்மகிழ்ந்து யிருந்தன ரிவர்களிவ்வார்
அன்னக றயோத்திவாழ்வு அமைந்ததிப் பெருமையாக. 138

வ-ம்:-இவ்விதமாக அரசன் அந்த பாலகரிருவர்மீதும் ஆசையுற்று வாழுங்காலம் மந்திரியானவன் பட்டத்துமகனை அரசன் கவனியாதிருப்பதை எண்ணி யேங்கி பட்டத்து மஹிஷியால் கல்வி தேருவான் என்று மகிழ்ந்தான். இவ்வித சிறப்புடனிவர்கள் அயோத்தியாபுரியில் வாழ்ந்தார்கள்.

நன்றுரும் வேந்தர்போற்ற ரவிகுலக் கீர்த்தியோங்க
குன்றிடா தமைச்சர்சூழக் குவலயமாளுநாளில்
அன்றவ னமைச்சைநோக்கி யவனியா ளரசரெல்லாம்
என்றுவந் தளிப்பார்கப்பம் யென்னவே யவனும்போற்றி. 139

வ-ம்:- வாளும்நாள் உலகிலுற்ற வேந்தர்வணங்க சூரியகுலம் கீர்த்தியோங்க அமைச்சர்சூள வாழும் வேந்தன் மந்திரியைநோக்கி அய்யா மற்ற வேந்தர்கள் நமக்கு கட்டவேண்டிய கப்பம் கட்ட யேர்ப்பட்டகெடுவு எந்தநாளென்று கேட்கவும்

மீரிய பதினெண்பாஷை விளங்கும்பல் கிளையாய்பேந்து
யேரிய புவியாள்மன்னர் யிருப்பதா யிரத்தியெண்மர்
சாரியா மிதர்க்குயெட்டாந் தான்வருங் கிழமையன்று
கூறிய மன்னரிங்கு கொடுப்பரே திரைதான் வந்தே. 140

வ—ம்:-வேந்தனைப்பணிந்து உலகில் பதினெண் பாஷையுடன்னதன்கிளை பாஷையும்பேசி ஆயிறத்தெட்டு அண்டமாய் பிரித்தாளும் வேந்தரில் மற்ற ஆயிரத்தேழு முடியரசர்களும் நமது நகரில்வந்து இன்று யெட்டாநாள் கப்பங்கட்டுவார்கள் யென்று மந்திரி வணங்கிகூறலும்

தந்தையின் காலந்தன்னில் தரையுரு மன்னரெல்லாம்
வந்தொரு ஆண்டுதோரும் வரிசையும் வளங்கிமீள்வார்
அந்தவர் கவதியென்று யாம்கினைந் ததனைமாற்றி
வந்துநேர் ருண்டுபத்தில் வளங்கென விடுத்தேன்நானும். 141

வ—ம்:-அரசன் அவனைப்பார்த்து, எமது பிதாகாலத்தில் நீ கூரியமன்னர்கள் வருடம் ஒருமுறை நமது நாடுவந்து கப்பங் கட்டும் வழக்கம், அதை நாம் அவர்கள் கஷ்டமடையா திருக்க எண்ணி அம்முறையை மாற்றி பத்துவருடத்துக்கு ஒருமுறை வந்து கட்டும்படி திட்டம் செய்தோம்.

அம்முரை யரிவார்யாரும் ஆகிலுங் குரிக்கநன்ரும்
எம்முரை யென்னத்தூது யேகிட விடுத்துபின்னர்
செம்மலர் வந்துதங்க திசைதொறும் நகரம்கோட்டி
நம்மையா முணவுமேவும் நல்கிட குரையொன்றன்றி. 142

வ—ம்:-ஆனால், நமது ஆக்கினையை யாவரும் அரிவாரேனும் சிலர் விலக்கமுடியாத தங்கள் சொந்தகாரியத்திலிருக்க கூடும். ஆகையால் இன்று எட்டாநாள் கப்பம் கட்டுந்தினமென்று நாம் உரைத்ததாக உலகிலுள்ள அரசர்கெல்லாம் தூதனுப்பி அப்பால் அரசர்சள் வந்துதங்க இடவசதியுடன் நகர்அலங்காரம் செய்து ஒரு குரைவன்றி வந்தவர்களுக்கு உணவுக்கு வேண்டியதும், ஏவலுமமைத்து

அமைத்தவர் தானைக்கெல்லாம் அளித்திட வுணவும்மற்றும்
சமைத்தெனக் குரைத்தியென்ன தந்திரி யந்தவண்ணம்
யமைத்துடன் தூதுபோக்கி ஆயிர மாயிரமாய்
சமைத்தன னிளைஞ்ஞரேவல் தலைவனுக் குரைத்தான்பின்னும். 143

வ—ம்:-மற்றுமவர்களுடன்வரும் ஆனைசேனை முதலானதுக்கு வேண்டிய உணவும் இதர்க்கெல்லாம் வேண்டிய பொருளும் சேகரித்து உரைப்பாயென்ன, உடனே உலகுரை வேந்தருக்கு தனித்தனி தூதனுப்பி பதினுயிரப்பத்து வாலிபரை பொருக்கி யேவலராய் நியமித்து அரசனுக்குரைத்தான் பின்னும்

வாத்தியம் பலதுசூள மாதர்கள் நடனமோங்க
பாத்திபர் தமையெதிர்போய் பார்த்தனைத் திடுவீரென்னச்
சாத்திமற் றமைச்சர்கெல்லாம் தனித்தனி யுரைத்துவேந்தர்
யேத்திய வருகைநோக்கி யிருந்தனன் னமைச்சரேரே. 144

வ—ம்:-அனேக வாத்தியகோஷ்டங்களும், நடனமாதர்களும் சூள மற்ற மந்திரிமார்களனைவர்களையும் அரசர்களை எதிர்கொண்டழைக்கும்படி திட்டம்செய்து அவரவர் தங்குமிடங்கள் தனித்தனி காவல்வைத்து தனது வேந்தனிடம் உத்தரவின்வண்ணம் மற்றுள்ள மன்னர்கள் வரும்வழி எதிர்பார்த்திருந்தான் யூகி என்னும்மந்திரி.

சென்ற தூதுவர்கள் அஷ்டதிசை யெலாமுறைத்துமீண்டார்
அன்றவை குரித்தநாள்முன் னரசர்கள் தனித்தனியாய்
நன்றுரும் மயோத்திநாட்டை நண்ணினுர் தானைசூள
கன்றியே திரையும்பொங்கி காசினி யடைந்தவார்போல், 145

வ—ம்:-அயோத்தியிலிருந்து சென்ற தூதுவர்கள் அஷ்டதிக்கிலுமுள்ள மன்னர்களுக்கு உரைத்து பதி வந்தார்கள். இரண்டு தினம் கப்பங்கட்டும் வாய்தாவுக்கு முன் அரசர்கள் யெல்லாம் தனித்தனி அவரவர் யானை,சேனை பரிவாரங்களுடன் அயோத்தி வந்தார்கள். அவர்கள்வந்த பெருக்கு எப்படி இருந்ததென்றால் யுகமுடிவில் சமுத்திரம்பொங்கி பூமியைப் பரவியது போலாம்.

வந்தவர் முறையாய்தங்க வைத்தனன் யூகியென்போன்
அந்தநாள் மன்னர்முற்றும் அடுத்தன ரிலங்கைமன்னும்
வந்தனன் வாலிசேயும் வானுரை தேவரஞ்சி
இந்தநாள் முடிவுயாதோ யெனநினைந் தயர்ந்தகாலை. 146

வ—ம்:-இப்படி வந்தவர்களை தனித்தனி அமைச்சர் எதிர்கொண்டழைக்க யூகி என்னும் மந்திரி அவரவர்குத்தக்க விடுதியிலிருக்கச்செய்யவும் உலகு மன்னர்முற்றும் வந்தனர். அவரில் முக்கியமானவர் இலங்கையதிபன் விபூஷணரும், கிஷ்கிந்தாநாட்டு வாலிபுத்திரன் அங்கதருமாம். இவர்கள் கூடியதைக்கண்ட வானவர் பயந்து இதன் முடிவு என்ன நடக்குமோ என்றிருந்தார்கள்.

முறைமுறை யவர்க்குயேவல் முன்னவன் பணியோர்காண
திரைதாக் குறித்தநேரம் செம்மனும் சுருசியோடு
இறையவன் பிராட்டிசூள இருந்தநற் றவசிபுக்கி
தரையுளோ ரஞ்சிபோற்ற தலைவணங்கி ருந்தகாலை. 147

வ—ம்:-தனித்தனியவர்க்கு யேவலமைத்தவை நடைபெற கப்பம்கட்ட குறித்தநாள்காலை வேந்தன் சபையைநாடி லோகநாயகனாகிய ராமபிரானும் பெரிய பிராட்டியாரும் இருந்த சிம்மாசனத்தில் சுருசி யென்னும் பிந்திய மனைவியுடன்யேறி சபாநாயகனாக யிருந்தான்.

மன்னவர் தனித்தனியாய் வணங்கிவந் திருந்தார்சூள
அன்னிலை யரக்கர்கோவும் அமைந்தனன் கவிக்குநாதன்
இன்னமும் அரக்கர்சூள இருந்தனன் னமைச்சனோடு
முன்னிவன் வளியோர்க்கஞ்சி மூண்டதிப் பெருமையாவும். 148

வ—ம்:-அப்படியிருந்த வேந்தனை வணங்கி மன்னவர்சூள வந்து அவரவராசனத்திருந்தார்கள். ராமபிரானால் தனக்குதந்தஆசனத்தில் விபூஷணனும், அங்கதனும், ராக்ஷதப்படை, வானரப்படைசூள வந்து அரசனை வணங்கியிருந்தார்கள். இந்த உத்தானபாதனென்னும் வேந்தன் ராமபிரானுக்கு பேரனானதால் இந்த பெருமை யடைந்தான்.

மன்னவன் ராமன்றன்னை மனத்திடை மாவானாகிப்
பின்னிய அரக்கர்கோவும் பெருங்கவிக் கதிபனோடு
அன்னவன் மரபோனென்று அடைவதால் மன்னரஞ்சி
இன்னவன் றன்னைபோற்றும் இயல்பினை யடைந்துவந்தான். 149

வ—ம்:-உலகரக்ஷகனாகிய ராமபிரான்மரபில் இவன் வந்ததால் அன்று பகவான் ஆக்ஞையின்வண்ணம் அரக்கர்தலைவனும், வானரத்தலைவனும் அடங்கி யிவனுக்குதவியா யிருப்பதால் மற்ற அரசர்கள் கப்பம்கட்டும் பெருமையும், கீர்த்தியும் இவன் பெற்றான்.

மங்களம் முளங்குமந்த வளம்பெரும் சபையைநோக்கி
பொங்கிய மகிழ்ச்சியோடு பூவையாம் சுருசிமைந்தர்
தங்குர வரசன்கண்டு அரிவையோ டுரைத்துஅன்பாய்ச்
செங்கையால் மகவைதாங்கி சேர்த்தனன் தனதுபக்கம். 150

வ-ப்:-முப்பத்திரண்டுவகை வாத்திய கோஷ்டத்துடன் நடனமாதர் நடனம்புரிய மன்னர்சூழ்ந்த அந்த சபையைநாடி சுருசிபெற்ற இரண்டுமைந்தரும் வர அரசன்கண்டு மகிழ்ந்து மனைவிக்குரைத்து மக்களைவாரியெடுத்து அணைத்து தனதுபக்கம் இருக்க வைத்து இருந்தான் வேந்தன்.

மன்னனும் மனைவியோடு மைந்தரை யிருபால்வைத்து
மின்னிட வீரர்தாமும் வேல்பல படைகள்தாங்கி
யன்னவ னேவல்நோக்கி அவர்பல திசையும்சூள
கன்னியும் மகிழ்ச்சிகொள்ள காவல னுரைத்தவண்ணம். 151

வ—ம்:-தன் மனைவியுடன் இரண்டு புத்திரரையும் இருமருங்கில்வைத்து இருக்க பலவித படைகள்தாங்கிய அனேக வீரர் சூழ்ந்து பலதிசையும் காவல்செய்து அரசனுத்தரவுக்கு யெதிர் பார்த்திருக்க இவ்வளவு பெருமையை அரியாத சுருசியானவள் அரிந்து மகிழ்ச்சிபொங்க அரசன் அமைச்சனைநோக்கி ஒவ்வொரு அரசரிடமும் அவரவர்க்கு யேற்பட்ட கப்பத்துகையை வாங்குவாயென்ன,

## துருவன் அரசசபை வருதல்.

தனித்தனி யரசர்போற்றி தந்திடத் திரைதானப்போ
இனித்தனி யில்லந்தங்கி யெம்பிரான் கருணைபூண்டு
அனித்யமே தேகமென்னும் ஆயினை கீர்ப்புமிக்காள்
தனித்தவ மகவாய்வந்த தனையனுந் துருவனென்போன், 152

வ-ம்:-வேந்தன்கூறிய வாய்மைகேட்ட அரசர்கள் முறைப்படி தனித்தனி திரைகட்டி வணங்க சபையிலே இப்படியிருக்க நாராயணன் கருணைபூண்டு நகர்புரத்தில் தனிமனைவாளும் கர்ப்புமிக்க உத்தமியான சுநீதி மகனுய்வந்த பட்டத்திற்குரியவனுகிய துருவனென்போன்

ஆண்டொரு யேழுமட்டும் அரசனை யரியான்வேறு
பூண்டிலன் பணிகளாடை பூவைதாய் கோட்டைவிட்டு
தாண்டிலான் தோளர்கூட்டாய் தான்வற ஆடிப்பாடி
தீண்டிடா வீரர்காவல் செய்திட வீதிவந்தான். 153

வ-ம்:-உதித்து ஏழாண்டுவரையும் தன்தந்தையை அரியான், ஆடைபணிகள் யெதுவும் தரித்தரியான், அன்னைவாளும் கோட்டையை விட்டு அப்பாலுள்ள பூமியில் சென்றரியான், இவ்வித நிலமையிலிருந்தவன் பிராத்துவ கருமத்தால் தோளருடன் பல விதமான விளையாட்டின் கெம்பீரத்தால் கோட்டையைவிட்டு வீதிவந்தான். வாயல்கார்க்கும் வீரரில்சிலர் ஆயுதபாணியாய் இவர்களைச்சுற்றிலும் காவல் செய்தார்கள்.

மரகத கிரியோராமன் மருபடி யுதிட்டானோ
இரையவன் தவமோயிவ்வார் இசைந்தது அன்றிவேறு
அரன்முதல் றேவறந்த அமரர்கோன் நிகர்கானிந்த
திரண்பெரும் சிருவன்யாரோ தெரிந்திலோ மென்றூர்யாரும். 154

வ-ம்:- அங்கே இந்த பாலகனைக் கண்டவர்கள் இவன் தேகம் பசுமைதங்கிய குன்றமோ, அன்றி நமது நாட்டில் முன்போல் இப்பொழுது ராமனுதித்து வந்தானோ, அப்படியானல் நம் அரசன் தவமேசிரந்தது, அல்லது பரமசிவன் முதலான தேவர்களும் இந்திரனும் நிகரில்லா அழகும் பிரகாசமும் உற்ற இந்த சிருவன் யாரோ அரியோமென்று கூடினர்கள்.

இப்படி குடிகள்சூழ்ந்து இசைத்திட கார்போர்கண்டு
மைப்படி குளலாள்விண்ட வாய்மையை மரந்துஅன்னோர்
செப்பினு ருலகம்போற்றும் சிருவனம் மரசன்செய்த
ஒப்பிடா தவத்தில்வந்து உதித்தவன் னுலகையாள. 155

வ—ம்:- கூடியகுடிகள் காவலரைகேட்க அவர்கள் சுநீதியால் தடுக்கப்பட்டிருந்ததை மரந்து இப்பாலனை யரியீர்களா நமது அரசன் பட்டத்துமகிஷியினிடம் உலகம்துதிக்க அரசன் தவத்தால்பிரந்தவன், நமதுநாட்டையாளவந்த இளவரசர் இவர்தான்

என்னவே மகிழ்ந்தார்கேட்டு இவனொளி படவேயேங்கி
அன்னவ ரிருந்தகாலை அவ்வுரை யரிந்துபாலன்
மன்னவன் மகனேயானும் மதியுளீ ரின்றுனெங்கு
இன்னிசை யுள்ளான்கூறும் மென்னவோர் தோளன்போற்றி. 156

வ—ம்:-என்று காவலர்கூரும் வாய்மைகேட்ட குடிகள் மகிழ்ந்து துதித்து அவனையுற்றுநோக்கியவன் பிரகாசத்தால்மயங்கியிருக்க துருவனானவன் காவலன் உரையைக்கேட்டு அவனைநோக்கி யான் உலகரசன் புதல்வனா? அப்படியானால் இப்பொழுது என்தந்தை யெங்குள்ளார் உடனே கூருவாய்என்ன ஒரு தோளன் அவனைப் போற்றி

மன்னவ றனந்தம்சூழ மாமணி தவசில்நுந்தை
இன்னிசை யிருக்கக்கண்டேன் யென்னவம் மதலைதானும்
தன்னுயர் தலைவனெந்தன் தந்தையென் றிதுநாள்மட்டும்
அன்னையு முரைத்தாளில்லை அருகுளோ ருரைத்திரில்லை. 157

வ—ம்:-இளவரசா உமது தந்தையானவர் சபாமண்டபத்தில் அனேக அரசர்சூள சிம்மாசனத்தில் இப்பொழுது இருக்க நான் பார்த்தேன் எனவும் துருவன் அவர்களைநோக்கி தன்னைப்போலுள்ள அரசர்கு அரசனானவர் என்தந்தையென்று இதுவரை என்தாயாவது அல்லதுநீங்களாவது என்னிடம் உரைத்திலீர்கள்

கண்டிலேன் யானுங்கண்ணால் காணவே நினைத்தேனத்தால்
அண்டிய தோளமாரே அரசவை நடப்போமென்று
விண்டவன் நடந்தானுள்ள வீதிகள் பலவுந்தாண்டி
அண்டுமுன் முனிவன்வாய்மை அரிந்திலாவினையால்சென்றான் 158

வ—ம்:-ஆகையால் என் தந்தையை நான் இதுவரை கண்ணால் கண்டிலேன் இந்த நேரமே காணநினைந்தேன் வாருங்கள் அரச சபைபோவோமென்று முன்நடக்க, தோளர் பின்னடக்க, வீரர் சூழ்ந்து நடக்க, பலவீதிகள்தாண்டி முன்னே நாரதர் விபரமாய் கூறியிருக்கும் வினைவழியால்மரந்து கண்டவர்வணங்கும் அரசன் வாழ் சபைவாயல் அடைந்தார்.

கார்ப்பவர் மதனைஜோதி கண்டுகண் மளுங்கிநிர்ப
பார்ப்பவர் ராமனென்ன பயந்தடி பணிந்துயேத்த
சேர்ப்பவன் தோளரோடு சென்றனன் காவல்தாண்டி
கார்ப்பவன் திரைகள்வாங்கும் கனசபை யடைந்தானங்கே. 159

வ—ம்:-அங்கு வாயல்கார்க்கும் வீரர் இந்த பாலகன் பசுமை தங்கிய மேனியின் பிரகாசம்கண்டு மயங்கிநிர்க யெதிர்வந்த வீரர் ராமனென்றுகூவி அடிபணிந்து யாதொரு தடையன்றி தோளருடன் காவல்களெல்லாம்தாண்டி அரசன்திரைவாங்கும் சபைக்குள் துருவன் வந்தான். அப்படி வரவே அங்கு

வருமுய ரக்கரோடு வானறத் தலைவன்கண்டு
இருமென முந்திமுந்தி யெழுந்தனர் ராமனென்று
பொருமெனத் தடுத்துவாலி புதல்வனு மதனைதாளில்
பெருமுடி சேரப்போற்றி பெம்மனே யிதுநாள்மட்டும். 160

வ—ம்:-முதன்மையிலிருந்த அரக்கர்களும் வாலிமைந்தனாகிய அங்கதனும்கண்டு ராமபிரான் வந்துவிட்டார் என்றுகூவி நான் முந்திநான் முந்தி தெரிசிப்பேன் என்று எழுந்தவர்களை அங்கதன் தடுத்து ஓடிவந்து அந்த புதல்வன் பாதத்தில் தனது திருமுடிபட நமஸ்கரித்து பகவானே! தாங்கள் இத்தனைகாலமாக

எங்களை அயோத்திநாட்டை இளையவரோடும் மற்றும்
தங்களைப் போற்றுந்தொண்டர் தளையெலா மரந்தீரேனோ
இங்குநீ ருரைத்தவண்ணம் இரைவாநின் மரபில்வந்து
தங்கிநின் மகுடம்பூண்ட தலைவர்கு திரைதானீய்ந்தோம். 161

வ—ம்:-ஹே! பகவானே எங்களையும் தமது அயோத்திநாட்டையும் உமதுயிளையவரோடு கூடிக்கொண்டு மறந்தீர். அன்றியும் தங்களை சதாபோற்றுந் தொண்டரையும், உமது மரபையும், உம்மை நம்பிய குடிகளையும் மறந்ததேனோ? ஹே! பகவானே நீர் அந்த நாள் எங்களுக்கிட்ட உத்தரவின் வண்ணம் உமது பௌத்திரனாகிய உத்தானபாத வேந்தனுக்கு வணங்கி இன்று திரைகட்டுவதற்காக இச்சபை கூடியிருக்கிறது.

என்னவோர் சார்ப்பில்நின்ற இலங்கைமன் னிதனைகேட்டு
மன்னவை யஞ்சிநிர்ப வாய்திறந் தலரிராமா
என்னவே விழுந்தான்மண்ணில் இவையுணர்ந் துலகுமன்னர்
அன்னவை கண்டுஅஞ்சி யம்மக வடியைபோற்ற. 162

வ—ம்:-என்று அங்கதன் கூறும் மொழியும், அரக்கர் ஆர்பாட்டமும் அறிந்த விபூஷணன் உற்றுநோக்கி அப்பாலகனைக்கண்டு ஸ்ரீ ராமனென்று நம்பி ராமாவென்று வாய்விட்டுஅலறி மூர்ச்சையாய் பூமியில் வீழ்ந்தான். இதுகண்ட மற்ற அரசர்கள்யாவரும் ஸ்ரீ ராமபிரானெனறே நம்பி அக்குழந்தையைச்சூழ்ந்து வணங்கி நிற்க,

வேந்தனுத் தானபாதன் மெல்லியோ டயர்ந்துவீழ்ந்தான்
சேந்திடும் மமைச்சரேங்கி செயலிளந் தொடிங்கிநிர்ப
பேந்தனர் திசைதிசையாய் பெருமையா யிருந்துகார்ப்போர்
சாந்தவை நிலமைகண்டு தனையனும்நகைத்துஆடி. 163

வ—ம்:-உத்தானபாதனும் சுருசியும்கண்டு அவன் ஜோதியால் மயங்கி சிம்மாசனத்தில்வீள ளாயிருந்த அமைச்சர்கள் அரசன் முன் தேவியிடம் செய்த அனிதியைக்கண்டு வாளாவிருந்த நம்மை தெண்டிக்க ஸ்ரீ ராமன் வந்தானென்று எண்ணியேங்க பல திசையிருந்து கார்த்தவீரர் பயந்துஓட சபையானது ராமாவென்னும் பெருங்கோஷ்டத்துடன் ஒவ்வொருவரும் தங்கள்பெருமை இழந்து நிற்பதை துருவன்கண்டு அவர்களைநோக்கி, நகைத்து ஆனந்தக்கூத்தாடி கூறுவான்,

வருமொரு சிறுவன்றன்னை மாலென மதித்துநீங்கள்
பெருமைக ளிளக்கப்போமோ பெற்றவ னரியாதொல்லை
சிறுமைக ளடைந்திரந்தால் செய்தவை பொருத்துமீண்டும்
இருந்தவர் தவசில்சென்று இளைஞ்ஞனை யறிவீர்நன்ருய். 164

வ—ம்:-ஹே மன்னர்களே! கேவலம் ஒருசிறுவனுகிய என்னை லோகநாயகனுக கருதலாமா? என்னையீன்ற தாதை இதுவரை அறியாதிருந்த சங்கடம் இந்த நிலையேர்ப்பட்டது. நீங்களும் சிறுமையடைந்தீர்கள் இப்பிளைபொருத்து கிருபைசெய்து அவரவர் ஆசனத்தமருங்கள். என்னை யாரென்பதை விபரமாய்க்கூருவேன் என்னலும்

வாரியை கடைந்தோனீன்ற மகவுமீண் டெழுந்துபோற்றி
சாரியாய் புவியையாண்ட தசரதன் மகனுமன்றில்
யேரிய கோலமேதோ இவ்வொளி யேதோதேகம்
மீரிய மரவுரிதான் மேலவறளிக்கப் பூண்டால். 165

வ—ம்:-அதை நம்பாமல் முன்னுள் சமுத்திரத்தை தேவர்கள் ஒருபுரமும், தான் ஒருபுரமுமாயிருந்து கடைந்த வாலி மகன் எழுந்துபோற்றி ஹே பகவானே! இந்த அயோத்தியாண்ட தசரதசக்கிரவர்த்தியின் மகனுகிய ஸ்ரீ ராமபிரான் நீர்யில்லையானல் உங்கள் திரேகத்தில் பசுமைநிறத்துடன் கூடிய இவ்வளவு வணப்பும், பிரகாசமும் யேது? அன்றியும் உங்கள் குடும்பத்தில் உள்ள பெரியார்களால் உமக்கு மரவுரிதர நீர் அதை தரித்தால்,

யேரிய வரையின்சாரல் யென்பிதா மடிந்தகாலம்
தேரியென் தாயினேடு திருவடி யடைந்தபோதுன்
மீரிய கோலங்கண்ட விதமின்று யிருக்ககண்டேன்
கூருவீ ரடியேன்கொண்ட குரிப்பினை கருணைசெய்து. 166

வ—ம்:-என்பிதாவை தனியாய் வதைத்து தம்பியுடன் ரிஷியமூ பர்வதத்திழ் எழுந்தருளியிருக்க நானும் என்தாயும்வந்து சேவை செய்தபோது இருந்த கோலம்போல் இருக்கக்கூடிய தங்கள் மேனியின் குரிப்பை அடியேன்கண்டது உண்மை என்பதை கருணைசெய் துரைப்பீரென்ன,

அன்னவ னுரைத்தவாய்மை அசுரமன் னெழுந்துகேட்டு
முன்னிலே வந்துநின்று மொளியுமுன் னறக்கர்சூழ்ந்தார்
அன்னவர் தம்மைமீறி யடைந்தனர் கவிகணங்கள்
பன்னவ ரெழுந்துசூழ்ந்தார் மதலைதான் ராமனென்றே. 167

வ—ம்:- அவ்வுரை முற்றுங்கேட்டிருந்த அசுரவேந்தனாகிய விபூஷணன் இருக்கைவிட்டு முன்வந்து பேசுங்காலை அசுரர்கள் கூடி சூழ்ந்துகொள்ள அதைமீறி வானரங்கள்சூழ இவர்கள் யாவரும் ராமாராமாவென்று ஒலமிட்டு இவன்தான் ராமனென்ன

அஞ்சியே யுலகாள்வேந்தன் அயர்ந்தவ னெழுந்தானில்லை
வஞ்சியும் பாலரோடு வளம்பெரும் அமைச்சர்மற்ற
மிஞ்சியே யிருந்தோர்யாரும் மெய்மரந் திருந்தகாலை
மஞ்சனுங் கூவிராமன் வந்திலான் துருவனென்றான். 168

வ—ப்:- இவைகேட்ட உத்தானபாதன் பயந்து ஆசனத்தில் சாய்ந்தவன் எழுந்திடாதிருந்தான் மற்றுமுள்ள சுருசியும் அவள் மைந்தரும், மந்திரிமாரும், வேந்தரும் மதிமரண்டிருந்தார்கள். இவையுணர்ந்த பாலன் அச்சபையில் (உறக்ககூவி) நான் ராமனில்லை என் பெயர் துருவனென்றான்.

என்றவன் னுரைக்கயாரும் யேத்தில ரதிலோர் மன்னும்
பொன்றிலும் அரிவோமுண்மை புரவலர் குளப்பம்யாவும்
என்றவன் விரைவில்புக்கி இரைவரை தனித்தனியாய்
சென்றிடத் தவசில்போக்கி செளுமைசே ரவுணர்கோவை. 169

வ—ம்:-என்றிவனுரைத்த வாய்மையை மற்றவர் நம்பாது குளப்பமிடும் நிலையை உணர்ந்த ஒரு வேந்தன் தன்னுயிர்கு கெடுதி வரினும் உண்மையறிந்து மன்னர் குளப்பத்தை மாற்றலாமென்று அரக்கர் கூட்டத்தில் நுழைந்து அரசர்களை பலவிதமாய் வேண்டி அவரவர் ஆசனத்தமரக்கூறி அவுணர் தலைவனாகிய விபூஷணரை நோக்கி,

அய்யனே யிருப்பீருண்மை யறிகுவே னென்னத்தேற்றி
மெய்யுருங் கவிக்குநாதன் விளைஞ்ஞனை யிருத்திபின்னும்
எய்யுமவ் வரக்கரோடு இசையும்வா னரங்கள்தம்மை
செய்யும்நல் முறைகளோதி சேர்த்தனன் முன்போலங்கே. 170

வ—ம்:-ஐயா, தாங்கள் தங்கள் சிம்மாசனத்தமருங்கள். இந்த பாலகன் யார்யென்பதை விபரமாய் அரிந்து தெரிவிக்கிரேன் என்று அவனையும், அங்கதரையும், வானரங்களையும் அவரவர் இருக்கையில் இருக்கச்செய்து,

பின்னுமச் சபையைநோக்கி பெம்மனைத் தேற்றியேத்தி
இன்னிசை யுற்றபாலன் யாரென அரிவேன்கிட்டி
மன்னரே பொருத்திறன்னுன் வளிநிலை யரியுமட்டும்
என்னவே வுரைத்து அன்னேன் யெய்தியப் பாலன்பக்கம். 171

வ—ம்:-பின்னுமச்சபையை நோக்கி வேந்தன் நிலையுணர்ந்து அவனையும்தேற்றி இம்மகன் யாரெனத்தெரிந்து கூறுவேன் அதுவரை தாங்களும் மற்றமன்னர்களும் பொருத்திருப்பீர்கள்என்று அச்சபையை வணங்கி பாலனுகிய துருவனைக்கிட்டினுன்.

சென்றவ னவ்வனைநோக்கி திகைத்திரு விழிமழுங்கி
அன்றுபின் னொருவார்தேரி யாரணன் பதத்தையுன்னி
நின்றனன் அவந்திநாட்டு நிருபனும் சூரவாமன்
கன்றிடா மகவைகிட்டி கார்வண்ணு நீயார்கொல்லோ. 172

வ—ம்:-கிட்டியவேந்தன் அப்பாலனை நோக்கி கண்ணொழி மழுங்கி பின் ஒருவாருந்தேரி நாராயணன் பதத்தை மனத்துள் போற்றி நோக்கினுன், அப்படி நோக்கியவேந்தன் அவந்திநாட்டுக்கதிபனுகிய சூரவர்மன் திடங்கொண்டே கார்நிறவண்ணு! தாங்கள் யார்;

எந்தநா டுமதுதேயம் ஈன்றவர் நாமம்யாது
வந்ததென் சபையைநாடி மதளாய்யித் துணைவராரோ
உந்தனுக் குற்றநாமம் உரையென நகைத்துபாலன்
எந்தையை யரிந்திலீரோ யிச்சபை யுள்ளார்யாரும் 173

வ—ம்:-தங்களுடைய சொந்தநாடும், தங்கள் மாதா பிதாவின் பெயரும், இந்தசபையை நாடிவந்த கருத்தும், தங்கள் நாமதேயமும், சூழ்ந்துநிற்கும் இந்த பாலகர் யார்யென்பதும் எனக்கு உரைப்பீரென்ன, அவைகேட்ட பாலன் நகைத்து நீரும், இச்சபையிலுள்ள மற்றவரும் என் தந்தையை அரியீர்களா?

அறிந்திட உரைப்பேன்கேளும் அயோத்தியை வழிவழியாய்
பொருந்திடும் முடிதான்பூண்ட புரவலர் தம்மிலிங்கே
இருந்திடுந் தலைவனீன்ற இளைஞனென்னா னெனதுநாமம்
தெரிந்திடுந் துருவனென்னச் செப்புவா ளென்னையீன்றாள். 174

வ—ம்:-அப்படியானால் கூறுவேன். அயோத்தியாபுரியை வழி வழி முறையாய்ஆளும் அரசரில் தற்காலம் இங்கு சபாநாயகராய் எழுந்தருளியிருக்கும் வேந்தனே என் தந்தை, என்னை என்தாய் துருவனென்று அழைப்பாள்.

வந்தவ ரெனதுபின்னாய் வளம்பெருந் தோளர்கண்டீர்
எந்தையை கண்டுபோற்றி யெழிலணை யவனோடேற்று
சிந்தையுங் களிக்கவெண்ணி சேர்ந்தேனிச் சபையிலன்றி
வந்தவா றுணர்ந்திடாமல் மன்னவர் குளப்பமிட்டார். 175

வ-ம்:-என்கூடவந்த இருவர்கள் என் தோழர்கள். நான் இங்கு வந்தது என் தந்தையைக்கண்டு போற்றி அவரிருக்கும் சிம்மாசனத்தில் அவருடன் இருந்து மகிழவந்த என்னை தெரியாமல் இச்சபையோர் குளப்பம் செய்தார்கள்.

என்றவ னுரைக்கக்கேட்டவ் விறைவனு மயங்கியேங்கி
நன்றாகம் துணைவியோடு நரபதி பாலர்சார
நின்றனன் னயர்ந்துயிர்த்த நீள்மகன் னுரையுங்கேட்டு
இன்றிதின் மர்மம்யாதோ வென்றவ னிறையைநோக்க. 176

வ—ம்:-என்றவனுரைக்க அவந்திமன்னன் மயங்கி மிக்ககவலை பூண்டு தன் துணைவியும், பாலரும் உடனிருக்க சிம்மாசனத்திருக்கும் வேந்தன் இந்த பாலகனுரையைக்கேட்டு அயர்ந்து தேகம் நடுங்கி நிலைதளர்ந்ததுயேனோ, இதின்மர்மம் இன்னும் அறிவோம் என்று அரசனைநோக்கி சந்தேகமுற்றான்.

அன்னவ னருகிலுற்ற அருங்கிளி யிவள்தான்யாரோ
என்னுடன் பிறந்ததங்கை யெங்குற்றா ளறிவோமின்னம்
மென்றவன் மகவைநோக்கி யீன்றதா·யுனக்காரய்யா
லொன்றுரை யுரைப்பாயந்த உத்தமி யிருப்பைக்காண. 177

வ—ம்:-இவ்வேந்தன் அருகிலிருக்கும் மாது நமது தங்கை யல்லவே, இவளாரோ வேறாயிருக்கிறது, நமது தங்கை எங்கே, இன்னமறிவோம் என்று பாலனைப்பார்த்து அய்யா உன்னையீன்ற தாய் எங்கேயிருக்கின்றார் அவர்நாமமென்ன நான்அறியகூறுவாய் நான் சென்று அவர்களைக்காண என்னலும்,

அரிதது உம்மால்காண அங்குரை காவல்நோக்கில்
பெரிதது வென்னையீன்றாள் பெற்றவளென்றே நாமம்
உரியது அன்றிவேறாய் உரைப்பதை யரியேன்கேட்டு
தெரியிது விலகும்பின்னே செம்மலை காண்பேன்சென்று. 178

வ—ம்:-பாலகன் அவரைநோக்கி நீர் அவர்களைப் பார்ப்பது முடியாது. அங்கே காவல் அதிகமாயிருப்பதால் உம்மையங்கு விடார்கள். என் தாய்பேர் யாரும் தாயென்று கூரவே அரிவேன் மற்றபடி பேர் அறியேன். இது என் வரலாறு நீர்விலகும் நான் சென்று என் தந்தையைக்காண.

என்னவே யவந்திமன்னன் இருபுயம் மீரித்தேரி
அன்னையெங் குள்ளால்பாலா அம்மனை புனதுதாதை
முன்னும்பின் வருவதுண்டா மொளியென நகைத்துபாலன்
உன்னையான் கண்டபோதே உத்தமன் றன்னைகண்டேன். 179

வ—ம்:-அம்மொழிகேட்டு இருபுயம்மீறி உள்மகிழ்ந்த அவந்திமன்னன் உன் தாயிருக்குமிடம் உன் தந்தை வருவாரா? நீ அவரை அறிவாயா? என்ன பாலகன் நகைத்து அய்யா நான் உம்மைக் கண்டபோதே என் தந்தையையும் கண்டேன்,

அரிந்திலே னிதற்குமுன்னே யானென அவந்திமன்னன்
பொருந்திய மகவைதாங்கி புகளரி தவசிலேத்தி
இருந்தவ னுச்சிமோந்து இளஞ்ஞரை யருகுசேர்த்து
பெருந்திரல் லரசாயார்க்கும் பேசினான் மகவுவாய்மை. 180

வ—ம்:-இதற்குமுன் நான் அவரையரிந்ததில்லை என்னவும் அவந்திமன்னன் அந்த பாலனைவாரி தூக்கி தன் சிம்மாசனத்திலவனுடனிருந்து மற்ற பாலகரையும் சமீபத்தில் அழைத்து வைத்துக்கொண்டு சபையோரைக்கூவி பாலகனுரைத்த யாவையுங்கூறினான்

மன்னவர் மகிழ்ந்து கேட்டு மதித்தயர் ராமன்போலே
இன்னரும் மகவையீன்ற இறைவனை மனத்துள்போற்றி
அன்னவ ரிருந்தகாலை அவந்திமன் னருகுபோந்த
சின்னவ னெழுந்துசென்றான் செம்மலை காண்பேனென்றே. 181

வ—ம்:-இம்மொழியை சூழயிருந்த மன்னவர்கேட்டு ஸ்ரீ ராமபிரான்போலவே இந்த பெருமை பொருந்திய மகனையீன்ற அரசனை புகழ்ந்து இருந்தார்கள். அவர்களப்படியிருக்க அவந்திமன்னன் அருகிருந்த பாலன் அந்தயிடம்விட்டு எழுந்து அரசனைக் காண்பேனென்று கூறிசென்றான்.

அங்குள்ளார் செயல்மறந்து அவரவர் தொழிலுவிட்டார்
இங்கவ னுற்றபின்னே யிருந்தவச் சபையினூடே
மங்களம் முழங்கும்வாயான் வந்துமன் றவசின்பாங்கர்
தங்கிடும் அமைச்சைநோக்கி சாற்றுவா னறிவில்மிக்கான். 182

வ—ம்:-அந்த சபைநிறைந்த அரசரும் மற்றவர்களும் இந்த பாலன் அறிவிலும், வணப்பிலும் ஈடுபட்டு செயல்மறந்திருக்க அச்சபையினூடே இனிய மொழியுடைய பாலகன் சென்று தன் தந்தையின் சிம்மாசனத்தையடைந்து அதற்கு முன்னிருக்கும் முதல் மந்திரியைப்பார்த்து அறிவிலுயர்ந்த சிறுவன் கூறுவான்.

தந்திரத் தலைவரேரே தரணியா ளரசனுற்ற
சுந்தரத் தவசிலேற துணிந்தனம் விடுத்துப்பின்னே
வந்திடும் மென்னக்கூறும் மதலையை யரசன்றம்மை
அந்தநாள் காக்குந்தானை அதிபனும் நோக்கிஅய்யா 183

வ—ம்:-மே மந்திரி! இந்த உலகத்தையாளும் அரசனிருக்கும் சிம்மாசனத்திலேற துணிந்தேன். ஆகையால் நீஎழுந்து இப்புரம் வந்திடுவாயென்னக்கூறும் பாலகனுரையைக்கேட்டு சமீபத்திலிருந்த மெய்காப்புபடை வீரன் அவனைநோக்கி அய்யா

சிறுவனீ பொருத்தோமத்தால் செம்மலின் விடைதானன்றி
ஒருவரும் நோக்கவொண்ணு உயர்மணி தவசிலேற
வருவரோ வானுளோரும் மண்ணுளோர் நினையாரித்தை
தெருவுரை தோளரோடு சேர்ந்துசெய் செயல்நன்றாமோ. 184

வ—ம்:-வேந்தன் உத்தரவன்றி இந்த சிம்மாசனத்தை யாரும் நோக்கவொண்ணாது அன்றி வானவருகினும் மற்றும் மண்ணுளார் யெவராகினும் இதில்யேற நினையார்கள். அப்படி பெருமை வாய்ந்த சிம்மாசனத்தில் யேறவந்தவன் நீ சிறுவனானதால் பொறுத்தேன். தெருவில்திரியும் சிறுவருடன்கூடி செய்யத்துணிந்த காரியம் நன்றாமா.

சென்றுநின் கோவில்புக்கி செளிப்புற வாழ்தியென்ன
அன்றவை மன்னர்கேட்டு அயர்ந்தனர் உரைக்கவஞ்சி
கன்றிடத் துருபன்சீறிக் காவலர் தம்மைநோக்கி
இன்றிவ னுரைக்கும்யாவும் யேற்குமோ முறையோவென்றான் 185

வ—ம்:-ஆகையால் நீ உன்தோளருடன் உன் தாய்மனை ஏகுவாயென்ன இவைகேட்ட அரசர்கள் மறுமொழிகூற அஞ்சியிருந்தனர். பாலகன் அவ்வுரைகேட்டு கோபமாகி சபையை நோக்கி இவன் யென்னை இவ்விதம் உரைத்தது ஞாயமோவென்றான். மன்னர்கள் அவ்வுரை கேட்டும் பதில் கூறாதிருக்க,

பின்னிலும் சினந்துவோங்கி பெருமரி வில்லாய்நீயார்
என்னையை தடுக்கவாண்மை யேதுனக் கவைதான்விட்டு
பின்னிலே நடப்பாயிந்தப் பெருநிதி வாழ்வுசெல்வம்
என்னையே சார்ந்ததன்றி யெவர்கிவை யுருத்துமூடா. 186

வ—ம்:-பின் துருவன்சினந்து சேனையதிபனைப்பார்த்து நல்லறிவில்லாதவனே நீயார்? யென்னைத்தடுக்க ஆண்மை உனக்குயேது? நீ இச்சபையைவிட்டு வெளியே செல்வாய் இந்த பெருமைபொருந்திய அரசவாழ்வும், செல்வமும் என்னைச் சார்ந்திருக்க மற்ற யாருக்கு இது சொந்தமென்று உன் மூடமதியாலுரைத்தாய்.

பேருவாய் யென்னக்கூறும் பிள்ளையை முனியபின்னை
சீருவ தகற்றுவென்னச் செழுமதி யமைச்சனோத
மீருவ தொளித்தானந்த விளைஞ்ஞனும் திடந்தான்னேரி
யேருமத் தவசில்சென்று யேறினன் னதனைமாது, 187

வ—ம்:-ஆகையால் நீ விலகிப்போவாய் என்று கூறும் பாலகனை சினந்த சேனைவீரனை மந்திரிதடுத்து விலகுவாயென்ன பயந்து விலகினான். உடனே மந்திரியும் விலக யாதொரு தடையன்றி க்ஷீராப்திநாதன் ஏறியிருந்த சிம்மாசனத்தில் சென்று யேரி பல படி நடந்தான். அதை அரசனருகிருந்த சுருசியானவள்

பார்த்தனள் தானைவீரன் பயங்கொள உரைத்தவாய்மை
ஏர்த்தினி அஞ்சினின்றால் இவன்பெரு வாள்வைக்கொள்ளும்
சேர்த்திடும் வாதுமத்தால் சிருவனை யொளிக்கநன்றே
யேர்த்திடும் மிரையுமின்றாள் ளென்னவே தடுத்துவோதும். 188

வ—ம்:-பார்த்தாள். சேனைவீரன் அஞ்சும்வண்ணம் கூறிவரும் பாலகனைக்கண்டு நாம் அஞ்சினால் இவன் இவ்வரசவாழ்வை கைகொண்டு நம்முடன் வாதிடுவான். ஆகையால் தற்சமயம் மன்னன் நமது பட்சமிருக்கும்போதே இவனை யொழித்துவிடுதல் நன்றென நினைத்து அவனைத்தடுத்து கூறுவாள்.

மன்னவ னுயிரைநார்த்து வளர்சபை யுற்றவீரன்
தன்னுரை கடந்துசிரித் தவருரும் சிருவாநில்லாய்
யென்னுமம் மாதைநோக்கி இத்தவ சிருக்கவந்தவ்
வென்னையே தடுப்பதாரு விளம்புவான் யாருநீயார். 189

வ—ம்:-ஹே சிருவா! நீ மன்னவனுயிர்காக்கும் சேனைவீரன் கூரியவாய்மை மீரி அவனை மதியாதுபேசி இந்த சிம்மாசனம் ஏர வந்தது தகாதுநில், என்று கூறும் மாதை பாலகன் பார்த்து இத்தவசிமேலரவந்த என்னை தடுப்பதற்கு யார்க்கு அதிகாரமுண்டு

வந்தவர் வணங்குமிந்த மணியணித் தவசின்மீது
எந்தையோ டிருக்கநீயார் இளைஞ்ஞரார் ருரைப்பாய்மாதே
இந்தநா டுடையசெல்வம் இயல்முடி யரசபோகம்
வந்திடும் மரசர்களுள வணங்கிடும் பெருமையாவும். 190

வ—ம்:-உலகிலுற்ற மன்னவர் வணங்கும் என் தந்தையுடன் இந்த சிம்மாசனத்திருப்பவள் நீ யார்? உன்னருகிருக்கும் இந்த சிருவர்கள் யார்? அதைகூருவாய், அன்றியும் இந்தநாடும், இதன்

செல்வமும், அரசமுடியும், அதன் போகமாகிய அரசர் பலர்சூழ வந்து வணங்கும் பெருமைகள் யாவும்,

எந்தனுக் குரியசொந்தம் மேனதை யறியாயென்ன
சுந்தரி யேங்கித்தேறி சொல்லொணுச் சிற்றம்பூண்டு
அந்தவன் றன்னைநோக்கி அரைகுவா னுந்தன்றாயும்
இந்தநல் லரசன்றம்மை யெண்ணிடா தகன்றுபோனுள். 191

வ—ம்:-எந்தனுக்குச் சொந்தமென்று பலதடவை யானுரைத்தும் தெரியாதவளானுய், என்னும் வாய்மைகேட்டு சுருசி மயங்கி பாலா உன் தந்தையான இந்த வேந்தனை உன் தாய் மதியாது அகன்று போனதால்,

அன்னதால் கலங்கிவேந்தன் அரசர்கள் பலருங்காண
என்னையே மணந்தான்பின்னை யியல்பிதி வாழ்வுகீர்த்தி
உன்னையே யடையுமென்று உரைத்தனன் உரைத்ததாலே
பின்னிலிப் பதங்கள்யாவும் பெரும்ஜெய சேனர்க்கென்றுள். 192

வ—ம்:-அரசன் கலங்கி இங்குள்ள அரசர்முன்னிலையில் என்னை திருமணம்புரிந்தார் அப்படி புரிந்தகாலம் அரசவாழ்வு முற்றும் எனக்குச் சொந்தமென்று உரைத்தார். அவ்விதம் கூறியதால் இந்த அரசபோகம் என் மூத்தமகன் ஜெயசேனனுக்கேயன்றி உனக்கும் மற்றவர்க்கும் இதில் பாத்தியம் கிடையாது.

மைந்தனே யத்தாலிங்கே வரவொணு தகல்வாயென்னச்
சிந்தைநொந் தேங்கியேங்கி திகைத்தவ னவளைநோக்கி
எந்தையோ டிருந்தரசற்று யேகுவே னிருந்தால்பின்னே
வந்திடேன் னரசசெல்வம் வளங்கினும் யேர்க்கேனம்மா. 193

வ—ம்:- ஆகையால், நீ இங்கே வரவொண்ணுது யேகுவாய் என்ன, துருவன் சிந்தைநொந்து யேங்கி அழுது திகைத்து அவளை நோக்கி நான் கொஞ்சநேரம் என் தந்தையுடனிந்த சிம்மாதனத்திருந்து செல்கின்றேன் அப்படிச் சென்றபின் மீண்டு இங்குவரேன். அரசனே யிந்த அரசை எனக்குத் தந்தாலும் ஏர்க்கேன்,

அன்னைநீ யென்றுமுன்னம் அறிவேனே னுந்தன்பாதம்
முன்னைவந் தடைவேனென்ன மொய்க்குழல் நகைத்துப்பாலா
என்னருந் தவத்தில்வந்த இளைஞரை யன்றிமற்றோர்
மன்னனோ டிருக்கவொண்ணு வளருவாய் மனையில்புக்கி. 194

வ—ம்:- அன்னையே தங்களை என் தாயென்று உணர்ந்திருந்தால் இதற்குமுன்னே தங்களை வந்தடைந்திருப்பேன், என்னும் பாலனை நோக்கியவள் நகைத்து என் மைந்தர் இருவரன்றி மற்றவர் அரச சிம்மாசனத்தில் ஏறக்கூடாது. நீ உன் தாய்வாழ் மனை சென்று வளருவாய்,

என்றிட மைந்தன்மீண்டு ஈன்றதா யனையநீவீர்
இன்றொரு முகூர்த்தம்மட்டும் இறைவனோ டிருந்துமீள்வேன்
நன்றென நவில்வாயென்ன நங்கையின் பாதம்போற்ற
அன்றவள் தடுத்துப்பாலா அரசனோ டிருக்கவென்றால். 195

வ—ம்:-என்னும் அன்னையின் இருபாதத்தில்வீழ்ந்து நமஸ்கரித்து தாயே! நான் இன்று ஒரு முகூர்த்தநேரம் அரசனுடனும் தங்களுடனும்கூட இச்சிம்மாசனத்திருந்து அப்பால் என் தாய் மனை செல்வேன் என்ன, அவள் தடுத்து இந்த அரசனோடு சரியாசனத்தில் நீயிருக்க நினைத்தால்,

பெருந்தவம் புரிந்துயெந்தன் பிள்ளையாய் பிரப்பாயாகில்
பொருந்தியிவ் வரசனோடு புவியினை யாழ்வாயென்ன
இருந்திடேன் கணமுமிங்கே யேகியே காட்டிலம்மா
அருந்தவம் புரிந்துபின்னுன் னமைந்தனின் மகவாய்வந்து. 196

வ—ம்:- அருந்தவமியற்றி பகவானருள்பெற்று என் மகனாய் வந்து பிறந்தால் இந்த அரசனுடனிருந்து புவியாள்வாயென்ன பாலன் அப்படியானால் கொடிய கானகத்தில்சென்று அருந்தவம் புரிந்து அடுத்த பிறப்பில் உன் மகனாய்பிறந்து வருவேன். இனி கணநேரமும் இங்கிருக்கேன் என்றுகூறி,

உன்னுட னரசனோடாய் உரைவேனிக் தவசிலென்று
அன்னவ னரைந்துமீண்டான் அங்குளோர் மயங்கியிர்ப்ப
மன்னவன் செயல்மாந்தான் மந்திரி கலங்கிநோக்கான்
முன்னுரை வினைகள்வந்து மூண்டதில் வாருகண்டாய். 197

வசனம்:-பின்னும் கூறுவான். தவத்தின் பெருமையால் உன்னுடனும் என் தந்தையுடனும்கூட இச்சிம்மாசனம் ஏறுவேன் என்றுகூறி அங்கு நில்லாது சென்றான். சூழவிருந்த மன்னர் நடந்தவையுணராது மயங்கினர். உத்தானபாதன் ஊழ் வினையால் மதிமருண்டார். மந்திரி புத்தி தடுமாறி பாலனை பாராதிருந்தான். இது முன் வினைப்பயன்.

துருபனும் சிந்தைமாறித் துணிந்தனன் கானில்வைகி
அருந்தவம் புரிந்துமேலாம் அருமறை தனக்குமெட்டா
ஒருவனை விழிநேர்கண்டு உலகெலா மாளும்வண்ணம்
பெரும்வரம் படைவேனென்னப் பேசிச் சபையினுற்ற, 198

வசனம்:-பாலனாகிய துருவன் தன் மனம்மாறி அருமறைதேடியறியாத ஒருவனாகிய அரிபரந்தாமனைகானில்சென்று அருந்தவம் புரிந்து என் விழிநேர்கண்டு இந்த உலகம்முற்றும் ஆளும் வரம் பெறுவேன்என்ன தோளரிடம்கூறிவருஞ்சிறுவனை சபையிலிருந்த

மன்னனின் தோளனித்த மதலைதாய் மாமனென்னும்
மன்னனு மவந்திவேந்தன் மதலையை தடுத்து அய்யா
என்னகா ரணமாய்மீண்டாய் இயம்பென அவனும்போற்றி
அன்னைவாய் மொழியையோதி அறைந்தனன் கருத்துமுற்றும் 199

வசனம்:-இரவிகுல உத்தானபாதனுக்கு தோளனும், இவனுக்கு தாயுடன்பிறந்த மாமனுமாகிய அவந்திமன்னன் கேட்டு அய்யா நீ என்னகாரணத்தால் இவ்வளவு அவசரமாய் திரும்பிவிட்டாய் என்னவும், அவனை நமஸ்கரித்து தன் சிறியதாய் யுரைத்தயாவு முறைத்து தன் கருத்தையும் உரைத்தான்.

நன்றெனக் கேட்டுஅன்னோன் நகைத்துநீ கொடியகானம்
சென்றிட அரியாயிந்தச் ஜெகமெலா மாளவென்றால்
இன்றெந்தன் பதிபோயுன்னை யாவரும் வணங்கிநிர்ப
நன்றுறும் மகுடஞ்சூட நரபதிபுதல்வா வாராய். 200

வசனம்:-இவைகேட்ட சூரவர்மன் நகைத்து நல்லது பாலகா நீ கொடிய கானகம்செல்ல வழியறியாய் இந்த உலகமாள நினைத்தால் இன்று உன்னை என் ராஜ்ஜியம் கூட்டிப்போய் உலகமுற்றும்

வணங்க அரசனுக்குவேன். ஹே சக்கிரவர்த்தி புதல்வா! நீ என்னுடன் வருவாய்.

அன்னைநின் தாயைக்கண்டு அழைத்துநம் மவந்திசெல்வோம்
என்னவே யணைத்துயேங்கும் மிறைவனை நகைத்துபாலன்
உன்னையா னரிபேன்மற்றோர் றுதவிடும் நிதியும்வாழ்வும்
மின்னமே யதனையேர்க்கேன் விடுவிடு தடுத்திடாதீர். 201

வ—ம்:-உன்னையீன்ற தாயைக்கண்டு அழைத்து நமது அவந்தி நாடுசெல்வோமென்று அவனை அணைந்து விழிநீர்பெருகும் வேந்தனை பாலன்பார்த்து நகைத்து, ஐயா நான் உம்மை இன்னாரென்பதும் அரியேன். தவிர மற்றவரால் குடுக்கும் வாழ்வும் செல்வமும் யேர்பது குற்றமே. ஆகையால், நீ என்னை தடுக்காது விடுவாய்

அவ்வுரை கேட்டுமீண்டும் அவன்றடுத் தணைத்துப்பாலா
இவ்வுரை விடுப்பாயென்னை எவரென அரிவாயாகில்
அவ்வுரை மருக்காய்பெந்தன் அருள்நிதி யாசுமற்றுப்
ஒவ்வுரை தானையாவும் உருமையா லுனக்கேசொந்தம். 202

வ-ம்:-என்றுகூறக்கேட்ட அவந்திமன்னன் மருபடியும் பாலனை நன்றாய் அணைத்து போகவிடாது தடுத்து நீ என்னை யாரென்பது அரிவாயாகில் நான் கூருவது தடுக்காய் என்னுடைய நிதியாசும் மற்றுள்ள சேனை முதலான யாவும் உரிமையால் உனக்கு சொந்தமே எனலும்,

அத்தனின் வாழ்வுமற்றும் அன்னையின் பெருமையாவும்
புத்திரன் றனக்கேசொந்தம் புத்திர னவர்க்குயேவல்
நித்தமும் புரிவதென்னும் நேர்மைதா னுலகுதம்மில்
மத்தவர் நிதியும்வாழ்வும் மதிப்பரோ அரிவில்மிக்கார். 203

வ—ம்:-பாலகன் அவரைநோக்கி, அய்யா மக்களுக்கு தாய் தகப்பனுடைய அன்பும் செல்வமும் சொந்தம். மக்கள் மாதாபிதா அந்தியகாலம்வரை அவர்களுக்கு தொண்டு செய்வது இயல்பு என்பது உலகவழக்கம். இதைவிடுத்து பூமியில் மற்ற எவ்வித உரிமையுமுடையார் செல்வத்தையும் அரிவுடையோர் ஏர்ப்பாரோ.

இம்முறை யுணராமன்னு என்னையேன் தடுத்தீர்வீணாய்
அம்முறை விடுப்பீர்கானில் ஆரணன் பதத்தையுன்னி
எம்முறை யெடுத்துவோதி இறைவனை விளிநேர்கண்டு
செம்முறை யடைவதன்றி சேர்ந்திடேன் மற்றோர்நாடு. 204

வ—ம்:-இந்த முறையுணராது நின்ற அரசே என்னை என் தடுக்கிறீர் நான் கானகம்சென்று நாராயணனை உன்னி தவமியற்றி என்னுடைய நினைப்பை யவரை விழிமுன்கண்டுகூறி நினைத்தபடி வரம்பெற்று வருவதன்றி மற்ற எவர் விரும்பினும் அவர் பின் நான் வருவேன் என்று நினையாதீர்.

மற்றவன் யாரோவென்று மதித்திடா துரைத்தாயென்னை
கொற்றவன் மதளாய்யுன்னை குவலயந் தன்னிலீன்ற
நற்றவ அன்னையோடு நான்துணை யுதித்தோன் கண்டாய்
கற்றவா அத்தால்நீயும் கலந்தென்னோ டுரைவாயென்றான். 205

வ—ம்:-இவ்விதங்கூறும் இளஞ்ஞனை நோக்கி பாலகா என்னை யாரோவென்று நினைத்தாய். அப்படி மதியாதிருக்காதே. உலகரசன்புதல்வா! நான் உன்தாய் சுநீதியுடன் பிறந்தவன் அவர்களுக்கு மூத்தவன் உனக்கு மாமன். ஆகையால் நீ யென்னுடன் உறவாக வருவாயென்னலும்,

திருவுயர் மாமனென்ன செப்பிட மகிழ்ந்துபோற்றி
துருவனும் நகைத்துநீரோ சூழ்நிதி செல்வம்யாவும் [டால்
தருவனென் றுரைத்தீர்வாய்மை தரையுளோர் நகைப்பார்கேட்
இருமுந்தன் துணைவிதன்னை யெந்நா ளிதன்முன்கண்டீர். 206

வ—ம்:-தாய் மாமன்யென்றவுடன் பாலகன் அவன் பாதத்தில் நமஸ்கரித்து அவரைப்பார்த்து நகைத்து, நீரா பெருமைபொருந்திய வாழ்வும் செல்வமும் தருவேனென்றீர். இதை மற்றவரிக்கால் நகைப்பார்கள். அதுவிருக்க, தாங்கள் தங்கள் துணைவியை இதற்குமுன் எப்பொழுது கண்டீர்கள்.

இன்னகர் புரத்தில்கோட்டை யிருப்பதுங் காவலோடு
அன்னையுந் தனித்துவாளல் லவனிநா னுதித்தபின்னும்
இன்னக ரடைந்ததெப்போ பெங்களுக் குதவிசெய்ய
மன்னவா யிதனைநீரும் வனுத்துமிச் சபையோர்காண. 207

வ—ம்:-தவிர என்தாயுடன் நானிருக்க இன்னகர்கு அப்புரத்திலிருக்கும் கோட்டையை ஏற்படுத்தி காவல்வைத்து தனித்து வாளவிடுத்த எங்களுக்கு உதவிசெய்ய நான் பூமியிலுதித்தபின் தாங்கள் எப்பொழுது வந்தீர். ஹேவேந்தா! இதை இச்சபையோ ரறியக்கூறும்

கன்றிழ னவந்திமன்னன் கான்முளை வாய்மைகேட்டு
பொன்றினன் போலேயேங்கி புண்ணியா பொருத்தியான்செய்
நன்றிலா குறைகள்யாவும் ராசபோகத் தாலேங்கி
குன்றின தன்றிவேரே கொடுவினை புரிந்தேனில்லை 208

வ—ம்:- என்ற உரையைக்கேட்டு அவந்திமன்னன் உயிரற்றவன்போல் ஏங்கி அவனைநோக்கி புண்ணியமே உருவாய் வந்த பாலா நான் செய்த தீமையான குறைகளை நீ பொருப்பாய் ராஜ போக வாள்வால் உங்களை மறந்தேனன்றி வேறு கொடுமையான வினைநினைந்து இருந்தது இல்லை.

இப்பிழை பொருப்பாயுன்னை யீன்றதாய் கோவில்புக்க
அப்பனே வருதியென்ன அவந்திநா டுடையமன்னு
ஒப்பிய வயோத்திநாட்டில் உன்திரை யளிக்கவுண்ணி
எப்பக லுற்றாய்யென்ன இன்றுமூன் றுனநாள்முன். 209

வ—ம்:-ஆகையால் இந்த பிழை பொருத்து உன்னையீன்ற தாய் வாழும் அரண்மனைசெல்ல வருவாயப்பா, என்னும் அவந்தி வேந்தனை துருவன் நோக்கி, வேந்தே! தாங்கள் செலுத்தவேண்டிய கப்பத்துடன் இந்த அயோத்திநாட்டில் எப்பொழுது வந்தீரென்ன அந்த மன்னன் நான் இங்குவந்து மூன்று நாளானது என்று கூறவும்

வந்தன னென்னக்கேட்டு மற்றும்மன் னவையைநோக்கி
இந்தமன் மூன்றுநாளும் இருந்துநல் மருவுமுண்டு
சிந்தையும் களித்ததன்றி தெரிந்திலான் துணையைசேயை
இந்தநல் லம்மான்றானே எனக்குயர் நிதியும்வாழ்வும். 210

வ—ம்:-அவைகேட்ட பாலன் மற்றுமுள்ள மன்னரைக்கூவி இந்த வேந்தன் மூன்றுநாள் எங்கள் பதியிலிருந்து எங்களால் இடப்பட்ட விருந்துண்டு, சந்தோஷம் அடைந்ததன்றி, தன் துணைவியையும், அவள் புத்திரனையும், நினையாததும் பாராததுமிருந்த எங்கள் மாமன் எனக்கு நிதியும், வாழ்வும், பெருமை பொருந்திய அரசும்,

தருவனென் றழைத்து பின்னே தன்னகர் புகுந்தாலங்கே
தெருவினி லலைபவிட்டு செல்லுவார் மனையிலுன்னி
மருமொளி யுரையான்னாட்டில் மாமனுக்குரிய சொந்தம்
வருமணக் கோலத்தன்று வளங்கிட அவனும்மாசி. 211

வ—ம்:-தருவதாய் கூறுகின்றார். அவர் கூறியபடி நான் அவர் நகரம் சென்றால், அவ்வூர் தெருவில் என்னை அலையவிட்டுவிட்டு தன் அரசபோகத்திலிருந்து சுகிப்பார். அன்றி, ஒரு குழந்தைக்கு மாமன் செய்யவேண்டியமுறை அக்குழந்தை மணக்கோலத்தில் ஆசீர்வதிப்பதே அன்றியும்

## துருவன் சபையைவிட்டு நீங்கல்.

அன்றிவே றுளதோசொந்தம் அம்மணம் புரியுங்காலம்
நன்றுறும் மன்னர்காண நானுந்தன் மனம்போலெல்லாம்
நின்றதை பெருவேனுங்கள் நிதிபதி பெருமைமுற்றும்
சென்றுந்தன் வழிவழியாய் சேர்ப்பாய்நீ யுலகாள்மன்னா 212

வ—ம்:- திருமணம் புரியுங்காலம் நான் இவரால் யேற்படுத்திய விதியின்வண்ணம் நடப்பதுதான் முறையன்றி வேருவகையில் இவருக்கும் எனக்கும் யேதுசொந்தம், வேந்தே! ஆகையால் உம்முடைய பெருமை பொருந்திய செல்வத்தை உன் மரபில் வந்த என்போன்ற இளைஞருக்கு கொடுத்து மகிழ்வாய்.

என்றவன் சினந்துகூறி யேகினான் தோளர்கூட்டாய்
அன்றவை யறிந்தாளந்த அரசனோ டிருந்தமாது
சென்றன ளிருக்கைவிட்டு சிருவரை யழைத்தோர்பாங்கர்
நின்றதோர் தோழியோடு நேரிளை காவுள்சென்று. 213

வ—ம்:-என்று ஆங்காரமாய்க்கூறி அவரைக்கவனியாது தோளருடன்சென்றான். இதை நன்றாய் கவனித்தறிந்த சுருசியென்னும் அரசி ஆசனம்விட்டு எழுந்து இரண்டுமைந்தரும் உடன்வர, தோளியையும் அழைத்துக்கொண்டு தனது நந்தவனம் சென்றாள்

மண்டபம் குரிகியங்கு மயங்கிபல் வாறாய்தேரி
அண்டும்சே டியரைநோக்கி அயோத்தியின் தானைவீரன்
பெண்டினை யளைப்பாயென்ன பேர்ந்தங்கு மீண்டாறந்த
ஒண்டொடி வந்துபோற்ற ஒதுக்கிப்பின் மற்றார்தம்மை. 214

வ—ம்:- அவ்வனத்தில் தங்குவதற்கு எர்ப்பட்ட மண்டபத்தில் சென்று தங்கி மாற்றமுடியாத கவலையுடன் இருந்தொருவாறுதேரி அருகுரும் தோளியைநோக்கி நீ விரைவில் சென்று சேனாதிபதியின் மூனைவியை அழைத்துவாவென்ன, அவ்விதமே அழைத்துவந்தவளைக்கண்டு மற்றவரை அப்புரம்போகும்படிகூறி

அன்னவள் தம்மை வாழ்த்தி அரசுயர் பெருமைவிட்டு
கன்னியாஞ் சுருசியந்தக் காரிளை தன்னைப்போற்றி
என்னுரை மருத்திடாதே இளைஞரை கார்க்கவேண்டி
சொன்னவை முடிப்பேனென்று சொல்லுவா யுறுதியம்மா. 215

வ—ம்:- சேனாதிபன் மனைவியைநோக்கி, தனது அரசின்பெருமையும் நினையாமல் அவளை நமஸ்கரித்து, அம்மா! உன்னால்தான் என்மக்களிரு இளைஞரும் வாளவேணும். ஆகையால், நான் சொல்லும்வண்ணம் முடிப்பதாய் உருதிகூறி எங்களை காப்பாற்று வாய் யென்னவும்,

தானைகா வலன்பெண்டு தலைவியை தொழுதுயேற்றி
ஏனையோ ருகவென்னை யேன்நினைந் துரைத்தீரிவ்வார்
றேனனை உனக்குவேண்டும் இனியவை யுரைப்பாயின்று
நானதை முடிப்பேனெந்தன் நாதனோ டுரைத்துயாவும், 216

வ-ம்:-இவைகேட்ட சேனாதிபன்மனைவி திடுக்கிட்டு அரசியின் பாதம்போற்றி தாயே! தாங்கள் என்னை வேறாக நினையாமல் தாங்கள்யிடும் கட்டளையை உடனே நிறைவேற்ற தயாராகயிருக்கின்றேன். என் அன்னையே! உனக்கு வேண்டும் விஷயத்தை இச்சணமே யுரைப்பாய்.

மகிழ்ந்தவ ளுரையைக்கேட்டு வளர்நிதி யுனக்குவேண்டும்
அகமுடன் பூமிநாடு அளிப்பேன்கே ளெனதுபாலர்
மகிழ்வுடன் வாளவொட்டான் மாபெருஞ் சுநீதிபெற்ற
அகமுளான் யார்க்குமஞ்சா தடைவியின் றடைந்தானம்மா. 217

வ-ம்:-என்னவும் சுருசிமகிழ்ந்து அவளை நோக்கி, அம்மா! உனக்குவேண்டிய பூமி, மனை, செல்வம் வேண்டும்வரை நான் தருகின்றேன். என் கவலை மாற்றுவதற்கு உதவிசெய்வதென்னவென்றால் சுநீதிமகன் மூத்தவனானதால் என்மக்களை சுகமாகவும் வாளவொட்டான், அவன மிஞ்சிய அக்கிரமமுடையவன், அரசுக்கும் உரியவன், எவர்க்கும் அஞ்சாத நெஞ்சன், இன்று கொடிய கானகத்தைநோக்கி சென்றான் ஆகையால்,

உன்னருங் கொழுந்தன் றம்மை உதாசினம் புரிந்தான்மிக்க
மன்னவர் காணச்செய்த வன்பிழை பொருப்பாயென்று
அன்னவர் குறைத்துக்காட்டில் லவனுயிர் மடியும்வண்ணம்
என்னவேண்டினும்செய்வீ ரெனஉரைந்திந்தாள் செம்பொன் 218

வ-ம்:-உன் நாயகனிடம் இதைக்கூறி கானகத்திலவனை மரித்து தாட்சண்யம் பாராமல் வதைக்கும்படி சொல். தவிர, உன் நாயகனை அரசசபையில் இன்று அவன் அவமரியாதையாய் பேசியதை நான் பார்த்திருந்தேன் என்று அவர் நினைத்தால் அப்பிழையை மன்னிக்கும்படி கூறுவாய் என்றுகூறி, அவள் யெடுக்கும்வரையளவுள்ள பசும்பொன்னீய்ந்தாள்.

## துருவன் தாய்மனைவரல்.

கன்னியு மகன்றளந்தக் காவலரவையை விட்டும்
பின்னிலே நடந்தபாலன் பெற்றவள் கோவில்புக்கி
அன்னையை போற்றியானும் அருந்தவம் புரிந்துகாட்டில்
மின்னிய துளபம்சூடும் விமலனை விழிநேர்கண்டு. 219

வ-ம்:- அதை வாங்கியவ்விதம் செய்வதாய் வாக்களித்து அவள் சென்றாள். இதுநிற்க, அங்கே மன்னர்சபையை விட்டு சென்ற பாலன் தாய்மனைசென்று அவளைக்கண்டு ஓடி நமஸ்கரித்து, அம்மா! நான் கானகத்தில் சென்று அருந்தவம்புரிந்து துளபமாலையணியும் பகவானை நேரில்கண்டு,

வரம்பல மடைந்துமீள்வேன் வருத்துநல் லாசியென்ன
உரமதை யிழந்துமாது உருகியே உனக்குயித்தை
திரம்பட உரைத்தாறாரோ தெரிவையோ அடவிசென்று
பரநிலை யரிதுகாணல் பாலனே வொருக்கால்மன்னர். 220

வ-ம்:- மேன்பாடடையவேண்டும் வரம்வாங்கி வருவேன் விடைதருவாய் யென்னவும் கேட்ட தாய் திடுக்கிட்டு மனமிளகி நிலைதளண்டு வாடி அவனைநோக்கி, பாலகா! உனக்கு இந்த போதனையின்று செய்தவராரு, கானகம்செல்ல வழியரிவையோ, அப்படி சென்றாலும் தவம்செய்யும்விதம் தெரிவாயா? அது தெரிந்து செய்தாலும் அந்த எம்பிரான் நிலையை அரியமுடியுமா? இந்த பரதகண்டம் சூழ்ந்த உலகமுற்றுக்கும் வொருகாலம்,

மன்னனா மதைவிடுத்து வனம்புகில் தரியேனாவி
என்னவே யவன்நகைத்து யெத்தனை காலம்நாட்டில்
அன்னையே யிருந்திட்டாலும் அளிவதோ டளியும்யாவும்
உன்னையை தாதைதம்மை உலகதுபின் மறந்தேபோகும். 221

வ-ம்:-நீ ஏகச்சக்கிராதிபனா தம் பெருமையை விடுத்து கானகம் சென்றால் என் ஆவி நிலையாது, என்றுகூறும் தாயைப்பார்த்து நகைத்து அம்மணீ! யான் எத்தனைகாலம் உலகத்தில் நீ கூறிய பெருமையுடனிருந்தாலும் அளிந்துதான் போவேன். அக்காலம் யாவும் போமே, அத்துடன் உன்பெயரும், என் தந்தையின் பெயரும் அளிந்துபோகும்.

துக்கமும் மடையாதிந்த ஞாலமும் மளியாவண்ணம்
பக்குவ மடைந்துகண்ணால் பரநிலை கண்டுமீண்டு
தக்குவே னாகிலுன்னைத் தரையுள்ள காலம்மட்டும்
இக்குவ லயந்தான்போற்றும் யேகவே விடைதாவென்ன. 222

வ—ம்:-அப்பேர்ப்பட்ட கவலையும், துக்கமும் அடையாதிருக்க இந்த தேகம் அழியாதிருக்கும் பக்குவம் அடைய ஸ்ரீமன் நாராயணனை கண்ணால் கண்டு வரம்பெற்று மீள்வேன். இப்பெருமை நான் பெற்றால் உலகம் உள்ளளவும் உன்னை பூமியிலுள்ளவர்போற்றுவார். ஆகையால் நான் சென்றுவர விடைதாவென்ன,

## துருவன் தாயைப்பிரிதல்.

அரிந்தனள் தோழர்சொல்ல அரசவை நடந்தயாவும்
பரிந்தந்த மகவைகட்டி பாவையு மலரிவீழ்ந்தாள்
தெரிந்தவள் கருத்துயாவும் திடமுண்ணிக் குரித்தோர்யாரும்
அரிந்திடா தில்லம்விட்டு அடவியில் மறைந்துபோனன். 223

வ—ம்:- மைந்தனுக்கு இக்கருத்து ஏர்ப்பட்டதின் காரணத்தை அவன் தோளர்களால் விபரமாயுரைக்க, அரிந்ததாய்அலரி மகனை கட்டி கண்ணீர் சொரிந்து பின்னும் மனம்தாங்காமல் தடுமாறி கீழேவிழுந்து விட்டாள். இதையுணர்ந்தபாலன் தாய் எழுந்தால் நம்மை விடார்கள்யென்று எண்ணி தாய்சோபம் மற்றவர் மாற்றியதில் கருத்தாயிருக்க ஒருவரும் அரியாவண்ணம் வாயல்வந்து வனம்நோக்கி மறைந்துபோனன்.

மாதவன் கருணையாலே மற்றவ ரரியாதேங்கி
சாதக மடைவீரென்ன தலைவியை யவர்கள்தேற்ற
யேதவள் தேராதேங்க இருந்தவர் திசைகள்தோரும்
ஆதவ னிகர்த்தசேயை அடர்வன மலைந்துங்காணர். 224

வ—ம்:-அவ்விதமறைவதற்கு கபடநாடகன் கருணையால் மாய்கையுமுதவியாய் இருந்ததால் இவ்விதம்மறைந்தான். அங்குள்ளவர் தாயை தேற்றியும் தேறுதிருக்க சிலதோளர் துருவனைக் காணாது அலரி கூவ ஆயுதம்பூண்ட வீரர்பலர் கானகத்தை நோக்கி அதிவேகமாய்த்தேடி ஒடியலைந்து காணாது திகைத்தார்கள்.

இச்செய லிருக்கப்பின்னே இரைசெய லெனிலோமன்னர்
மிச்சமாய் மயக்கமுற்று வீழ்ந்தமன் னேடுவீழ்ந்து
அச்செய லுணருருகி அவருரா அவந்திகோமான்
இச்செகம் குலுங்கநக்கி இரைவனை யடைந்துசிரி. 225

வ—ம்:-இங்கே இப்படியிருக்க, மன்னவர் சபையிலிருந்து துருவன் நீங்கியபின் அதையுணராது உத்தானபாதன் முதல் மற்ற அரசர்கள் யாவரும் மயங்கி நடந்ததுணராது இருக்க அவந்திநாட்டு சூரவர்மன் சினந்து கோபசிரிப்பு சிரித்து சபையிலுள்ளவரையும் தன்னிலையும்முணராத ஆத்திரமுற்று சக்கிரவர்த்தி சிம்மாசனத் தருகுவந்து,

இப்பெரும் பதவிதாங்கி இருந்தனை யரிவிழந்து
ஒப்புநே ரில்லாவந்த வொருவனே உவமையென்ன
எப்புவி யோரும்போற்று மிளஞ்ஞனை வனத்திலோட்டி
இப்புவி யாள்வாயென்னில் இங்குளோர் நகைத்திடாரோ. 226

வ—ம்:-அரசனைக்கூவி நீர் கொஞ்சமேனும் அரிவில்லாமல் இந்த பெருமை பொருந்திய பதவி யேர்த்திருக்கலாமா ஆரும் நிகரற்ற அந்த ஒருவனாகிய ராமபிரானை நிகர்க்கும் மதலேயான துருவனை உலகமுற்றும் புகழும் பெருமைவாய்ந்த இளஞ்ஞனை வனத்தில் ஒட்டிவிட்டு இன்னும் இந்த பூமியைபாண்டால் இங்குள்ள மற்ற மன்னர்கள் நகையார்களா?

என்றிட அறக்கர்கோமா னெழுந்துடை வாழும்வீசி
ஒன்றுா முடிப்பேன்ராமன் உயர்வினை நிகர்த்தபாலன்
சென்றிட அடவிவிட்டாய் திடமில்லாய் யென்னவாலி
நன்றாரும் மதலேசீர நடுங்கினர் மன்னரெல்லாம். 227

வ—ம்:-என்று "எரியுங்கொள்ளியை யேறத் தள்ளியது" போல் அவந்திமன்னன் கூறவும், இலங்கைவேந்தனாகிய விபூஷணன் சினந்து தன்னிடையிலிருந்த வாளுருவி வீசி இந்த அரசனையும் இவன் வாழ்வையும் ஒருங்கே அளிப்பேனென்று நெருங்கி அரிவிலாத வேந்தா! அந்த ராமனைநிகர்த்த பாலகனை அடவியில் விட்டாயே என்றதட்ட, அதுவரிந்த வாலிமகன் தொடைதட்டி எழுந்துசீர, மற்ற மன்னர்கள் செயலிலாது மயங்கினார்கள்,

இருந்திடும் அரக்கரெல்லாம் இன்றுணை வமைந்தனென்ன
பெருமன மகிழ்ச்சிபொங்க பெரியவன் வயதுமூத்தோன்
வருஞ்சபை தன்னைநோக்கி வளுத்துமுன் னளில்ராமன் [228
இருமெங்கள் வளியைக்கார்த்து யென்றவன் னுரைத்தவாய்மை

வ—ம்:-இவையுணர்ந்த ராக்ஷதவீரர்கள் இன்று நமக்கு நல்ல விருந்தென்று மகிழ்ந்தாட, அதில் நீருபூத்த நெருப்பென இருந்த பெரியோன் எழுந்து அந்தசபையை நோக்கி, ஹே! விபூஷணா! அங்கதா! நில்லுங்கள் முன்னாள் ராமபிரான் வைகுண்டம் ஏகுங் காலம் தன் மரபை தன்னைப்போல் கார்த்து அவரால் ஏற்படும் குற்றந்தாங்கி நாமாகமதித்து வாளுங்களென்று உங்களிடம் திருவாய் மலர்ந்ததை மரந்து,

மரந்தனை யரக்கர்வேந்தா வாலியின் மகனைக்கூட்டி
தரந்தனை யிழந்தவாய்மை சாற்றினாய் வினைகள்தாவும்
இருந்திடு மங்கங்காக இரைவர்கள் ளென்னக்கூவி
அரைந்தனன் ஜாம்புவந்தன் னாதிநாள் முரைகள்யாவும். 229

வ—ம்:-ஹே! அசுரர்வேந்தா! சிருவனான வாலி மகனைக் கூட்டிக் கொண்டு உன் பெருமையை யிழக்கத் துணிந்தாய். இதில் ராமனுரை கடந்த வினைகள் பற்றும். ஆகையால் அவரவர் ஆசனத்தில் சென்று அமருங்கள் என்று இன்னும் பகவானாலுரைக்கப் பட்ட ரகசியங்களை விஸ்தாரமாய் ஜாம்புவந்தர்கூரவும்,

அளிவிலா வரக்கர்கோமான் அவ்வுரை கேட்டுமீண்டும்
பளிவரும் திரைதாணிந்த பாவிதன் னிடத்திலிய்யேன்
ஒளிபெரும் மதலைவந்து உலகினை தாங்குங்காலம்
வளிமுரை திரைதான்நல்கி வணங்குவே னென்னசீரி. 230

வ—ம்:-அவ்வுரை கேட்டு பயந்தான் அளிவிலா வரம்பெற்ற அறக்கர்கோமான் ராமனுரை யென்னலும், வாளையுரையிலிட்டு மீண்டும் துருவனை நினைத்து மயங்கி அந்தவாஞ்சையால் ஆத்திரம் மேலிட்டு நான் இந்த பாவியிடத்தில் கப்பம் கட்டினால் பாவம் வரும். ஆகையால் பட்டத்துமகன் வந்து இச்சிம்மாசனம் ஏரிய பின் யாவையும் சேர்த்து கட்டுவேன் என்றுசீரி,

அங்குரை மன்னர்தம்மை அழைத்துய ரயோத்திநாட்டில்
பொங்கிடு மகுடந்தாங்க புண்ணிய னடையும்மட்டும்
இங்குநீ ரடைந்து இந்த இரைவனை வணங்கொணாது
தங்கிடு மவர்கள்நாடு தனித்தனி குரைகளன்றி. 231

வ—ம்:-மற்றுமுள்ள மன்னர்களைகூவி யென்போல் நீங்களும் புண்ணியனாகிய துருவன்வந்து மகுடந்தாங்கி அரசனாகும்வரை இந்த நாட்டுக்கு வந்து இவ்வரசனை வணங்கவேண்டாம். அவரவர் ராஜ்ஜியத்தில் யாதொரு குறையின்றி வாழுங்கள். அதற்கு நாமும் உதவியாய் யிருப்போம்.

என்றவர் தம்மைபோக்கி யெத்திசை முற்றுந்தேடி
இன்றந்த மகவைகூட்டி இலங்கைநா டடைந்தீரென்ன
கன்றிடா வரக்கரோடு கவியினை பலவாரேவி
சென்றனன் வாலிபெற்ற சிருவனைக் கூடிபின்னே. 232

வ—ம்:- என்று பல உபசாரங்கள்கூறி அவரவர் ராஜ்ஜியம் போகும்படி போக்கியும், அனேகம் பெருமையும் பெலமும் தங்கிய வானரங்களையும், அரக்கர்களையும் அழைத்து நீங்கள் பல கூட்டமாய்பிரிந்து பலதிசையிலும்போய் எந்தயிடத்தில் அல்லது எந்த உலகத்தில் துருவன் இருந்தாலும் அழைத்துக்கொண்டு லங்கைவந்து சேருங்களென்று அனுப்பி, வாலிமகனைக் கூட்டிக்கொண்டு மற்றவர்களுள தன் ராஜ்ஜியம் நோக்கி நடந்தான். பின்னும்,

மன்னவை யிருந்தோர்யாரு வளர்பதி நோக்கிமீள
அன்னவை யுணர்ந்துயெங்கு மரசனை நோக்கிப்பின்னும்
முன்னுரை யவந்திவள்ளல் மொழியும்பெண் மோகமுற்றோர்
தன்னிலை யிளக்குமிவ்வார் தலைவனே யுணர்வாயென்ன. 233

வ—ம்:-சபையிலிருந்த வேந்தர்கள் பூராவும் அவரவர் நாடு செல்ல இது உணர்ந்து யெங்கும் அரசனை நோக்கி அவந்திமன்னன் கூருவான். ஹே வேந்தே! பெண்மோகமுற்றவர் கெதி இப்படித்தான் முடியும். இனியாகிலு மிதனையுணருவீர்.

அரிவை யராசைபூண்டு அலைந்தவ ரெனினும்பெற்ற
சிரியவர் கானில்போக செய்பவம் புரிந்தோருண்டோ
மருவலர் முரையோவுற்ற மங்கையு மிருக்கவேறோர்
தெரிவையை மணந்ததேனோ தினகரன் குலத்தில்வந்தோர். 234

வ—ம்:-ஆனால், இதற்குமுன் பெண்ணாசையுற்று பலநிலைந்தாரேனும் தான்பெற்ற மகனை பருவமுறாத இளங்குழந்தையை காட்டிலோட்டிய பாவம் செய்தவர் உம்மையன்றி வேருண்டா? மற்றும் தன்பட்டத்து மனைவியிருக்க வேறுமாதை மணம்செய்வது அரச தர்மமாகுமா? உங்கள் சூரியகுலத்தவர்கள்

மருமணம் புரிந்ததாலே மன்னுயி ரிழந்தவாய்மை
ஒருமதி யிழந்தவேந்தா உரைத்திடக் கேட்டிலாயோ
திருமணம் புரிந்தபின்னே ஜெகமதில் லுனக்குவுற்ற
பெருமணம் யாதோவென்ன பெற்றயர் வகன்றுசற்றே. 235

வ—ம்:-மருமணம் செய்ததால் தசரதன் உயிரிழந்தான் என்ற வாய்மை பெண்மோகத்தில் அழிந்திய வேந்தா கேட்டிலாயா? அன்றி நீ மருமணம்செய்தபின் கண்டபெருமைஎன்ன? எனலும் அரசனடைந்த சோபம்மாறி,

சீரியே யெழுந்தானென்ன செய்தனன் பாவியென்று
மீரிய சோபஞ்சூழ வீழ்ந்தனன் நிலத்தில்நின்ற
கூரிய வில்வேள் தாங்கும் கொற்றவன் தாங்கிக்கூறும்
ஏரிய கவலைமாற்றும் இனிவருங் கருமந்தேரும். 236

வ—ம்:-ஆங்காரத்தோடு எழுந்தான் அறிவிளந்து என் செய்தேன் பாவியென்று நடந்ததை நினைத்து சோபமுற்று பூமியில் வீழ்ந்தான். அவனை அவந்திமன்னன் தாங்கி தேற்றி சோபம் மாற்றி சென்றதை நினையாது இனி வருவதைப்பற்றி யோசிப்பீர்

## உத்தானபாதன் நகர்நீங்கல்.

மன்னவர் சினந்துசென்றார் மதலையு மடவிபோந்தான்
அன்னவ னுடனேவாழ்வு அகன்றதா லதனைமீட்டத்
தன்னுடன் துணைவறின்றி தவவனம் நுழைந்தபாலன்
பின்னுமிங் கடைவானாகில் பேருறும் பெருமைமுன்போல். 237

வ—ம்:-அன்றியும் அரசர்களெல்லாம் சினந்து அவரவர் பதி சென்றார்கள். பாலகன் வனம் போனான். அவனுக்குத் துணைபோனவர் யாருமில்லை நமது வாழ்வும் அவனுடன சென்றது. ஆகையால் அவன் மீண்டு நமது பதி வந்தால்தான் செல்வம் முன்போலோங்கும்.

செல்லுவோம் வருதியென்ன திகைத்துமன் சினந்துபொங்கி
வல்வினை யடையச்செய்த மாபெரும் பாவிதன்னை
கொல்லுவேன் வாழாலென்ன குதித்தரி யணையைநோக்க
நல்வினை யவளைக்காணான் நடந்துவா ளுருவஅன்று. 238

வ—ம்:-ஆகையால் அரசே! நாம் அவனைத்தேடி கானகம் செல்வோம் வாருமென்றுகூறவும் இவைகேட்டஅரசன் மனச்சோபம் மாறி தாங்கமுடியாத கோபம்பொங்கி எனக்கு இந்த அவமானம் வரும்படிசெய்த பாவியாகிய சுருசியைக் கொல்வேன் யென்று வாளுருவி ஆசனம்விட்டு கீழேகுதித்து சிம்மாதனத்தைநோக்க அவளைக்காணாது அந்தப்புரத்தை நாடும் வேந்தனை,

அருகுரு மமைச்சரேங்க அவந்திமன் தடுத்துநின்று
வரும்வினை யுன்னாலன்றி மாதரா லுளதோவீணாய்
பொருமவன் றிரும்பியிந்த பூவையின் செயலுணர்ந்தால்
வெருவுரு மென்னவந்த வேந்தனு மமைச்சைசகூவி. 239

வ—ம்:- கண்டு சூளயிருந்த மந்திரிமாரெல்லாம் கண்கலங்க இதையுணர்ந்த அவந்திமன்னன் அரசனைத்தடுத்து, வேந்தே! இவ்வினைக்கெல்லாம் காரணம் நீரன்றி கன்னியரால் வந்ததில்லை அன்றியும் அரிவிலுயர்ந்து வனத்தில்சென்ற உமதுபாலன் மீண்டு வந்து இதையுணர்ந்தால் கலங்குவான் கோபத்தையடக்குமென்னவும் அரசன் தன் வாளையுரையிலிட்டு மந்திரியைக்கூவி

கன்னியை மகவையிந்தக் கணத்திடை தாள்கள்பூட்டி
பின்னரும் சிறையில்சேர்த்து பெரும்புவி கார்த்துயென்போல்
இன்னக ரிருப்பாய்கானில் யேகியித் தோளனோடு
மன்னிய மகவைகூட்டி வருவேனிவ் வயோத்திநாட்டில். 240

வ—ம்:-ஹே மந்திரி! நான் கூரும்வாய்மை தவராதே நான் வரும்வரை சண்டாளியான சுருசியையும், அவள் மக்களையும் சிரையிலிட்டு மற்றுள்ளவர்க்கு யாதொரு துன்பமும் அணுகாது என்போலிருந்து இந்த நாட்டை பாதுகார்ப்பாய் என் மைத்துனன் சூரவர்மனுடன்கூடி கானகமேவி பட்டத்துக்குரிய மகனை அழைத்துக்கொண்டுதான் நமது நாட்டுக்கு வருவேன்.

தடுத்திடா திருப்பாயென்ன சாற்றியத் தோளரோடு
விடுத்தனன் மாடங்கூடம் வீதிகள் பலவுந்தாண்டி
அடுத்தனன் சுநீதிவாயல் அவளுரை கோலந்தம்மை
எடுத்துளார் வுரைக்கவங்கு இரைவனுற் றலரிவீழ்ந்தான். 241

வ—ம்:-ஆகையால் நீ தடுத்திடாது இருப்பாயென்று கூரி சபா மண்டபம்விட்டு வெளியேரி மைத்துனனுடன்பலவீதிகள்தாண்டி சுநீதியரண்மனை செல்லவும் தோழியர்கண்டு வணங்கி, அவள் சோபமுற்று கிடப்பதைக்கூரி யதற்குக்காரணம்,தன்மகன் வனம் போனதுதான் என்றுகூற வேந்தனலரி பூமியில்வீழ்ந்தான்.

மைத்துனன் செயலையந்த மைத்துன னடைந்துதேற்ற
புத்திர சோகந்தன்னில் பொன்றினள் போலேயுற்ற
பத்தினி தம்மைத்தேற்றி பாலனும் பிரிந்தானென்றே
கத்தின னுலகுவேந்தன் கலங்கினன் றேளனங்கே 242

வ—ம்:-மைத்துனர் சோபமுற்று வீழ்ந்ததை மைத்துனன் கண்டு அவரையெடுத்துதேற்ற தேரி அவருடன் அரண்மனையுள் சென்று புத்திரசோபத்தால் உயிரற்றுள்போல் வீழ்ந்துகிடக்கும் உத்தமியைக்கண்டு அரசனவளை வாரித்தூக்கி மயக்கம்மாற்றி பெண்ணே நமது பாலனைப் பிரிந்தனையோவென்று கத்தியலரினன். அவந்தியரசனும் யேங்கி விழிநீர் பெருகினன்.

கன்னியு மெழுந்துதேற்றி காவல னடியைபோற்றி
பின்னிலே வந்துநிற்கும் பெருந்துணை தன்னைநோக்கி
உன்னுரை வாழ்வுசெல்வம் உரியவர் சுகமோகூரும்
என்னவே தொளுதாள்பின்னும் யேங்கின னவந்திமன்னன். 243

வ—ம்:-கர்ப்புடைய உத்தமியான சுநீதிமன்னனை கண்டவுடன் தன் கவலைமாறி நடந்தவையுரைத்து அரசரைத்தேற்றி அரசர் பின்னிர்க்கும் அண்ணனைக்கண்டு போற்றி, அண்ணா! உன் நகரும் நமது சுற்றத்தாரும் குடிகளும் க்ஷேமமா? கூறும் என்னக்கேட்டு அவந்திமன்னன் யேங்கி, அம்மா! நான் உங்களை இந்த நிலைமையில் கண்டு என் க்ஷேமம்கூரவா பிரந்தேன், யென்று கலங்கவும்

பின்னவர் றெருவார்தேரி பெருவன மடைந்தபாலன்
தன்னையே யரிவோமென்று தனிமுடி பணிகளாடை
யன்னவ றகற்றியங்கே அணிமரை வுரியும்சூட
தன்னுரு தோளனவ்வார் தானுறத் தடுத்துவேந்தன். 244

வ—ம்:-சுநீதி அவரைநோக்கி அண்ணா! வருவதுதானே வரும் நீர் கலங்காதீர். யெதுவரினும் அந்த நாராயணன் நம்மை கைவிடார் என்னும் மாதையும். மைத்துனரையும் நோக்கி வனஞ்சென்ற மகனைக்காண வருவீரென்றுகூறித் தன் அரசகோலத்தை மாற்றி மரவுரி தரித்தார். இவையுணர்ந்து அவந்திவேந்தரும் அக்கோலங்கொள்ள வேந்தர்தடுத்து,

சென்றுநின் றுணையோடு செளிப்புர அவந்திநாட்டில்
கன்றிடா திருப்பாயென்னுங் காவலன் றன்னைபோற்றி
நன்றாரும் மகவைக்காண நான்புவி தரிக்கேனத்தால்
இன்றுடன் வருவேன்பின்னே இவைமருக் காதீர்வேந்தே. 245

வ—ம்:-கூறும் ஹே மைத்துனா! நீ யிக்கோலம் கொள்ளாதீர் உன் சேனையுடன் அவந்திநாடு சென்று வாளுவாய் பாலகனைக் கண்டு அழைத்துவந்து நாடு சேர்ந்தவுடன் உனக்கு தெரிவிப்போம் என்னக்கேட்டு அவர் அருமைதங்கிய பாலகனாகிய துருவனைக்காணாது என் நாட்டில் நான்போய் தரிக்கேன் ஆகையால் உமது பின் வருவேன் என்னை தடுக்காதீர் என்று போற்றவும்,

இப்படி யவனுங்கூற இசைந்துமன் றேவியோடும்
மைப்படி கானம்நோக்கி வந்தனன் குடிகளேங்க
அப்படி அயோத்திநாட்டில் அடல்வனம் ராமன்சென்ற
தெப்படி யிருந்ததன்னாள் இருந்தவா றிருந்தவன்றே. 246

வ—ம்:-மன்னர் இசைந்து தன் தேவியுடன் முகில்கள் உலாவும் வனத்தைநோக்கி புறப்பட்டான் இவையுணர்ந்த குடிகள் மழைமுகமற்ற பயிர்போல்வாட அன்று ராமபிரான் வனம்போக அயோத்தி சிறப்பில்லாதிருந்த நிலமையை இன்றும் மடைந்தது.

இச்செய லிருக்கவேந்தன் இளையபெண் டுரைக்கக்கேட்டு
பட்சமாய் நடந்துசென்ற பாவைதன் கொழுனனோடு
மிச்சமா யுரைத்தாளத்தை விடமுருக் கோண்டோன்கேட்டு
அச்சமற் றலவும்வீரர் அனந்தம்பேர் அழைத்துக்கூறும். 247

வ—ம்:-இதுவிருக்க வேந்தரின்பின் மனைவியான சுருசியின் தூண்டுதலால் சென்ற சேனைவீரன் மனைவி அரசி தந்த செல்வத்தையும் காட்டி அவளுரைத்தயாவும் விபரமாக தன்னுயகனிடம் கூறவும் விஷமே யுருக்கொண்டதென்னக் கூரும் சேனுபதி கானகத்தை நோக்கி அனேக வீரருடன் சென்றான்.

காட்டிடை யடைந்துவேந்தன் கான்முளை வரவேகண்டால்
மாட்டிநீ ரளிப்பீராவி மதித்துவேர் நினைத்திடாமல்
தாட்டிகம் படைத்தநீங்கள் தனித்தனி பிரிவீரென்னக்
காட்டிலோர் தானைமுற்றும் கண்டிடா தலைந்ததன்றே. 248

வ—ம்:-சென்று சேனைகளைக்கூவி நீங்கள் எவ்வித பயம், பட்சம் அன்றி துருவனைக்கண்டால் அவரவர் ஆயுதத்தால் குத்தி கொல்லுவீர்கள். தனித்தனியாய் பிரிந்து பல திசையும் பாருங்களென்று கூறி தானும் ஆயுதபாணியாய் அலைந்து தேடினன் ஆனால் இந்த பாவிகள் கண்ணில் அவனைக்கண்டிலர்.

திசைதிசை யிவர்கள்சென்று தேடினர் சேனைநாதன்
அசைந்தசைந் தலைந்தான்கானில் அரசன்சே யுளனோவென்று
வசைபெரு மவர்களுருபம் மாற்றினர் பலவாறுகவ்
விசைந்தவ ரலைந்தகாலம் விளங்கிடு மிலங்கைநாட்டு. 249

வ—ம்:-மருபடியும் பொருளாசையால் பலதிசையும் வீரர்கள் தேட சேனாதிபதி கஷ்டத்தையுணராது அரசபுத்திரனுளனோவென்று ஆய்ந்து தன்னுருக்களை பலவிதமாகமாற்றி யலையுங்கால் இலங்கைநகரின்

மன்னனி னேவல்பூண்டு வந்தவா ளரக்கரோடும்
பின்னிய கவிக்கணங்கள் பெரும்வரை பலதுதாண்டி
அன்னவ ரலைந்தாரோர்பால் அரசனும் மனைவியோடுந்
தன்னுயிர் தோளன்தேற்ற தருவனம் பலதுதேடி. 250

வ—ம்:-அரசரான விபூஷணர் ஏவல்பெற்று துருவனைத்தேடி வனத்தில்வந்த அரக்கரும், வானரர்களும் ஒருபக்கம் அலைந்தார்கள் அயோத்தியாபுரி வேந்தரும் அவர்மனைவியாரும் அவந்தி மன்னரால் தேற்றத்தேரி பாலகனையவர்கள் ஒருபக்கம் பல வனந் தேடினர்கள்.

அலைந்தன றந்தநாளில் லவந்திமன் தானைவீரர்
மலைந்தங்கு நடந்தபாவும் மதித்தவர் கவலைபூண்டு
தலைந்தனைக் கடந்து அன்னோர் தன்னக றடைவானெண்ணி
கலைந்திடா தொன்றாகூடி கடந்தனர் பலதுதேயம். 251

வ—ம்:-இவர்கள் இப்படியிருக்க அவந்திமன்னர்பின் அயோத்திவந்த சேனைவீரர்கவலைபூண்டு அரசரை பிரிந்ததுயறால் வருந்திதங்கள் நகரை நாடி பலநகர் கடந்து சென்றார்கள்.

இன்னவர் செயல்கரிவ்வார் ரிருந்திட உருக்கள்மாரி
மன்னனின் மகனைவாட்ட வனமதி லலைந்தவீரர்
தன்னையே தருக்கள்தோறுந் தங்குவா னரங்கள்கண்டு
இன்னவர் யாரோவென்று யெண்ணியங் கயர்த்தகாலை. 252

வ—ம்:-இவர்கள் செயலிருக்க அயோத்தியிலிருந்து தன்னுருமாரி பாலனை கொலைசெய்யவந்த களவர்களை துருவனைதேடி காணாது அலுத்து அவ்வனத்தில் மரங்களிலிருந்த வானரங்கள் கண்டு இவர்கள் யாரோவென்று சந்தேகித்தகாலை,

துருபனைக் கண்டால்வாளால் துணிப்பேனென் றுண்மைபேசி
வரும்பல கள்வர்தம்மை வானரக் குமுதன்கண்டு
தருவுரும் கவிகட்கெல்லாம் சாற்றியிக் கொடியார்தம்மை
பெருவரை கடருமுன்னாய் பிடித்துயிர் முடிப்பதோடு. 253

வ—ம்:- அந்த பாதகர்கள் ஒருவரோடொருவர் துருவனைக் கண்டால் வாளால்வதைப்போமென்று கூரிவரும் திருடர்களையும் அவர்கள் வாய்மொளியுங்கண்ட குமுதன் யென்னும் கவிதலைவன் வானரங்களைக்கூவி இத்திருடர்கள் பாலனை வதைக்கவந்தவராய்இருக்கின்றார்கள் ஆகையாலிவர்களை இந்தமலைதாண்டுமுன் ஒருவரையும் விடாது அளிப்பீர்கள்.

தருவனந் துருபனன்றி தளர்ந்துடல் தவத்தில்மிக்க
உருவுளோ ரிருக்கமற்ற உடலுருந் தோற்றந்தம்மை
பருவரை யிமயசாரல் பார்த்துமீண் டதனினூடே
வருவதை மாய்த்துகாவல் வனமெலா மிருந்துநீங்கள். 254

வ—ம்:-இந்த வனத்தில் துருவனன்றி மற்ற தவக்கோலத்தவர் உடல் மெலிந்தாரன்றி மற்றவர்களை நன்கு சோதனைசெய்து

அயோத்திமுதல் ஹிமாசலம்வரை பிரிந்து பாலனுக்கு வேரு கெடுதிகள் யாரும் செய்யாமல் கார்ப்பீர்கள்.

சிலையெடுத் தவுணருரை சேதித்தோன் மரபில்வந்து
கலையுணர்ந் தாரும்பொன்றும் காளையை கண்டோரிங்கே
மலைவுறு தளைத்துவாரும் வனமிதி லிருப்பேன் கார்த்து
துலைதுலை நடப்பீரென்னச் சூழ்ந்ததக் கயவர்தம்மை, 255

வ—ம்:-கோதண்டம் என்னும் வில்லெடுத்து அரக்கரை அழித்த ஸ்ரீ ராமபிரான் மரபில் வந்த பாலனைக்கண்டால் இங்கு அளைத்துவாருங்கள் நான் இதேயிடத்திலிருந்து காவல் செய்கிறேன். பலதிசையாய்பிரிந்து சூழ்ந்து அவர்களை வளைப்பீரென்ன அவ்விதமே வானரங்கள் சுற்றிலும் வளைத்து

வரையெலாங் கலங்கக்கூவும் வானரத் தோசையங்கு
திரையொலி யென்ன ஆர்ப்ப திசைதிசைத் தருக்கவர்ந்து
அரையென அடித்துக்கள்வர் யாரையு மொருங்குசேர
தரையினில் வீழ்த்தியன்னோர் தசைபல திசையில்சிந்த. 256

வ—ம்:-இடும் கர்ஜனையால் மலையெலாம் செவிடுற, திசை திசையாய் இருக்கும் மரங்களைப்பிடுங்கி எடுத்து அடி. அடியென்று அதட்டி அடித்தலால் அவ்வடி தாங்காது அவருடல் முரிந்து மாமிசத்துண்டங்கள் பல திசையில் சிந்த,

தானைகா வலனைமாட்டித் தரையெலா முருட்டித்தேய்த்து
வானரம் பலவார்வந்த வம்பரை யெல்லாமாய்த்து
கானகம் முழுதுஞ்சுற்றி கரடிவண் புலிகள்யாழி
ஆனைகள் முதலாயுள்ள அடவிவாள் மிருகம்யாவும். 257

வ—ம்:-சேனாதிபதியை பிடித்து நிலத்திலடித்து மிதித்து தேய்த்து கொன்று வானரங்கள் கூடவந்த வம்பர்கள் ஒருவரையும் தப்பவிடாது கொன்று மருபடியும் அவ்வனத்திலுள்ள கரடி, புலி, யானை, சிம்மம், பன்றி, ஓநாய் முதலான மிருகங்களையும் தேடி

கொன்றனக் கவிக்கணங்கள் கூடியூர் வனங்கள்முற்றும்
அன்றவை யளித்துவேடர் ஆரையு மொருங்கேதேய்த்து
சென்றது யிமயசாறல் தென்திசை முழுதும்சுற்றி
நின்றது யெதிர்பாறன்றி நீள்வன மொருங்கேதேடி 258

வ—ம்:-கொன்ற வானரங்கள் பாம்பு, தேள், பூரான் முதலான விஷஜெந்துக்களையுங்கொன்று ஹிமாசலம்சென்று அதன் தென் திசை முற்றும்சுத்தி தங்களை யெதிர்பவரன்றி பலதிசையுந்தேடி னார்கள்.

துருபனுக் கின்னல்செய்வோர் துஞ்சுவார் மீளாரென்ன
பருவரை தோருங்கூறி பலதிசை யரக்கர்சூள
வரும்வினை யவனையன்றி மாற்றவா ருளரோகானில்
சிருவனுக் குதவிசெய்யத் தேடியு மவனைக்காணார். 259

வ—ம்:-மற்றுமொரு பக்கம் விபூஷணால் யேவப்பட்ட அரக்கர்கள் துருவனுக்கு இந்த வனத்தில் யாரேனும் இடஞ்சல் செய்தால் அவர்களை வதைப்போமென்றுகூறி அலைந்தார்கள். ஆனால் வரும்வினையை எம்பிரானன்றி மாற்றுவாருண்டோ பாலனுக்கு உதவிசெய்ய தேடியவர்கள் கண்டதில்லை.

அரக்கரும் கவியினோடு அம்பிகை யுதித்தகுன்றும்
சிரக்கவே மேருஞ்சென்று சேர்ந்தங்கு மரியாருகி
அரக்கன்முன் னெடுத்தகுன்றம் அடைந்ததில் காணாதேங்கி
சிரக்கவே வுத்திரகண்டம் சென்றனர் திசைதிசையாய். 260

வ—ம்:-ராக்ஷதர்களும், வானரங்களும் ஹிமாசலம் முதல் மகா மேருவரையுந்தேடினார்கள். அதில்சிலவானரம் வேகமாய்சென்று முன் ராவணனால் பேர்க்கப்பட்ட கயிலாயமலையையுங்கண்டு தேடி துருவனைக்காணாது, அப்பால் உத்தரகுரு கண்டத்தில் திசை திசையாய் பிரிந்து தேடினார்கள்.

அஞ்சினர் மகவையெண்ணி ஆதவ னொளிபடாது
மிஞ்சுந்தா வரத்தினோடு விளங்குமேள் வகையுமற்று
மஞ்சுக ளுலவநீரும் வாரிதான் கசிந்தவண்ணம்
மிஞ்சிடும் வனத்தைகண்டு விளம்பியே ராமனுமம். 261

வ—ம்:-அரக்கரும் வானரர்களும் ஒன்றுகூடி பின் உத்தரகுரு கண்டத்தில் இருண்டவனத்தைக்கண்டு துருவனைக்காணாது பயந்தனர். பின்தேரி சிலதூரம்போக அங்கே சூரியனொளிபடாது மஞ்சுபடிந்து தாவரமுதல் யெழுவகை தோற்றத்தில் யெதுவும்

மற்று சமுத்திரநீர் கசிவென்னும் வண்ணம் நீர்ஊத்துப் பெருக்கு ரும் இருண்ட வனத்துள் நுழைந்து பயந்து ராமநாமமோதி,

தேடினா தன்றியந்தச் சிருவனை யரியார்கண்ணுல்
ஆடியே யளகைபுக்கி அமரர்கோன் றேயம்சென்று
தேடியே சத்தியலோகம் தென்றிசை நமன்றன்நாடும்
கூடியுந் தணித்துமந்தக் குரங்கினம் மலைந்ததன்றி. 262

வ—ம்:-தேடியலைந்துங்காணுமல் பின் குபேரனுடைய நாட்டில் சென்று அந்நகர் முற்றுந்தேடி காணுமல் அமராபதிசென்று அங்கும் அரியாமல், தென்திசை நமன் பதியிலும், சத்தியலோகத்திலும் சென்று தேடி காணுமல் கூடிய குரங்கினம் பிரிந்து பல திசைதேடியும் அலைந்ததன்றி பலன் பெற்றதில்லை

அரக்கர்விண் ணலைந்துதேடி அலுத்தனர் பிலங்கள்புக்கி
சிரக்கும் பாதாளங்கண்டு திரிகியே யுலகந்தன்னில்
உரக்குங்கா ணுருமற்றும் முயரும்மன் னவர்கள்வாளும்
சிரக்கும்நன் ஞடுமுற்றும் சென்றலுத் தவர்கள்கூட்டம். 263

வ-ம்:-அரக்கர் பிரிந்து ககனமார்க்கமாய் மண்டலந்தோறும் தேடியும், பாதாளலோகம் முற்றும் ஓடியுங் காணுமல் நாட்டில்வந்து காடு, மேடு, காணுந முதலான இடத்தில் நாடியும் மன்னர்கள் இருக்கும் ராஜ்ஜியங்கள்தோறும் சென்று தேடியும் அலுத்த தன்றி அரிந்தாரில்லை,

திரையன்றி யுலகமுற்றுந் தேடினே மரிந்தோமில்லை
குரையுள்ள வாரிமுற்றும் குதித்தினிப் பார்ப்போமென்ன
இரையவன் ராமன்பாதம் இராக்கதர் நினைந்துகூவி
தரையினில் பிரிந்துகூட்டந் தன்கடல் குளிந்தாறன்றி. 264

வ—ம்:-இப்படி அரக்கர் ஒன்றுகூடி சமுத்திரமன்றி மற்றுலக மெல்லாம் தேடிவிட்டோம் இனி பாக்கியான சமுத்திரத்தையும் பார்ப்போமென்று சமுத்திரல்வந்து ராமநாமமோதி பல திசையாய் பிரிந்து சமுத்திரத்தில் குதித்தார்கள்.

வாரிநீ ருளங்கண்டார் வரைகண்டா றங்கேயோர்பால்
காரிருள் சூளக்கண்டார் கதிரவன் ளொளியுங்கண்டார்
யேரிய வனமும்கண்டார் இயல்தரு பலதுங்கண்டார்
சாரியாம் மிருகங்கண்டார் தங்குழேர் வணங்கள்கண்டார். 265

வ—ம்:-அவ்விதம் குதித்த அரக்கர்கள் சமுத்திரத்தின் ஆழம் தெரிந்து அங்கேவுள்ள பூமியில் ஒருபக்கம் இருளாகவும் மருபக்கம்சூரியன் பிரகாசமும் தருக்கள் சூழ்ந்த வனமும் நாட்டில்வாழும் மிருகம்போல் அந்த வனத்திலும் அனேகஜாதி துஷ்ட மிருகங்களையும் பாம்பு முதல் எரும்புவரையுள்ள பல வேரு ஊர்வனத்தையும் புழுக்களையும் கண்டார்கள் இதுவன்றி

திரியமேல் மச்சங்கண்டார் செய்குகை பலதுங்கண்டார்
அரியநல் பவளம்முத்து அங்குராக் கண்டார் தங்கம்
பெரியநல் மணிகளீன்று பெருமைகொள் வரையுங்கண்டார்
திரியும்நீர் சுளல்களோட்டம் தெரிந்திடக்கண்டாரங்கே. 266

வ—ம்:- நீர்மட்டத்தின் மேல்பாகத்தில் அனேக மீன்களையும் புதிதாகவும் பழையதாகவுமுள்ள அனேகம் குகைகளையும் அன்றி முத்துக்களும் அவையீன்ற சிப்பிகளும், தங்கமலைகளும் ரத்னங்களை கக்கும் பெருமலையும், பவளக்கொடியையும், நீர்சுழியும் அதின் ஓட்டமும் தனித்தனி கண்டார்கள் அங்கே

மாந்தரைக் கண்டார்நாட்டில் வாள்பவர் தனக்கிறட்டி
சேர்ந்திடும் திடமுந்தேகம் செளிப்புர வாழ்வோறங்கு
சார்ந்திடுங் கனிகாயுண்டு தங்கிடும் குகைகள்தோரும்
ஏந்தலின் மகனைவதேடி இளைத்தனர் றவுணர்தானே. 267

வ—ம்:-கூட்டங்கூட்டமாய்கூடி குகையில் வசிக்கும் அனேக மானிடரைக் கண்டார்கள், அவர்கள் தேகபலமுடையவர்களாகவும் நம்நாட்டு மனிதரைப் பார்க்கிலும் இரண்டுபங்கு உயரமானவர்களாயும் பலவேரு தோற்றமுடையவர்களாகவும் இருப்பதை பார்த்து ஒவ்வொரு இடங்களிலும் கவலையோடுதேடி துருவனைக் காணாமல் அரக்கர்கள் இளைத்தார்கள்.

பின்னவர் பூமிவந்து பிரிந்ததோ ரிடத்தில்கூடி
மன்னவன் மகனைக்காண வழியிலை இலங்கைசென்றால்
அன்னவன் சினந்துசீரும் ஆகையா லடவிதன்னில்
பின்னவ னடையும்மட்டும் பெருமைகொள் ளயோத்திமூதூர் 268

வ—ம்:-அப்பால் அவர்கள் சமுத்திரம்விட்டு கரையேரி தாங்கள் பிரிந்தயிடத்தில் ஒன்றுகூடிகலங்கி பாலகனைக்காணாமல் நாமிலங்கைசென்றால் நமது அரசர் கோபங்கொள்வார். ஆகையால் நாம் மருபடியும்வனம்சென்று துருவன் அயோத்தியாபுரி வந்தானென்றசொல் கேட்கும்வரையும்,

வந்துகோ தண்டமேந்தி வானவர் குதவிசெய்தோன்
சிந்தனை கருத்,தில்பூண்டு செய்தவம் புரிவோமென்ன
அந்தவற கன்றுபோந்து அடவியில் பல்வார்தங்கி
எந்தையே ராமாவென்று இசைத்தருந் தவத்தில்நின்றார். 269

வ—ம்:-கோதண்டம் கையில்தாங்கி தேவர்குதவிசெய்தோனை கருத்தில்யெண்ணி தவம்புரிவோமென்று தீர்மானித்து அவ்விதமே வனம்வந்து பலதிசையாக பிரிந்து தனித்தனியிருந்து என்னப்பனே ராமாவென்றுகூவி அருந்தவத்தில் நின்றார்கள்.

## அவந்தி,நாட்டின் வரலாறு.

அங்கவ ரிருக்கப்பின்னே அவந்திநா டுடையமன்னன்
தங்கையோ டுதவிமன்னுந் தான்வர மருகன்றம்மை
அங்கவன் தேடச்சென்ற அற்றைநா ளவன்றன்னாட்டு
மங்கிடா வாழ்வுமற்ற வளமையுமுரைக்கில் மேண்மை. 270

வ—ம்:-இது இவ்வாறிருக்க அவந்திநாட்டு வேந்தன் தங்கையும் அவள் நாதனும் கூடவர தனது அன்பான மருமகனைத் தேடிச்சென்றநாள் மங்காத வாழ்வுடைய அவரின் நாட்டின் மேண்மையை சிலது கூறுவோம் அந்த

நதிவளங் காவுமோங்கி நால்திசை அயில்கள்சூழ
பதியினில் மாடங்கூடம் பான்மதி முகடுந்தாங்க
அதிவள முற்றதென்ன அரிஅரன் கோட்டங்கண்டோர்
றதுவளம் அரிதுகூற அளகைநேர் நிதியுங்கீர்த்தி 271

வ—ம்:-அவந்திநாட்டில் அனேக நதிகளும், நகரைச்சுற்றி நால் திசை அகில்களும், நகரில்பலபாகத்தில் மாடங்களும், கூடங்களும், மேகமண்டலம்உலவ அதிக பலந்தங்கிய விஷ்ணு ஈசன் இவர்கள் கோவிலைக் கண்டவர்கள் அதன் வளத்தைக்கூற அரிது, அதுபோல் சிறப்புவோங்கிய குபேறநாட்டிலும் இல்லை யெண்ணும்படியும் செல்வத்தில் அப்பதியை நிகர்த்து.

தாங்கிடுஞ் சங்கினங்கள் தவளும்நீர் பொய்கைமுத்து
பாங்குர விளையுங்கன்னல் பலதிசை மள்ளர்கூட்டி
ஆங்குசெய் சென்னலோங்கும் அரசனை தெய்வமென்னத்
தாங்குவார் குடிகளெல்லா தனித்தனி வாழ்வுமோங்கி. 272

வ—ம்:- சங்கினம்தவளும் பொய்கையில் முத்துகளின் பிரகாசமும், கரும்பு சென்நெல் முதலான விளைவோங்கி மள்ளர் சிறப்பாக வாளுவதால் அந்நகர் வளமும் கீர்த்தியும்பெற்று அரசரே தெய்வமென்று துதித்து அங்குள்ள குடிகள் செல்வந்தர்களாக வாழ்ந்தார்கள்.

வீதிகள் பலதைநோக்கில் விண்ணவர் கதிபன்நாடு
ஈதென அயிர்க்கும்யாரும் இருந்திடும் மகளீர்கற்பும்
ஓதிட லரிதுஅந்த உயர்திரு மகள்தான்வைகும்
ஆதலால் அமரர்நாடும் அதன்நிக றல்லவென்றூர். 273

வ—ம்:- அந்நகர் வீதிகளை நோக்கில் தெய்வலோகமோவென்று எண்ணும்படியும், அங்குள்ள மாதர்கள் கற்புநிலையும், அவர்கள் அழகையும் கூருதல்அரிது. அந்நகரில் சதாகாலம் லட்சுமிவாசம் செய்வதால் அதைக்கண்டவர்கள் அமராபதியும் இதற்கிணையாகாது என்று கூறினர்கள்.

சத்தியந் தவறிடாது தரணியாள் முரமையாலும்
மூத்திய மாரிதிங்கள் மூன்றெனப் பெய்யமற்றும்
ஓத்துவா லயங்கள்பூசை உயர்முறை தவறுவண்ணம்
நித்தமும் நடக்குமந்த நீள்நகர் பெருமைமிக்க. 274

வ—ம்:-அரசர் சத்தியமுரையாய் அரசுபுரிவதாலும் மாதம் மூன்றுமாரி பெய்தும், தெய்வஆலயபிரார்த்தனைகள் விதிமுறைப்படி நித்தமும் தவராது நடைபெறவும் அந்நகரடைந்த பெருமையானது அழவிடமுடியாததாயிருந்தது.

அன்னச் சத்திரம்பலது அன்னகருளதுவேந்தன்
தன்னருஞ் செயலோயார்க்குந் தந்தைபோ லமைந்தவீரன்
மன்னர்கள் தொழுதுபோற்றும் மதிகுல மதனில்தோன்றி
அன்னவன் மகுடம்பூண்டு அடல்வடமதுரைநாட்டு. 275

வ—ம்:-அதுவன்றி வளிப்போக்கருக்கும் எழியவருக்கும் வேண்டி பல அன்னச்சத்திரங்களும், கட்டிய அரசர் செயலோ குடிகளுக்கு தகப்பனைப்போல் அன்புடையவர். இவர் ஐம்பத்து ஐந்து தேச ராஜர் வணங்கும் மண்டலாதிபர். சந்திரகுலத்தில் பிரந்தவர். இவ்வரசர் மகுடம்சூடி வடமதுரை நாட்டு

வேந்துவின் மகளைவெட்டு விளங்குநாள் துணைவிநாட்டு
ஏந்தலின் திரைதான்கட்ட யேகினான் குரித்தவன்று
சேந்திடா திருந்ததாலே திகைத்தவ னமைச்சனேங்கி
வேந்தனைக் கண்டுமீண்டு விளம்பெனத் தூதுபோக்கி. 276

வ—ம்:-வேந்தன்மகளை மணம்புரிந்து தெய்வத்தண்மை வாய்ந்த ஒரு பெண் மகவின்று வாழ்ந்தவர் வாளும்நாளில் தான் தங்கையின் ராஜ்ஜியத்துக்கு கப்பங்கட்டச்சென்றவர் திரும்பி வாராதிருப்பதால் அங்குள்ளமந்திரியேங்கி அருகிருந்த ஒருவீரனை அயோத்தியாபுரிசென்று அரசரைக்கண்டு வருவாயென அனுப்பி,

இருந்தனன் அரிவில்மிக்கோன் இவன்பெரும் நிலமைகண்டு
பொருந்திய மன்னருற்ற புரமெலா மளைத்தாரேனும்
அருந்தவ மன்னன்தொண்டு யான்புரிந் தளிவேனென்று
இருந்தவன் கலங்கிநின்றான் இரைவனை தினமுமெண்ணி. 277

வ—ம்:-இருந்தவனாகிய மந்திரி அரிவிலுயர்ந்தவன். ஆகையால் அவரை அனேகநாட்டு அரசர்கள் தங்களிடம் மந்திரியாய் வரும்படி வேண்டியும் அவந்திமன்னரிடமேதான் வாள்நாள்முற்றும் இருப்பதாய்கூறி இருந்தவர் அரசர் வராததாலேங்கி தினம் வளி பார்த்திருந்தார்.

அரிவுயர்வி வேகபானு அங்குர மன்னன்றேவி
உரியபாங் கியரைநோக்கி உயர்பெரு அமைச்சன்றன்பால்
தெரிநமக் குரியவேந்தன் திரைகொடுத் தயோத்திவிட்டு
குரித்தநாள் மீண்டிடாத குரையென அரிவீரின்றே. 278

வ—ம்:-இவ்வளவு பெருமைபொருந்திய மந்திரியின் நாமம் விவேகபானு என்று கூருவார்கள். இவரிப்படியிருக்க அரசியானவர் தன்மனம்மயங்கி பரங்கியரையழைத்து நீங்கள் விரைவில்

சென்று மந்திரியைக்கண்டு அயோத்திசென்ற நமது வேந்தர் கப்பங்கட்டி ஏன் குறித்தநாளில் வரவில்லை? அதன்காரணம் யெதுவுமுண்டா? என்பதறிந்து வருவாய் யென்னவும்,

என்றிட அதிலோர்சேடி யேகிமன் சபையைபுக்கி
நன்றுரு மமைச்சப்போற்றி நங்கைவாய் மொளியையேத்தி
நின்றனள் ளவனுமேங்கி நிலமிசை விழிநீர்கொட்ட
கன்றிடா நமதுவேந்தன் காரிளை தங்கைநாட்டில். 279

வ—ம்:-உடனே ஒருதோழி வேகமாய்ச்சென்று அரசசபையைநாடி மந்திரியை வணங்கி அரசியார் கூறியதைக்கூற அவர் யேங்கி பூமியைப் பார்த்தவண்ணம் கண்ணில் நீரொழுக அவளறியாததை மாற்றி அவளைநோக்கி நமது அரசர் தங்கையின் நாட்டில்

இருந்தனன் மருவுமுண்டு இளையவள் வேண்டவங்கு
வருந்திலேல் லென்னவோது மன்னனை யழைக்கமுன்னே
பொருந்திய தூதுவிட்டேன் போனவர் கடிதுமீள்வார்
திருந்துமன் னுடனேவென்ன செப்புவீ றன்னைபக்கம். 280

வ—ம்:- சென்று ரொம்பகாலமானதாலும் கப்பங்கட்டியபின் தங்கையின் செல்வத்தைக்கண்டு மகிழ்ந்து அங்கு தங்கி விருந்துண்டு இருக்கிறார். நானும் இன்று தூதாள் அனுப்பியிருக்கிறேன். போனவர்கள் சீக்கிரம் அரசரை அழைத்து வருவார்களென்றும், வேறு விசேஷம் ஒன்றுமில்லையென்றும் அரசியார் கலங்கவேண்டியதில்லை யென்றுங் கூறுவாய்.

அவ்வுரை கேட்டுபாங்கி அரசியை யணுகியம்மா
இவ்வுரை யமைச்சன்விண்டான் என்னவே வுரைத்தாள்முற்றும்
மவ்வுரை கேட்டுமாது அயர்ந்தனள் ளயர்வுபோக்க
செவ்வுரை சேடிமாதர் செப்பிட அருகுதன்னில். 281

வ—ம்:- என்று கூரக்கேட்ட தோளியானவள் அந்தப்புரம் சென்று அரசியைவணங்கி மந்திரிகூறிய விபரம்யாவுங் கூரக்கேட்ட மாதரசி சோபமுற அருகிருந்த பாங்கியர்தேற்ற இவையாவுமுணர்ந்து உடனிருந்த

மன்னவன் ஜென்மந்தோறும் மாபெருந் தவங்கள்செய்தும்
மின்னிய அரங்கள்பல்வார் விளைத்தவை யுருவம்பூண்டு
இன்னிசை வந்ததென்ன இரவியும் மதியும்மொன்ருய்
பின்னியே யுதித்ததென்ன பெருமைசே ராகமங்கள். 282

வ—ம்:-அரசரானவர் ஜென்மாஜென்மங்களில் செய்த தவமும் தர்மமும் ஓர் உருவாய் அமைந்ததென்றும், சூரியனும் சந்திரனும் வேர்உருக்கொண்ட தன்மையாகவும், மேலவர்புகழ் அனேகங்கோடி ஆகமங்கள்,

வந்ததிவ் வுருவமென்ன மாதவ னுந்தியுற்ருேன்
னிந்தாள் கரத்தின்வண்மை இவ்வுல கரியவேண்டித்
தந்ததிவ் வுருவமென்ன சமைந்தபொர் பதுமையென்று
வந்தவ ருரைக்கவந்த மதன்ரதி கலந்துநாட்டில். 283

வ—ம்:-இவ்வுருவாய் வந்ததென்றும் ஸ்ரீமன் நாராயணனுந்தியில் அவதரித்த பிர்மாவானவர் தம் கைவல்லபம் உலகோரரிய இவ்வுருவமைத்ததென்னக் கூரும்படியும் மன்மதனும் ரதிதேவியும் ஒருஉருவாய் கலந்து

ஒருவுரு அமைந்ததென்ன வுமைதா னுரைப்பதன்றி
சிருவுரு அமைந்தவண்ணம் செப்புத லரிதுயார்க்கும்
திருவுநேர் குளிர்ந்தபார்வை தெரிவைய ரெல்லாம்வெட்கும்
குருநகை குமுதவாயாள் கொற்றவர் தினமுமேத்தும். 284

வ—ம்:-உதித்ததென்றும் உவமானங்கூரலாமன்றி அரசியுடனிருந்த சிரு உருவுள்ள இளங்கன்னியின் வணப்பு அமைந்தபடி கூருவது யார்க்குமரிதே. அன்னவள் மகாலட்சுமியைப்போல் குளிர்ந்த பார்வையும்கண்ட மாதர் வெட்கும்வண்ணம் குருநகை தவளும் வதனமும் உலகரசர் தினந்துதிக்கும்

கன்னிகை யவந்திமன்னன் கான்முளை ஆண்டுஐந்து
அன்னவ ளுதித்துநாட்டில் அருந்தவ மிருந்தவாறு
தன்னையே அரிந்தசெல்வி தாய்மொழி கேட்டுச்சீரி
என்னதா னரசியானுப் இத்தரை யாளும்வேந்தர். 285

வ—ம்:-பெருமைபெரும் கன்னிகை அவந்திமன்னன் யேக புத்திரி அவளுதித்து ஐந்து வயதாகிலும் முன் ஜென்மதவத்தால் தன்னிலையுணர்ந்து முக்காலமரிந்து பலகோடி வேதமுதலான ஞானங்களுந் தனக்குத்தானே உணர்ந்து பரந்தாமன் கருணைபெற்ற சிருமி தாயைநோக்கி கோபமுற்று அரசகாரியம் உணராத நீயெப்படி அரசியானுய்.

அஞ்சிடா திருந்துவேர்வேர் அவனியை யாளவைத்த
மிஞ்சிய வேந்தர்குற்ற வெகுமதி யளிக்கசென்றால்
வஞ்சிய ரவர்க்காயேங்கி மயங்கிடி லாவதென்ன
எஞ்சிய மன்னனிட்ட யேவலை புரிந்துவேந்தன். 286

வ—ம்:-சிற்றரசராய் உள்ள பேர்கள் வேற்றுமையன்றி கூடி வாளவைத்திருக்கும் சக்கிரவர்த்தியார்க்கு ஏற்பட்ட கப்பம் கட்டுவதர்க்காகச்சென்ற அரசரைப்பற்றி நீ கவலைப்பட எவ்வித காரணமும் இல்லையே அன்றி சக்கிரவர்த்தியாரிட்ட ஏவல் எது வேனுமிருந்தால் அதை புரிந்து பின் நமது வேந்தன்

வருவன்நன் நகரம்பின்னே மயங்கிட யிதனில்வேரு
சிருமையு மில்லையத்தால் திகைத்திடா திருப்பாயாகில்
அருமறை முதல்வனந்த ஆழியோ னுண்டுயார்க்கும்
கருணையே புரிவான்வேண்டுங் கருத்தினுக் கமைந்தவண்ணம். 287

வ—ம்:- தனது ராஜ்ஜியத்திற்குவந்து சேருவார் நீ கலங்கும் படியான விஷயம் இதில் யாதுமில்லை வீண்கவலையை விட்டுவிட்டு தோழிமார்கள் ஏவல்செய்ய ஸ்ரீமன் நாராயணனை திரிகரண சுத்தியாக நினைந்து அரசர் வரும்வரை பூஜிப்பாயாகில் நீ ஜென்மா ஜென்மங்களில் செய்த பெரு வினையகன்று நற்பதவி அடைவாய் இவைவிடுத்து வீணுய் அரசரை நினைந்து வருந்தினுல் வருகுநாளன்றி வருவரோ.

என்றந்தச் சிருமிகூற ஈன்றவள் மகிழ்ந்துகேட்டு
நன்றுநீ யிவ்வாரெல்லாம் நவின்றிலா யிதனுள்மட்டும்
சென்றவுன் தந்தைகேட்டால் சிந்தையும் மகிழ்வார்மிக்க
என்றுதன் மகவைதாங்கி இருந்தனள் முன்போலாக. 288

வ—ம்:-என்று கூறும் தன் அருமைக்குழந்தையின் இனிய மொழிகேட்ட அரசியார் மகிழ்ந்து, அம்மா! இவ்வளவு அறிவுடன்பேசும் பெருமை எப்பொழுது கற்றாய், உன் தந்தை இதையறிந்தால் மகிழ்ச்சி கொள்வாரென்றுகூறி குழந்தையை அணைத்து தாங்கி முன்போல் வாழ்ந்திருந்தார்கள்.

மங்கள முளங்குமந்த வளநக ரயோத்திநாட்டில்
இங்கிருந் தகன்றதூதர் யெதிர்வருந் தானைகண்டு
அங்கவர் தம்மைகேட்ப அரசனு மடவிசென்று
தங்கையின் மகனைக்கண்டு தன்பதி வருவானென்ன. 289

வ—ம்:-இவையிருக்க அயோத்தியாபுரி நாடிச்சென்ற தூதர் அங்கிருந்து தனதுபதியை நாடிவரும் சேனைகளைக்கண்டு அரசரைக்காணாது யேங்கிவினவலும் அங்கு நடந்தவையாவும் விபரமாய்க் கூறினர்கள்.

உற்றவ ருரைக்கவங்கே வோடியே யதிலோர்தூதன்
கற்றவர் துதிக்குமந்தக் கனம்பெரு மமைச்சன்பாதம்
பற்றியே தொழுதுஅந்த பார்த்திபன் செயல்கள்யாவும்
உற்றவா றுரைத்தான்கேட்டு உருகினன் செயல்மறந்து. 290

வ—ம்:- அது கேட்டவுடன் ஒரு தூதன் வேகமாய் அவந்தி நாடுசென்று கற்றவர்துதிக்கும் மந்திரியைபோற்றி அரசர் வனம் சென்றதும், அயோத்தியில்நடந்த விபரங்கள்யாவும் கூறக்கேட்டு மந்திரி செயல்மறந்து மனமுருகி,

அன்னைநீ யப்பன்நீயே அவந்திநாட் டெல்லைமுற்றும்
உன்னையே நம்பிநின்ற உடலிருந் துயிருமேங்க
அன்னையை மகவைவிந்த அடியேனை மறந்துதேரி
கன்னியாந் துணைவியின்ற காளையை நினைந்துநீரும். 291

வ—ம்:-அலரி ஹே! வேந்தே! எங்களுக்கு தாயும் தகப்பனும் நீயன்றி உண்டோ? நமது நாட்டவர்கள் தங்களைநம்பி உயிர்வாழ தாங்கள் உடலைவிட்டு உயிர்பிரிந்தவாறுபோல் என் தாயையும், அரசுக்குரிய குழந்தையையும், குடிகளையும், அடியேனையும் மறந்து கானகம்நோக்கி தங்கையின் மகனைத்தேடி

எப்படி கானமுற்றீர் இதையனை யரிவாராகில்
ஒப்பிடார் பதியில்வாழ உம்மையான் விடுத்துப்பின்னே
இப்பதி யிருந்துயேவல் யெவர்கினி புரிவேனுவி
தப்பிடில் நீரும்பின்னே தருவன மிருந்துமீண்டால், 292

வ—ம்:-சென்றீர் இதை தாயாகிய அரசியாரரிந்தால் தன்னுயி ரையும் பொருட்படுத்தாரே. அடியேன் இனிஇங்கிருந்து யாரின் ஏவல் செய்வேன் என்னுயிரை விட்டுவிடலாமென்று நினைத்தால் தாங்கள் திரும்பிவந்தபின்

நெரியிளங் தளிந்தானென்று நிகள்திடி லதர்கென் செய்வேன்
அரிவோம்பின் வருவதென்று அரசன்மா மனையில்புக்கி
தெரிவையா மரசன்றேவி சேவடி பணிந்துபோற்றி
உரியவ னயோத்திநாட்டில் உற்றவை யுரைத்தான்முற்றும். 293

வ—ம்:-நீதிமுறையும் என்வார்த்தையுங் கடந்து அடாதகாரியம் செய்தானென்று குரைகூரிலதற்கு என்செய்வேன். ஆகையால் இன்னும் வருவதை அனுபவிப்பேனென்று திடம்பூண்டு அந்தப் புரம்சென்று அரசியாரைப் பணிந்து வேந்தன் அயோத்தியாபுரி சென்றதுமுதல் நடந்தயாவுங்கூற,

கேட்டன ளயர்ந்துவீழ்ந்தாள் கேசவன் செயலோகாட்டில்
தாட்டிக னலையநாட்டில் தரிப்பனோ ஆவியென்று
கூட்டிய விழிநீர்சோருங் கோதையை சேடிமாதர்
தாட்டிக மாகத்தாங்கி தருந்துய றகற்றுங்காலை. 294

வ—ம்:-கேட்ட அரசியானவர் அலரிவீழ்ந்து அரிகரி முகுந்தா நான் முன்செய்த பாவத்தால் வேந்தர் வனத்திலலையவும், நான் இங்கிருந்து ராஜபோகத்துடன் உயிர்வாழ்வேனு என்று ஏங்கி இருவிழியும் நீர்சோறக்கண்ட தோழியர்தேற்ற,

மன்னவன் தேவிசூள வந்தவர் தம்மைச்சீரி
என்னையே தடுத்திடாதீர் இளமகளோடு கானில்
இன்னகர் விடுத்துச்சென்று இரைவனைக் காண்பேனென்று
அன்னவ ளுரைத்தகாலை அமைச்சனு மயங்கிகூறும். 295

வ—ம்:-தேரி தன்னை சூளயிருந்தவர்களை கோபமாய் நோக்கி நீங்கள் யாரும் என்னை தடுக்காதீர்கள்யென் அருமை குழந்தையுடன் வனத்தைநாடிச்சென்று அரசரைக்கண்டு அழைத்து வருவேன் என்றுகூற மந்திரி மயங்கி,

கன்றிடா திருப்பீர்றந்தக் காவலன் றன்னைகானில்
சென்றுநா னளைத்துமீள்வேன் சேடியரோடு நீங்கள்
என்றும்போ லிருப்பீரென்று யெழுந்திடும் மமைச்சன்றம்மை
நின்றிடு மெனத்தடுத்து நிகழ்த்துவா ளரசமாது. 296

வ—ம்:-அரசியைநோக்கி அம்மணி தாங்கள் கவலை கொள்ளாதிருப்பீர்கள். நான் வனம்சென்று அரசரைக்கண்டு அழைத்து வருவேன். அதுவரை தாங்கள் சேடியருடன் எப்போதும்போல் இருப்பீரென்றுகூறி எழுந்த மந்திரியை நில்லென்று அரசியார் தடுத்து கூருவார்.

வேந்தனும் மமைச்சும்நாடு விட்டனர் யென்னமற்றும்
யேந்தல ரரியில்மோசம் யெய்திடு மிருப்பாயத்தால்
சேந்திடும் வனம்போய் மீள்வேன் தெரியென, அவனும்போற்றி
பேந்திட தனித்துநன்றே பெரும்வட மதுரையாளும். 297

வ—ம்:-ஹே! மந்திரி! அாசரும் மந்திரியும் வனஞ்சென்றார்களென்பதை மற்ற பகையரசருணர்ந்தால் நமது ராஜ்ஜியத்தை கைபற்ற எண்ணுவார்கள், ஆகையால் நானே வனஞ்சென்று மீளுவேன் என்று கூரவும், அம்மணி! தாங்கள் தனியாய் செல்வது கூடாது வடமதுராபுரியை ஆளும்

மன்னனை யளைத்துவேண்டில் வருந்துணை யவரினோடு
அன்னையே நடப்பாயென்று அவன்றொழுத வைபோயங்கே
மின்னும்வேல் படைகளோடு விளங்கிடுந் தூதன்றம்மை
யன்னவன் நோக்கி நீபோய் ஆயர்கோன் பதியைக்கண்டு. 298

வ—ம்:-அரசராகிய தங்கள்துணைவரை அழைத்து அவருடன் செல்வீர் என்றுகூறி, அரசியார் சம்மதம்பெற்று சபையடைந்து வேல்முதல் பலபடைகள் தாங்கும் தூதனைநோக்கி, நீ கூடுமானவரை வேகமாய்ச்சென்று வடமதுராபுரி அடைந்து,

வேந்தனை யடைந்துவேந்தன் மேவினர் கானம்அன்னை
சேர்ந்திட நினைந்தாரித்தை செப்பெனக் கடிதுசென்று
பாந்தமா மெதுகுலத்தோன் பதிபுக்கி யவன்றாள்போற்றி
சாந்தவை யுரைத்தான்முற்றுங் தங்கிடா தகன்றதூதன். 299

வ—ம்:-அந்நகர் அரசரைக்கண்டு வணங்கி நமது அரசர் வனம் சென்றதும் அரசியார் அவரை காணசெல்வதாய் இருப்பதையும் கூருவாயென்னக் கேட்ட தூதன் எங்குந்தங்காது விரைந்துசென்று எதுகுலத்து தலைவன் வாழ்நகர்புகுந்து அவரைக் கண்டு வணங்கி மந்திரியுரைத்த விபரம்யாவும் கூறினன்.

கன்றியவ் வேந்தன்மிக்க கலங்கித்தன் னமைச்சைநோக்கி
சென்றுநா னவந்திதேயம் திரும்புவே னிருப்பாயென்று
அன்றவை யரசிக்கோதி அவர்விடை யடைந்துமீண்டு
நின்றதோர் பரியில்தாவி நெடுநகர் கடந்துபின்னே. 300

வ—ம்:-இவை கேட்டவுடன் அவ்வரசன் திடுக்கிட்டெழுந்து மந்திரியைதன்னரசை கார்த்துவரும்படிகூறி அந்தப்புரம்சென்று தன் மனைவிமக்களிடம் அவந்திநாட்டு வரலாருரைத்து விடைபெற்றுக்கொண்டு வாய்வேகமாகச் செல்லும் குதிரையேரி தனது நாட்டைக்கடந்து

வந்தனீர் தினத்திலங்கே மங்கைவாழ் கோவில்புக்கி
சிந்தையும் மயங்கிவாளுந் தெரிவையை கண்டானந்த
சுந்தரி யெழுந்துபோற்றி சொல்லியே யரசன்வண்மை
இந்தவார் துணிந்துநீரும் என்னையோர் பொருட்டாயெண்ணி 301

வ—ம்:-இரவு பகலென்றுபாராது இரண்டுநாளில் அவந்திநாடு வந்து அந்தப்புரம்சென்று, கவலையோடுவாளும் தன் தங்கையை காணவும் அவ்வரசியார் எழுந்து தமையனை வணங்கி என்னரசன் என்னைவிட்டு வனம்போனவிதமாய் என் பொருட்டு தாங்களும்

மக்களை மனையைவிட்டு வந்தனை சரியோவேன்ன
துக்கம்நீ யொழிப்பாயுற்ற தூதர்சொல் வாய்மைகேட்டு
தக்கவை யுறைத்துவன்னோர் தருவிடை யேர்த்துமீண்டேன்
பக்கம்வா ளழகுமிக்க பாவைநின் புதல்வியாதும். 302

வ—ம்:-மனைவிமக்களைவிட்டு வந்ததுசரியோவென்ன கேட்ட வேந்தன், அம்மா! உன் தூதர்வந்து சொன்னவுடன் அவர்களிடம் மனமகிழ்வான விடைவாங்கி உன் நகர்வந்தேன். இதற்காக நீ கவலைப்படாதே, உனது அருகிலிருக்கும் பொர்பதுமைபோலுள்ள உன் புதல்வி என்னைக்கண்டு

கூரிடா தென்னைநோக்கா கொடுமையென் புரிந்தேனென்னத்
தேரியச் சிருமிசீரி திடமுருங் கானில்தாதை
சேரிட மரிந்துமீளாத் திரிகியென் னனைபைக்கூட்டி
பாரிடை யலையவந்தீர் பார்த்திபர் முறையிதாமோ. 303

வ—ம்:- கண்ணால் பாராமலும் எவ்வித உரையுங்கூறாமலும் இருக்க நான் அவளுக்கு என்னதீங்கு செய்தேன், என்றிடக் கேட்ட சிருமி கோபமாய் அவரைநோக்கி தாங்கள் என் தந்தை வனம் சென்றாரென்பதையுணர்ந்தும், அவரைத்தேடி அழைத்து வராமல் இங்குவந்து என்தாயையும் கூட்டி வனம்போகத் துணிந்தது அரசமுறையாகுமா?

மன்னவன் வனத்தில்சென்ற மருகனைத் தேடவென்று
அன்னவன் றுணைவியோடு அயோத்திமன் னவனைக்கூட்டி
பின்னிலே வருவேனென்று பேர்ந்தவர் வாய்மையாவும்
அன்னையா முருமையென்னும் அரிவைதான் கடக்கல்நன்றோ 304

வ—ம்:-என்பிதாவானவர் தன் தங்கைமகனைத்தேடி அவனையீன்ற மாதாபிதாக்களுடன் வனஞ்சென்று வருவேனென்றுகூறி போயிருக்க அவரின் வார்த்தைகடந்து உருமையென்று கூறும் உன் தங்கை வனம்செல்வது நன்றாமா?

வருவது மரியாவுங்கள் வளம்பெரும் பொதுவர்கெல்லாம்
பெருமையு மிதுவாவென்னப் பெண்கொடி நகைத்தகாலை
அருமையாய் யரசிநோக்கி அதட்டிமா துலனையிவ்வார்
சிருமையா யுரைக்கொணாது தெரியெனச் சிருமிமீரி. 305

வ—ம்:- வருங்காரியமுணராத உங்கள் பொதுவர் குலத்துக்குற்ற பெருமையு மிதுவாவென்றுகூறி சிருமிநகைக்க அருகிருந்த அரசியார்கேட்டுமகிழ்ந்து அவளை அதட்டி, அம்மணி தாய்மாமனை

மதியாமல் இப்படி சிறுமையான வார்த்தை கூறலாமா? என்ன கன்னிகை கோபங்கொண்டு,

என்றுபின் பின்னுமிக்க யேழன முரைக்கக்கேட்டு
வென்றிகொள் வீரபோசன் மிக்கவே நகைத்து அம்மா
நன்றுனைக் கண்டவேந்தன் நற்றவம் புரிந்தோனேனும்
இன்றுனை மரந்துவிட்டு யெப்படி வனத்தில் சென்றார். 306

வ—ம்:-மருபடியும் அவரை இளிவான வார்த்தைகள் பலதுங் கூற கேட்ட வடமதுராபுரி அரசனான வீரபோஜ மகாராஜன் தன் தேகம்குலுங்க நகைத்து, அம்மா! இவ்வளவு அரிவுயர்ந்த உன்னை புத்திரியாகப்பெற்ற அரசர் நற்றவமுடையோரேனும் உன்னைவிட்டு எவ்விதம் வனம் சென்றாரோ அரியேன்.

ஆயர்கள் கூடும்நாட்டில் அணங்கினை மகவை வைத்து
தாயவ ளுரைக்கவுற்றாய் தந்தைசொல் கடந்துநீங்கள்
தேபவிட் டடவிசென்றால் சிரிப்பரே உலகோரென்னத்
தாயவள் தடுத்துவேந்தன் தன்செய லுரைத்துயேங்க. 307

வ—ம்:- என்றுகூரக்கேட்ட கன்னிகை பொதுவர்கள் கூடும் உங்கள் நாட்டில் உன் மனைவி மக்களை தனித்துவிட்டு என்தாய் வார்த்தை கேட்டுவந்தாய் அதுவன்றி என்பிதாவார்த்தை கடந்த உன் தங்கையுடன் வனஞ்செல்லவுந்துணிந்த உங்களை உலகோர் நகையார்களா? என்று கூரவும் அரசியார்தடுத்து தமையனை நோக்கி தன் வேந்தன் செயலுரைத்துயேங்க, அவ்வரசன்

கன்றிடா திருப்பாய்கானில் காவலன் றன்னைக்கண்டு
ஒன்றுர வருவேனென்ன வுத்தமி யரசனன்றி
என்றுமே யிருக்கேன்நாட்டி லென்னவே யிசைந்துமன்னன்
அன்றவ ளுடனேகானம் அடைந்திட துணிந்தகாலை. 308

வ—ம்:-அம்மணி நீ கவலை கொள்ளாதே நான் இதோ வனஞ் சென்று அரசரை அழைத்து வருவேன் என்றிட அரசியார், அண்ணா! உத்தமியான மாதர் நாதனன்றி உலகில் வாழத்துணி யார் ஆகையால் நான் இப்பதியில் அரசரில்லாமல் உயிர்வாழேன் என்றுகூர, வேந்தன் தங்கையுடன் வனஞ்செல்ல இசைந்தார்.

121248

தன்னருந் தவத்தில்வந்த தவமணி யென்னும்மந்த
நன்னரும் மணியைநாடி நங்கையு மணைத்துதாங்கி
பின்னருந் தாதைதன்னை நீள்வன மடைந்துகாண
என்னுடன் வருதியம்மா யென்றன ளினியமாது 309

வ—ம்:- இவையுணர்ந்த அரசியார் தங்கள் தவத்திலுதித்த "தவமணி" யென்னும் சிருமியை சென்றணைத்து, நன்மணியே! கொடியகானகத்தில் சென்று உன் தந்தையைக் காணுவதற்கு என்னுடன் வருவாயம்மா! என்று கூரக்கேட்ட சிருமி

தந்தைசொல் மருத்துக்கானந் தான்செல துணிந்தாயானும்
வந்திடி னுந்தனோடு மாபெரும் பாவஞ்சூளும்
எந்தனை யளைத்திடாமல் யேகிநின் றணைவனோடு
முந்தைநா டடைவாயம்மா மொளிந்திடா தினிமேலொன்றும் 310

வ—ம்:-நகைத்து என் பிதாவின் வார்த்தைகடந்து வனஞ்செல்லத்துணிந்த தாயாகிய உன்னுடன் நான் வருவேனாகில் கொடிய பாவஞ்சூளும் ஆகையால் நீயும் உன் தமையனும் சேர்ந்து உங்கள் மூதாதைகள் பரைபரையாய் ஆண்ட வடமதுராபுரி செல்வாய் அன்றி இனி என்னைப்பற்றி வேறெதுவுங் கூராதே எனவும்

பால்மணம் மாராவுந்தன் பருவத்தை யுணராவாய்மை
சாலவே யுரைத்தாய்நீயும் தகுதியோ யிவைகள்யாவும்
ஞாலமே லுணரும்வண்ணம் நவின்றவர் யாரோகாணேன்
காலமோ யீன்றாள்வாய்மை கடப்பது முறையோவம்மா. 311

வ—ம்:-அரசியார் நகைத்து பால்மணம் மாராத குழந்தை பருவமுடைய நீ கூரும் வாசகம் நன்றாமா? இவ்விதம் பேசும்படி உனக்கு போதித்தவர் யாரோ, அரியேன். ஆனால் பெற்றதாய் கூரும்வார்த்தை கடப்பது நீதிதானா? வென்றிடக்கேட்ட சிருமி

அன்னைசொல் தடுக்கொணாது அரிவேனா னிந்தஞானம்
சொன்னவர் யாரோவென்று சொல்லினாப் யாகமங்கள்
முன்னிலே தேடிக்காணா முகுந்தனே யரிவாய்நின்று
என்னுளே யிருந்துவிண்டான் இச்செய லரிவாயன்றி 312

வ—ம்:-அம்மா! தாயுரை தடுக்கக்கூடாதென்றுரைக்கும் ஞாயம் நானறிவேன். அன்றி இவ்விதம்பேசும்படி எனக்கு போதித்தவர்

யாருேவென்று கேட்கின்றாய். முன்னே பலகோடி ஆகமங்களும் தேடியரியா தனி முதல்வன் என்னுள் அறிவாய் நின்றுரைத்தனர்

பெற்றவ ரேனும்நாட்டின் பெரியவ ரேனுமன்னோர்
உற்றிடச் சமைத்தோனேனும் உயர்முறை தவருவாரேல்
கற்றவர் மதியாரிந்தக் காசினி யாளும்வேந்தன்
னுற்றவர் தெய்தமென்று உரைப்பவ ருருதிவிட்டு 313

வ—ம்:-தன்னைப்பெற்ற தாய் தகப்பன் மூதாதைகள் முதலான வர்களில் எவரேனும் நீதிமுறை தவருவாராகில், கற்றறிந்தோர் மதியார்கள் என்பதை அறியீரு? அன்றி உலகுக்கு அரசன் இரண்டாவது தெய்வமென்று கூரும் வேதவாக்கைத்தவறி

அன்னவ னுரைமருத்து அடவிசெல் லன்னையான
உன்னுரை கேட்டுக்கானில் லொருத்தினுன் வருவேனுகில்
என்னையத் தாதைகண்டு இயல்பெருந் தானைவீரர்
தன்னிட முரைத்தவாய்மை தவரினீ துணிவுபூண்டு 314

வ—ம்:-அரசனுத்தரவை கடந்து வனம்செல்லும் தாயான உன்னுடன் வருவேனுகில் என்னை அவர்கண்டு அயோத்தியிலிருந்து சேனுதிபதியிடம் நான் கூறியனுப்பிய வார்த்தையைக்கடந்து மனத்திடம்பூண்டு

எப்படி வனத்திலுற்ருய் யென்றவர் சினந்தாராகில்
இப்படி யுரைத்தாளன்னை யென்றிடில் நீதியாமோ
ஒப்பிடே னுனதுவாய்மை உயர்மதி யமைச்சரேரே
செப்புவீ ரிதற்குஞாயம் தெரிந்தநின் கருத்தின்வாரு. 315

வ—ம்:-வனத்தில் யேன் வந்தாயென்று கோபிப்பாராஞல் என் தாய் அழைத்ததால் வந்தேனென்றுகூருவது நீதியாகுமா? ஆகையால் உன் வார்த்தையை நான் யேர்த்துக்கொள்ளேன், ஹே! மந்திரி! இதற்குத்தக்க ஞாயம் உம்முடைய மனதில் உதித்தபடி உரைப்பீர்.

என்றிடி லவனும்போற்றி இருவிழி யரிவிசோரக்
கன்றினுன் நமதுநாட்டில் காவல னிருந்தநாளில்
இன்றுரை யுரைத்தாயில்லை யியல்கலை வாணிபோலாய்
என்றுநீ யரிந்தாயிந்த இனிமைசேர் முறைகள்யாவும். 316

வ—ம்:-என்றுகூறக்கேட்ட மந்திரி யேங்கி இருவிழி நீர் சொரிய சிறுமியை போற்றி, அம்மா! நாட்டிலரசர் இருந்த காலத்தில் இவ்விதம் பேசியறியாத தாங்கள் சரஸ்வதியையொத்த அறிவுடன் பேசும்வண்மை எப்பொழுது அறிந்தீர்கள்.

திருமணக் காலமட்டும் சிறுமியர் தாயைவிட்டு
ஒருபொழு தகலவொண்ணா துரைத்திடும் வேதமிவ்வார்
பெருமுறை யுலகங்கூறும் பெருஞ்சுடர் மணியேயென்ன
பிரியதோர் வதனையென்னும் பெண்கொடி தடுத்துக்கூறும் 317

வ—ம:-ஆனால், ஸ்திரிகளாய் பிறந்த குழந்தைகள் திருமணம் புரியுங்காலம்வரை ஈன்ற தாயைவிட்டு க்ஷணநேரமும் பிரியக் கூடாதென்ற உலகவழக்கமும் வேதவாக்கும் உண்டென்பது அறிவாய் என்றிட 'பிரியவதனை' யென்னும் பேர்படைத்த சிறுமி பின்னுங் கூறுவாள்.

எந்தனை போலாய்நாட்டில் இருந்தர சாள்வாயென்று
அந்தநா ளரைந்துதாதை அயோத்திநா டடைந்தாறத்தால்
உந்தனை தந்தையென்று உயர்துணை கொள்ளல்நன்றோ
தந்தைசொர் கடந்தவன்னை தன்துணை நன்றோகூறும். 318

வ—ம்:-அய்யா! உன்னை என் தந்தையானவர் என்னைப்போலிருந்து நமது நாட்டை காப்பாயென்றுகூறி அயோத்தி போனவருரைப்படி நடக்கும் தந்தையான உமது துணைநன்றோ? அன்றி அவருரைகடந்து ஸ்ரீகள் செல்லாத வனஞ்செல்லும் தாயினது துணை நன்றோ?

மந்திரத் துணைவாஅன்றி மண்மிசை யுதித்தபேர்க்கு
வந்திடு மிறிதிகாலம் வளித்துணை வருவாருண்டோ
உந்தனுக் குறிதிகேண்மோ உரைத்தவ ளுரைத்தவாறு
இந்தநா டதனைவிட்டு யேகிடேன் வனத்திலென்றாள். 319

வ—ம்:-ஹே! முதன்மையான மந்திரி! உலகிலுதித்தபேர்க்கு அந்தியகாலத்தில் உடன் துணைவருவாருண்டோ? ஆகையால் நான் கூறும் உறுதியான வார்த்தை கேளும். என் தாய் உரைக்கும் வண்ணம் இந்த நாட்டைவிட்டு அவள்பின் வனம்செல்லுவேனென்று நினையாதீர்.

அரிவுயர் சிறுமிகூற அவந்திமன் றேவியேங்கி
சரியிதோ வம்மாவுந்தன் றந்தையை வனத்தில்தேடி
அரிவது மில்லையாகில் அரசுயர் நாடுமீண்டு
வருவது மில்லையென்ன மதலையும் நகைத்துஅம்மா. 320

வ—ம்:-என்று கூறக்கேட்ட அரசியாரேங்கி, அம்மா! நான் உன் தந்தையை கானகஞ்சென்று தேடிக்காணுதவரை இன்னாட்டுக்கு மருபடியும் வருவேனென்று நினையாதே என்றிடச் சிறுமியானவள் நகைத்து,

தப்பிநின் றம்முனோடு தருவன மடைவாயாகில்
ஒப்புமன் மகனைவேந்தன் வுயர்விழி யாலேகண்டு
இப்புவி யடையுமட்டு மிரவனை நீங்கள்தேடி
எப்பவு மரியீரத்தால் இப்பதி யிருப்பீர்நன்றாய். 321

வ—ம்:- நான் கூறும்வார்த்தை கடந்து உன் தமையனுடன் வனம்செல்வாயானால் அயோத்தியாபுரி அரசபுத்திரனை என் தந்தைகண்டு நகர்திரும்பும் காலம்மட்டும் இந்த உலகமுற்றும் நீங்கள்தேடினாலும் அவரை காணமாட்டீர்கள். ஆகையால் வீண் கஷ்டப்படாமல் நமது நாட்டிலே இருப்பாய்.

என்னவே தம்முனோடு யெழுந்தனள் ளரசிசீரி
அன்னகர் விடுத்துகானம் அடுத்திட நடந்தகாலை
பின்னிய அமைச்சனேங்கி பிரண்டிடக் குடிகள்முற்றுங்
தன்னிலை தளரவந்த தடம்பெரும் சிறுமிதேற்றி. 322

வ—ம்:-என்றிட அரசியார் சினந்து எதையுங்கருதாமல் அண்ணனை அழைத்து அரண்மனையைவிட்டு வனம்நோக்கி வேகமாய் நடந்தாள். இவையுணர்ந்த மந்திரி அலரி கீழேவிழ, குடிகள் பரிதாபிக்கக்கண்ட அரசபுதல்வி அவர்களுக்கு பல இனிய வசனங்கூறி தேற்றி

அஞ்சிடா திருப்பீர்வேந்தன் அடைகுவார் நமதுநாடு
பஞ்சமும் மனுகாதென்று பகர்ந்தவ ளருகிலுற்ற
வஞ்சியர் தம்மைபோக்கி மந்திரி தன்னைநோக்கி
மிஞ்சியே புகன்றிடாது விளம்புமென் னுரைகேளய்யா. 323

வ—ம்:-நீங்கள் பயப்படாதிருங்கள். அரசர் நமது நாட்டுக்கு கூடிய சீக்கிரம் வந்து சேருவார். வேறு கஷ்டங்கள் வராது. ஆகையால் நீங்கள் செல்லுவீரென்று அனுப்பி, தோழியரையும் அப்பால் விலக்கி, மந்திரியை நோக்கி, ஐயா! நான் கூறும் வார்த்தை தடுக்காது நீர்

என்னுட லழிந்திடாது இருந்திட தவத்தில்மூள்கி
முன்னுரை விழியாலந்த முகுந்தனை களிக்ககண்டு
அன்னவன் கருணையோடு அருள்பெற நினைந்தேனத்தால்
என்னுயர் கருத்துக்கேற்ற இடமிந்த நகரின்கீள்பால். 324

வ—ம்:-இச்க்ஷணத்தில் செய்யவேண்டும் அதாவது, என்னுடல் அழியாது இருக்கவும், பரந்தாமன் கருணைபெறவும் தவம்புரிவதற்காய் நமது நாட்டிலிருந்தே நினைந்தேன் அதற்காக இன்நகர் கீழ்பாகத்தில்

வருஞ்சம்பு நதியினோரம் வளர்மணி மாடந்தீட்டி
அருஞ்சம ரரிந்தமாதர் அனந்தம்பேர் காவல்வைத்து
தருஞ்செல்வம் பலவும்சேர்த்து சாற்றுவாய் பகல்போமுன்னே
வருந்தவக் கோலம்பூண்டு வருவேன்நின் பின்னிலென்ன. 325

வ—ம்:-வரும் சம்புநிதி ஆற்றினோரம் ரத்தினமயமாய் விளங்கும்படியான ஒருமாடம்கட்டி, போர்த்திரமரிந்த மாதர்களை காவல்வைத்து, அவர்களுக்குவேண்டிய உணவுபொருள்களும்அமைத்து சூரியனஸ்தமாகு முன்னம் தெரிவிப்பீராகில் நானும் தவக்கோலம்பூண்டு அங்கு வருவேனென்று கூரக்கேட்ட

மந்திரி கலங்கிசிந்தை வளுத்துவான் நமதுநாட்டில்
இந்தநா ளுள்ளகொல்லர் யாவரு மிதற்காய்வேண்டி
தந்திரம் புரிந்திட்டாலும் தாயேநீ ருரைத்தவண்ணம்
இந்தநாள் பகல்போமுன்னே எப்படி முடியுமவ்வார். 326

வ—ம்:-மந்திரிமயங்கி அம்மணி இதற்காக நமது நாட்டிலுள்ள கொல்லர் யாவருங்கூடி பல தந்திரத்தில்கட்டினாலும் தாங்கள் கூறியபடி சூரியன் ஸ்தமிக்குமுன் மாளிகைகட்டி முடியாதே இதற்கென் செய்வேன்.

என்றிட நகைத்து அந்த இளமக ளமைச்சைநோக்கி
நன்றிது யாராலெவ்வார் நடத்துவ தென்றோராது
கன்றிஞய் விடுத்துமேயக்கம் காவலை கடந்துவாயல்
சென்றுபா ரசுரதச்சன் சேருவா னவனைக்கண்டு 327

வ—ம்:-என்றிட, சிருமிநகைத்து மந்திரி! நான்கூரிய மாளிகை எவ்விதமாய் யாரைக்கொண்டு கட்டுவதென்று என்னைக்கேளாமல் கலங்கிஞய் கலங்காது நமது வாயல்சென்று பார்ப்பாயாகில் மயனென்னும் அசுரத்தச்சன் இருப்பான் அவனைக்கண்டு

வருதிநா மழைத்தோமென்ன வளுத்திடில் வருவானிங்கே
உருதிநா முரைப்போமந்த உத்தமனுடனே நீபோய்
பொருதிய வண்ணம்நன்றாய் பூட்டுவாய் மாடமொன்று
தெருதிநீ யென்ன அன்னேன் திகைத்தடி பணிந்துமீண்டான் 328

வ—ம்:-நாமழைத்ததாக கூருவாய். இங்குவ்ருவான் அவனிடம் நாம் விபரங்கூருவோம். அவனைக்கூட்டி நீர்சென்று குரித்தயிடத்தில் மாடமாழிகை அமைப்பீரென்னக்கேட்ட மந்திரி உடல் நடுங்கி பயந்து விரைவாக வாயலைநோக்கி சென்று

கண்டனன் வாயல்புக்கி கலங்கியே யவன்றுள்போற்றி
அண்டரு மரியாய்யிங்கு அடைந்தனை யெங்கள்பாவம்
ஒண்டிடா தென்ன அன்னேன் உங்கள்மன் தவத்தில்வந்து
அண்டிய சிருமிக்ஷேமம் அரையவ ளுரையுமென்றான். 329

வ—ம்:-அங்கு தெய்வத்தண்மை பிரகாசிக்கும் மாத்திரை கோலுடன் நின்ற மயனைக்கண்டு பயந்து வணங்கி, ஐயா! தேவர்க்கும் அரிதாகிய தாங்கள் இங்குவந்ததால் எங்கள்பாவம் நீங்கியதென கேட்ட அசுரத்தச்சன் அவர்காசிர்வதித்து, மந்திரி! உங்கள் அரசபுத்திரியின்க்ஷேமமும், அவர்கள் எனக்கிட்டயேவலும் கூருவாய்

அந்தநல் மயனைமீண்டும் அவன்தொழு தய்யாவெங்கள்
தந்தைமுன் தாயாள்பின்னும் தம்முனைக் கூட்டிக்கானம்
இந்தநா ளடைந்தாரென்ன இசைத்தனன் நடந்தயாவும்
உந்தனை யழைத்தியென்ன உரைத்தனள் ளடைந்தேனிங்கே 330

வ—ம்:-என்னும் மயனை மருபடியும் வணங்கி, ஐயா! அரசர் முன்னுகவும், ஆசியார் தன் தமையனுடன் பின்னுகவும் வனஞ்

சென்றார்கள். அரசபுத்திரியார் தங்களை சமுகம்வரும்படி அழைத்தார்கள் என்று நடந்த விவரங்கள் யாவுங்கூறி

கொற்றவன் றவமோ அன்றி கோதைதாய் தவமோ மற்றும்
உற்றவர் தவமோ அல்லால் உயர்பதி தவமோ முன்னோர்
பெற்றிடுந் தவமோயிந்த பிள்ளையின் தவமோ நீதான்
உற்றிட அவள்தான்கண்ட உயர்வினை யுரைத்தி அய்யா 331

வ—ம்:-மறுபடியும் அவரைநோக்கி, தேவா! தாங்கள் இங்கு வந்ததை எங்களரச புத்திரியாருணர்ந்தது அரசர் தவமோ, அன்றி அரசியார் தவமோ, அல்லது எங்கள் நாட்டின் தவமோ, முன்னவர்கள் தவமோ, தவரில் அக்குழந்தையின் தவமோ, இதன் விபரம் அடியேனுக்கு தெரியும்படியாய்

அரிவுயர் மயனுங்கேட்டு அரைகுவானய்யா நீரும்
தெரிகுவா யிதனின்மர்மம் தெய்வீக பெருமையாவும்
நருமணங்கமளயோத்தி நற்றவத் தசரதன்றன்
பெருமைசேர் தவத்தில்வந்த பெரியவனான ராமன் 332

வ—ம்:-கூறுவீரென்ன், வேண்டும் மந்திரியைத்தேற்றி ஐயா! தெய்வத்தண்மைவாய்ந்த இச்சிறுமியின் மர்மத்தை கேட்பாய், முன்னே அயோத்தியாபுரியை அரசாண்ட தசரதச்சக்கிரவர்த்தியார்க்கும் கௌசலாதேவியார்க்கும் உதித்த ஸ்ரீராமபிரான்

அன்னையின் வாய்மைகேட்டு அடவிபோய் மனைவியோடும்
தன்னுருந் துணைவன்போற்ற தங்குநாளிலங்கை வேந்தன்
மின்னிய மாய்கையாலே மெல்லியைக் கவர்ந்துசென்று
அன்னவன் சிறையிலிட்டான் அசோகமா வனத்திலன்றே 333

வ—ம்:-தாயாகிய கைகேசியின் வார்த்தைகேட்டு தண்டகாருண்யவனத்தில் சீதாபிராட்டியாருடனும், இளையபெருமாளுடனும் வாசம்செய்த நாளில் தென்னிலங்காபுரி ராவணன் மாய்கையால் ஜானகியை கவர்ந்து அவன்நாட்டிலுள்ள அசோகவனத்தில் கொண்டு சிறைவைத்த நாளில்

அரக்கியரனந்தங் காவல் அமைத்தவர் தலைவியாக
சிரக்குந்தன்னிளைவலீன்ற திருச்சடை யென்றமாதை
இருக்கவே வைத்தானங்கு இருந்தவளுலகமாதா
வெருக்கொளா திருக்கதேற்றி வேண்டிய பணிகள்செய்தாள் 334

வ—ம்:-பிராட்டியாருக்கு காவலாக அனேக ராக்ஷத ஸ்திரீகளை நேமித்து தன் தம்பி விபூஷணன் புத்திரியான திருச்சடையை அவர்களுக்கு தலைவியாக வைத்தான். அப்படி இருந்தவளான உத்தமி உலகமாதாவான பிராட்டியார் மனம்போல் ஏவல் செய்தும் சமயத்துக்குத்தக்கபடி தேருதல்கூறியும்,

பின்னுமவ் வரக்கர்செய்யும் பேதனம் பலதுமாய்கை
தன்னையு மெடுத்துவோதி தசரதராமன் வந்து
உன்னையே மீட்பானென்று வுரைத்தவ ளிருந்ததோடும்
அன்னவள் தாதைராமன் அடிமையாய் அடைந்ததாலும் 335

வ—ம்:-பின்னும் ராக்ஷதர் மாய்கையாவும் அடிக்கடி விளக்கி காட்டியும், தாங்கள் அஞ்சாதிருங்கள் தசரதராமன் வந்து சிறை மீட்டுவாரென்று திடமாய்கூறி யிருந்ததோடும், அவள் தந்தை ராமபிரானுக்கு தொண்டனுப் சேர்ந்ததாலும்,

அஞ்சனை மதலையோடும் அடல்கவிக்குலங்கள்சூள
மஞ்சனை யொத்ததம்பி வந்திட இலங்கைசென்று
கொஞ்சும்வா ளரக்கர்தம்மை கோதண்டங் கொண்டுமோட்டி
வஞ்சியின் சிறைமீட்டு வளம்பெரு மரசுதன்னை 336

வ—ம்:-பின்னே ஸ்ரீராமபிரான் தன்னைவிட்டு நீங்காத தம்பியுடன் ஆஞ்சநேயர்முதல் அனேக வானரப்படைசூள சேதுகட்டி லங்கைவந்து கோதண்டமென்னும்வில்லால் ராவணராக்ஷதரை ஒருங்கேகொன்று ஜானகியின் சிறைமீட்டு அப்பால் லங்காபுரி ராஜ்ஜியத்தை

முன்னினு மிறட்டியாக மொய்புரும் வளங்கள் செய்து
அன்னகர் விபூசணர்க்கு அளித்தனன் அழிந்திடாது
இன்னிசை யிருப்பாயென்ன இசைத்தனளருத நின்ற
கன்னியாந் திருச்சடையின் கருத்தினையறிந்து ராமன் 337

வ—ம்:-முன்னினுமிருபங்கு வணப்புடன் சீர்படுத்தி அழியாத சிரஞ்சீவி பட்டமும்கொடுத்து விபூஷணரை அரசாக்கியபின் வந்துவணங்கி நின்றவனின் சமீபத்திலிருந்த திருச்சடையென்னும் உத்தமியின் கருத்துணர்ந்த பகவான்

மங்கையே வருதியென்று வளுத்திடவணங்கிவந்த
அங்கவள் வதனம்நோக்கி ஆசிகள் பலவுமீய்ந்து
தங்கைநின் கருத்துயாது சாற்றென அவழும்போற்றி
இங்குநின் னிழவல்தம்மை யெண்ணினேன் வதுவைசூட. 338

வ—ம்:- நழந்தாய் வருவாயென்றழைத்து, அவளுக்கு சுபமங்கள ஆசீர்வாதம்புரிந்து உன் கருத்தில் எதுவேண்டினை? கேள்பாயென்ன, அக்கன்னிகை பகவானைவணங்கி, தேவா! நான் தங்களுடன் பிறந்த இளையவரை மணம்புரிந்து வாழ நினைந்தேன்.

அவ்வரம் நல்குமென்ன அவளடி பணிந்துநிர்ப
இவ்வரம் பெருதியேனும் இளையவ னுன்போல் வேருேர்
செவ்விள மாதைவேட்டு செளிப்புரு மயோத்திவிட்டு
இவ்விட மடைந்தானத்தால் இக்கருத் திதனுள்மாற்றி. 339

வ—ம்:-ஆகையால் அவ்வரம் தருதவீர் என்றுகூறி வணங்கிட பகவான் அவளை நோக்கி, அம்மா! நீ இவ்வரம் பெருவதற்குரியவளென்ருலும், இளையவன் உன்போன்ற ஒரு இளமாதை மணந்து அயோத்தியில் விட்டு நம்முடன் வந்திருக்கின்ருன். ஆதலால் உன்கருத்தை இந்நாள் மாற்றி

கன்னியே பிர்மஞானக் காரிளையாக யிவ்வூள்
தன்னிலே யிருந்துவேண்டுந் தலைவனை நினைத்துவந்தால்
பின்னிலே யவந்திவேந்தன் பெண்ணென பிரந்துநீயும்
நன்னிலை யாண்டுஐந்தில் நாடிநற் றவத்தாலெம்மை 340

வ—ம்:-கன்னிகையாகவே இருந்து பிர்மஞானம்தேர்ந்து நம்மை நினைந்து வருவாயாகில் அடுத்தஜென்மத்தில் அவந்திநாட்டரசன் மகளாய்பிரந்து 5வது வயதில் பூர்வஞானம்பெற்று நம்மைக்கண்டு

கண்டுநீ களிப்பாய்வேண்டுங் கணவனு மயோத்திநாட்டில்
அண்டுவான் வணப்புங்கீர்த்தி அமைந்தவ னரசன்சேயாய்
மண்டலம் முதிப்பான்றம்மை மங்கைநின் பருவகாலம்
கண்டுநாம் கூட்டிமன்றல் காசினி யரியச்செய்வோம். 341

வ—ம்:-களிப்பாய். நீ நினைத்தபடி அந்தகாலம் நமது இளையவன் மீண்டும் அயோத்தியாபுரி அரசபுத்திரனய் பிரந்து வளரு

வான். வளருங்காலம் நாம் உங்களிருவரையும் ஒன்றுகூட்டி உல கோரரிய திருமணம் செய்துவைப்போம். அன்றி அந்தநாழில்

இந்திர னேடேந்தேவர் இராக்ஷதர் முதலாய்யாரும்
சிந்தையில் நினைப்பாயாகில் செய்குவா ருனக்குத்தொண்டு
உந்தநர் கொழுனனேடு வொருவனு னிருக்குமட்டும்
தந்திடும் பதமுமுண்டு தருவேன்பின் வேண்டும்யாவும். 342

வ—ம்:-இந்திராதி தேவர்முதல் ராக்ஷதர்கள் யாரையும் நீ நினைத்தால் உடனே உன்னிடம்வந்து ஏவல்செய்யும் பெருமையுடன் நானும், என்பேரும் உள்ளளவும் அழியாத பெரும் பதவி பெற்று வாழுவாய். அன்றி நீ நினைத்தயாவும்தந்து ரக்ஷிப்போம்.

அரிகுவாய் மூன்றுகாலம் அந்தநா ளிந்தமர்மம்
தெரிகுவா யுதிக்கும்ஞானம் தேன்மொழி யென்னக்கூறும்
பெரியவன் பாதம்போற்றி பிரந்தவ ளுனது வேந்தன்
சிருமிநா னசுரதச்சன் சிந்தையில் நினைக்க வந்தேன். 343

வ—ம்:-தவர மூன்று காலமும் உனக்குநயமாகும். இப்பொழுது நாமுரைத்தயாவும் விளங்குவதுடன் மற்றவரலாருந்தோன்றும் என்றுகூருமவரடிபணிந்து இங்குபிரந்தவள்தான் உன்னரசன்புத்திரி, நானே அசுரத்தச்சன், என்னை வரும்படி அவள் நினைத்தவுடன் நான் வந்ததும் அவளரிந்ததும் இதுதானய்யா,

கண்டிட வருவீரய்யா காரிளை சினந்தால்மோசம்
அண்டிடு மென்னக்கேட்டு அமைச்சனு மவன்ருள்போற்றி
கொண்டந்த மாதுவைகும் கோவிலை யடைந்துதேரி
கண்டவள் பாதந்தன்னில் கனமுடி யிருவர்சேர்த்தார். 344

வ—ம்:-இனி காலங்கடத்தினல் கோபத்துக்காளாக நேரும். வாருமென்றுகூறி இருவரும் அரண்மனையில் சென்று அரச சிருமியைக்கண்டுஒடி அவள்பாதத்தில் சிரம்பட வணங்கி நின்ருர்கள்.

கன்னிகை யெழுமென்ருேதி கனம்பெரும் ஆசிநல்கி
உன்னுரை வரவைநோக்கி யுற்றனம் மயனேநீரும்
இன்னகர் குணபாலுள்ள இயல்சம்பு நதியினோரம்
மின்னிடும் மாடமொன்று விரைந்தின்று சமைப்பீராகில். 345

வ—ம்:-அதுவரிந்த கன்னிகை எழுந்து அவர்களுக்காசிகூறி யெழுந்திருக்கச்செய்து மயனைநோக்கி, அய்யா! உன் வரவை எதிர்பார்த்திருந்த எனக்காக நீர் இன்னகர் கீழ்பாலுள்ள சம்பு நதியின் கரையோரம் பிரகாசம்மான மாளிகை அமைப்பீராகில்,

அங்கிருந் தாழிதன்னில் அருந்துயில் கொண்டவண்ணன்
மங்கிடாக் கோலங்கண்டு மகிழ்ந்திட மதித்துயானும்
தங்கியே தவத்தில்மூள்க தானினை வுற்றேனத்தால்
இங்குநீர் விரைந்துசெய்ய யேகுவீ ரமைச்சனோடு, 346

வ—ம்:- நானதிலிருந்து அரிய தவம்செய்து ஆழியகடலில் யோகநித்திரைகொள்ளும் ஆதிபாண்டுரங்கனை காணும்படி நினைத்தேன். ஆதலால் விரைவாக எங்கள் மந்திரியாருடன் சென்று செய்குவீர்.

அன்றியம் மாடந்தன்னில் ஆடவரடுக் கொண்ணாது
என்றுயர் கொடிகள்நாட்டி இசைத்துயர் வீரர்காவல்
நின்றார அரக்கர்தம்மை நேர்விசும் பிரித்திநீரும்
இன்றெனக் குரைத்தீரென்ன இருவரும் பணிந்துசென்றார். 347

வ—ம்:-அன்றியும், அக்கன்னியாமாடத்தில் புருடர்கள் வரக்கூடாதென்றெழுதிய கொடியும்நாட்டி அதைச்சுற்றிஆயுதம்பூண்ட அனந்தம் வீரர்காவல் நேமித்து, ஆகாயமீதில் அசுரர்களை காவல் செய்யும்படி அமைத்து, இதற்குவேண்டிய ஏவலரும்சேர்த்து என்னிடம் கூருவீரென்னக் கேட்ட இருவரும் பணிந்து அவ்விதமே செய்வதாகச் சென்றார்கள்.

அங்கவர் கீள்பாலேகி ஆற்றினுக் கடுத்தசார்பில்
பொங்கும்நன் நிலத்தைகண்டு பூவையாள் குறித்தவண்ணம்
செங்கையில் கோலையேந்தி செளுமைசே ரசுரதச்சன்
அங்கவன் மண்மேல்கீரி ஆதவா முகுந்தாவென்ன. 343

வ—ம்:-அந்நகர் கீழ்பால்சென்று ஆற்றின்கரையிலுள்ள ஒரு மைதானத்தைக்கண்டு மகிழ்ந்து மயனானவன் தன் மாத்திரைக் கோலைக் கரத்திலேந்தி அரசபுத்திரி கூறிய குறிப்புக்கிணங்க அக்கோலால் பூமியைக்கீரி, அரிகரி முகுந்தா! ராமாவென்று

சிந்தையில் நினைத்ததாலே திடுக்கிட அமைச்சன்றானும்
வந்தவின் னுலவுங்கோட்டை வளர்ந்தது வாயலொன்றாய்
அந்தவுள் மாடமொன்று அமைந்ததின் பெருமைகாண
இந்திரன் திகைத்தானென்றால் இதன்வழமுரைப்பராரோ. 349

வ—ம்:-நினைத்தவுடன் மந்திரிகண்டு திடுக்கிட அந்தப் பூமியி லிருந்து ஒற்றைவாயலுடைய ஒரு பிரம்மாண்டமான கோட்டை யெழுந்து மேகமண்டலந்தாவவளர்ந்தது. அதன்மத்தியில் அலங் காரம்பொருந்திய மாடம் அமைந்த, வனப்பைநோக்கி இந்திரன் திகைத்தானென்றால் அதன் பெருமை யுரைப்பவருண்டோ.

பத்தரை மாற்றுத்தங்கம் பதித்திடுஞ் சுவர்கள்தானும்
எத்திசை தனிலுங்காந்தி இசையும்நர் பவளத்தூணும்
வைத்ததில் மாரிமாரி மற்றதோர் மணியின்விட்டம்
யெத்திசை தனிலும்சேர்த்தான் இரவியின் கதிர்போல்வீச. 350

வ—ம்:-ஆனால் பத்தரைமாத்து தங்கத்தால் கட்டிய திருமதில் களும், பவளத்தூண்களும், ஒன்பதுவகை ரத்தினங்களால் அமை க்கப்பட்ட விட்டங்களை மாரிமாரிப்பூட்டி அழகுற அமைத்து சூரியன் பிரகாசம்போல் ஒளிவீச,

அரக்கரை யமைத்துவிண்ணில் அரன்முதல் றேவர்யாரும்
சிரக்குமிம் மனையைநோக்கில் செகுப்பீரென் றவர்க்குமோதி
வாக்கொடுங் கணைகள்பூண்ட மாந்தரை நிரைநிரையாய்
இருக்கவே யமைத்தான்காவல் இசைந்ததின் பெருமைமிக்க. 351

வ—ம்:-அமைந்தமாடத்தில் ஆகாயத்திலிருந்து காவல்செய்ய அனேக ராக்ஷதர்களை வைத்து மும்மூர்த்திமுதல் தேவர்கள் யார் இங்குவரினும் தடுப்பீரெனக்கூறி தெய்வத்தன்மைபூண்ட ஆயு தம் தரித்த அனேக மானிடவீரரை கோட்டையைச்சுற்றி நிறு த்தி சிறுமியின் ஏவல்செய்யவும் துணையிருக்கவும் பெருமையான சிறுமியர் அனந்தம்பேர் சேர்த்தும்,

பெருந்தவ முயலவுள்ளே பெண்ணினுக் கமைந்தமாடம்
வருந்தியே யமைத்தான்யாரும் வணங்கிகை கூப்புவாரு
இருந்ததின் பெருமைமிக்க இயல்சம்பு நதியையங்கு
பொருந்தினுன் கோட்டைதம்மை போய்வலம் வளைந்துசுற்ற 352

வ—ம்:-அரசபுத்திரியாரிருந்து தவம்செய்வதற்கமைத்த மாட மானது அரும் பிரயாசையுடன் அமைத்தான். அதைக்கண்டவர் கள் பக்திமேலிட்டு வணங்கும்படியாக இருந்தது. அங்குவரும் சம்புநதியாற்றை கோட்டையில் பொருத்தி அதை வளைந்து சுற் றும்படி யமைத்து

அன்னவை யகழியாக்கி ஆண்டொரு பத்தும்மட்டும்
இன்னவர் தமக்குவேண்டும் இனிமைசே ருணவுமற்றும்
பின்னிலே யமைத்துஅந்தப் பெருமையை விழிநேர்கண்டு
அன்னவன் மகிழ்ந்தான்சிந்தை ஆரணன் கருணையென்றே. 353

வ—ம்:-கோட்டைக்கு நாலுபக்கமும் அந்த நதியையே அகழி யாக்கி சுமார் பத்துவருடகாலத்துக்கு வேண்டிய உணவுபொருள் களும் அமைத்து அதன் பெருமையை இருவருங்கண்டு மகிழ்ந்து இவ்வ ஸ்ரீமன் நாராயணன் கருணையாலமைந்ததென்றே

கற்றவன் மகிழ்ந்துஅந்த கான்முளை யடிபோய் போற்றி
சிற்றறி வுடையநானும் செய்தவை காண்பீரென்ன
மற்றவ ழுதனைகேட்டு வழங்கிநல் லவர்கள்காசி
யற்றவை யுணர்வேன் நீங்கள் உரைவிடம் உரைவீரென்ன. 354

வ—ம்:-ஒருவரோடொருவர்கூறி வேகமாய் அரசமாளிகை செ ன்று சிறுமியைக்கண்டு மயன்வணங்கி, அம்மா! தாங்கள் கூறிய படி நான் கற்றவரை செய்திருக்கும் மண்டபத்தைக்காண வருவீ ரென்ற அவருக்காசிகூறி தம்மால்நடந்தயாவும் அறிவோம். ஆகை யால் உன்பதவி சாருவாய் என்றிட

வருவேனென் றசுரதச்சன் மறைந்தனன் விசும்பின்மீது
ஒருவனுய் யமைச்சன்போற்ற உத்தமி யவனைநோக்கி
தருமுறை தவறிடாதீர் தந்தைநா டடையும்மட்டும்
இருமிந்த நாடுதாங்கி இடைவருங் குறைகள் மாற்றி, 355

வ—ம்:- அசுரத்தச்சன் ககனமார்க்கமாய் மறைந்துபோனன். பின் தனித்து வணங்கிநின்ற மந்திரியை அரசபுத்திரி நோக்கி ஐயா! நமது ராஜ்ஜியத்துக்கு என் தந்தைவரும்வரை தாமே அர சராயிருந்து எவ்விதகஷ்டநஷ்டங்களும் குடிகளுக்கு அணுகாது பாதுகார்த்து

இருவெனப் போக்கிகன்னி யெழிலுடை கோலம்மாற்றி
பெருந்தவ வடிவமுற்றாள் பெருமைசேர் தேவராய்ந்து
நருமலர் மாரிபெய்தார் நடந்தவள் தவத்தையுன்ன
அருந்தவ நாரதன்றான் அரிந்தனன் அரியவேண்டி. 356

வ—ம்:-இருப்பாயென்று அவளை அனுப்பி தான் பூண்டிருக்கும் ராஜபூஷணங்களை விலக்கி தவக்கோலம்பூண்டு விளங்கினாள். இவையுணர்ந்த அமரர்கள் பூமாரிபெய்ய அந்த இளமகள் தவச்சாலையைநாடி நடக்க இவையுணர்ந்த பிரம்மபுத்திரனாகிய நாரதர் இக்குழந்தையின் மனநிலை அரியவேண்டி

செங்கையில் வீணையோடு ஜெயஜெய ராமாவென்று
அங்கவ னடைந்தபோது அரிந்துவிண் ணரக்கர்சிரி
எங்குற்றாய் நில்லுமென்று இயம்பியே தடுத்தகாலை
தங்கியம் முனிவன்கூறும் தவத்திருங் கன்னிதம்மை. 357

வ-ம்:-ஆகாயமார்க்கமாய் ராமநாமமோதி கரத்தில் வீணையுடன் வரக்கண்ட ராக்ஷதர்கள் தடுத்து நில்லுமென்றதட்ட அவை யுணர்ந்த அருந்தவமுனிவர் அய்யா! உங்கள் அரசபுத்திரியையும், அவள் செய்யப்போகும் தவத்தையும்

கண்டுநான் மகிழவந்தேன் கடிந்திடா திருப்பீரென்ன
அண்டரும் வரவொண்ணாது ஆகையால் முனிவரேரே
விண்டயெம் முரைக்கிணங்கி விண்மிசை மறைந்துபோவீர்
உண்டிவை யுருதியென்ன வுளந்திகைத் தவனுங்கூறும் 358

வ-ம்:-கண்டு மகிழ்வதற்காய் வந்த என்னை தடுக்காதீர்களென அரக்கர்சிரி, ஓய்! முனிவரே! தேவர்முதல் மற்றயாவரும் இம்மாளிகை நோக்கி வரக்கூடாது. ஆகையால் நீர்வந்தவழியே செல்வீரெனக்கேட்ட அருந்தவமுனிவர் திகைத்து

துரந்தவ னன்றியானுந் துவண்டவன் தேகமிக்க
தாந்தனை யுணராவாய்மை சாற்றிநீர் தடுக்கொணாது
அரந்தனை நினைப்பீரென்ன அதட்டிவா ளரக்கர்சிரி
உரந்தனை யவன்பால்காட்ட உற்றவை யுணர்ந்துமாது. 359

வ—ம்:-ஐயா! நான் யாவையுந்துரந்து தேகமிக்க மெலிவடைந்தவன், என்னுடைய இயல்பு இன்னதென்பதுணராமல் தடுப்

பது தர்மம் அல்லவே என்றிட ராக்ஷதர் சினந்து முனிவரிடத்தில் தங்கள்பலத்தைக்காட்ட துணிந்ததை அரசபுத்திரியாரறிந்து

அருகுறை யரக்கன்றம்மை அழைத்துநீ விசும்பிலேகி
பெருகிய தவத்தின்வள்ளல் பிர்மமா முனிவன்றம்மை
திருகிய அரக்கர்வாது செய்தனர் செய்யாவண்ணம்
குறிகிநா மழைத்தோமென்னக் கூட்டுவாய் கடிதிலென்றாள். 360

வ—ம்:-சமீபத்திலிருந்த ஒரு ராக்ஷதனை நோக்கி, நீ வேகமாய் ஆகாயமார்க்கம்சென்று நமது கோட்டையைநாடி வரும் பிரம்ம புத்திரராகிய நாரதமுனிவரை ராக்ஷதர்கள் தடுத்திருப்பதை விலக்கி அன்னவரை நாமழைத்ததாக அழைத்துவருவாய்.

என்றவன் விசிம்பிலேகி இன்னல்செய் யவுணர்தம்மை
ஒன்றற விலக்கியன்னோன் உயர்முனி பாதம்போற்றி
இன்றவ ரறிந்திடாமல் இப்பிழை புரிந்தாறத்தால்
கன்றிடா திருப்பீரித்தை காவல னீன்றகன்னி. 361

வ—ம்:-என்றிட வணங்கியெழுந்து ராக்ஷதன் ஆகாயத்தில் சென்று முனிவரைவலிக்கும் வீரர்களைவிலக்கி இவர்கள் அறியாது செய்தபிழை பொறுப்பீரென்று தவமுனி தாள்பணிந்து, ஐயா! எங்கள் அரசபுத்திரியார்

அறிந்தெனை விடுத்துஉம்மை அழைத்தனள் வருதியென்ன
பொருந்திய முனிவன்சிந்தை பொலிவுற மாடம்நண்ணி
இருந்தவர் தொழுதுநிற்கும் இயல்பெருஞ் சிறுமிவாள்கை
தெரிந்தவள் தன்னைபோற்ற தேன்மொழியெழுந்துஅன்பாய் 362

வ—ம்:-உம்மை யிவர்கள் தடுப்பதைவிலக்கி அழைத்துவரும்படி கூறினார்கள் என்றிட முனிவன் மகிழ்ந்து வேகமாய் அந்த மாளிகைக்குள்செல்லவும் அங்கே அனேக ராக்ஷதர்களும் தேவர்களும், மானிடவீரர்களும் சூழ வணங்கிநிற்க வாளும் சிறுமியைக் கண்டு தவமுனிவரஞ்சி பணிந்திட, அந்த இன்சொல்லுடைய மதனையெழுந்து

வருந்திரு மாலுனக்கு வளங்குவார் கருணையிங்கு
இருந்தவ சென்னப்போற்ற இயல்முனி மகிழ்ந்துஅம்மா
தருமுந்தன் சேவைகாண சஞ்சல மடைந்தேன்வந்து
பொருமென அவளுந்தேற்ற புகள்முனி யிருந்துகூறும். 363

வ—ப்:-ஐயா! லோகநாயகனுகிய பெருமானுமக்கு கருணைசெய்வார். இவ்வாசனத்தில் அமருமென்றச் சிரும்பவர் தாள்போற்ற தவமுனி மகிழ்ந்து. அம்மா! இன்று உன்னைக்காணுவதற்காய் வந்து அரக்கரால் மிகுந்த கஷ்டமடைந்தேன் என்ன கன்னிகை இன்சொல்கூறி அவரைதேற்ற முனிவர் மீண்டுங்கூருவார்.

அரிந்துமுக் காலத்தோடு ஆகமம் பலவும்நன்றுப்
தெரிந்தநீ தவங்கள்செய்து திருமகள் கேள்வன்றன்னை
அரிந்திட நினைந்தாயென்று அடவிசேர் மயனால் கேட்டேன்
பொருந்திடா தினைந்தையென்று புகலவந் தடைந்தேனிங்கு 364

வ—ம்:-அம்மணி! திரிகாலவர்த்தமானந் தெரிந்தும், அனேக கோடி ஆகமங்களும் வோதாதுணர்ந்த நீ லோகனுயகனுகிய எம்பிரானையரியவேண்டி தவம்புரிய நினைந்ததாய் வனத்தில்வந்த மயனென்னும் சிர்பி கூரக்கேட்டேன். பால்மணம் மாராத தங்கள் தேகம் தவவாதைை தாங்காதென்று கூருவதற்காகவே வந்தேன்.

என்னவள் நகைத்துநீரும் இளந்தையா யிருந்துசெய்த
மின்னிய தவத்தாலிவ்வார் விளங்கினீ ரரிந்திடாமல்
பின்னிலே கோளுங்கொண்டீர் பேசிடா தகன்றுகானில்
முன்னவன் பதத்தைபோற்றி மூள்குவீர் தவத்திலென்ன. 365

வ—ம்:-என்றிட அரசபுத்திரி நகைத்து, அய்யா! தாங்களிளமைகாலந்தொட்டு செய்ததவத்தால் அல்லவா மேன்பாடுற்றீர் அதை தாள்த்துவதற்கு கோழுரைக்கும் தொழிலை பெற்றீர் முனிவா! தாங்களதைவிடுத்து பரந்தாமனை நினைந்து வனம்சென்று தவம்புரிவீர்.

அன்றவை யிருடிகேட்டு அருள்நகை புரிந்துஅம்மா
குன்றிலைத திடம்ராஞ்சூழ்ந்த கொள்கைதா னுனைத்தடுத்து
இன்றுயா னுரைத்தயாவும் இப்பிளை பொருத்து யிங்கே
என்றுநான் வரினுமின்னல் இருந்திடா திருக்கசெய்வாய், 366

வ—ம்:-என்று கூரக்கேட்ட முனிவர் நகைத்து அம்மா! மலையுடன் மேகமானது எதிர்த்து சூழ்ந்ததுபோலாகும் உன்னுடன் நான் தர்க்கம்புரிவது. ஆகையால் கருணைசெய்து தங்களைக்காண

எந்தக்காலம் நான் வந்தாலும் இங்குள்ளவர்களால் கெடுதி விளையாதிருக்கும்படி கருணைசெய்வாய்.

என்றிட அவளும்போற்றி இருடிநீ ரிசைத்தவாறு
கன்றிடா தடையவிங்கே கருதுநாள் கார்த்துயிர்போர்
ரின்றுபோல் தடுத்திடார்கள் ளென்னவே யவர்கட்கெல்லாம்
ஒன்றுர உரைக்ககேட்டு உயர்முனி விசும்பில்போனுர். 367

வ—ம்:-என்றிட கன்னிகை அவ்வரை நமஸ்கரித்து தாங்கள் நினைத்தபோது இங்குவரலாம் இன்றுபோல் என்றுநேராதென்று அங்குள்ள வீரர்க்கும் இதைக்கூறக்கேட்ட முனிவர் விடைபெற்றுக்கொண்டு ககனமார்க்கமாய் மறைந்துபோனுர்.

அன்னவ ரகன்றபின்னே அருந்தவ மாடம்புக்கி
கன்னியெவ் வுருவுந்தானும் கார்நிர கமலகண்ணன்
தன்னையே மனத்திலுன்னி தாழ்மிசை யிருந்தோர்தாழை
முன்னூரு முருவிவிட்டு முதல்வியும் முதுந்தாவென்று 368

வ—ம்:-அப்பால் அரசபுத்திரி தவச்சாலைசென்று எவ்வுருவுந்தானுகவிளங்கும் நீலமேகவண்ணனை நினைந்து ஒருபாதத்தில் நின்று மற்றொரு பாதத்தை முன்பாத முளந்தாளில் ஊன்றி ஸ்ரீ ராமாவென்று

இருகரம் விரித்துவிண்ணில் இருவிழி யிமையாளாகிக்
கருவிழி கலங்கிடாது கன்னிகை திடந்தான்பூண்டு
ஒருபக லிறவுமென்று வுறையுணர் ருணர்வுமற்று
சிருமியூண் துயில்வெருத்து செய்தவம் சிரந்ததண்மை. 369

வ—ம்:-இருகரத்தையும் ஆகாயம்நோக்கி விரித்து கண்ணிமையாது மேர்பார்வையுடன் விழிகலங்காது, பகலிரவென்று தெரியாது, ஊணுரக்கம்விட்டு, உணர்வற்று, ஐம்புலனடக்கி, அஷ்டாக்ஷரபொருளையெண்ணி சிருமிபுரிந்த தவத்தின் சிறப்பை

கற்றவ ரரிதுகூறக் கண்டவை கண்டவண்ணம்
நற்றவ முனிவரேனும் காட்டிடை யரக்கரேனும்
மற்றுள்ள மன்னரேனும் மண்ணுளார் யாவரேனும்
சுற்றுமைம் பூதமேனும் தோகைபோல் வீரம்பூண்டு. 370

வ-ம்:-கற்றரிந்த மேதாவிகளும், கண்ணுலதை பார்த்தவர்களும் அதன்பெருமை கூறமுடியாதென்ருல் நாம் எவ்விதமுரைப்போம் ஆனல் நன்மை பயக்கும் தவமுனிவரேனும் உலகாளரசரேனும் மற்ற ராக்ஷதரேனும் இன்னும் யாவரேனும் இவள்போல் வீரம் பூண்டு

இருந்திட லரிதேயென்று இயம்பலாம் மிருக்குநாழில்
பொருந்தின தவளேச்சூளப் பொலிவுருந் தவத்தின்வன்னி
தெரிந்திவை யுரைக்கும்வண்மை தேரிலோம் மிவையிருக்க
வருந்தவம் வளக்கவந்த மைந்தனின் செயல்கேளய்யா. 371

வ—ம்:-இருப்பதரிதென்று கூருவோம். அவ்விதமிருக்கும் நாளில் அக்கன்னிகை தவச்சாலையைச் சுற்றிலும் தவாக்கினியானது கொழுந்துவிட்டெரிய அதன் மத்தியிலவளிருக்க இனி உலகத்தில் தவம் வளர்ப்பதற்கவதரித்த துருவன் செயலோதுவோம்.

## துருவன் கருடபகவான் உதவிபெறல்.

மன்னரின் மன்னனுகி வளநக ரயோத்தியாண்டோன்
தன்னுயர் தவத்தில்வந்த தனயனும் வனத்தைநோக்கி
அன்னையின் சோபங்கண்டு அகன்றவ னகன்றகாலே
முன்னவன் கருணைவந்து மூண்டது மொழியக்கேண்மோ. 372

வ—ம்:-ஆயிறத்தேழு முடியரசர் தொழும் சக்கிரவர்த்தியாய் அயோத்திவாழும் அரசன் தவத்துதித்த சிருவன் தாய் சோபமுற்றதை கண்டு. இதுதான் சமயமென்று அரண்மனைவிட்டு வெழிவர அங்கேபகவான்கருணை கிடைத்ததன்மை கேள்வேந்தா

அருகுறை கருடன்றம்மை ஆதவன் நோக்கி நீபோய்
துருவனு மயோத்திவிட்டு சூள்வனம் தம்மைநோக்கி
வருகின்ருன் நம்மைக்காண மன்னனும் மற்றுளாரும்
தருந்தவப் பெருமைமாற்ற தனயனை துயர்வாரத்தால். 373

வ—ம்:-வைகுந்தபதியில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமன் நாராயணன் அருகிருக்கும் கருடனைநோக்கி, நீ அயோத்தியாபுரி சென்று அங்கே நம்மைக்காணுவதற்காய் தவம்செய்யுங் கருத்துடன்

வனம்நோக்கிவரும் துருவனை அவன் தாய் தந்தை முதலானவர் தடுத்து அழைத்து போவதற்கு துபர்கின்றார்கள். ஆனதால்

தேடுவோ ரரியாவண்ணம் செய்துநீ மாய்கையாலே
கூடிடு மிமையசாரல் குன்றினை யடுத்துதளல்
காடெனுங் காமியத்தில் காளைபை விடுத்துப்பின்னே
நாடெனக் கலூலன்றானும் நாரணன் னடியைபோற்றி 374

வ—ம்:-நீ வேகமாப்சென்று அவனைமயக்கி ஆகாயமார்க்கமாய் தூக்கி ஹிமாசலமடுத்த காமியவனத்தில் விட்டு அவனைதேடித் துயரும் மித்திரர்கள் அரியாவண்ணம் மாய்கைசெய்து வருவாய் என்னும் பகவான் பாதத்தை கருடன்பணிந்து

அன்றவன் விசும்பின்மீது அயோத்திரா டதனைநோக்கி
சென்றனன் கண்டயாரும் சேவடி பணிந்திரிப்ப
நன்றாரும் வனத்தைநாடி நல்லதாய் மனையைவிட்டு
சென்றிட வாயல்வந்த செம்மலின் மகவைக்கண்டு. 375

வ—ம்:-அயோத்தியாபுரிஸ்ப நோக்கி கண்டவர்வணங்க ஆகாய மார்க்கமாய்சென்று வனம்செல்வதற்காய் தாய்மனை வாயல்வந்து நிற்கும் பாலனைக்கண்டு

அரிவுயர் கலூலன்றானும் ஆதவன் யிவனேவென்று
துருவனை மயக்கித்தாவி தூக்கினான் யாருங்காணார்
பெருநகர் நிலைகலங்க பேர்ந்தன னிருண்டகானில்
சிருவனு மரியாவண்ணம் செய்தவன் கடிதிசென்று. 376

வ—ம்:-ஸ்ரீயம்பதியே யிவ்வுருவானாரோவென மயங்கித்தேரி அவனும் மற்றவரும் அரியாதிருக்கும் சூழ்ச்சிசெய்து பாய்ந்து தன்புயத்தில் பாலனைத்தூக்கி அயோத்தியாபுரியும் நிலைகலங்கும் படியான வேகத்தோடு வனத்தைநோக்கிச் சென்றார்.

அருள்முகில் தவளும்சாரல் அடுத்தகா மியவனத்தில்
சிருவனை தருநிழலில் சேர்த்தங்கு கொடிகளோடி
வருந்தளே பாப்பியத்தில் வைத்தனன் றயிலும்வண்ணம்
உருவுருஞ் ஜோதியாலே வுயர்வன வணப்புங்கண்டு 377

வ—ம்:- சென்றவர் மேகங்கள் சூழ்ந்த மலைச்சாரலையுடைய காமியவனத்தில்வந்து ஓர் விருட்சத்தினடியில் தளை கொடிகளை பரப்பி பாலனை அதில் வழர்த்தி துயிலும்படிசெய்து அவ்வனம் முற்றும் இவன் மேனியின் பிரகாசம் வீசக்கண்டு

அன்னவன் மகிழ்ச்சிபூண்டு ஆரணன் றன்னைப்பாலன்
தன்னுரும் விழியால்கண்டு தன்பதி மீளும்மட்டும்
மன்னனு மயோத்திவேந்தும் வளநகர் குடிகள்யாரும்
இன்னவன் மாமனேனும் இலங்கைவா ளரக்கரேனும். 378

வ—ம்:-கருடபகவான் மகிழ்ந்து ஸ்ரீமன் நாராயணனை இப்பாலகன் கண்டு அயோத்தியாபுரி திரும்பும் நாள்வரை இவன் மாதா, பிதா, மாமன்முதல் சுற்றத்தாரும், இலங்கையரசனும், அவனைச் சேர்ந்தவர்களும்,

வருங்கவிக் கணங்களேனும் மற்றுறை சுற்றமேனும்
சிறுவனை யரியாவண்ணம் செய்குவாய் முகுந்தாவென்று
பெருவர மவர்குலைக்கி பெம்மன்வா ழுலகம்சேர்தான்
துருவனுஞ் சோபம்மாறித் துடர்ந்தனேர் நெறியைபற்றி. 379

வ—ம்:-கிஷ்கிந்தாபுரி அரசனும், அவனைச்சேர்ந்த வீரர்களும், காணாதிருக்க கருணைசெய்வாய் பகவானே! யென்றாசீர்வதித்து மறைந்துபோனார். அப்பால் அனேகநாள் வனத்தில் நடந்துவந்து துயின்றதாக நினைவைக்கொண்டெழுந்து பாலகன் அங்கு தெரியும் வோர் வழியைபற்றி

## துருவனுக்கும் நாரதருக்கும் தர்க்கம்.

அன்றுறை வனத்திலன்பாய் அரிகரி ராமாவென்று
சென்றனன் சென்றகாலை செழித்திடுந் தோற்றம்யாவும்
ஒன்றுற ராமாவென்ன வோதிடும் வோசைகேட்டு
நின்றிலான் நடந்தானந்த நீள்வனந் தன்னில்பல்நாள். 380

வ—ம்:-அவ்வனத்தில் ஹரிஹரி ராமாவென்றுகூறி சென்றான். அவ்விதம் செல்லும்போது எதிரிருக்கும் தாவரமுதல் சகல தோற்றங்களும் ராமாராமாவென்றிட இவை யாவுமுணராது தான் கொண்ட கருத்தினுறுதியோடு பலநாள் நடந்தான்.

காற்றுடன் மழைதானென்றுங் கருதிடான் வெயில்நாளென்று
சாற்றுவு மரியானெங்குந் தங்கிலான் பனியையெண்ணான்
நாற்றிசை யுலகுகெல்லாம் நாயக னொருவனென்று
சாற்றியே தனித்துபோனான் சருகுடன் கனிகாயுண்டு. 381

வ—ம்:-இப்படி நடந்தநாளில் மழைநாளென்றும், வெயில்நாளென்றும், பனிநாளென்றும் கருதாது காய்கனி சருகருந்தி நாற்றிசைசூழும் உலகுபுகள் பரந்தாமன் துணையென்ற திடத்தோடு தனியாய் சென்றான்.

தரும்பல னயோத்திவேந்தன் தனையனின் கருத்துயாவும்
அரிவோம்நா மென்னவுண்ணி ஆரணன் பஜனைபாடி
பெருமைசேர் வீணையோடு பெரும்வனந் தன்னில்பாலன்
வரும்வழி வந்துநின்றான் வரமுயர் நாரதன்றான். 382

வ—ம்:-அந்தநாளில் யாழ்வல்லவனாகிய நாரதமுனிவன் இப்பாலகன் வரும்வழியில்வந்து அயோத்தியரசன் புத்திரனாகிய இவன்கருத்தையும், திடத்தையும் அரிவோமென்று எதிர்மரித்து நின்றார்.

நின்றிடு முருக்கள்யாவும் நிருபன்சேய் கருதாதொன்றை
யன்றங்கு நினைந்துசென்ற அன்பினை முனிவன்கண்டு
சென்றவன் றனைத்தடுத்து செம்மலே துருவாஅய்யா
இன்றுநீ யிருண்டகானம் எப்படித் தனித்துவந்தாய். 383

வ—ம்:-எதிரிருக்கும் உருக்கள் வொன்றையும் கருதாது தனிமுதல்வனாகிய வொருவனை நினைந்து வேகமாய் செல்லும் பாலனை முனிவர்தடுத்து ஹே! அரசபுத்திரா! ஐயா! நீ இந்த இருண்டவனத்தில் தனித்து எப்படி வந்தாய்?

அன்னையோ டப்பனம்மான் அலைந்திட விடுத்துநீயும்
என்னதான் கருத்துள்ளுண்ணி யெய்தினாய் யென்னப்பாலன்
அன்னவ னடியைபோற்றி அருந்தவ முனிவீர்யானும்
முன்னுமா மரைகள்தேடும் முதல்வனை யறியவேண்டி. 384

வ—ம்:-அப்பனே! உன்னைக்காணாமல் உன் தாய், தகப்பன், மாமன் முதலானவர் வனமெலாமலைந்து யேங்க, என்ன கருத்

தோடு இவ்வளவுதூரம் நீ வந்தாயென்னும் தவமுனிவரை பாலகன் வணங்கி, ஐயா! அனேகங்கோடி வேதங்கள் தேடும் ஆதி முதல்வனை

வந்தன னிமையசாரல் வரையினை யடுத்துநின்று
சிந்தனை யடக்கியோகம் செய்கருத் துடனேயென்ன
அந்தநல் முனிவன்றானும் அடிக்கடி நகைத்துநோக்கி
எந்தநா ளறிவாய்ஜோதி இருக்குமோ ரிடத்தைஅய்யா. 385

வ—ம்:- ஸ்ரீ பிரணவசொரூபமறியவேண்டி ஹிமாசலமேகி யோகம்புரிய நினைந்தேன். என்றிட நாரதமுனிவர் தன்னிருபுயம் குலுங்க நகைத்து நீ தனித்து அந்தயிடத்திலிருந்து பிரணவ சொரூபத்தை யெந்தகாலமறிவாய்.

அறிவுயர் முனிவரேரே அறிந்திலா துரைத்திரேனோ
பருவரை யடுத்துயானும் பரமனைக் காணும்மட்டும்
பெருந்தவம் முயல்வதன்றி பின்னைவேர் கருத்தொன்றில்லை
இருந்திடுஞ் செல்வேனென்னும் இளைஞ்ஞனை முனிவன்பார்த்து.

வ—ம்:-ஹே! தவமுனிவீர்! தாங்கள் மர்மந்தெரியா துரைக்கின்றீர்கள் நானந்த ஹிமாசலமிருந்து ஆதிபாண்டரங்கனை அறியும் நாள்வரை தவம்புரிவதன்றி வேர்கருத்தொன்றில்லை. நீரப்பால் விலகுமென்ன நாரதரவனை நோக்கி,

அய்யனே அரசவாள்வில் அறுசுவை யன்னமுண்ட
பையநீ பசிநோய்பற்றில் பலம்விடும் ஆக்கைமிக்க
மெய்யிது வருவாய்யென்பின் மேன்மைசே ரயோத்திநாட்டில்
லய்யனே வுனைவிடுத்து யான்செல்வே னமரர்நாடு. 387

வ—ம்:-ஹே! குழந்தாய்! ராஜபோகத்தில் அறுசுவை பாலன்னமுண்ட நீ இவ்வனத்திலலைந்தால் பசிநோய்பூண்டு தேகமிளைக்கும். ஆகையால் என்னுரை தடுக்காதென் கூடவே அயோத்தி வருவாயாகில் உன் தாய்மனையில் உன்னைவிட்டு நான் அமராபதி செல்லுவேன்.

வருவனோ வனத்தில்யானும் வன்பசிக் குணவுயெண்ணில்
ஒருவனே வுதவும்யாவும் உரைத்திடா திதுகள்நீரும்
பெருவன மகனுமென்று பேசிடப் பெருமையுள்ள
ஒருவனும் யாரோஇத்தை வுரையென வுரைத்தகாலை. 388

வ—ம்:-ஐயா! தவசிரேஷ்டா! பசிநோயையும், தேகவாதையும் கருதினால் இவ்வனத்தில் நான் வருவேனா? சகலகோடி ஜீவபேதங்களுக்குணவூட்டும் பரந்தாமன் என்னை ரக்ஷிப்பான் நீர் வீண்வார்த்தை கூறாதகலுவீர் அப்படியானால் அப்பரந்தாமன் யார்? ஹே! துருவா! அதை விபரமாய் கூறுவாய்.

ஏதுநீர் ரறியாதேனோ இருடியே உலகுக்கெல்லாம்
ஆதியாய் சராசரங்கள் அனைத்தினை படைத்துகார்க்குஞ்
ஜோதியாஞ் சுடர்வடிவாய் துலங்கிடும் பிரணவத்தின்
நீதியா மரியென்றோதும் நின்மலன் றானே அய்யா. 389

வ—ம்:-ஏன்? முனிபுங்கவா! இந்த உலகுக்கெல்லாம் தலைவனாகவும், சராசரங்களனைத்தையும் படைத்துக் காக்கும் பிரணவசொரூபமான ஸ்ரீமன் நாராயணனென்னும் நின்மல வஸ்துவை கேள்விப்படாதவருண்டா?

ஹரியினை யாதியென்றும் அரைந்தனை யதற்குமேலாம்
பெரியவன் கணேசனென்றும் பிர்மமே யவஃறுனென்றும்
தெரிமறை யாவுங்கூருஞ் செயலினை விடுத்தாயேனோ
குருமுறை யிதுவாய்கொண்டு கூடுவாய் தவத்திலென்றான். 390

வ—ம்:- அப்படியானால் ஹே! பாலகா! அந்த ஹரிக்குமுன்னமையான பிரணவசொரூபமாய் கணேசனிருப்பதை மரந்துபோனாயா? ஆகையால் அதைவிடுத்து கணேசனே பிர்மசொரூபமென்னும் என்வாக்கை குருமுறையாய் எண்ணி தவம்புரிவாய்.

அம்முறை கேட்டுமீண்டும் அரசன்சேய் சினந்துசீரி
இம்முறை விடுத்துநீரும் இயல்மறை யுரைக்குமந்த
செம்முறை யரியீர்யாவும் செப்புவேன் விபரமாக
எம்முறை கேட்டுஅவ்வார் இருடியே நடப்பீரென்றும். 391

வ—ம்:-என்ன இருவிழிசினந்த சிருவன் அவனைநோக்கி ஐயா! தாம்கூறும் முறைவிடுத்து வேதங்கள்யாவும் முறையிடும் தன்மை கூறுவேன். அவையுணர்ந்து பரிசுத்தமாய் நடப்பீர்.

அரிமுன்னே கணேசன்றம்மை அமைத்ததன் முன்னேநோக்கு
பெருவெளி தோன்றுமத்தை பித்தனென் றுரைக்கும்வேதம்
உருவரும் மூவர்தம்மை வுரைப்பனர் மூர்த்தியென்று
பெருவெளி யுதித்ததெங்கே பிரணவ மதுதானய்யா 392

வ-ம்:-அதாவது, ஹரிக்கு முதலெழுத்தாக கணேசனை அமைப்பதால் அவரே பிரணவமென்று மர்மம் தெரியாது கூறுகின்றீர்கள் அந்த விபரங்கேளும். ஹரிக்கிமுன் கணேசனை அமைத்து அப்பால் நோக்கும் பேகவெளிதோன்றும். அவ்வெளிதான் பித்தனாகிய பரமேஸ்வரன் இவை மூன்றும் மும்மூர்த்தி சொரூபம். இந்த பரமேஸ்வரனுதித்த பரவெளிபிறந்தது எங்கே? அதுதான் பிரணவம்.

ஆவென வுதிக்கும்ஜோதி அய்யனே முடியுமிப்மிம்
ஆவெனப் புலன்திரக்கும் அப்படி யிம்மில்மூடும்
ஆமிது வொடுக்கந்தோற்றம் அதர்கெவை யாதிகாண்பாய்
ஆமிதே பிரணவந்தான் அன்னிலை யரிவாய்தேவா. 393

வ—ம்:- ஐயா! இதற்குமூலமான 'ஆ' வெனும் அக்ஷரத்தில் ஜோதிதோன்றி பிண்டசொரூபமாய் 'இம்' என்ற அக்ஷரத்தில் முடியும் இதையே தாங்கள் கூறுங்கால் ஆ வென்றால் வாய் திரக்கும் இது உதயம் இம்மென்றால் அவ்வாய் மூடும் இது முடிவு இதுதான் முடிவுதோற்றமென்பார்கள் ஆ வென்பதின் ஆதியாய் திரப்பது யெதுவோ அதுதான் பிரணவம் ஹே! தேவா!

இருளிடை சுடர்தான்தோன்றி யெழுந்ததே வெழிதானவ்வார்
அருளுரு மரியாமத்தில் அயனரன் னுதயமாகி
வரும்பெரும் வோம்மென்றோதும் வாசகம் முடிந்தவாரு
பெருவெளி சுடர்தானென்றாய் பிரந்தது இருளிலன்னே. 394

வ—ம்:-அவ்வெழிக்கி மேலுலவும் இருளிலிருந்து சுடர் தோன்றி பரவெழி தெரிந்து பிண்ட சொரூபமானது இவையில் வெழிக்கிமேல் கடந்து நின்றதெவோ அதுதான் ஆதிபாண்டுரங்கனாகிய பகவான் அவனிடமிருந்தே ஹரனயனுதித்தார்கள் இதற்கோர்சாக்ஷியாவது ஹரிஓம் என்ற வாக்கியத்தில் ஆ வென்றதற்கு புலன் பூராவும் திரக்கும் ஓம் யென்றால் நடுவில்நின் றொலிக்கும்

மற்றுள்ள அக்ஷரங்களும் அப்படியே இவைவிட்டு ஓம் ஹரி என்று சொல்லுவார் உலகிலுண்டோ? ஆகையால் ஓம் யென்றது எப்படி பிரணவமாகும்? ஐயா ஹரி யென்ற பிரணவ சொரூபத்திலிருந்தே சகல சராசரமு முதிக்குமென்பதை திடமாய் நம்பும்

அப்படி யரியோமென்னும் ஆதியும் அந்தந்தானுப்
இப்படி முன்னும்பின்னும் இயலய னரனைத்தாங்கி
அப்படி யுலகங்கார்த்து யாவையுந் தனதுள்ளாக்கி
தப்பிடா திருக்கும்ஆதி தலைவனென் றுலகுகூறும். 395

வ—ம்:- அன்றி ஆதியான தன்மையுடன் வேதத்தின் கடையில் ஹரி யென்ற நாமம் பூண்டிருப்பதால் தோற்றமும் முடிவுந்தானு ஞன் என்பது விளங்குகின்றதா? இன்னும், முன்னும் பின்னும் தானிருந்து இடையில் பரவெழியான ஈசனையும் ஊமையான சொரூபங்கொண்ட அயனையும் தாங்குவதுடன் இவ்வுலகமுற்றுக் கும் தந்தைதாயாரும் ஆதிபாண்டுரங்கனே பிரமமென்றரி, அரி,

அருமறை யரிமுன்னென்று அவனியோ ரோதிகர்கும்
பெருமறை மரந்தோபோனீர் பெம்மனை யன்றிதெய்வம்
ஒருமறை யுரைத்ததுண்டோ ஓதுங்குவீ ரவனைநாடி
பெருவரை யிருந்துகண்டு பிந்திநா னயோத்திநாடு. 39

வ—ம்:- ஐயா! கல்விகற்கும் என்போன்ற இளமக்களும் ஹரி யென்றோதி கர்ப்பரே அதுவுமாமரந்துபோனீர்கள் மாதவனன்றி வேரு தெய்வம் இருப்பதாய் எந்த வேதமும் கூருவதுண்டா? ஆகையால் வழிவிட்டு அகலுவீர் நான் ஹிமாசலம்சென்று தவம் புரிந்து அவனருள் பெற்றபின் அயோத்திநாட்டுக்கு

நன்றுர அடைவதன்றி நான்வரே னிடையிலென்று
அன்றவ னுரைத்துப்பின்னே யகன்றனன் முனிவன்றானும்
சென்றனன் திகைத்துவோராய் சிருவன்போ லரிவுமிக்கார்
என்றுமே யரியேனென்ன இசையுடன் மரைந்தான்விண்ணில், ()

வ—ம்:- வருவதன்றி இடையில் வருவேனென்று எண்ணுதீரென்று அவரைவிட்டு விலகிச்செல்லவும் அத்தவமுனிவர் திகைத்து இச்சிருவனைப்போல அரிவுடையாரை காணுவதரிதென்று ராம நாமமோதி ககனமார்க்கமாய் சென்றார்.

## வல்லரக்கன் சாபம் நீங்கல்.

இருண்டதவ் வனங்கள்யாவும் இரவிமேல் றிசையில்போனான்
மருண்டிடா தொருவனன்றி மதளைவேர் கருதானாகி
உருண்டிடுங் கங்கையாற்றின் வோசைக ளன்றிவேராய்
வெருண்டிட வொழியுமற்று விளங்குங்கான கத்தில்போனான். ()

வ—ம்:-இப்பாலகன் அவ்வனத்தில் வேகமாய்நடக்க சூரியன் மேற்றிசையடைந்தான் எங்குமிருள் சூழ்ந்தது கங்கையாற்றின் வோசையன்றி வேறொரு வோசையற்றிருக்கும் அவ்விடத்தில் பரந்தாமனையே நினைந்துசென்றான்.

தினமிரு வேளைசெய்தான் செளிப்புருங் கனிகாயுண்ணல்
தனையொரு முறையுமாக்கித் தவிர்த்ததை சருகேயுண்டான்
இனமதை விடுத்தோர்காலம் இனியநீர் பருகியங்கே
தினமவன் கருணையெண்ணி சென்றனன் சிறுவன்றானே. 399

வ—ம்:-இவ்வித திடத்துடன் நடந்த பாலன் தினமிருவேளை காய்கனி புசித்து அதை ஒருவேளையாக்கி அதையொழித்து ஓர் வேளை இலையருந்தி அதையும்விட்டு சுத்தஜலம் ஓர்வேளை பருகி பரந்தாமனை எண்ணி எங்குந்தங்காது நடந்தகாலத்தில்

அங்கொரு பவளக்குன்றின் அரிகிலோர் குன்றமென்ன
தங்கும்வா ளெயிற்றரக்கன் தரையுளார் யாவரேனும்
அங்கவன் விழிநேர்பட்டால் அளிவரே வானுளோரும்
இங்கவ விருப்பதாலே யெய்திடா ரெவருமென்றால். 400

வ—ம்:-அங்கே சமீபத்திலிருந்த பவழமாமலையில் தானொரு மலையொப்பாக இருந்த வாளரக்கன் தன் கண்முன் யெவர் வரினும் அன்னவரை அழித்துண்பதே விரதமாய்கொண்ட பாதகனா னதால் அவ்வனத்தை தேவர்முதல் மற்ற யாவரும் நெருங்க அஞ்சுவார்கள்.

என்னவன் பெருமைநம்மால் இயம்பிட தரமோதேவர்
தன்னெதிர் வரிலோவாரி தன்பசிக் கருந்துமன்றி
பின்னவன் மீளவொட்டான் பேரிரு ளென்னுந்தேகம்
அன்னவ னடைந்தோனண்டம் அழியினு மளியாநெஞ்சன். 401

வ—ம்:-இதில் முக்கியமாக தேவவகுப்பினர் யாரும் அவனெதிர்வந்தால் மீழுவதரிது அழவிடமுடியாத பெலம்படைத்த அவன் தேகமோ கரிய இருளொப்பாகவும் அண்டமிடிந்தாலும் அஞ்ஜாத நெஞ்சொறமும் படைத்து கோரதந்தமுடன்

கொடியவன் விடங்கள்கக்கும் குரலினன் பசியாலேங்கி
நெடியகா னகத்திலோர்பால் நின்றனன் நின்றகாலை
முடிபுனை அயோத்திமன்னன் முன்புசெய் தவத்தில்வந்து
படியுளோர் தினந்துதிக்கும் பாலகன் துருபன்றானும். 402

வ—ப்:-காலகூட விஷத்துக்கு சமமான குரல்பெற்று அவ்வனத்தில் திரிந்து மிருகம்பூராவும தனக்குணவாக்கி பின்னும் பசியாலேங்கி வோர்பால்நின்ற பாதகனுக்கெதிராய் அயோத்திமன்னன் தவத்திலுதித்து உலகோர் துதிக்கும் பாலகனாகிய துருவன் .

அன்னவ னிருக்கைபுக்க அரிந்தவன் மகிழ்ச்சியோடு
தன்றுடை தட்டிநின்று தனையனை மரித்துச்சீரி
என்னுயர் பசிக்குணவாய் இவ்வனம் மடைந்தாய்வாடா
சின்னவா யென்னக்கேட்டு செழுந்தவக் கோலமுற்ற. 403

வ—ம்:-வந்தான் அவனைக்கண்ட வாளரக்கன் தன் றுடைதட்டி ஆர்பரித்து என் பசிக்குணவாய் இவ்வனம்வந்த சிருவா! வாடா வென்றதட்டி வளிமரித்தான் அதை தவக்கோலங்கொண்ட

துருவனு மவனைநோக்கித் தூலமோர் வரையொப்பாக
பெருவுரு வுடையாய்நீயார் பேய்கள்வாள் வனத்திலவ்வார்
ஒருவனாய் யிருப்பதேனோ வுரையந்த வொருவன்றம்மை
திருவிழி தன்னால்காணச் செய்தவம் நினைத்துவந்தேன். 404

வ—ம்:-துருவனுணர்ந்து அவனைநோக்கி மலையொத்த தேகம் படைத்த நீயார்? பேய்களுலவும் இவ்வனத்தில் அவைபோன்று தனியாய்யிங்கு இருப்பதின் காரணமென்ன? நானோ ஆதிபாண்டுரங்கனை காணுவதற்கு தவம்புரிய நினைந்து வந்தேன்.

என்றிடச் சினந்தரக்கன் யென்னெதி ரஞ்சிட [illegible]மல்
நின்றதும் ம[illegible]றிவாது நிகள்தினைப் பசிநோயு[illegible]ர்
இன்றது மாரும்வண்ணம் இமைப்பொழு துன்னைவாயால்
மென்றிதோ தின்பேனென்று விளைஞ்ஞனை நெருக்குங்காலை. 405

வ—ம்:-என்ன அரக்கன் கோபாவேசனுப் அடே! சிருவா என்னெதிர் அஞ்சாமல் நின்றதுமன்றி எதிர்பேசவும் துணிந்தாய்? அறிவில்லாத உன்னை என் பசியானது மாரும்படி தூக்கி வாயிலிட்டு மென்று தின்பேனென்றுகூறிச் சிருவனை நெருங்கினுன்.

ஒருவுயிர் தன்னை வேறோர் வுயிருண்ணில் விளையும்பாவம்
வருமது அரிதேமாற்ற வண்மைசே ராக்கா அதனால்
துருவனை யுன்னைச்சேரு தொழியவு மெனது ஆன்மா
பெரும்பத மடைவதற்கும் பெம்மானை தொழுவேன்ராமா. 406

வ—ம்:-இவையுணர்ந்த இளைஞன் ஐயா! ஓர் உயிர்பெற்ற தேகத்தை மற்றோர் உயிர்பெற்றதேகம் உண்டால் அதனுல் வரும் பாவம் மாற்றுவது தேவர்களுக்கும் அரிதே. அப்பேர்பட்டபாவம் உன்னை சாராதிருக்கவும், என் ஆத்மா நற்கதியடையவும் அப்பகவானை தொழுவேன் சற்று பொருப்பாய். ஹே! ராமா! வைகுந்த வாசகா!

பசிப்பிணி யாலேயிங்கு பற்றினு னரக்கனென்னை
நிசிப்பொழு துடலம்விட்டு நின்னடி வருவேனுகில்
பசிப்பிணி மகனையுண்ணி பதருமாய் வயற்றில் பின்னாள்
வசித்துநா னுதிக்கும்வண்ணம் வரந்தாராய் யிளமைதன்னில் 407

வ—ம்:-தாங்கமுடியாதபசியால் இவ்வரக்கன் என்னை புசிக்கப் போகின்றான். நானுடல்விட்டு இவ்விரவில் உன்னடி வருவேனுகில் அடுத்த ஜென்மம் என்னை சதா எண்ணி ஏங்கி வாழும் தாய் வயிற்றிலுதித்து வளர்ந்து இதுபோன்ற இளவயதில்

உன்னடி கண்டுபோற்றி வுலகில்நா னழியாவண்ணம்
பொன்னடிக் கருணைசெய்வாய் புண்ணியா வென்னக்கூவி
அன்னவ னிருகைகூப்ப அதட்டிவா ளரக்கன்பற்றி
முன்னுரை பாவம்நீங்கி முனிவனுப் நின்றானன்றே. 408

வ—ம்:-உன் பாதாரவிந்த சேவைகண்டு அக்காலமாகிலும் இப்படி அழியாதிருக்கும் தேகம்பெரும் வரம் தருவாயென்று அப்பகவான் நாமமோதி இரண்டு கரத்தையும் சிரசில்கூப்பி தன் ஐம்புலனும் ஒடுக்கிநிற்க ராக்ஷதன் ஆங்காரமாய்சிறி சிருவனை கரத்

தால்பற்றி வலிக்கவும் இந்த அரக்கன் பூர்விக ஜென்மத்தில் செய்த பாவமானதகன்று கோரரூபம்மாறி தவத்தில்சிறந்த ஓர் முனிவனாய் எதிர் நின்றான்.

தருந்தவக் கோலமுற்ற தனையனை யடைந்து தூக்கி
இருகரங் கொண்டுதாவி இணையடி பணிந்துமீண்டும்
பெருந்தவ முடையபாலா பேதையா னறிந்திடாது
இருந்துசெய் பவங்கள்யாவும் என்னைவிட் டகலவைத்தாய். 409

வ-ம்:- அப்படி நின்று பூர்வஞானம்பெற்ற முனிவன் பாலகனை வாரித்தூக்கியணைத்து மகிழ்கூறிபூண்டு பின்னுமவன் பாதம்பணிந்து ஐயா! நானிதுவரை அபலையாகயிருந்து செய்த பாவங்கள் யாவும் அகலும்படி செய்தாய்.

அய்யனே யென்னக்கூறும் அருந்தவ முனியைநோக்கி
மெய்யிலா வரக்கர்தேகம் விழைந்ததென் விபரமாக
அய்யனே வுரைத்தியென்ன அவன்தொழு தமரர்நாட்டில்
மெய்யுறும் முனிவனாகி வேந்தனோ டிருந்தநாளில் 410

வ-ம்:-என்றுகூறும் முனிவனை துருவன் நோக்கி, ஐயா! பொய்யேவுருவான அரக்கர்தேகம் தாங்கள்பெற்ற விதமென்ன எனவும் தவமுனிவன்நமஸ்கரித்து ஐயா! நான்அமராபதியில் இந்திரனுடன் சபையிலிருக்கும் நாளில்

மன்னனை யொருநாள்கண்டு மதித்திலேன் னவனுஞ்சீரி
என்னையிவ் வவுணனாகி இமையகுன் றடுப்பாயென்றான்
பின்னவ னடியைப்போற்ற பேசினா னனந்தகாலம்
தன்னுயர் கொடியகானில் தங்குவாய் தங்குநாளில். 411

வ-ம்:-ஒருநாள் அவ்வேந்தனை மதியாதிருந்ததால் அவர் சினந்து அரக்கனாய் ஹிமாசலமேகி வாள்வாயென கொடுஞ்சாப மளிக்க நான்பயந்து வணங்கிவேண்ட அவர் மனதிரங்கி அந்த ரூபத்துடன் அனந்தகாலமிருப்பாய். அப்படி யிருக்குநாளில்

துருவனு மரியென்றோதி துலங்குவா னுனதுமுன்பு
பெரும்பசி யாலேயந்த பிள்ளையை மரிப்பாயத்தால்
வருமந்த கொடியசாபம் மாறிநீ நமதுநாட்டில்
வருகுவா யென்னவிண்ட வல்வினை துலைந்ததின்றே. 412

வ-ம்:-துருவனென்னும் அரசபுத்திரன் ஸ்ரீராமாராமாவென்று கூறி வனத்தில் வருவான் அவனை புசிப்பதற்கு நீ மரிப்பாய் அந்த நாளிந்த கொடியசாபமகன்று இங்கு வருவாயென்றுரைத்தார். அந்தபேருன்னுவின்று பெற்றேன்.

என்றிட மகிழ்ந்தசேயை இருகரம் குவித்துப் போற்றி
குன்றுரை கொடியகானில் குழந்தாய்நீ யெதனைநாடி
இன்றுவந் துற்றாயென்ன இயல்முனி வரனேயானும்
ஒன்றசே ராதியான வொருவனைக் காணவெண்ணி 413

வ—ம்:-என்றிட மகிழ்ந்த பாலகனை மருபடியுமவர் வணங்கி ஐயா! நீ தனிமையாயிந்த கொடிய கானகத்தைநோக்கி நிர்சிந்தையாய்வந்த கருத்தென்ன கூறும் ஹே தவமுனிவா பிர்ம்மசொரூபனான ஆதிபாண்டுரங்கனை காணுவதற்கு

அருந்தவம் புரியவேண்டி அடுத்தன னெனமுனிவன்
பொருந்துநின் கருத்தின்வண்ணம் போய்த்தவம் புரிவாயாகில்
பெரும்பசி யணுகாநன்று பெற்றபே ருண்டுயானும்
தருங்கனி யருந்திசென்றால் தலைவனைக் காணுமட்டும். 414

வ—ம்:-தவம்புரிய வந்தேனென முனிவன் ஐயா உன் கருத்தின்வண்ணம் தவம்புரியவேண்டில் நான் முன்னே ஓர் தவசிரேஷ்டரிடம்பெற்ற அருமரை கனியுண்டு அதனையேர்த்து அருந்துவாயானால் ஸ்ரீமன் நாராயணனை நீ காணுமட்டும்

வருந்துயில் பசிநோய்பற்று மதளாயென் றிய்யவாங்கி
பொருந்திய மகிழ்ச்சியோடு புசித்தவன் விடைதான்நல்க
இருந்தவ னகன்றபின்னே இரவிகீழ் திசையில்வந்தான்
அருந்தவ னிருண்டகானம் அகன்றொரு வனத்தில்போனான் 415

வ—ம்:-துயில், பசி, நோய் முதலானவை ஒன்றும் அணுகாதென்னக்கூறி அவரீய்ந்த கனியைவாங்கி புசித்து அப்பாலவற்கு விடையீய்ந்து தவசிரேஷ்டனாகிய துருவன் அவ்வனந்தாண்டி சென்றான்.

## துருவனுக்கும் புவனவல்லிக்கும் தர்க்கம்.

அங்கொரு குன்றமேறி அதன்கொடி வழிகள்பற்றி
மங்களமுளங்குமந்த மாதவன் நாமமோதி
கங்கையின் கறையில் சென்றான் காவலன் மதலையன்னாள்
எங்கனும் புகழவிண்ணில் இருந்தொரு சார்பையாழும். 416

வ-ம்:-அங்கே எதிரிருந்த மலையேறி யிறங்கி அங்கு தோன்றிய கொடிவழிபற்றி மாதவா,முகுந்தாவென்றோதி புண்ணியநதியான கங்கையைக்கண்டு மகிழ்ந்து அதன் கரைவழி நடந்தான். அந்த நாள் எந்த உலகமும்புகள தேவர்நாட்டிலோர் சார்பையாழும்

சித்திரசேனனென்னுந் திடம்பெருங் கந்தருபன்
புத்திரி புவனவல்லி பூவையரனந்தஞ்சூள
அத்தினங் கங்கையாற்றின் அரிவிநீராடவெண்ணி
பத்தியே விசும்பில்நின்று பார்மிசை வந்தாளன்றே. 417

வ-ம்:-கந்தருப அரசனாகிய சித்திரசேனன் புத்திரியான புவனவல்லி தோழியர்சூள கங்காநதியில் நீராடநினைந்து ஆகாயமார்க்கமாய் பூமியைநோக்கி அவ்வனம் வந்திறங்கினாள்.

நன்றுரம்பையென்ன நர்கலை மகளாமென்ன
ஒன்றார தெய்வதச்சன் வுருட்டியே கடைந்ததங்கக்
குன்றினின் பதுமையென்னக் கூறலாமோ வியர்க்கு
மென்றுமே யெழுதவொண்ணா இழங்கொடி மதியம்போலே. 418

வ-ம்:- அப்புவனவல்லி அழகேதிரண்ட ரம்பையோ அன்றி சரஸ்வதிதேவியோ, தெய்வதச்சனால் தங்கமலையிலிருந்து கடைந்தெடுத்த பொர்பதுமையோவென்று கூறும்படியமைந்த அவளுருவை சித்திரக்காரராலும் எழுதமுடியாத பூரணச் சந்திரனையொத்த

மிக்கவே வதனமுற்று மின்னல்நேர் தேகம்வாய்ந்து
பக்குவ வயதைநோக்கும் பாவையுந் தோழியோடு
துக்கமும் மரியாளாகி சூள்கங்கை நீரில்மூவி
தக்கவர் மயங்குவண்ணம் தனித்தனி யாடல்செய்தார். 419

வ—ம்:-முகமும் மின்னலையொத்த தேகமும் அடைந்து பக்குவத்தை எதிர்நோக்கும் கன்னிப்பருவமுள்ள உத்தமி தோழியருடன் வளைந்து செல்லும் கங்காநதி நீரில் தாவித்தாவி நற்றவமுனிவருங்கண்டால் மயங்கும்வண்ணமாடினார்கள்.

இங்கவ ராடல்தம்மை இளங்கனு மரியானாகி
அங்குநீர் துரையில்வந்தா னவனுட லெழுந்தஜோதி
எங்கனு மரகதமென் றிருந்தவை தோற்றம்யாவும்
மங்கைய ரரிந்தார்சிந்தை மயங்கினார் மதனோவென்று. 420

வ—ம்:-இவ்வாராக இவர்கள் நீராடுவதை உணராத பாலகன் அங்குவரலும் அவனுடலிலிருந்து எழுந்தஜோதி பசுமைதங்கிய மரகதம்போல் எங்குபிரகாசிக்க வருவானை மங்கையர்கண்டு திடுக்கிட்டு மயங்கி மன்மதனோ அன்றி

இன்னவ னிலங்கையாண்ட இராவணன் முதலாம்வீரர்
தன்னையே வொழிக்கமுன்னாள் தசரதன் மகனாய்வந்த
மன்னவன் ராமன்றானோ வனமதில் தனித்துவந்தான்
என்னவே புவனவல்லி யெழுந்தனள் நீரைவிட்டு. 421

வ—ம்:- தென்னிலங்காபுரியரசாண்ட ராவணாதி ராக்ஷதரை அழிக்க தசரதச்சக்கிரவர்திக்கி மகனாயவதரித்த ஸ்ரீராமபிரான்றானோ! இவ்வனத்தில் பாலரூபத்தோடு தனித்துவந்திருக்கின்றான் இவனை அரிவேனென்று புவனவல்லியென்னும் பூங்கொடி அக்கங்கை நீரைவிட்டு

நன்றுரும் பணிகளாடை நால்வகை சிரப்புஞ்செய்து
அன்றவ னடியைபோற்றி ஆதவன் போலேநீதான்
இன்றுரை இருண்டகானில் யெப்படி தனித்துவந்தாய்
ஒன்றிய கருத்துயாதோ உரையென வுரைக்ககேட்டு. 422

வ—ம்:-வேகமாய் கரைவந்து ஆடையாபரண அலங்காரம்செய்துவேகமாயோடி பாலனைமரித்து நமஸ்காரம்புரிந்து சூரியனைப்போலொழிவிடுந் தேகம்படைத்த நீர் இந்த இருண்டவனத்தில் தனித்துவந்த கருத்தென்ன? உரைப்பீரென்னக்கேட்டு

துருவனு மவளைநோக்கி சொல்லுவா னிருண்டகானில்
வருவது முறையோமாதே மங்கையர் கூட்டமிட்டு
திரிவது மேனோவுங்கள் தேயமு மெதுவோயாரும்
வுருவெனக் கூருமுன்னை வோதிடும் நாமம்யாதோ. 423

வ-ம்:-துருவனான இளைஞன் அவளைநோக்கி மாதே! நீ ஸ்திரீகள் கூட்டத்துடன் மனிதசஞ்சாரமற்ற காட்டில் திரிவது எதை உத்தேசித்து? அன்றி உங்கள்நாடும், அழகே உருவான உந்தன் பேருங்கூருவாய்.

என்றிட நகைத்துமங்கை இயம்புவா ளிருக்கும்நாடு
குன்றிடா கந்தரூபர் கூடிடும் பதிக்கிநாதன்
மன்றுளோர் வணங்கபெற்ற மன்னவன் சித்திரசேனன்
நன்றுருந் தவத்தால்வந்த நங்கைநான் புவனவல்லி 424

வ—ம்:-என்றிட கேட்டகன்னிகை நகைத்து ஐயா! நானிருக்கும் நாடு கந்தரூபர்வாழும்தேசம். அத்தேசத்ததிபனாகிய சித்திரசேனன் தவத்தில்வந்தபுத்திரி என்னை புவ்னவல்லி என்பார்கள்.

பாங்கியர் தன்னைக்கூடி பகல்பொழு தகற்றவெண்ணி
இங்குரை கங்கையாற்றில் இனியநீ ராடிகானில்
ஓங்கிய மலர்கள்கொய்து உண்டியுண் டகலவென்று
நாங்களிங் கடைந்தோம்நீரும் நவிலுவீ ருற்றயாவும். 425

வ—ம்:-நான் பகல்பொழுது கழிப்பதற்கு தோழியரோடு இங்குள்ள கங்கையாற்றில் நீராடி மலர்கொய்துசூடி பசிக்குணவுண்டு எங்கள் நாடுசெல்லவெண்ணி வந்தோம் தாங்களிங்கு வரும்படியான காரியமும், தங்கள்வரலாறுங் கூருமென்ன கேட்ட பாலன்

வந்துநீ ராடவந்த மங்கையர் வனத்தில் செல்லும்
எந்தனை மரிக்கவுற்ற வெண்ணமென் னிசைப்பாயின்று
உந்தனை யரியேன்முன்னே வொதுங்கெனத் தொழுதுமாது
ளந்தநா டெதுதேயம் இசைப்பீரேல் லகல்வேன்கேட்டு. 426

வ—ம்:-ஹே புவனவல்லி! கங்கையில் நீராடவந்த மங்கையராகிய நீங்கள் என்னை மரிக்கவேண்டிய காரணமென்ன? இதற்குமுன் உங்களையானறியேனென்னும் பாலனை மருபடியும் வணங்கி தாங்களிருக்கு நாடுரைத்தால் கேட்டு செல்வேனென்றிட

அப்படி யென்னில்மாதே அயோத்திநா டதனிலுற்று
இப்புவி முற்றுமாளும் இறைவனுத் தானபாதன்
ஒப்பிய தவத்தால்யானும் உதித்தவன் துருவனென்பேர்
தப்பித மில்லையித்தில் றருவனங் கடந்து செல்வாய். 427

வ—ம்:-கேட்ட பாலன் அப்படியானால், கேள் மாதே. அயோத்தியாபுரியிலிருந்து இவ்வுலகமுற்றுமாளும் உத்தானபாதனென்னும் சக்கிரவர்த்தியின் தவத்திலுதித்தவன். என்பேர் துருவனென்று கூறுவார்கள். இதிலெதும் பேதகமில்லை. இனி இங்கு நில்லா தகலுவாய்.

பொருந்திய வணப்புவாய்ந்த பூவையை விலகிபாலன்
பெருந்தவக் கருத்தினோடு பேந்தனன் பேந்தகாலை
இருந்திடு மென்னக்கன்னி இடையினில் தடுத்துவேந்தே
தருவுரும் வனத்தைநாடி சார்ந்ததே னுருவமாற்றி. 428

வ—ம்:-என்றுகூறி அழகுருவான அக்கன்னிகையைவிடுத்து விலகினான். அவனை மீண்டும் அவள்தடுத்து ஐயா நீ ராஜபூஷணாதிகள் பூணும்வுருமாற்றி இவ்வனத்தில்வந்த காரணமென்ன?

இன்றெனக் குரைத்துப்பின்னே யேகுவா யென்னக்கேட்டு
அன்றவன் திகைத்துயித்தால் ஆவதென் னறிவிலாதாய்
சென்றிடு வென்னச்சீரும் சிறுவனை வேண்டப்பின்னும்
நன்றிதோ அறிவாய்மாதே நான்வன மடைந்தவாறு. 429

வ—ம்:-அதையானறிந்திட கூறிச்செல்லுவாயென்ன திகைத்து பாலன்சினந்து ஹே அறிவிலாபேதாய்! உனக்கிதனாலாவதென்ன என்றிடக்கேட்ட கன்னிகை பின்னும் பலவிதமாயவனைவேண்ட மீண்டுமவளைநோக்கி நானிவ்வனத்தில்வந்தகருத்தை கேள்மாதே.

ஆதியாம் முதல்வன்றன்னை அருந்தவம் புரிந்துகண்டு
நீதியாய் யுடலமிந்த நிலத்திடை நிலைத்துநின்று
மேதினி யாழவெண்ணி மெல்லியே வந்தேனென்ன
ஈதுந்தன் கருத்துமாகில் யெங்கள்நா டடைந்தாலங்கே. 430

வ—ம்:- இங்கருந்தவம்புரிந்து ஆதிபாண்டரங்கனை விழிநேர் கண்டு அவனருளால் இவ்வுடலழியாது பரதகண்டம் சூழ்ந்த உலகமுற்றுமாள நினைந்து வந்தேனென்றிட நகைத்து அக்கன்னிகை துருவனைநோக்கி இதுவே உன்கருத்தாகில் எங்கள் நாடு வந்தால் அங்கே

எந்தையி னிடத்தில்கர்பம் இருப்பதை தருவேனேர்த்து
சிந்தையில் மகிழ்ச்சியோடு செம்மலே புசிப்பாயாகில்
வந்திடும் யுகத்தின்மட்டும் வாழுவா யிதனைவேண்டி
வெந்திடும் வனத்தில்வீணாய் வித்தகா அலைந்திடாதே. 431

வ—ம்:-என் தந்தையிடத்தில் காயகர்ப்பமுண்டு அதை வாங்கித் தருவேன் அருந்துவாயாகில் ஒரு யுகாந்தகாலம்வரை பால்யபருவத்தோடு வாழ்வாய். இதற்காக இந்த கொடியகானகத்தில் வீணாய் அலையவேண்டாம்.

கர்பமும் முனது தாதை கருணையால் குடுக்கவாங்கி
அர்பர்போ லதனையுண்டு அழிந்திடா திருக்கவெண்ணி
விர்பன முடையமாதே விலங்கினஞ் சூழ்ந்தகாட்டில்
தர்பர னருளாலீன்ற தாயைவிட் டடைந்தேனில்லை. 432

வ—ம்:-என்றிட துருவன் சினந்து ஹே மாதே! உன் தந்தையானவர் தரக்கூடிய காயகர்பமுண்டு இவ்வுடலழியாதிருக்க வெண்ணி கொடிய விலங்கினம்சூழ்ந்த காட்டில் தானியாய் தாயைப் பிரிந்து நான் வந்ததில்லை.

அப்பனாய் அன்னையாகி அருமறை முதல்வன்றானாய்
இப்புவி தானுமாகி யெண்ணருங் கோடாகோடி
ஒப்பிய வுயிருமாகி வுலவுவா னிருக்கவேறே
எப்பதம் வரினும்வேண்டே னிவ்வுட லழிந்திட்டாலும். 433

வ—ம்:-நான்வந்த காரணம்கேள். தந்தையாகவும், தாயாகவும், வேதமுதல்வனாகவும், இவ்வுலகமே தானாகவும் அதிலுள்ள கோடாகோடி சராசரங்களாகவும் உலவுவான் கருணையன்றி எவ்வித உயர்வானபதம் கிடைக்கினும் அதையேர்க்கேன் இவ்வுடல் அழிவதானாலும்,

சித்திர சேனனென்னுஞ் ஜெகம்புக ழுன துதந்தை
எத்தனை காலம்நாட்டில் லிருக்கினு மழிந்துபோவான்
பத்தினி யாளேயிவ்வார் பாரெலா மழிந்திட்டாலும்
நித்தமு மிருக்கவென்று நினைத்தேன்யா னினைத்தவாரு. 434

வ—ம்:-அன்றி நீ கூறிய பெருமையுள்ள உன்தந்தையான சித்திரசேனனும் மற்றவுருவான தோற்றங்கள்யாவு மொருகாலம் அழிந்தேபோகும். இப்படி இதுகளெல்லாம் அழிந்தாலும் நித்தமும் பால்யனாய்யிருப்பதற்கு நினைந்தேன்.

இப்பதம் குடுக்கவுன்னை ஈன்றவர் செயலுளாரோ
அப்பதம் யெவைக்குமேலா மாதியா மூலமன்றி
யப்பதம் குடுக்கவல்லார் அரிவையோ அரிவிலாதாய்
இப்பதம் விடுத்துன்னாடு யேகுவாய் பணிமாதோடு 435

வ—ம்:-ஹே! அரிவில்லாபேதாய்! நான் கூறியபதம் கொடுக்க உன்தந்தை பலவானா? இப்பதம் கொடுப்பதற்கு சகலகோடி வேதங்களுக்குமெட்டா ஆதிபாண்டுரங்கனன்றி மற்றவராலாகுமா? நீ தெரிவையா? வீண்வாது புரியாமல் தோழியரோடு உன்னாடு செல்வாய்.

மன்னனா மயோத்திராமன் மரபிடை யவன்போல்வந்து
என்னக ரேரும்போற்று மியல்புரு வாழ்வைமாற்றி
முன்னவன் றன்னைநோக்கி முளுத்தவம் முயல்வதென்றால்
லென்னநீர் கொண்டகோல மிளமையின் முறையிதாமோ. 436

வ—ம்:-என்னக் கன்னிகை திகைத்து ஐயா, அயோத்தியாபுரி ஸ்ரீராமபிரான் மரபில் அவர்போல் தேகமும், அரிவும்படைத்த நீ மன்னர்தொழும் வாழ்விளந்து கொடிய தவம்புரிய இதுகாலமல்லவே. தமது பருவமும் அதற்கு இடந்தராதே.

இம்மையில் யாவுமுண்டு எங்கள்நா டடைவாயாகில்
செம்மைசேர் காவும்பொய்கை செழிப்புரு மேவல்கோடி
நம்மையு முளது அங்கே நற்றவம் புரிவீராகில்
அம்மையாய் நிறைந்தஜோதி அருள்தருங் கருணையோடு 437

வ—ம்:-ஆனாலும் தவம்புரியும் கருத்தே தமக்கு இருக்குமாகில் எங்கள் கந்தருப நாட்டுக்கு வருவாயாகில் அங்கே வேண்டுஞ்

செல்வமும், தவம்புரிவதற்கமைந்த நந்தவனமும், கோடாகோடி ஏவலருமுண்டு. அங்கிருந்து தவம்புரிவாயாகில் தாயாகிய பரந்தாமன் கருணைசெய்ய

வருகுவான் கேட்டதெல்லாம் வழங்குவான் வழங்குமட்டும்
பெருவலி படைத்தோரேனும் பின்னுமற் றுள்ளாரேனும்
வுருகும்நின் றவத்தைக்காண வுற்றிடா திருக்குவண்ணம்
சிருமிநா னிருந்துகார்ப்பேன் திடமிது மருத்திடாதீர். 438

வ—ம்:-வருவார். நீ கேட்ட யாவுந்தருவார். அந்தநாள் மட்டும் தமது தவச்சாலையைநாடி பலம்படைத்த ராக்ஷதர்அன்றி தேவர் முதல் மற்றயாரும் அணுகாதிருக்கும்படி நானிருந்து கார்த்து வருவேன் இதைமறுக்காது என்பின்வாருமென்றிட அந்தபாலன்

அரிவினை யிழந்தமாதே அயோத்திநா டிருந்துயிவ்வார்
புரிந்திட அரிந்திலேனோ பூவைதாய் கார்த்துநிர்ப
தெரிந்திடா துரைத்தாய்நீயும் தேவனை தனித்தானலன்றி
வரிந்தினு மரிதுகாணல் மாதவம் பலித்திடாதே 439

வ—ம்:-சினந்து ஹே! அரிவிலா பேதாய்! உன் கருத்தின்வண்ணம் தவம்புரிய நினைந்தால் அயோத்தியாபுரியில் உன்னைப்போல் என் தாயிருந்து கார்க்க தவஞ்செய்பேனோ? யாரானாலும் நிர்சப்த மானயிடத்தில் தனித்திருந்தவரன்றி பகவானைகண்டவருண்டா?

பொங்குமென் றவத்தையங்கு புகள்பெரும் வீரன்போலே
மங்கைநீ யிருந்துகார்த்து வரவந்த கருத்தேனன்றி
இங்குநீ கண்டவண்ணம் இயம்பியே தடுத்திடாமல்
தங்குவா யுனதுநாடு தையல ருடனேபேர்ந்து. 440

வ-ம்:-எனது நன்மையைநாடி நான் செய்யும் தவத்தையிருந்து நீ கார்த்துவந்தால் அதனால் ஏர்ப்படும் நன்மையென்ன? ஹே! பேதாய்! கண்டபடி இனிவாதிடாது இந்தயிடத்தைவிட்டு உன் தோழியருடன்கூடி நீங்கள்வாழும் நாடு செல்வாய்.

மன்னவன் மதளாயெந்தன் மனக்கருத் தரிந்திலாயா
உன்னையென் நாடுசேர்த்து வுயர்வய தடையயெந்தை
தன்னுப ராசையீய்ந்து தலைவனென் றுரும்போற்ற
பின்னையான் மணக்கவெண்ணிப் பேசினே னிவைகள்யாவும் 441

வ—ம்:-ஹே அரசபுத்திரா! என் கருத்துணராயா? கூறுவேன் கேள் உன்னை யெங்கள் நாடு கூட்டிப்போய் வாலிபபருவம் வரும் வரை பாதுகார்த்து அப்பருவம் வந்தவுடன் என்பிதா ஆளும் அரசையீய்ந்து தேவர்முதல்யாவரும் வணங்ககண்டு நான் மகிழ்ந்தும்மை திருமணம்புரிய நினைந்தேன்

சித்திர சேனன்பெற்ற செல்விநீ யாவுங்கற்ற
பத்தினி போலேயிவ்வார் பகர்ந்தனை யுன்னையன்பாய்
பெத்தவ ரரியாவண்ணம் பெருவனம் வந்ததன்றி
சித்தசன் கணைக்குநாதன் தேடவுந் துணிந்தாயேனோ. 442

வ—ம்:-என்றிட பாலனிருவிழி சினந்து ஹே சித்திரசேனனென்னும் கந்தருபன் புத்திரியே! அரிவில் சிறந்த பதிவிரதா ரத்தினம்போல் பேசத்துணிந்த நீ உன் தாய்தந்தையாரரியாதிவ் வனத்தில்வந்து ஆசைநாயகனை தேடத்துணிந்த ஞாயம் யெந்த தர்மசாஸ்திரத்திலிருந்து கற்றாய்

மூத்தவள் பருவமுற்ற மொய்குழல் நீயுமத்தால்
சேத்திடு நின்போலுள்ள செல்வனோர் குமரன்றேடி
பார்த்துநீ மணந்துவாள்வாய் பாவையே யதனைவிட்டு
ஆத்திர மடைவாயாகில் அவனியோர் நகைப்பாருன்னை. 443

வ—ம்: அன்றி நானோ சிறுவன், நீ பருவகாலத்தை எதிர்நோக்கும் வயதுடையவள் ஆகையால் உன்னையொத்த வயதுடைய வாலிபனை பார்த்து மணம்புரிந்து வாழ்வாய் இதைவிட்டு தப்பான முறையில் பிரவேசிப்பாயானால் இவ்வுலகோருன்னைநகைப்பார்

மன்னவன் மதளாய்நில்லு வருத்திய முறைகள்யாவுங்
கன்னியா னறிவேனித்தக் காசினி மாக்கன்னீயே
பின்னிடுஞ் சிலதுநாளில் பெருமைசேர் குமரனாவாய்
என்னையே வுணராயின்ன மினிமைசேர் கந்தருபர். 444

வ—ம்:-ஓய் அரசபுத்திரா இந்த ஞாயம் நானறிவேன் நீ தெரியாதுரைக்கின்றாய் பூலோகத்துதித்த மானிடவர்க்கத்தானாகிய நீ இன்னும் சிலதுநாழில் வாலிபனாவாய் நானோ சகலருந் துதிக்கும் கந்தருப அரசன்

புத்திரி யெந்தன்தோற்ற பூக்குநா ழிருக்குவண்ணம்
இத்தரை யிருக்குமட்டு மிருப்பதால் கர்பமுண்டு
நித்தமும் வாலிபனாய் நீரிருந் தென்னைவேட்டால்
ஒத்திடும் பருவமன்றி உயருமோ வுரைத்தீரய்யா. 445

வ—ம்:-புத்திரி எங்கள் வம்மிஷ வழக்கமோ ஸ்ரீகள் ருதுகாலத்திலிருக்குந்தோற்றம் மங்காது ஓர் யுகாந்தகாலமட்டும் மங்கைப் பருவமாய் வாழ்வோம் நீ ரவ்விதமாய் காயகர்பமுண்டு நித்திய வாலிபனாயிருந்தால்வயதொத்திருக்குமன்றி ஏற்றந்தாழ்வுண்டா?

மாங்கனி பழுக்குமென்று மரத்தடி சுணங்குகார்த்த
தாங்கருத் தனது செய்கை யக்கனி பழுத்தகாலம்
பாங்குரும் கிளிதான்கவ்வி பரந்ததை யொக்கும்மாதே
ஈங்குந்த னுரைதானன்றி இல்லையென் கருத்துமவ்வார். 446

வ—ம்:-ஹே மாதே! உன்னையுமுன்கருத்தையும் நோக்கினல் மாமரத்திலுள்ள மாங்கனியானது பழுத்து வீழ்ந்தால் புசிக்கலாமென்று அம்மரத்தடியில் பசியால் களைத்துவந்தநாய் காத்திருக்க அதன் மரணத்தருவாயில் பழுத்த அக்கனியைகண்ட கிழியானது கொத்திகவ்வி யெடுத்து ஆகாயமார்க்கமாய் தன் குஞ்சுகளுக்கு கொண்டுபோன கதைபாகவிருக்கின்றதுன் நினைப்பு என் கருத்தோ எந்த மங்கையரையும் மணந்துவாழ நினைத்ததில்லை

சிந்தனை யரிவில்லாதாய் செனித்தவர் குலகுதம்மில்
வந்திடு மன்றலென்னும் வலைதிரு மாமன்கையால்
தன்திட யீன்றுசேர்த்து தன்வச மளிப்பாறென்று
மூந்துநூல் கூருமுற்ற முறையென வுலகுமேர்க்கும். 447

வ—ம்:-அன்றி உலகுதித்தசிருவர் சிறுமியர்கு விவாகம் செய்ய வேண்டியகடமை தாய்மாமனல் ஏர்படுத்திய பெண்ணையோ பிள்ளையவோ மாதா பிதாக்களேர்த்து மக்கள்வசம் குடுப்பதென்பது உலகவழக்கமும், தர்மசாஸ்திர முறையுமிருக்க இதுகடந்து

அம்முறை விடுத்துநீயும் அடவியில் மரித்துயென்னை
செம்முறை விடுத்தவாய்மை செப்பினு யரிவில்லாமல்
லிம்முறை விடுப்பாயென்று இளைஞன்வேர் நெரியைபற்ற
எம்முறை தடுத்திடாதீர் றென்றவள் மரித்துநிற்க. 448

வ—ம்:-அக்கிரமமான வாசகங்கள்கூறி என்னைத்தடுத்து விட்டாய் ஹே அறிவிழந்த பேதையே! அப்பால் விலகுவாயென்றதட்டி அவளைவிட் டொதுங்கி செல்லும் சிருவனை பின்னுமவள் தூயர்ந்து இன்சொல்கூறி தடுத்து நெருங்கக்கண்ட

அன்றவை பரிந்துமைந்தன் னலரினன் ராமாவென்று
குன்றெழுந் தீபமென்னக் கொடுஞ்சுடர் விசும்பில்தோன்ற
கன்றியே விழிகள்கம்மி காரிகை மயங்கிவீழ்ந்தாள்
நின்றசேய் திருமாலென்று நினைந்தவன் மகிழ்ச்சியோடு 449

வ—ம்:-சிருவன் திடுக்கிட்டு பயந்து ராமா ராமாவென்றலர அங்கே பெருமலையிலிட்ட தீபம்போல் வோர் பிரகாசந்தோன்றி கண்கலங்ககண்ட மங்கை வோலமிட்டு பூமியில்வீழ்ந்து மூர்ச்சித்தாள் இதுவுணர்ந்த பாலகன் பரந்தாமனின் கருணையென்று மகிழ்ச்சி பூண்டு

அருந்தவக் கருத்தும்பூண்டு ஆதவன் றன்னையெண்ணி
பெருவனம் பலதுதாண்டி பின்னையும் நடந்தகாலை.
தெரிந்திவை கலூலன்றுனும் தெய்வமா மறைகளோதி
பொருந்தின னவனையிந்த புத்திரன் மகிழ்ந்துபோற்றி. 450

வ—ம்:- அன்னவனை கண்ணெதிர் காணவெண்ணி வேகமாய் நடந்து பலவனங்களும், மலைகளுந்தாண்டி வருவதையுணர்ந்த கருடபகவான் சிருவனைக்காண நினைந்து அஷ்டாச்சர மந்திரங் கூறி எதிர்வந்து நின்றார்

அய்யனே தேடாதுற்ற அருந்தவஞ் சிறந்தவுன்னை
எய்யுமிவ் வனத்தில்கண்டே னென்பவம் துலைந்ததின்றே
மெய்யனே பிர்மமூர்த்தி வேண்டுமென் றவத்தில்வந்து
செய்யுமோ கருணையன்பு தேவனே தெரியச்சொல்வீர். 451

வ—ம்:-அன்னவரைக்கண்ட துருவன் வேகமாயோடி அடிபணிந்து ஹே தேவா! தேவர்களுக்கும் கிட்டாத தங்கள் பாதசேவைவைகண்டதால் அடியேன் ஜென்மாஜென்மங்களில் செய்த பாவங்களகன்றதால் ஆதிபாண்டுரங்கன்சேவை கிட்டுமோ? முக்காலமுணர்ந்த தாங்கள் கருணைசெய் ததனைகூருவீர்

என்றிடு மதலைதம்மை இருகரங் கொண்டுபுல்லி
நன்றுநீ நினைத்தவண்ணம் நாரணன் வருவான் பாரில்
லென்றுமே யிருப்பாயென்று மெளிலுடை கலூலன்பாதம்
அன்றவன் மீண்டும்போற்றி அரைகுவானிமையசாரல். 452

வ—ம்:-என்னுஞ்சிருவனை கருடபகவான் இருபுய மளுர்தபுல்லி ஹே அரசபுத்திரா! பகவானுன்னெதிர் வருவதுடன் உனக்கு அழியாத பதமும் குடுப்பார் ஹே தேவா! அப்படியானால் அடியேன் ஹிமையமாமலைசென்று தவம்புரிய உத்திரவு குடுங்கள்

செல்லவே விடைதாவென்னுஞ் சிருவனை நோக்கிபின்னுஞ்
சொல்லுவான் முகுந்தன்றன்னை சுதனேநீ யரியவேண்டில்
வல்லவா யெடுத்துவுன்னை வைகுந்த வாயல்தன்னில்
செல்லுவேன் மறைகள்தேடுந் தேவனைக் காண்பாயங்கு. 453

வ—ம்:-ஹே பாலகா! நீ அந்த லோகநாயகனைகாண நினைந்தால் என்கூட வருவாயாகில் உன்னையென் புயத்திலெடுத்து வைகுந்தஞ்சென்று பகவான் முன்னிலையில் விடுவேன் நீ அவரை கண்டு தெரிசித்து வேண்டும்வரம் பெருவாய்

என்றவ னெடுத்துவிண்ணி லேகிட நினைத்தகாலை
யன்றவ னடியைபோற்றி அடியவர் தினமுமேற்றும்
நன்றுருந் திருமால்தன்னை நாளெலாந் தாங்குந்தோழில்
இன்றெனை தாங்கில்பாவம் மெய்திடு மதனையென்றான். 454

வ—ம்:-என்றுகூறி ஆகாயமார்க்கமாய்எடுத்து செல்ல துணிந்த கருடபகவானை பாலகன்வணங்கி ஹே தேவா! சற்று பொருங்கள் அடியவர் தினந்தொழும் பகவானை தாங்குந் திருத்தோழில் அடியேனை தாங்கினால் அதனால் ஏர்ப்படும் பாவம் ஜென்மா ஜென்மங்களிலும் துடருமே

மாற்றுவே னந்தவண்ணம் மதலையா னடைந்திடாமல்
சாற்றுவீர் கருணைவைத்து தவம்புரி வரையைச்சார
போற்றுவே னென்னவந்த புண்ணியன் மகிழ்ந்துஆசி
சாற்றியே புவனவல்லி தானுறு வனத்தைசார்ந்தான். 455

வ—ம்:-அப்படி பாதகம் அடியேனை சாராதிருக்க சென்று வருவாயென்ற உத்திரவு புரிவீரென்று வணங்கும் சிருவனுக்கு சுபமங்கள ஆசிர்வாதம் புரிந்து விடையீய்ந்து புவனவல்லிவாழும் வனத்தைநோக்கி ககனமார்க்கமாய் சென்றார்

அன்னவ னகன்றபின்னே அடவியில் பலதுதூரம்
சின்னவன் நடந்துகங்கை செழுமைசேர் கரையைபற்றி
பின்னிலே தங்கிடாது பெருவரை பலதுந்தாண்டி
முன்னுரை வரையடுத்து முனிவர்செய் தவங்கண்டேகி. 456

வ—ம்:-அப்பாலவர்சென்ற திக்கைநோக்கி வணங்கிய துருவன் அவ்வனத்தில் வேகமாய் நடந்து கங்கையாற்றின் கரைவழியாக சென்று இடையிடைமுனிவர் தவம்செய்தலையும்பார்த்து எங்குந் தங்காது அனேக சிருமலைகளேறி

கடந்தன னனந்தந் தூரங் கான்முழை யிரவிலேனும்
திடந்தனை யிழந்துநின்று திகைத்திலா னிமையசாரல்
படந்தனை யடுத்துக்கண்டு பலித்தது தவமென்றேற்றி
நடந்தன னிளைத்திடாமல் நன்மைசே ரந்தக்குன்றில். 457

வ—ம்:-இரவு பகலென்று பயந்து கலங்காது நடந்து ஹிமாசல வரையை அடுத்துக்கண்டு தான் செய்யப்போகும் தவம் பலித்ததென்ற திடம்பூண்டு அச்சாரலைப்பற்றி சென்றான்

இருந்துருள் கங்கையாற்றி னிரைச்சலு மனந்தபேர்கள்
பொருந்தியே தவங்கள்செய்யும் புதுமைக ளவனுங்கண்டு
அருந்துநீர் கரையுந்தாண்டி அவ்வரை யடுத்துப்பின்னே
இருந்திடா ததன்மேல்சென்று யேறினன் ராமாவென்றே. 458

வ—ம்:-அங்கிருந்து அனேக அருந்தவமுனிவர் செய்யுந்தவங் கண்டு மகிழ்ந்து ஒடி உருண்டுவரும் கங்காநதியைப்பார்த்து அந்நதியையுந்தாண்டி வேகமாயோடி அம்மலைமீது சென்று ஸ்ரீராமா ராமாவென்று ஏறினன்.

அவ்வரை சிகரந்தன்னை யரிதரி தாருங்காணல்
லொவ்வுநீர் பெருக்கினோடு வுயர்ந்திடு முகில்கள்சூழ்ந்து
எவ்வரை தனக்குமேலாய் இருக்குவிண் வாய்வுமற்ற
அவ்விடம் வன்னியோர்பா லடுத்திடுந் தருக்களற்றே. 459

வ—ம்:-அந்த ஹீமாசல பர்வதமோ உலகிலுள்ள மற்ற மலைகளை விடபெரிதாகவும், அதனுபரம் காணமுடியாததாகவும், நீர்பெருக்குடன் மேகங்கள் சூழ்ந்து மரஞ்செடிகளற்று ஒரு பக்கம் சிகரத்தில் எரியும் நெருப்புடன்

இருந்திடும் பெருமைமிக்க இருண்டிமன்றி யங்கே
பொருந்திய தருக்களோர்பால் புகளுவவ் விடத்தில்பாலன்
திருந்திய சிந்தையோடு சென்றனன் அனந்ததூரம்
பொருந்திய கங்கைதோன்றி புரண்டிடுஞ் சிகரங்கண்டு. 460

வ—ம்:-மற்றுமோர்பக்கம் இருள் சூழ்ந்த காற்றின் வேகமற்று இருக்கினும், ஒருபக்கம் அனேக விருக்ஷங்களுடன் செழித்திருக்கக்கண்ட பாலன் அத்திசையடைந்து வேகமாய்நடந்து கங்காநதி உற்பத்தியாகும் சிகரத்தின் உச்சியில் சென்றேறினன்.

இசைந்தநதி னடியில்பாறை யிருப்பதில் நண்ணியங்கே
அசைந்திடுந் தேவதாரு அடியினில் கொடிகளோடி
இசைந்தசஞ் சீவிபற்றி இருந்திட மகிழ்ச்சிபூண்டு
அசைந்திடா திருந்தானங்கே அருந்தவம் புரிவதென்றே. 461

வ—ம்:- அங்கொரு சார்பிலிருந்த பாறையைக்கண்டு சுற்றிப் பார்த்து சமீபத்திலிருந்த தேவதாருவிருக்ஷம் சஞ்சீவிகொடிகளை தாங்கி இருப்பதையறிந்து அம்மரத்தடியில்போய் உட்கார்ந்து இதுதான் பகவானை காணுவதற்குரிய இடமென நினைந்து

இருந்தனன் துடையின்மீது இருகரம் வைத்துநன்றாய்
பெருவிழி மூடிடாது பிள்ளைகீழ் நோக்கிநிற்க
தருவின்மேல் கங்கைவீழுந் தனியிடந் தன்னிலந்த
சிருவனு மிருந்தசெய்கை செப்பிட தரமார்வேந்தே 462

வ—ம்:-உட்கார்ந்த வண்ணமே காலைமடித்து பதுமாசனமிட்டு இருகரத்தையும் தனித்தனி துடைமீதுவைத்து கீழ்நோக்கி விழி இமிட்டாது கங்காநதியின் வோசையுமரியாது தன் ஐம்புலனையும் அடக்கி தவம்புரிந்தபெருமையை கூருவாருண்டா? ஹேவேந்தா!

எண்ணிலான் மழைநாளென்று இன்னல்கள் பலதுற்றுனுங்
கண்ணினு லதனைநோக்கான் கருத்தொரு வழியாய் நின்று
விண்ணவர் புகழச்செய்த விரதமெலா முரைப்பேன் பின்னே
அண்ணலே இலங்கையாண்ட அரசனின் செயல்கேளய்யா 463

வ—ம்:-அன்றி வெயிலென்றும், மழையென்றும் கருதாது எவ்வித கஷ்டநஷ்டங்களையுமவனுணராது செய்த தவத்தின் பெருமையை பின்னால் கூறுவேன் அய்யா! பரிசித்து! இனி இலங்காபுரியாளும் அரசன் செயலை கூறுவேன் கேள்.

அன்னவ னழியாமேன்மை படைந்தவன் துருபன்றம்மை
தன்னுயர் வீரர்கண்டு தான்வரா திருக்கவேங்கி
மன்னவன் தூதாலந்த வழ்கவிக் கதிபன்றன்னை
தன்னக ரளைக்கவந்த தலைவனைத் தழுவிக்கூறும் 464

வ—ம்:-அழியாத பெருமைபெற்ற பக்தனாகிய விபூஷணன் துருவனைத்தேடி அயோத்தியிலிருந்து அனுப்பிய தூதர் வராதிருப்பதையுணர்ந்து கவலைகொண்டு தூதுவரால் கிஷ்கிந்தாபுரி அரசனாகிய சுக்கிரீவனையும், அங்கதனையும் அழைத்து தழுவி உபசரித்து கூறுவான்.

மன்னவ னயோத்திராமன் மரபினை யுதித்தபாலன்
உன்னகர் வந்ததுண்டோ வுரையெனச் சுக்கிரீவன்
தன்னிரு விழிநீர்சோரத் தயங்கின னரியேனென்று
பின்னவர் துணிந்தார்கூடி பேருல கெல்லாஞ்சுற்றி. 465

வ—ம்:-ஹே அன்பா! ஸ்ரீ ராமபிரான்மரபில் அவர்போலழகுங் கருணையுமமைந்தவதரித்த சிருவனை வானரப்படைவீரர் கண்டு வந்ததுண்டா? வென்றிட ஸ்ரீராமநாமங்கேட்டு இருவிழிநீர்சோர ஏங்கி சென்றவர் திரும்பிலரென்று கூறும் சுக்கிரீவனுடன் அங்கதனும் அரக்கர்கோமானுங்கூடி

துருவனை யரிவதென்று துலக்குமவ் விலங்கைவிட்டு
சிருவனங் கதனைக்கூட்டிச் சென்றன ராழிதாண்டி
பருவரை சூழ்ந்தகானில் பலபொழு தலைந்துகங்கை
வருவழி வந்துஅம்மை வந்ததோர் குன்றைச் சார்ந்தார். 466

வ—ம்:- உலகமுற்றுந்தேடி துருவனிருக்குமிடத்தை யறிவதென்று தீர்மானித்து இலங்கை நகரையும், சமுத்திரத்தையும் தாண்டி அனேக வனவனாந்திரங்களெல்லாம் தேடி, பார்வதாதேவியாரையீன்ற ஹிமாசல பர்வதமடைந்தார்கள்.

அவ்வரை வலமாய்வந்து அரிந்திடா தேரியுச்சி
செவ்வையாய் நோக்கிமீண்டுஞ் செழிப்புரும் பூமிவந்து
எவ்வரையுற் றுனோவென்று யேங்கினர் மாய்கையாலே
அவ்வரை விட்டுகங்கை யாற்றினோர் கரையாய் வந்தார். 467

வ—ம்:- அங்குங்காணாது அம்மலையை வலமாய் சுற்றிப்பார்த்தும், உச்சியில் சென்றேறி பலபாகங்களையும் சோதித்து, பார்த்தும் அரியாது எங்குற்றுனோவென்றேங்கி அம்மலையிலிருந்து வேகமாய்ச்செல்லும் கங்காநதியின் ஓர்கரையைப்பற்றிவந்தார்கள்

தங்கியே நிரைநிரையாய் தவஞ்செய்யு பரக்கர்தம்மை
அங்கத னரிந்துகூர அழைத்தன னவர்கள் கண்டு
இங்குற்றீர் பொருப்பீர்செய்த இன்னலென் றாசைப்போற்ற
உங்களை அயோத்திராமன் வுருவென வுதித்தபாலன். 468

வ-ம்:-வரும்வழியில் தவம்புரியும் ராக்ஷதவீரரிவர்களைக்கண்டோடி வந்தடிபணிந்து நிற்க, விபூஷணனைனவர்களை நோக்கி நானுங்களை அயோத்தியிலிருந்து ஸ்ரீ ராமனையொத்த பெருமையுடைய துருவன்

விட்டனன் பதியையிந்த விடமுரு வனங்கள்முற்றும்
எட்டியே வருவீர்கூட்டி யென்றுரை விடுத்து நீங்கள்
ஓட்டிய கருமம்நன்றோ வுமையென உற்றயாவும்
திட்டமா யவர்க்குவோதி செய்தவக் கருத்துவிண்டார். 469

வ—ம்:-வனஞ்சென்று எவனையழைத்து நமதுநாடு வருவீரென்ற வுரைகடந்து நின்றதேன்னென, அவ்வரக்கர் வணங்கி ஹே அரசே! திரிபுவனங்களிலும் நாங்கள்தேடாத இடமில்லையென்று தவஞ்செய்யும் கருத்துமுரைத்தார்கள்

இருந்தவா ரிருந்துநீங்கள் இளைஞனை பரிந்துநாடு
பொருந்துவீ ரென்னக்கூறி போந்துமவ் விடத்தைவிட்டு
பெருந்திரு வுலவுமந்தப் பெருமைசே ரயோத்திநோக்கி
இருந்திடு வனங்கள்யாவு மின்னவர் தேடிவந்தார், 470

வ-ம்:-இவைகேட்ட அரக்கர்கோமான் அவர்களைநோக்கி, நீங்களெவ்விதத்திலும் பாலனை கண்டளைத்து லங்கைவாருமென்றனுப்பி அவ்வனத்திலிருந்து அயோத்திநோக்கி தேடிநடந்தார்கள்.

வருவிழி தன்னிலங்கோர் வரையில்வாழ் குமுதன்கண்டு
தருவுருங் கவியைக்கூட்டி தலைவன்றாள் பணிந்துயேங்க
திருவுய ராக்கர்கோமான் செப்புவா னீங்களிந்த
பெருவனந் தன்னைநாடி பிள்ளையாந் துருவன்றன்னை. 471

வ—ம்:-இடையில் வானரத்தலைவனாகிய குமுதன் இவர்களைக் கண்டுபயந்து நடுங்கி வணங்கி நிற்பவனை விபூஷணன் பார்த்து ஹே குமுதா! நீயும் உன்படை வீரரும் வனத்தில்வந்த துருவனென்னும் சிருவனை

தேடியே யழைத்துநாடு சேருவீ ரென்னவுங்கள்
நீடிய புவியாள்மன்னன் நிகழ்த்திய வாய்மைதாண்டி
கூடிய தேனையிங்கு கூருவீ ரென்ன அன்னோன்
நாடிய வுலகமுற்று நாங்கழு நிரை நிரைபாய். 472

வ-ம்:-தேடியழைத்து ராஜ்ஜியம் வரும்படி கூரிய உங்களரசன் வார்த்தைகடந்து இவ்வனத்தில்கூடிவாழ்வது முரையா வென்ன இவைகேட்ட குமுதன் ஐயா! நாங்கள் பலகூட்டமாகப்பிரிந்து இவ்வுலகமுற்றும்

சென்றுமே யலைந்ததன்றி சிருவனை யரியோமிங்கு
நின்றிடுங் காலந்தன்னில் கேரினை சுருசியேவால்
ஒன்றாக் கொடியகள்வர் வுற்றன றவனைவாட்ட
அன்றவர் செயலைக்கண்டு அழித்தனந் தவரிடாமல். 473

வ—ம்:-தேடி யலைந்ததன்றி யச்சிருவனைக்காணோம் ஆனலிடையிலோர்நாள் அயோத்திபாபுரி சிற்றரசியான சுருசியென்னும் பாதகியாலேவப்பெற்ற கொலைஞர்கள் துருவனை கொல்வோமென்றுகூறி வரக்கேட்டொருங்கே யவர்களை கொன்றோம்

அங்கவ ரொழிந்தபின்னே அயோத்திமட் டிருந்துநாங்கள்
தங்கினோந் தனித்தனியாய் தருவனம் பகைஞருற்றால்
லங்கவர் தம்மைமாட்டி அலைகடல் துயின்றராமன்
பொங்கிய கருணையாலப் புண்ணியன் றன்னைக்கண்டு. 474

வ—ம்:- ஆனுலின்னம் அப்பேர்ப்பட்ட கயவரால் ஏதேனும் கஷ்டமடையாதிருக்க அயோத்திமுதல் ஹிமாசலம்வரை தனித் தனிகார்த்து எவ்விதத்திலும் அந்த ஸ்ரீராமபிரான் கருணையால் அப்பாலகனைக்கண்டு

கூட்டியே வரவுமிங்கு கூடினே மென்னக்கேட்டு
வாட்டடங் கண்சிவந்து வாலிசே யெழுந்துசீறி
மாட்டியே அயோத்தியுள்ளோர் மடியவே யெரியையவ்வூர்
மூட்டியே யளிப்பேனென்று முனைந்திட ராமாவென்றே 475

வ—ம்:-நமதுநாடு கூட்டிவருவதாய் நினைத்திங்கு தங்கினேம் மென்ன அங்கதன் சினந்து தன் சிறியபிதாவை வணங்கி, ஐயா! உத்திரவு தாருங்கள் அச்சண்டாளிவாளும் அயோத்தியாபுரியை நெருப்பிட்டு அங்குள்ளவர் தப்பாமல் கொல்வேன் என்றிட ஸ்ரீ ராமபஜனை பாடியவண்ணம்

கூரியாழ் காத்தில்கொண்டு குவலயம் போற்றுமந்த
யேரிய தவத்தின்மிக்க இசைமுனி நாரதனுமங்கே
பாரினை யடையக்கண்டு பணிந்தவர் வணங்கிநிற்ப
மீரியஆசிகூறி விளங்கும்நன் னிலத்திலங்கே. 476

வ—ம்:-கரத்தில் தாங்கிய வீணையோடு உலகுபோற்றும் நாரத முனிவரெதிர்வரக்கண்டு அம்மூன்று வேந்தரும் அவரடிபணிந்து ஆசியேர்த்து அங்குள்ள செழுமையான ஓரிடத்தில்

இருந்தவர் கிருக்கைநல்கி இயம்பொரு தரசுசெல்வம்
பொருந்தியு நீங்களிங்கு புகுந்ததென் னுரைப்பீரென்னும்
அருந்தவன் றனக்குலங்கை யதிபனும் நடந்தயாவும்
வருந்தியே உறைத்தான்கேட்டு மாமுனி நகைத்துஅய்யா. 477

வ—ம்:-முனிவர்காசனமிட் டெழுந்தருளியிருக்கச்செய்து தாம் களுமவருடனிருக்ககண்ட முனிவர் அவர்களைநோக்கி, ஐயா! அழ விடமுடியாத இராஜபோகத்துற்ற நீங்கள் இவ்வனம் ஏன்வந்தீ ரென்ன நடந்தயாவு மரக்கர்கோமான் கூரக்கேட்டு முனிவர் நகைத்து

துருவனை மதலையென்று சொல்லினீர் வனங்கள்முற்றும்
திரிவதா லரிவதேது சிறுவனும் முகுந்தன்றம்மை
பெருவிழி யாலேகண்டு பேந்திடும் மட்டுந்தேடல்
பருமணல் பெய்தமாரி பலன்தரா ததனையொக்கும். 478

வ—ம்:-ஹே வேந்தர்களே! துருவனை சிறுவனென்று நினைந்து அன்னவன் பகவானைக்கண்டு வேண்டும் வரம்பெற்று வரும்வரை தேடுவது பருமணல் பெய்தமாரி பலன் தராததல்லவா? அது போல்தான் முடியும்

அக்கருத் தகற்றிநீங்கள் ளடவிவிட் டடைவீர்நாடு
தக்கவன் கருணைபெற்று தனையனூர் புகுந்தநாழில்
பக்குவமான வுங்கள் பதிவந்து பகர்வேன்கேட்டு
துக்கமு மகல்வீர்கண்டு சுதனுக்கு வரிசைநல்கி. 479

வ—ம்:-ஆகையால் இக்கருத்தைவிட்டு உங்கள்நாடு செல்வீர் பரந்தாமனிடம் வரம்பெற்று துருவன் அயோத்தி வந்தவுடன் உங்களுக்கு நானே கூறுவேன் அக்காலமவனைக் கண்டாசீர்வதித்து வேண்டிய வரிசையும் செய்குவீர்கள்.

அன்னவ னுரைகேட்டுப்போற்றி அங்கதன் தடுத்துஅய்யா
கன்னியாஞ் சுருசியந்த காளையை வனத்திலோட்டி
யின்னமும் புரியக்கூறி விடுத்தனள் குலைஞர்தம்மை
மன்னனு மரியான்போலே வாள்வது முறையோவத்தால் 480

வ—ம்:-என்றிட அங்கதனவரைபோற்றி ஐயா! அயோத்தியாபுரி சிற்றரசியானவள் அப்பாலனை வனத்தி லோட்டியதுமன்றி கொலைசெய்யவும் பாதகரை ஏவினாள் அதையுமறியாதவனுப் அவ்வரசனிருப்பது முறையாகுமா

அன்னவன் வாழ்வுசெல்வம் யாவையு மொருங்குசேர
வன்னியை வைத்துள்ளாரை வதைத்துநான் மீள்வேனென்ன
பின்னுமம் முனிவன்றானும் பெருநகை புரிந்துஅய்யா
அன்னக ரிழந்தசெல்வம் அரிந்திலா யரையக்கேண்மோ. 481

வ—ம்:-ஆனதால் அவ்வயோத்தி நாட்டையும் அதன் வளத்தையும் நெருப்பிட்டளித்து வருவதர்க்கருள் புரிவீரென்ன முனிவர்

நகைத்து ஹேற அங்கதா! தர்காலம் அவ்வரசனும் அன்நாடுமிருக்கும் நிலையுணரா துரைக்கின்றாய்

துருவனும் வனத்தைநாடி துடர்ந்தபின் மன்னர்யாரும்
பெருமவர் பதிக்கிமீழப் பேணிடுங் குடிகளேங்க
தருமுறையவந்திமன்னன் சாற்றிடத் தன்னையுற்ற
பெருவினை யொழித்துவேந்தன் பெண்ணினா லுற்றதொல்லை. 482

வ—ம்:-அன்று துருவன் வனஞ்செல்ல நீங்களும் மற்ற அரசரும் மவரவர் பதி சென்றீர்கள் குடிகளும் மயங்க பெண்மோக முற்றஅரசனை அவந்திமன்னன் சினந்து அவன் பாவம் நீங்கும் வண்ணம் விபரமாய் நடந்தயாவும்கூற

கண்டனன் மாய்கைநீங்கி கன்னியை துணிப்பானுண்ணி
கொண்டனன் கரத்தில்வாளை கொற்றவன் தடுக்கவங்கே
அண்டும்ஆ துலனலைந்த அரிவையைச் சிறையிலிட்டு
பெண்டவள் சுநீதியோடு பெருமைசே றவந்திமன்னன், 483

வ—ம்:-கேட்டு மாய்கைநீங்கி அரசன்சினந்து சுருசியைக் கொல்வேனென்று வாளுருவிநிற்க அவந்திமன்னன்தடுக்க மந்திரியாலவளை சிறையிலிட்டு சுநீதியென்னுமுத்தமியுடன் நகர் நீங்கி தோளனும்

தன்னையே கூட்டிவேந்தன் தவமுபர் கோலம்பூண்டு
பின்னையிவ் வனத்தில்வந்து பெலமெலா மிளந்துவாடி
முன்னுறுங் குன்றின்கீழ்பால் முடிபெரு மகனைக்காண
மன்னவ னலையக்கண்டு வந்தனன் றெரிவாயய்யா. 484

வ—ம்:-கூடவே துயர்ந்துவர இவ்வனத்தில் பலநாள் மகனைத் தேடி அலைந்து தேகமெலிந்து அவனையுங்காணாது எதிரிருக்கும் இம்மலைக்குக்கீழ்பால் அலைகின்றான்.

அரிவுயர் பாலனந்த ஆரண னடியைக்கண்டு
வருவதர் குதவியந்த மங்கையாஞ் சுருசியன்றி
வுரியவ ருளரோசெய்ய உத்தமா சினந்துநீயும்
நெரியினை விடுத்தால்பூமி நின்றிடா தழியுமன்றோ. 485

வ—ம்:-அன்றி, அரிவுதங்கிய துருவன் பெருமையடையவும், பகவானைக் காணுவதற்கு தவம்புரியவும் உதவிசெய்தவள் சுருசியன்றி மற்றவருண்டா? நீங்களதைவிட்டு நெறிதவரிய காரியத்தில் புகுந்தாலிவ்வுலகமே அழியநேரும்

ஆகையா லிவைபொருத்து அடுத்திடும் பதிக்கென்றோத
வாகைசூ டரக்கர்கோமான் மாமுனி வரனைபோற்றி
ஈகைசெய் தெங்கள்மீது இனிமைசேர் சிருவன்வாழும்
வாகுரும் வனத்தைக்காண வழுத்துவீர் நெறியென்றேற்ற. 486

வ—ம்:-ஆனதாலுங்கள் ராஜ்ஜியமடைவீரென்ன, வெற்றிமாலை தரித்த விபூஷணன் அம்முனிவரை எழுந்துவணங்கி ஹேதேவா! எங்கள்மீது கருணைசெய்து துருவனிருக்குமிடத்தையும், அங்கு செல்ல வழியுங்கூறுவீர்.

என்னகாண் மீண்டுமிவ்வா றிசைத்தனை துருவன்றம்மை
மன்னவா அரிதுகாண மாதவன் மாய்கையவ்வார்
றன்னவன் சுற்றம்வேந்த ரரிந்திடா திருக்கசெய்தான்
முன்னுரை பதிசெல்லென்ற முனியுரை கேட்டுமீண்டும். 487

வ—ம்:- ஐயா! அரிபக்தரில்சிறந்த அன்பா! ஸ்ரீமன் நாராயணனது மாய்கையால் மறைபட்ட துருவனை அவன் சுற்றத்தாரும், மற்ற அரசருந்தேடியலைவதன்றிக் காணமுடியாது. ஆகையால் உங்கள்நாடு செல்வீரென்ன மருபடியும்

கொற்றவ னேடுஅந்தக் குரங்குநா யகனும்போற்றி
மற்றவ ருளரோயிந்த மதலைபோல் ஞானந்தோய்ந்து
நற்றவம் புரிவோரத்தால் நாங்கள்சென் றவனைக்காணு
துற்றிடோம் பதியென்றோத வுயர்முனி தடுத்துக்கூறும். 488

வ—ம்:-விபூஷணனும் கவித்தலைவரும் அவரைதொழுது ஹேதேவா! இவ்விளவயதில் அவனைப்போல் ஞானந்தோய்ந்து தவஞ்செய்வாருண்டா? ஆகையாலவனைக்கண்டாலன்றி நாடுசெல்லோம் என்றுகூற முனிவர்தடுத்து

இன்னவன் றனினுமேலா யிருப்பதுண் டவந்திநாட்டின்
மன்னவன் றவத்தில்வந்த வல்லிதா னுதித்தய்ந்தாண்டில்
தன்னையு மரிந்தாள்பின்னே தலைவனை யரியவேண்டி
இன்னவள் தவத்தில்நின்ற திடத்தையா ருரைக்கவல்லார். 489

வ—ம்:-ஹே அரசர்களே! துருவனுக்குமீறிய தவத்தின் கீர்த்தி வாய்ந்தவள் அவந்திநாட்டரசபுத்திரியே அவளுதித்த ஐந்தாண்டில் தன் பூர்வஜென்மவரலாறும் முக்காலமுந்தெரிந்த சிறுமி அப்பரந்தாமனையரிய செய்தவத்தின் பெருமைகூற வல்லவருண்டோ?

தந்தைதாய் வனத்திலேக தையலுந் தனித்தேநின்று
மந்திரி யுதவிபெற்று மயனெனுஞ் சிற்பிசெய்த
சுந்தர மாடமுற்றுச் சூழவே யரக்கர்காவல்
தந்திட முகுந்தன்றன்னை தன்விழி யரியவேண்டி. 490

வ—ம்:-அருமை தங்கிய தாய்தந்தையர் துருவனால் வனமேக தனித்திருந்து மந்திரியினுதவிபெற்று மயனென்னும் சிற்பியால் கட்டப்பட்ட மண்டபத்திலிருந்து பரந்தாமனை காணுவண்ணம் உருதிகொண்டு அனேக அரக்கர் அக்கோட்டைகாத்திருக்க

இருப்பவ ளரிந்தாளோதா திவர்கவ ளிளந்தையாகும்
பொருப்புய ரவளையன்பாய் புண்ணியத் துருவன்றானும்
விருப்பமாய் புரியுமன்றல் மேலவ ளிருந்தேசூட்ட
மருப்பிலா துரைப்பேனன்னாள் வருகுவீர் நகரம்புக்கி. 491

வ—ம்:-வாழுஞ்சிறுமி ஓதாதுணர்ந்தவள் இந்த துருவனுக்கும் வயதிலிளையவள் அன்னவள் பருவகாலமுணர்ந்து பரந்தாமனுடனிருந்து இருவருக்கும் மணமாலை சூட்டுவார் அக்காலம் உங்கள் நகர்வந்து நானே கூறுவேன் இப்போது கலங்காதுங்கள் பதி செல்வீர்.

என்றவை கேட்டுநின்ற இயல்கவித் தலைவன்போற்றி
குன்றுறை வனத்தைவிட்டுக் கோதைவா ழவந்திசென்று
நன்றருஞ் சிறுமிதன்னை நாங்களு மறியநீரும்
இன்றுமே கருணைசெய்வீ ரெனமுனி யிரவிமைந்தா. 492

வ—ம்:-என்றிடச் சுக்கிரீவன் அத்தவமுனிவரைநோக்கி ஐயா! இப்பெருவனந்தாண்டி அவந்திநாடுசென்று அச்சிறுமியவரையாகினும் காணுச[illegible]குடன்வருவீரென்ன முனிவர் ஹே சூரியபுத்திரா!

அரிதவள் [illegible]மைக்காணல் அங்குரை காவல்மிக்க
பெரிதென [illegible]ண்டும்வேண்ட பெரியவ னிசைந்துநீங்கள்
வருகுவீ ரென்னக்கூட்டி வந்தன னவந்திநாட்டு
தருவுருங் காவிலந்த தலைவரை யிருத்தியன்றோன். 493

வ—ம்:-அந்த கன்னிகையின் கோட்டையிலுள்ள காவலைத்தாண்டி செல்வதே கடினமென்ன, மீண்டுமவர்கள்வேண்ட முனிவரிணங்கி அவர்களையழைத்துடன்கூடி அவர்திருநாடடைந்து அங்குள்ளவோர் புஷ்பவனத்திலவர்களைவிட்டு,

பெரும்பிரி யாவதனுப் பேருருஞ் சிருமிவாளும்
திருமனை யடுத்து அங்கே சேர்ந்தவர் வணங்கஆசி
தருமவ ளொடுங்கித்தேகம் தலைவனைக் கூவிக்கூவி
நருமணங் கமளுமந்த நங்கையி னிருக்கைசார்ந்தான். 494

வ—ம்:-பிரியவதனுவென்னும் அருந்தவ சிருமிவாழும் அரண்மனையைநாடி செல்லக்கண்ட காவலர்வணங்க அன்னவர்காசிகூறி தன்தேகமொடுங்கி ராமாராமாவென்று தவச்சாலைசென்றடுத்தார்

அங்கவ னகன்றபின்னே யரக்கர்கோன் கவிக்குநாதன்
தங்கிய காவைநோக்கி தடங்கடல் புரண்டதென்ன
பொங்கிய முளக்கத்தோடு புண்ணியன் மாய்கையாலே
எங்களுஞ் சூழ்ந்துவானோ ரியக்கர்க ளவுணர்கூடி. 495

வ—ம்:- இங்கே புஷ்பவனத்தில்விட்டு நாரதரகன்றபின்னே அங்கிருந்த மூன்றுமன்னரும் கலங்கும்வண்ணம் யுகாந்தகாலத்தில்பொங்கிவரும் சமுத்திரகோஷ்டம்போல் அம்மதுசூதனன் மாய்கையால் அனேக ராக்ஷதர்களும் தேவர்களும், ஒன்றுகூடி கர்ஜ்ஜித்து

படைபல வுடையாராகி பார்மன்னர் தானையோடும்
நடநட வென்னக்கூறி நாடினர் ரதங்களூர்ந்து
இடையிலோர் கரியின்மீது யேறியே யமரர்கோமான்
தொடர்ந்தவன் தானைமுற்றுஞ் சூழ்ந்திடப் படைகளேவி. 496

வ—ம்:-பலவிதமான ஆயுதம்பூண்டும் இன்னும் அனேக புவியரசர்போலவும் அளவிடமுடியாத ஆனைசேனைபரிவாரங்களுடன் நடநடவென்றுகூறிவரவும் அவர்களினிடையில் வெள்ளையானைமீது இந்திரன் வஜ்ஜிராயுதத்தோடுதோன்றி விபூஷணன், சுக்கிரீவன், அங்கதனிவர்களை நான்கு திசையிலும்சூள வளைத்தார்கள்.

பேரிடி முளக்கமென்னப் பெற்றிடும்யுகமுடிவின்
காரிருளென்னக் கண்டோர் கலங்கிட வளைந்துசீறி
யேரிய சாபம்வாங்கி யெய்தன ரரக்கர்கோவும்
மீரிய யிரவிசேயும் மெய்மரந் திருக்ககண்டு. 497

வ—ம்:-அப்படி வளைந்த தேவர்களும் ராக்ஷதர்களுமொன்று கூடி இடியாஸ்திரம் இருளாஸ்திரம் மாயாஸ்திர முதலான துவை அவரவர் வில்வளைத்து தூண்டி யுகாந்தகாலம்போல் கெர்சித்து கார்காலமாரிபோல வாரிவாரி சரங்களை மென்மே லேவக்கண்ட விபூஷணனும் சுக்கிரீபனுஞ் செயல்மரந்திருக்க

அங்கத னெழுந்துசீரி அகற்றியப் படைகள்யாவும்
இங்குநீர் செருக்கவுற்ற தேனென அமரர்கோமான்
மங்கையின் றவத்தைக்காண மாதவ னன்றியாரும்
மிங்குரில் வதைப்போங்காவல் லெம்மதென் றுரைக்ககூரும். 498

வ—ம்:-அங்கதன் துடைதட்டி யெழுந்து கர்சித்து தன்னை மீரிவரும் பாணங்களை யெல்லாங் கையினலடித்து விலக்கி அப்படைத்தலைவனை நோக்கி ஹே இந்திரா நீ எங்களுடன் யுத்தம் புரியும்படியான விபரமென்ன கூருவீர் ஓய் அங்கதா எங்கள் காவலிலிருக்கும் இந் நகரத்தைநாடி ஸ்ரீமன் நாருயண னன்றி மற்றவர் யாரும் உத்தரவன்றி வந்தா லவர்களை வாட்டுவோமென்பதரிந்து ஒடிவொதுங்குவாய்.

இந்திரா அரிந்துமெம்மை யேழனம் புரிந்தாயத்தால்
வுந்தனை துணைவந்தாரை வொழிப்பேனென் றவனும்சீரி
அந்தமாந் தருவொன்றேந்தி அடித்தன னவனுமீண்டு
வெந்திரல் படைகளேவி வீழ்த்தினன் விமலன்சூதால். 499

வ—ம:-ஹே தேவர்க்காசனுகிய இந்திரா எங்களை யாரென்பதுனராது யுத்தம் புரியத் துணிந்த வுன்னையும் வுன்னுடன் வந்தவர்கள் யாவரையும் இதோ ஒருநொடியில் வாட்டுகின்றேன் பாரென்று அங்கிருந்த ஓர் மரத்தைப் பிடுங்கி சேனைகள் லோலமிட்டு வோடவண்ணம் அடிக்கக் கண்ட யிந்திரன் சீரி மாய்காஸ்திரமேவி அங்கதனை மூர்ச்சையாய் வீழும்படி செய்தான்;

அஞ்சிடா தரக்கர்கோமா னடித்திட படைகள்மென்மேல்
மிஞ்சியே வரவுங்கண்டு விலக்கியே யிரவிபாலன்
அஞ்சிட யாருங்கண்டு அங்கொரு தருவைபற்றி
கெஞ்சிவாய் விட்டுக்கூவக் கெடுத்தனன் படைகள்முற்றும் 500

வ—ம்:-இதுகண்டு கோபாவேசனாய் விபூஷணன் யெழுந்திட அரக்கருந் தேவருங்கூடி யவனை வளைக்கக் கண்ட சுக்கிரீவன் ஆக்ரோசத்தோடு பலபடை யெரிந்து யெதிர்ப்பவரஞ்சவண்ணம் ஓர் விருக்ஷத்தை வேருடன் புடுங்கி சேனையுள் பாய்ந்து யெதிர் பட்டவ ரலரி யோட்ட மெடுக்கு வண்ணம் மாரிமாரி அடிப்பதை கண்டு.

அஞ்சிடா தமரர்வேந்தன் அடித்திடு மடிகள்பட்டு
மிஞ்சிய கவிக்கிநாதன் வீழ்ந்தன னரக்கர்கோமான்
அஞ்சியே கவலைபூண்டு அரிகரி ராமதூதா
மிஞ்சினர் துணைவாவென்ன விண்ணுமண் குலுங்கபாய்ந்து. 501

வ—ம்:- இந்திரன் கோபம்பூண்டு பட்டத்து யானையை வேக மாய் முடுக்கி சுக்கிரீபனை நெருங்கி வச்சிராயுதத்தால் வோங்கி அடிக்க அவ்வடி தாங்காது வானரத் தலைவன் மூர்ச்சித்து பூமி யில் வீழ்ந்தான் இதுவரிந்த விபூஷனன் பயந்து ஹே ராமதூதா அஞ்சனாதேவி புதல்வா ஆபத்பாந்தவா யெதிரிகள் மிஞ்சினர் கள் துணைவருவீரென்றுகூவ அவ்வோசையடங்குமுன் அண்டங் கள் யாவும் குலுங்க பாய்ந்து விஸ்வரூபத்துடன்.

வந்தமா ருதியைக்கண்டு மாதவன் மாய்கையாலே
இந்திரன் முதலாய்வந்தோ ரேகியே மறைந்துபோனர்
அந்தநல் லனுமன்றுங்கி அவர்களை நோக்கிநீங்கள்
வந்ததென் னுரைத்தீரென்ன வழுத்தினர் நடந்தயாவும். 502

வ—ம்:-வந்துநின்ற மாருதியைக்கண்ட பகவான் மாய்கையால் வந்த வீரருஞ் சேனைகளுங்காணாது மறைந்துபோக வாய்வு புத் திரன் சுக்கிரீவனங்கதனிவர்கள் நிலையுணர்ந்து வாரியெடுத்து சோபம் மாற்றி அரக்கர் வேந்தனை அன்புடன் தழுவி நீங்களிங் குவந்த கருத்தென்ன வென்று வினவலும் சுக்கிரீவன் அஞ்சனா தேவி புதல்வனை தழுவி நடந்தயாவுங் கூறினன்.

முந்திய ஜென்மஞ்செய்த முனுத்தவம் பலித்துருவாய்
வந்தவ ளாகுமிந்த மதலையைக் கண்டோர்செய்த
வெந்திறல் பவங்கள்யாவும் விலகிடும் நமதுராமன்
இந்தநா ளிந்தநாடு இருக்கின்றான் னவன்செய் மாய்கை. 503

வ—ம்:-அதுகேட்ட அநுமான் நகைத்து அய்யா விஷயந்தெரி யாது கவலையடையாதீர்கள் இச்சிறுமி ஜென்மா ஜென்மங்களில் செய்ததவமே வுருவானவள் அவளை இக்காலங் கண்டவர் பாவம் அகன்றோடும் அன்றி நமது பகவானான ஸ்ரீ ராமச்சந்திரன் இந் நாளிலின்ன நகரிலே இருக்கின்றார் அவர் செய்த மாய்கையே வுருவாகி

வந்தது வானுளாருய் மற்றுரை மன்னராகி
இந்தநா ளுமைமரித்தா ரென்றவர் தேற்றுங்காலை
அந்தநல் முனிவன்செய்கை அரையக்கேள் தவசைபோற்றி
வுந்தனல் லடியைக்காண வுற்றனம் மதளாயென்றான் 504

வ—ம்:-தேவர்களாகவும் அரக்கராகவும் மானிடராகவும் கூடி வந்து உங்களுடன் யுத்தம் புரிந்து மறைந்து போனார்கள் என்று பல இனிய மொழி கூறியவர்களை தேற்றுங்காலை அரசபுத்திரி வாழுந் தவமாளிகை சென்ற முனிவர் அக்கன்னியை நமஸ்கரித்து அம்மா மீண்டுமுன் தவங்காண வந்தேனென்று கூறக்கேட்ட

கருத்தினை மாற்றுதற்ற காரிகை விழித்துநோக்கி ,
வுருத்திடுஞ் சீற்றம்பூண்டு வுத்தமா யெனதுவாழ்கை
திரித்திரீ யுரைத்துலங்கை செம்மலை கவிமன்னோடு
வருத்தியிங் களைத்துவீணாய் வந்ததென் னுரைத்தீரய்யா. 505

வ—ம்.-கன்னிகை விழித்து தன் கருத்தைபகவானிடம் செலுத்தி தவமுனியை நோக்கி ஐயா! நான் தவஞ்செய்வதை வீண்பெரு மை படித்துக்கூறி வனத்திலலைந்த விபூஷணன் சுக்கிரீவன் அங்க தனிவர்களை என்னகாரணமாய் அழைத்து வந்தீர் அக்கருத்தை யுரைப்பீரென்று சினந்து நோக்கவும்.

அஞ்சியே முனிவனேங்க அம்மகளினீ நீரிவ்வார்
மிஞ்சிடா திருப்பீர்காவில் விரைந்துபோ யனுமன்றன்னை
வஞ்சியா னளைத்தேனென்று வழுத்துவீர் மற்றோர்தம்மை
துஞ்சிடா திருக்கவென்றால் சொல்லுவீ ரவர்நாடேக. 506

வ—ம்:-யாதொன்றும் பதிலுரையாது முனிவரேங்கியிருக்க அதை உணர்ந்த சிருமி ஐயா! இனி இவ்வண்ணம் செய்யாதிருப்பீர் அன்றி நமது நகர்புரம்பானவிடத்திலிருக்கும் புஷ்பவனத்தில் வந்திருக்கும் அஞ்சனாதேவி புதல்வரைக்கண்டு நாயனைத்ததாக கூறுவீர் மற்றுமுடன்வந்தயாவரையும் வீண் சங்கடமடையாமல் அன்னவர் ராஜ்ஜியம் சேரும்படி செய்குவீர்

என்றவ ளுரைத்துப்பின்னே இருந்தனர் தவத்தில் முன்போல்
கன்றியம் முனிவன்வாயல் கடந்தனன் கவலைபூண்டு
சென்றுரை காவைநண்ணி திடம்பெரு மனுமன்றன்னை
அன்றவன் றழுவிக்கண்டு அடுத்ததெதன் னுரைத்தீரென்றான். 507

வ—ம்:-என்றவரையனுப்பி முன்போல் யோகம்பூண்டாள் அங்கிருந்தகன்ற முனிவர் வேகமாய் புஷ்பவனத்தை நோக்கிசென்று வாய்வுபுத்திரனைக்கண்டு வோடி இருபுயமழுந்த தழுவி ஐயா! தாங்களிங்கு எப்பொழுதடைந்தீர் கூறுவீரென வேண்டலும்

மாருதி யெழுந்து அந்த மாமுனி யரியவேண்டி
கூறினன் நடந்தயாவும் குழந்தைசெய் தவத்தைகாண
சாருவோம் வருவீரென்னத் தவமுனி யுரைத்தான்யாவும்
மீரவுங் கருதுமந்த விளைஞ்ஞனைத் தடுத்தனுமான். 508

வ—ம்:-அஞ்சனாதேவி தவப்புதல்வரான ஹனுமான் முனிவரை தழுவி, தேவா! கபடநாடக சூஸ்திரனாகிய அந்த பகவான் திருவிளையாடலை முன்னிட்டே இங்குவந்தேன் என்று விபரம்கூறி தவத்துரும் கன்னியை காணுவோம் வாருமென்றழைக்க அன்னவள் கூறியயாவும் நாரதர்கூறக்கேட்டு அங்கதன் தடுத்து பின்னவளைக்காணவே ஆசைபூண்டு எழுந்ததைக்கண்டவாய்வுபுத்திரன் தடுத்து

அய்யநீ யரியரயந்த அணங்குநர் பெருமைகீர்த்தி
செய்யுவே னரியுவண்ணஞ் சேர்ந்தினி யிருப்பீரிங்கே
எய்யுவேன் கண்டுவேண்டு மினுமைக ளுரைத்துசேவை
செய்யவும் விடுப்பேனுங்கள் சிந்தையில் நினைந்தவாறு. 509

வ—ம்:-ஹே அங்கதா! சற்றுபொரு அச்சிருமியின் பெருமை யரியாது துணிகின்றாய் நீங்கள் நினைத்துவந்தபடி யவளைக்காணு வதற்கு நானவழிடம்சென்று உங்கள் வரவையுரைத்து இன் சொல்கூறி அவளுத்திரவுபெற்றுவந்து உங்களை கூட்டிப்போய் காட்டுவேனப்போதவள் பெருமை தெரிவீர்

என்றவர் குரைத்துமீண்டு யெழிலுருமின்னாளுற்று
நன்றுருங் கோவில்நண்ண நங்கையு மெழுந்துபோற்றி
என்றுற்றீர் ராமதூதா வெந்தனைப் பொருட்டாயெண்ணி
இன்றவை யுரைத்திரென்ன வியம்புவா னனுமனன்று. 510

வ—ம்:- ஆகையாலிங்கிருங்களென்றிகூறி அழகேயுருவாய்வந்த கன்னிகைவாழும் அரண்மனைசென்றார் இவர் வரவையரிந்தசிருமி தவம்விட்டெழுந்தவரடிபணிந்து ஹே ராமதூதா! என்னையொரு பொருட்டாயெண்ணி வந்துமது சேவை குடுத்ததுபற்றி சந்தோஷிக்கின்றேனென்றிடக்கேட்ட மாருதியானவர் கூறுவார்

முந்துமுன் றந்தையோடு முடிபுனை கவிக்கிநாதன்
வந்தனர் காணவேண்டி வளருநின் சேவையின்று
தந்திட விடைதாவென்னத் தையலுந் தடுத்துஅய்யா
எந்தநற் றவத்துக்கின்னல் இடையிடை வருவோர்க்கெல்லாம் 511

வ—ம்:-ஹே குழந்தாய்! உன் முந்தியஜென்ம தந்தையாரும் அவரன்பரான சுக்கிரீவனும் வாலிமகனும் உன்னைக்காணுவதற்க் கிங்குவந்திருக்கின்றார்கள் நானும் அவர்பொருட்டே இங்குற் றேன் இவை நீயுணர்ந்ததே ஐயா அஞ்சனாதேவி புதல்வா! யான் புரியுந்தவத்திற்கிடையூறாக அடிக்கடி வருவாருடன்

உரைதா நினைந்தேனில்லை வொதுங்குவீ ரென்னமீண்டு
திரையினைக் கடந்தவீரன் செப்பிடத் தடுத்தகாலை
அரைந்தன னடுத்துவேண்டி ஆகமமறிந்தநீயும்
உரைத்திடு விடைதானென்ன வுருதன னவனுங்கண்டு. 512

வ—ம்:-வார்த்தையாட நினைந்தவள் நானல்ல தாங்கள் கருணை செய்தவர்கள் பதிசேரும்படி செய்வீரென விரிந்த கடல்தாண்டி இலங்கைசென்றவீரன் மருபடியும்வேண்ட தடுத்த சிருமியை

நோக்கி அம்மா கல்வியரிவுடைய நீ இப்படி கூறுவது தகாதென கோபங்கொண்ட அரசபுத்திரியை மாருதிகண்டு

அன்னஜா னகியாள்தந்த ஆசியின் பெருமைகொண்டு
இன்னக ருதித்துமிவ்வா ரியல்தவ மடைந்தமாதே
என்னைநீ யுணராதிவ்வா ரியம்பினைப் முறையிதாமா
வுன்னையா னுணர்வேனென்ன வுருத்தன னனுமான்சீரி. 513

வ-ம்:-ஹே சிருமி! அவந்திராஜபுத்திரியாய்பிரந்து தவச்சாலை யுற்ற நீ முன் ஜானகிபிராட்டியாரால்கிடைத்த வரத்தின் பெருமையால் கருவமுற்றாய் அக்கருவத்தால் என்னையுமரியாது போனாய் என்றிடக்கேட்டகன்னிகை நகைத்து ஐயா தங்களை ஸ்ரீராம தூதனாகிய ஹனுமானென்பதை நானரிவேன்.

அரிவில்லாக் கருவமுற்ற அரக்கியி லரக்கிநீயே
எரிப்பேனுன் நகரையொட்ட என்றிட நகைத்துக்கன்னி
உரைத்தது லங்கையென்றோ வுன்மனந் துணிந்தீரய்யா
வுரைத்தது விடுவீர்முன்னே வுயர்பெருஞ் [illegible] தன்னை. 514

வ-ம்:-ஹே அரிவில்லா ராக்ஷசியிலும் கொடிய [illegible] தால் உன்நகருடனுன்னையும் ஒன்றுசேர நெருப்பி[illegible]ழிப்பே னென்றெளக்கண்ட சிருமி ஐய் அஞ்சனாதேவி புதல்வா! நீருரைத்தபடி செய்வதற்கு ராவணனுண்ட இலங்கையல்லவே, ஆனால் முன்னே ஜானகிபிராட்டியார்

துஞ்சிடா திருப்பாயென்று சொல்லிநீ ராழிதந்து
மிஞ்சிய ராமனேவல் விளைத்தனை யத்தாலித்தை
அஞ்சனை மதளாய்கேட்டு யான்மனம் பொருத்தேன்வீணாய்
மிஞ்சிடா தகல்வாயென்று மெல்லியுஞ் சினந்துகூற. 515

வ-ம்:-கொடிய ராக்ஷதனால் சிறையிடப்பட்டு உயிர்விடுந்தரு வாயில் நீர்தோன்றி ரக்ஷித்ததுமன்றி ஸ்ரீ ராமபிரானுக்கு திருத் தொண்டனாயிருந்து வருவதால் தர்சமயம் நீர்கூறும் மொழிபொ ருத்தேன் இனி இவ்விதங்கூறுதகல்வாயென்று கோபத்தோடு [illegible]ரக்கக்கேட்ட

121248

சீறியே திரையைதாண்டி சென்றதோ ருருவங்கொண்டு
ஏறிய அரிவோனந்த இயல்மயன் செய்தமாடம்
சாரியா யழித்தின்றுடு தானெலா மொருங்குசேர
பாரீதோ அழிப்பேனென்ன பகர்ந்துரு மரக்கரெல்லாம். 516

வசனம்:-மாருதி தாங்கமுடியாத கோபத்தோடு சீறி, ஹேசிருமி! இதோபார் அலைகடல்தாண்டி முன்னுங்களூர்வந்த விஸ்வரூபங் கொண்டு மயனால் கட்டப்பட்ட இந்தக் கோட்டையையும் நகரையும் அழிக்கின்றேன் பாரென்று ஆங்காரத்தோடெழுந்து அங்கு காவலிருந்த அரக்கரெல்லாம்

ஓடிட அடித்துப்பின்னே வுயரும்விண் ணளவாய்நின்று
ஆடிடக் கோட்டைதன்னை அசைத்துவால் கொண்டுசுற்றி
சாடியே யிழுத்தானிந்த நால்திசை யுலகமுற்றும்
ஆடிடச் சராசரங்கள் அயர்ந்திடு மயர்வுகண்டு. 517

வசனம்:-திசைதிசையாய் ஓடி ஒழியும்படி அடித்து விஸ்வரூபங் கொண்டு விண்ணளவுமுயர்ந்து மேகந்தவளும் கோட்டையைதன் வாலினால்சுற்றி இழுக்கும் வேகத்தினால் நாற்றிசைசூழ்ந்த இவ்வுலகமுற்றுங்குலுங்க அதில்வாழும் எழுவகை தோன்றமும் கலங்ககண்டு.

121248

முதல்பாகம் முற்றிற்று.

---

இரண்டாம் பாகம் கூடிய சீக்கிரத்தில் வெளிவரும்.